
www.malankaralibrary.com




**வினா விடைகள்**

**2.11.2019**

**தொடர்புக்கு : frmariajohn@gmail.com**

**தனிச்சுற்று**

www.malankaralibrary.com

## பாடம் 1

## தூய ஆவியாரும் தொடக்கத் திருச்சபையும்

**பயிற்சி வினாக்கள்**

***1. பெந்தக்கோஸ்து நாளில் நடந்த நிகழ்ச்சியை விவரி?***

பாஸ்காத் திருநாளின் ஐம்பதாம் நாளே பெந்தக்கோஸ்து. பெந்தக்கோஸ்து திருநாளன்று ஏராளமான யூதர்கள் எருசலேமுக்கு வருகை புரிவது வழக்கம். பெந்தக்கோஸ்து நாளன்று சீடர்கள் சீயோன் மாளிகையில் செபித்துக் கொண்டிருந்தபோது கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானிலிருந்து உண்டானது. நெருப்பு போன்ற பிளவுள்ள நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:1-4). அந்த ஒலியைக் கேட்டுக் கூடிய திரளான மக்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக் கேட்டு குழப்பமடைந்தனர். 'இனிய மதுவை நிரம்பக் குடித்துள்ளனர்" என்று கூறி சிலர் கிண்டல் செய்தனர்.

***2. முதல் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்க்கை முறையின் தனிச்சிறப்புகள் என்ன?***

எருசலேமில் தோன்றிய முதல் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்க்கை முறையைப் பற்றி திருத்தூதர் பணிகள் நூல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றது. 1. "அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்" (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:42). 2. முதல் கிறிஸ்தவ சமூகம் இயேசு கிறிஸ்துவை அதிகமாக அறிந்து கொள்வதற்கும் கற்பதற்கும் எப்போதும் திருத்தூதர்களுக்கு செவிமடுத்திருந்தனர். 3. ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி கடவுளைப் போற்றி வந்தார்கள். 5. பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தை பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். 6. தொடக்க கிறிஸ்தவர்கள் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். 7. அவர்களுள் உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை என்னும் பாகுபாடு இல்லாமல் இருந்தது. அவர்கள் தங்களுக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தனர். அவர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்யவும் ஏற்றுக்கொள்ளவும் செய்திருந்தனர். 8. அவர்கள் அனைத்து உடைமைகளையும் விற்று பகிர்ந்து கொண்டனர். அவர்களுக்கிடையே துன்பப்படுகிறவர்களாக ஒருவரும் இல்லை. 9. "நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். 10. அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது"

***3. நற்கருணையே முதல் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வின் அடிப்படையும் உண்மையான வல்லமையும். விளக்குக?***

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அவர்களின் இடையே வாழ்கிறார் என்பதை தொடக்க கிறிஸ்தவர்கள் இறைவார்த்தைத் திருச்சடங்கின் வழியாகவும், அப்பம் பிடுதல் திருச்சடங்கின் வழியாகவும் உணர்ந்து கொண்டனர். சிலுவையில் இறந்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அப்பத்தினுடையவும், இரசத்தினுடையவும் வடிவில் அவர்களிடையே நிரந்தரமாக வாழ்கிறார் என்னும் அனுபவம் அவர்களுக்கு உருவானது. அப்பம் பிடுதல் திருச்சடங்குடன் தொடர்புடைய அருட்சாதன ஆன்மீக வாழ்க்கைமுறை அவர்களிடையே வலுப்பெற்றிருந்தது. வாழ்க்கையில் நேரிடும் எல்லா துன்பங்களிலும், துயரங்களிலும் நற்கருணையிலுள்ள ஆண்டவரின் பிரசன்னம் அவர்களுக்கு வல்லமை அளித்தது. இயேசு கிறிஸ்துவுக்கு சான்று பகரவும் இரத்தசாட்சியாகவும் அவர்களுக்கு துணிவு கிடைத்தது. சுருங்கக் கூறின் தேவநற்கருணையே முதல் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வின் அடிப்படையும் உண்மையான வல்லமையும் ஆகும்.

**குறு வினாக்கள்**

1. ***இயேசு கிறிஸ்துவின் சிலுவைமரணத்தால் எதிர்பார்ப்பற்றவர்களாக மாறிய சீடர்களுக்கு எதிர் நோக்கு அளித்தது என்ன?*** இயேசுவின் உயிர்ப்பு
2. ***உயிர்ப்பின் நாற்பதாம் நாள் இயேசுவின் கட்டளைப்படி சீடர்கள் எங்கே ஒன்றுகூடினர்?*** ஒலிவ மலை

www.malankaralibrary.com

3. “நீங்கள் **உன்னதத்திலிருந்து** வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை **இந்நகரத்திலேயே** இருங்கள்". (லூக்கா . 24:49) என்று இயேசு அவர்களிடம் கூறினார்.
4. ***இயேசு விண்ணேற்றம் அடைந்தபோது கூறிய வார்த்தைகள் யாவை?*** “நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்".
5. ***பெந்தக்கோஸ்து திருநாள் எந்த நாள்?*** பாஸ்காத் திருநாளின் ஐம்பதாம் நாள்
6. ***பெந்தக்கோஸ்து திருநாளன்று எருசலேமுக்கு வருவதை வழக்கமாக கொண்டவர்கள் யாவர்?*** யூதர்கள்
7. ***பெந்தக்கோஸ்து நாளன்று இயேசுவின் சீடர்களுக்கு நிகழ்ந்தது என்ன?*** பெந்தக்கோஸ்து நாளன்று சீடர்கள் சீயோன் மாளிகையில் செபித்துக் கொண்டிருந்தபோது கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானிலிருந்து உண்டானது. நெருப்புப் போன்ற பிளவுள்ள நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:1-4).
8. ***பெந்தக்கோஸ்து நாளன்று இயேசுவின் சீடர்கள் கேட்ட ஒலியைக் கேட்டுக் கூடிய திரளான மக்களுக்கு நிகழ்ந்தது என்ன?*** மக்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் திருத்தூதர்கள் பேசுவதைக் கேட்டு குழப்பமடைந்தனர்.
9. ***பெந்தக்கோஸ்து நாளன்று ஒலியைக் கேட்டுக் கூடிய மக்கள் திருத்தூதர்களை எவ்வாறு கேலி செய்தனர்?*** 'இனிய மதுவை நிரம்பக் குடித்துள்ளனர்” என்று கூறி சிலர் கிண்டல் செய்தனர்.
10. ***தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட பேதுரு பதினொருவருடன் சேர்ந்து மக்கள் கூட்டத்திடம் கூறியது என்ன?*** 'நீங்கள் நினைப்பதுபோல் இவர்கள் குடிவெறியில் இருப்பவர்களல்ல. மாறாக தூய ஆவியின் தூண்டுதலாலேயே இவர்கள் இவ்வாறு பேசுகிறார்கள். நீங்கள் சிலுவையில் அறைந்து கொன்ற இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்களனைவரும் சாட்சிகள். அவர் கடவுளின் வலப்பக்கத்துக்கு உயர்த்தப்பட்டு வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார். நீங்கள் காண்பதும் கேட்பதும் இதுதான்' (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:14-34).
11. ***பேதுருவின் அருளுரையைக் கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற திருத்தூதர்களையும் பார்த்து மக்கள் கேட்டது என்ன?*** “சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்”
12. ***பேதுரு மக்கட் கூட்டத்தினருக்கு அளித்த பதிலுரை என்ன?*** “நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள்' (தி.தூ.ப. 2:38).
13. *திருச்சபை முதலில் தோன்றியது எங்கே?* எருசலேமில்
14. *உயிர்த்தெழுந்த கிறிஸ்து யார் வாயிலாக தற்போது செயலாற்றிக் கொண்டிருக்கிறார்?* தூய ஆவியின்
15. **திருப்பலி** வழியாக **தூய ஆவி** என்றும் அவர்களுக்கு அனுபவமானார்.
16. *தூய ஆவியுடன் தொடர்புடையதாக உள்ள திருச்சபை சார்ந்த நிலைகள் யாவை?* திருச்சபையின் ஆரம்பம், வளர்ச்சி, பண்புகள், தலைமைப்பண்பு, வரங்கள், ஒற்றுமை, ஆற்றல், நீதிநிலை நாட்டுதல் போன்றவை தூய ஆவியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.
17. *எருசலேமில் தோன்றிய முதல் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்க்கை முறையைப் பற்றி எந்த நூல் தெளிவாக எடுத்துரைக்கின்றது?* திருத்தூதர் பணிகள் நூல்கள்
18. “அவர்கள் **திருத்தூதர்** கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், **அப்பம் பிடுவதிலும்**, **இறைவேண்டலிலும்** உறுதியாய் நிலைத்திருந்தார்கள்” (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:42).
19. *முதல் கிறிஸ்தவ சமூகம் எதற்காக திருத்தூதர்களுக்கு செவிமடுத்திருந்தனர்?* இயேசு கிறிஸ்துவை அதிகமாக அறிந்து கொள்வதற்கும் கற்பதற்கும்

www.malankaralibrary.com

20. ***திருத்தூதர்களின் படிப்பினைகள் முதல் கிறிஸ்தவ சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாதவையாக அமைந்ததன் காரணம் என்ன?*** இயேசுவைப் பற்றிய எந்த நூலும் திருச்சபையின் ஆரம்பகாலத்தில் இல்லாமல் இருந்தது. முதல் கிறிஸ்தவ சமூகத்தினர் திருத்தூதர்களின் படிப்பினைகளில் மிகவும் ஆர்வமுடன் பங்கேற்றனர். திருத்தூதர்கள் தாங்கள் கண்டதும், கேட்டதும் அனுபவித்தறிந்ததுமான இயேசுவை ஆதித்திருச்சபைக்கு வழங்கினர். ஆதித்திருச்சபையினர் திருத்தூதர்களிடமிருந்து நேரடியாக இயேசுவைக் குறித்து கற்றறிந்தனர். எனவே திருத்தூதர்களின் படிப்பினைகள் மிகவும் இன்றியமையாதவையாக இருந்தன.

21. *எவ்வாறு தொடக்கத் திருச்சபை ஒரு அன்புறவு சமூகமாக மாறியது?* உயிர்த்தெழுந்த இயேசுவில் கொண்ட நம்பிக்கையும், தூய ஆவியின் பிரசன்னமும் தொடக்கத் திருச்சபையை ஒரு அன்புறவு சமூகமாக மாற்றியது.

22. **<u>திருத்தூதர்களின்</u>** வழியாகக் கிடைத்த **<u>இயேசுவின் அன்பு</u>** அவர்களை ஒன்று சேர்த்தது.

23. *தொடக்கத் திருச்சபை எத்தகைய தன்னம்பிக்கை கொண்டு வளர்ந்தது?* 1.இயேசுவில் கொண்ட நம்பிக்கையை அறிக்கையிட்டு ஒரே சமூகமாக *தொடக்கத் திருச்சபையினர்* வளர்ந்து வந்தனர். 2.புதிய சட்டபூர்வமான இறைமக்களே தாங்கள் என்னும் உணர்வு அவர்களிடம் தோன்றியது. 3.உலகெங்கும் சென்று இயேசுவைப் பறைசாற்ற வேண்டியவர்கள் தாங்களே என்னும் உணர்வும் அவர்களை ஒன்று சேர்த்தது.

24. *தொடக்கத் திருச்சபை சமூகத்தின் விசுவாச வாழ்வை விளக்குக? தொடக்கத் திருச்சபையில்* நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். ஒவ்வொருநாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள். வேறுபாடு கருதுதல் தூய ஆவியின் செயல்பாட்டிற்கு எதிரானது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இந்த அன்புறவு சமூகம் தூய ஆவியின் கொடை என்பதை அவர்கள் அறிந்தனர். ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ளவும், ஒருவருக்கொருவர் துணைபுரியவும், பிறருடைய துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும் தூய ஆவியார் அவர்களை வல்லமையுடையவர்களாக்கினார். தொடக்கத் திருச்சபையைக் குறித்து நாம் இவ்வாறு அறிந்து கொள்கிறோம். "நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்.

25. *தொடக்கத் திருச்சபை சமூகத்தின் சமூக நீதி வாழ்வை விளக்குக? தொடக்கத் திருச்சபையினர்* எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தை பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள். அவர்களுள் உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை என்னும் பாகுபாடு இல்லாமல் இருந்தது. தொடக்க கிறிஸ்தவர்கள் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்கள் அனைத்து உடைமைகளையும் விற்று பகிர்ந்து கொண்டனர். அவர்களுக்கிடையே துன்பப்படுகிறவர்களாக ஒருவரும் இல்லை. ஏனெனில் ஒருவருக்கொருவர் அக்கரை கொள்ளவும், ஒருவருக்கொருவர் துணைபுரியவும், பிறருடைய துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும் தூய ஆவியார் அவர்களை வல்லமையுடையவர்களாக்கினார்.

26. *எவ்வாறு அன்பு தொடக்கத் திருச்சபை சமூகத்தின் அடையாளச் சின்னமாக அமைந்திருந்தது?* அன்பு தொடக்கத் திருச்சபை சமூகத்தின் அடையாளச் சின்னமாக அமைந்திருந்தது. அனைவரும் ஒரே உடலின் உறுப்புகள் என்று கருதவும், ஒருவருக்கொருவர் சேவை புரிவதற்கும், பிறருடைய துன்பங்களைத் தாங்குவதற்கும் இந்த சமூகம் அவர்களைத் தூண்டியது. அவர்கள் தங்களுக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தனர். அவர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்யவும், ஏற்றுக்கொள்ளவும் செய்திருந்தனர்.

27. *முதலில் கிறிஸ்தவர்கள் எங்கே அருட்செயல்களில் ஈடுபட்டு வந்தனர்?* யூத தொழுகைக்கூடங்களிலும், தேவாலயத்திலும்

28. *முதலில் கிறிஸ்தவர்கள் எங்கே அப்பம் பிடுதல் திருச்சடங்கு நடத்தி வந்தனர்?* ஏதேனும் ஒரு வீட்டில் ஒன்றுகூடி அப்பம் பிடுதல் திருச்சடங்கு நடத்தி வந்தனர்.

29. *கிறிஸ்தவ சமூகம் வளர்ந்து வந்தபோது யூதர்கள் கிறிஸ்தவர்களை என்ன செய்தனர்?* கிறிஸ்தவ சமூகம்

www.malankaralibrary.com

வளர்ந்து வந்தபோது யூதர்கள் கிறிஸ்தவர்களை யூதர்களின் தொழுகைக் கூடங்களிலிருந்தும், அவர்களது தேவாலயத்திலிருந்தும் வெளியேற்றினர்.

30. *கிறிஸ்தவர்களை யூதர்கள் தொழுகைக் கூடங்களிலிருந்தும், அவர்களது தேவாலயத்திலிருந்தும் வெளியேற்றிய போது கிறிஸ்தவர்கள் செய்தது என்ன?* கிறிஸ்தவர்களை யூதர்கள் தொழுகைக் கூடங்களிலிருந்தும், அவர்களது தேவாலயத்திலிருந்தும் வெளியேற்றிய போது கிறிஸ்தவர்கள் வீடுகளிலேயே அப்பம் பிடுதல் திருச்சடங்கும் மன்றாட்டும் ஒன்றாக நடத்தினார்கள் (தி.தூ.ப. 2:46-47).

31. *யூதர்களுக்கு மாற்றாக கிறிஸ்தவர்கள் எந்த நாளை தங்கள் வழிபாட்டுக்காக பயன்படுத்தினர்?* ஆண்டவரின் உயிர்ப்புநாள் ஞாயிற்றுக்கிழமையாதலால் யூதர்களின் ஓய்வுநாளான சனிக்கிழமைக்கு பதிலாக ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடவும் அப்பம் பிடுதல் திருச்சடங்கை நிறைவேற்றவும் செய்தனர்.

32. ***தொடக்க கிறிஸ்தவ சமூகத்தில் திருச்சடங்குகளை தலைமையேற்று நடத்தியவர்கள் யார்?*** திருத்தூதர்கள்

33. ***கிறிஸ்தவ தேவாலயங்கள் உருவாக்கப்பட்டது ஏன்?*** கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது வீடுகளில் இடவசதி இல்லாததால் கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆராதனை (வழிபாடு)க்காக ஆங்காங்கே உருவாக்கப்பட்டன. வீடுகளில் நடத்தப்பட்டு வந்த அப்பம் பிடுதல் திருச்சடங்கு நாளடைவில் தேவாலயங்களில் ஆடம்பரத் திருப்பலி ஒப்புக்கொடுத்தலாக மாறியது.

34. ***தொடக்க கிறிஸ்தவ சமூகத்தின் ஆன்மீக வல்லமையின் உறைவிடம் எதுவாக அமைந்திருந்தது?*** அப்பம் பிடுதல் திருச்சடங்கு அதாவது தேவ நற்கருணை

**35.** *தேவ நற்கருணையைக் குறிப்பதற்காக ஆதித் திருச்சபை பயன்படுத்தி வந்த கிரேக்க வார்த்தை எது?* **'எவுக்கரிஸ்தியா'**

36. **'எவுக்கரிஸ்தியா'** என்பதன் பொருள் என்ன? **நன்றி நவிலல்**

37. ***அப்பம் பிடுதல் திருச்சடங்கு வழியாக தொடக்க கிறிஸ்தவ சமூகத்தினர் பெற்றுக்கொண்ட ஆன்மீக நிலை என்ன?*** தொடக்க கிறிஸ்தவ சமூகத்தினர் அவர்களுக்குக் கிடைத்த கடவுளின் அளவற்ற இரக்கத்திற்கு, அப்பம் பிடுதல் திருச்சடங்கு வழியாக அவர்கள் கடவுளுக்கு நன்றி செலுத்தினர். ஒரே உடல் என்ற நிலையில் ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்களைப் போன்று அவர்கள் அன்பின் சமூகத்தை அப்பம் பிடுதல் திருச்சடங்கின் வழியாக அனுபவித்தனர்.

38. ***உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அவர்களின் நடுவே வாழ்கிறார் என்பதை தொடக்க கிறிஸ்தவர்கள் எவ்வாறு உணர்ந்தனர்?*** இறைவார்த்தைத் திருச்சடங்கின் வழியாகவும், அப்பம் பிடுதல் திருச்சடங்கின் வழியாகவும்

39. சுருங்கக் கூறின் தேவநற்கருணையே முதல் கிறிஸ்தவர்களின் **ஆன்மீக வாழ்வின்** அடிப்படையும் உண்மையான **வல்லமையும்** ஆகும்.

40. *ஆதித்திருச்சபை இன்றைய பங்கு மக்களுக்கு தரும் படிப்பினை என்ன?* நமது ஒவ்வொரு பங்கின் மக்களும் தூய ஆவியால் நிரப்பப்பட வேண்டும். ஆதித்திருச்சபையின் உணர்வுடன் வாழ வேண்டியது ஒவ்வொரு பங்கின் கடமையாகும். அன்பின் சமூகமாக மாறவும், நற்கருணையின் வழியாக வாழும் இயேசுவை அனுதின வாழ்வில் அனுபவிக்கவும் ஒவ்வொரு திருச்சபை சமூகமும் முயல வேண்டும்.

*41. பெந்தகோஸ்து திருநாளில் தூய ஆவி திருத்தூதர்களை ஆட்கொண்டதைப் பற்றி பெந்தகோஸ்து நாளில் திருப்பலியின் போது பாடப்பாடும் பாடல் எது?*

“பெந்தேகோஸ்தின் நாளன்று

சீடர்கள் தம் மேலே

தூயாவியவர் தீநாவின்

நிகர் வந்தமர்ந்தாரே

www.malankaralibrary.com

ஆவியின் வரவால் வல்லமை அடைந்தார்கள்

இறைவார்த்தைகளை பறைசாற்றினரவர்கள்

மெசியா மைந்தர்களாய் உலகின் மாந்தர்களை மாற்றி

அழியா இன்பம் வாழ்வரசும் அடைந்திடச்செய்தார்கள்

ஹாலேலூய்யா - உ - ஹாலேலூய்யா"

42. ***தொடக்க கிறிஸ்தவ சமூகம் மாணவர்களுக்கு கூறும் அறிவுரை என்ன?*** தொடக்க கிறிஸ்தவ சமூகம் நம்பிக்கையிலும், மன்றாட்டுக்களிலும் ஒரே உள்ளத்தோடு செயல்பட்டு வந்த அவர்கள் அன்பிலும் சகோதரத்துவத்திலும் வாழ்ந்து வந்தனர். அவர்களின் நன்மைகள் நிறைந்த வாழ்வு பலரை இயேசுவிடம் கொண்டு வந்தது. மாணவர்களாகிய நமது அன்பும் சகோதரத்துவமும் பிறரை இயேசுவோடு ஒன்றிணையச் செய்யவேண்டும். அதற்காக நாம் முயல்வோம்.

43. ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே **மனத்தோடு கோவிலில்** தவறாது கூடிவந்தார்கள்.

**44.** பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் **பிட்டு**, உணவைப் **பகிர்ந்து** உண்டு வந்தார்கள். (திரு. பணி 2:46)

பாடம் 2

## திருச்சபை வளர்கின்றது

**பயிற்சி வினாக்கள்**

***1. புனித பேதுரு நிகழ்த்திய அருஞ்செயல்களை விவரி?*** ஒருநாள் பேதுருவும், யோவானும் இறைவேண்டல் செய்யும் பொருட்டு கோவிலுக்குச் சென்றனர். கோவிலுக்குள் செல்பரிடம் பிச்சை கேட்பதற்காக பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரை சிலர் சுமந்து கொண்டுவந்து கோவிலின் அழகு வாயில் என்னுமிடத்தில் படுக்க வைத்தனர். அவர் பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சை கேட்டபோது பேதுரு அவரைப் பார்த்து ".... நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" என்று கூறினார். உடனே அவர் நலமடைந்தார் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 3:1-10). பேதுரு நடந்து போகும்போது அவருடைய நிழல்படும்படியாக நோயாளிகளைக் படுக்கவைப்பது வழக்கமாயிருந்தது. அவ்வாறு பேதுருவின் நிழல்பட்டவர்கள் அனைவரும் நலமடைந்தனர்.

யோப்பா நகரில் தபித்தா என்னும் பெயருடைய பெண் சீடர் ஒருவர் இருந்தார். உடல் நலம் குன்றி ஒருநாள் அவர் இறந்துவிட்டார். அங்கிருந்தோரின் வேண்டுகோளுக்கிணங்க பேதுரு இறந்தவரை சந்தித்தார். பேதுரு அங்கிருந்து அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாள்படியிட்டு இறைவனிடம் வேண்டினார். பின்னர் அவரின் உடலைப் பார்த்து "தபித்தா எழுந்திடு" என்றார். உடனே அவர் உயிர்பெற்றவராக மாறினார் (தி.தூ.ப. 9:36-42). மேலும் பல அடையாளங்களும், அருஞ்செயல்களும் பேதுருவால் திருச்சபையில் நிகழ்ந்தன.

***2.புனித பேதுருவின் சிறைச்சாலை அனுபவங்கள் எப்படிப்பட்டவை?***

கிறிஸ்தவ விசுவாசம் போதித்ததற்காக பேதுருவும், பிற திருத்தூதர்களும் பலமுறை சிறையிலடைக்கப்பட்டனர். ஒருமுறை காவலில் வைக்கப்பட்ட பேதுருவையும் பிற திருத்தூதர்களையும் விசாரணை செய்த பின் விடுதலை செய்தனர். தொடர்ந்து கிறிஸ்துவைப் பற்றிய நிகழ்ச்சிகளை அறிவித்து வந்ததால் பொறாமை அடைந்த குருக்களும், யூதத்தலைவர்களும் அவர்களை கைது செய்து பொதுச்சிறையில் காவல் வைத்தனர். ஆனால் இரவில் ஆண்டவரின் தூதர் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை விடுவித்தார். விடுதலை அடைந்த பேதுருவும் திருத்தூதர்களும் கோவிலுக்குச் சென்று இயேசுவைப் பற்றி மக்களுக்குக் கற்பித்தார்கள். யூதருக்கு மகிழ்ச்சி அளிக்கும் பொருட்டு ஒருமுறை ஏரோது அரசன் பேதுருவை சிறையில் அடைத்தார். இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு சிறையில் தூங்கிக்கொண்டிருந்த பேதுருவுக்கு ஆண்டவரின் தூதர் தோன்றி விடுதலை அளித்தார். இவ்வாறாக தடைகளையும், துன்பங்களையும் ஏற்று கிறிஸ்துவைப் பற்றிய செய்திகளை பறைசாற்றுவதில் பேதுரு மிகுந்த இன்பம் கொண்டார் (திருத்தூதர் பணிகள் 4:1-15, 5:17-20, 12:6-11).

www.malankaralibrary.com

***3.சவுலின் மனமாற்றத்தை விவரி?***

முற்றிலுமாக கிறிஸ்தவர்களின் எதிரியாயிருந்த சவுலின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய வாழ்வை முழுமையாக மாற்றி அமைத்தது. கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக எருசலேமிலிருந்து தமஸ்கு நகருக்கு சவுல் புறப்பட்டார். அவர் தமஸ்குவை நெருங்கியபோது திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்தது. அவர் தரையில் விழுந்தார். 'சவுலே, சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்று ஆண்டவர் அவரோடு கேட்டார். தன்னோடு பேசுபவர் யார் என்பதை சவுல் புரிந்து கொள்ளவில்லை. தொடர்ந்து ஆண்டவர் சவுலைப் பார்த்து "நீ துன்புறுத்தும் இயேசு நானே" என்றார். அதன்பின்னர் ஆண்டவரின் திருவுளப்படி சவுல் செயல்பட்டார். மூன்று நாட்கள் அவர் பார்வையற்றவராய் இருந்தார். அனனியா என்னும் பெயருடைய சீடர் வழியாக ஆண்டவர் சவுலுக்கு மீண்டும் பார்வையளித்தார். திருத்தூதுப் பணிபுரிய ஆரம்பித்தது முதல் அவர் பவுல் என்னும் பெயரால் அழைக்கப்பட்டார் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 9:1-19).

***4. புனித பவுலின் நற்செய்திப் பணியைக் குறித்து விவரி?***

ஆதித்திருச்சபையின் மிகப்பெரிய மறைபோதகராயிருந்தவர் புனித பவுல். பிற இனத்தவரிடையே நற்செய்தி அறிவித்ததால் இவர் பிற இனத்தாரின் திருத்தூதர்" என்று அழைக்கப்பட்டார் . முதல் நூற்றாண்டில் திருச்சபையின் வளர்ச்சிக்கு மிகவும் அதிகமாக துணைபுரிந்தவர் என இவரைச் சிறப்பிக்கலாம்.

தமஸ்கு நகரிலிருந்து பவுல் எருசலேமுக்கு வந்தார். இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய படிப்பினைகளைக் குறித்தும் நன்கு அறிந்துகொண்டபின் அவர் கிறிஸ்துவை அறிவிக்க புறப்பட்டார். முதலில் கிறிஸ்தவர்கள் பவுலை நம்பவில்லையெனினும் பின்னர் அவருடைய மனமாற்றத்தை ஏற்றுக்கொண்டனர். மனமாற்றமடைந்த பவுல் தமது வாழ்க்கையை முழுவதுமாக ஆண்டவருக்குக் கையளித்தார். அந்தியோக்கியாவிலிருந்து பவுல் தமது நற்செய்திப் பணியை ஆரம்பித்தார். வாக்களிக்கப்பட்ட மீட்பர் இயேசு என்பதே அவருடைய நற்செய்திப் பணியின் மையக்கருத்து. அவருடைய நற்செய்திப் பணியின் பலனாக பல இடங்களில் திருச்சபை சமூகங்கள் நிறுவப்பட்டன. தமது மறைபரப்புப் பணியை முன்னிட்டு பவுல் மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டார். அவர் கொரிந்து கலாத்தியா, பிரிகியா, மாசிதோனியா, சைபிரஸ், எபேசு, இல்லிரிக்கம் உட்பட்ட பல இடங்களுக்குச் சென்று திருப்பணியாற்றினார்.

பவுல் எழுதிய பதினான்கு திருமுகங்கள் அவரது நற்செய்திப் பணி ஆர்வத்தை எடுத்துச் சொல்கின்றன. இறையியலில் இத்திருமுகங்களின் பங்களிப்பு மிகப்பெரிது.

**குறுவினாக்கள்**

1. *இயேசு தனது விண்ணேற்றத்துக்கு முன்னதாகவே திருத்தூதர்களிடம் கூறியது என்ன?* உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் (மாற்.16:15)
2. *இயேசுவின் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்ற கட்டளையை சீடர்கள் எவ்வாறு ஆரம்பித்தனர்?* இயேசு கிறிஸ்துவால் ஒப்படைக்கப்பட்ட இந்த மறைபரப்புப் பணியை தூய ஆவியின் துணையோடு சீடர்கள் பெந்தக்கோஸ்து திருநாளில் ஆரம்பித்தனர்.
3. *திருத்தூதர்கள் இயேசுவுக்கு சான்று பகர்ந்தது பற்றி திருத்தூதர்பணிகள் நூல் என்ன கூறுகிறது?* எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் (தி.பணிகள்1:8).
4. *இயேசுவால் ஒப்படைக்கப்பட்ட நற்செய்தி அறிவிப்பு பணி யார் தலைமையில் நடைபெற்றது?* திருத்தூதர்களின் தலைவரான புனித பேதுரு மற்றும் புனித பவுல் தலைமையில்
5. *இயேசு பேதுருவை திருச்சபையின் தலைவராக நியமித்ததன் விவிலியச் சான்றுகள் யாவை?* மத்.16:18, யோவா. 21:15-19.
6. *பேதுரு முதல் கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்கியது எவ்வாறு?* இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் தூய ஆவியின் வருகையால் பேதுரு தமது நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆரம்பித்தார். பெந்தக்கோஸ்து நாளில் சீடர்களனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டனர். தூய ஆவியின் அருள்பொழிவால்

www.malankaralibrary.com

தூண்டப்பட்ட பேதுரு நிகழ்த்திய அருளுரையைக் கேட்ட மூவாயிரம் பேர் மனந்திரும்பி திருச்சபையின் உறுப்பினர்களாக மாறினர். இவ்வாறு முதல் கிறிஸ்தவ சமூகம் புனித பேதுருவின் தலைமையில் வளர்ந்து வந்தது.

7. புனித பேதுரு **<u>தூய ஆவியின் அருள்பொழிவால்</u>** நற்செய்தி அறிவிப்புப் பணியில் முதன்மையானவராக மாறினார்.

8. *பேதுரு நிகழ்த்திய முதல் அருளுரையைக் கேட்டு திருச்சபையின் உறுப்பினர்களாக மாறியவர்கள் எத்தனை பேர்கள்?* மூவாயிரம்

9. *பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்தவரிடம் பேதுரு கூறியது என்ன?* "…. நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்"

10. *பேதுருவின் உரையைக் கேட்டு முதலில் ஆண்டவரை நம்பியவர்கள் யாவர்?* யூதர்கள்

11. *யோப்பா நகரில் வாழ்ந்து வந்த பெண் சீடர் யார்?* தபித்தா

12. *பேதுரு தபித்தாவுக்கு உயிரளித்த நிகழ்வை விளக்குக?* யோப்பா நகரில் தபித்தா என்னும் பெயருடைய பெண் சீடர் ஒருவர் இருந்தார். உடல் நலம் குன்றி ஒருநாள் அவர் இறந்துவிட்டார். அங்கிருந்தோரின் வேண்டுகோளுக்கிணங்க பேதுரு இறந்தவரை சந்தித்தார். பேதுரு அங்கிருந்து அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாள்படியிட்டு இறைவனிடம் வேண்டினார். பின்னர் அவரின் உடலைப் பார்த்து "தபித்தா எழுந்திடு" என்றார். உடனே அவர் உயிர்பெற்றவராக மாறினார் (தி.தூ.ப. 9:36-42).

13. *பேதுரு தபித்தாவின் இறந்த உடலைப் பார்த்து கூறியது என்ன?* "தபித்தா எழுந்திடு"

14. *பேதுருவின் நற்செய்தி அறிவிப்பு பணி எங்கே ஆரம்பமானது?* எருசலேமில்

15. *பேதுரு நற்செய்தி அறிவித்த இடங்கள் யாவை?* யூதேயா, சமாரியா, அந்தியோக்கியா

16. *பேதுருவும் யோவானும் சமாரியர்களிடம் ஆற்றிய பணிகள் பற்றி கூறுக?* இறைவார்த்தையை ஏற்றுக்கொண்ட சமாரியர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுமாறு பேதுருவும் யோவானும் இறைவனிடம் வேண்டினர். பின்பு அவர்கள் தங்கள் கைகளை சமாரியர் மேல் வைத்தபோது சமாரியர்கள் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

17. *திருத்தூதர்களின் மறைபரப்புப் பணியின் அடிப்படையாக அமைந்திருந்தது என்ன?* இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு போன்றவை (திருத்தூதர் பணிகள் நூல்கள் 8:4-25).

18. *பேதுருவும் மற்று திருத்தூதர்களும் எவ்வாறு யூத தலைவர்களின் எரிச்சலுக்கு உள்ளாகினர்?* பேதுரு மற்றும் பிற திருத்தூதர்களின் போதனைகளை மக்கள் ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்வதைக் கண்ட யூத குருக்களும், யூத தலைவர்களும் எரிச்சலடைந்தனர். கிறிஸ்தவ விசுவாசம் போதித்ததற்காக பேதுருவும், பிற திருத்தூதர்களும் பலமுறை சிறையிலடைக்கப்பட்டனர். ஒருமுறை காவலில் வைக்கப்பட்ட பேதுருவையும் பிற திருத்தூதகளையும் விசாரணை செய்த பின் விடுதலை செய்தனர். இவ்வாறு பல துன்பங்கள் ஏற்க நேரிட்ட போதும் பேதுரு மெசியாவைப் பற்றி அறிவிப்பதில் இருந்து பின்வாங்கவில்லை. தொடர்ந்து கிறிஸ்துவைப் பற்றிய நிகழ்ச்சிகளை அறிவித்து வந்ததால் பொறாமை அடைந்த குருக்களும், யூதத்தலைவர்களும் அவர்களை கைது செய்து பொதுச்சிறையில் காவல் வைத்தனர்.

19. *பேதுருவையும் திருத்தூதர்களையும் சிறையிலிருந்து கதவுகளைத் திறந்து இரவில் விடுவித்தது யார்?* ஆண்டவரின் தூதர்

20. *விடுதலை அடைந்த பின்னர் பேதுருவும் திருத்தூதர்களும் செய்தது என்ன?* கோவிலுக்குச் சென்று இயேசுவைப் பற்றி மக்களுக்குக் கற்பித்தார்கள்.

21. *யூதர்களின் மகிழ்வுக்காக பேதுருவை சிறையில் அடைத்தவர் யார்?* ஏரோது அரசன்

22. *ஏரோது அரசன் பேதுருவை சிறையில் எவ்வாறு கட்டியிருந்தான்?* இரும்புச் சங்கிலிகளால்

23. *இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு சிறையில் தூங்கிக்கொண்டிருந்த பேதுருவுக்கு விடுதலை அளித்தவர் யார்?* ஆண்டவரின் தூதர்

24. *பேதுருவின் மறைபணி பற்றிக் கூறும் விவிலியப்பகுதி எது?* திருத்தூதர் பணிகள் நூல்கள் 4:1-15, 5:17-20, 12:6-11

25. *விண்ணக காட்சியின் படி பிற இனத்தாரோடு முதன்முதலாக நற்செய்தி அறிவித்தவர் யார்?* பேதுரு

26. *பேதுரு பிற இனத்தாரோடு மறைபணியாற்றியதை விளக்குக?* ரோமை படைப்பிரிவில் நூற்றுவர் தலைவராயிருந்த கொர்னேலியு மற்றும் அவருடைய வீட்டார் அனைவருடனும் கடவுளின் திருவுளப்படி பேதுரு உரை நிகழ்த்தினார். பேதுரு பேசிக் கொண்டிருந்தபோது அவருடைய சொற்களைக் கேட்ட அனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டனர். பிற இனத்தவர் மீதும் தூய ஆவியின் கொடை பொழியப்பட்டதால் அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுக்க பேதுரு பணிக்கப்பட்டார். தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட பிற இனத்தவரைப் பற்றி பேதுரு, "நம்மைப் போலத் தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட இவர்கள் தண்ணீரால் திருமுழுக்குப் பெறுவதை யார் தடுக்க முடியும்?" என்று கூறினார். இவ்வாறு கிறிஸ்துவின் திருச்சபை அனைவருக்கும் பொதுவாக உள்ளது என்பது பேதுரு வழியாக வெளிப்படுத்தப்பட்டது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 10:1-48).

27. *கடவுளின் திருவுளப்படி பேதுரு எந்த நூற்றுவர் தலைவனின் வீட்டில் உரை நிகழ்த்தினார்?* கொர்னேலியு

28. *பேதுருவின் முதல் மறைபரப்புப்பணி மையம் எது?* எருசலேம்

29. *பேதுரு தமது இறுதி நாட்களை எங்கே செலவிட்டார்?* உரோம் நகரில்

30. *புதிய ஏற்பாட்டில் பேதுருவின் திருமுகங்கள் எத்தனை?* இரண்டு

31. *பேதுருவின் மரணம் பற்றி வரலாறு கூறுவது என்ன?* கி.பி. 67-ல் நீரோ மன்னரின் ஆட்சிகாலத்தில் பேதுரு உரோமில் வைத்து தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்தசாட்சியாக உயிர்நீத்ததாக வரலாறு கூறுகின்றது.

32. *பேதுரு இறந்த வருடம் என்ன?* கி.பி. 67-ல்

33. *பேதுரு இறந்த போது மன்னராக இருந்தவர் யார்?* நீரோ

34. *பேதுரு எங்கே வைத்து தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார்?* உரோமில்

35. *ஆதித்திருச்சபையின் மிகப்பெரிய மறைபோதகர் யார்?* புனித பவுல்.

36. *பிற இனத்தவரிடையே நற்செய்தி அறிவித்ததால் பிற இனத்தாரின் திருத்தூதர்" என்று அழைக்கப்பட்டவர் யார்* புனித பவுல்.

37. *யூதராக பிறந்த பவுலின் இயற் பெயர் என்ன?* சவுல்

38. *சவுலில் இளமை வாழ்வு பற்றிக் கூறுக?* சவுல் இளமையிலேயே யூதச் சட்டங்களையும், நெறிமுறைகளையும் கற்றறிந்தார். இளைஞனான சவுல் பேரார்வமுடைய பரிசேயர் என்பதால் சிறிஸ்தவர்களை அதிகமாகத் துன்புறுத்தி வந்தார்.

39. *சவுல் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக எருசலேமிலிருந்து எந்த நகருக்கு புறப்பட்டார்?* தமஸ்கு

40. *எப்போது சவுலை திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்து வீசியது?* சவுல் தமஸ்குவை நெருங்கியபோது

41. *தரையில் விழுந்த சவுலிடம் ஆண்டவர் முதலில் கேட்டது என்ன?* 'சவுலே, சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?"

42. *தரையில் விழுந்த சவுலிடம் ஆண்டவர் இரண்டாவது கூறியது என்ன?* "நீ துன்புறுத்தும் இயேசு நானே"

43. *ஆண்டவரின் காட்சிக்குப் பின்னர் சவுல் எத்தனை நாட்கள் பார்வையற்றவராய் இருந்தார்?* மூன்று

44. *ஆண்டவர் சவுலுக்கு யார் வழியாக பார்வையளித்தார்?* அனனியா

45. *திருத்தூதுபணி புரிய ஆரம்பித்தது முதல் சவுல் எப்பெயரால் அழைக்கப்பட்டார்?* பவுல்

46. *ஆண்டவரின் காட்சிக்குப் பின்னர் தமஸ்கு நகரிலிருந்து பவுல் எங்கே வந்தார்?* எருசலேம்

www.malankaralibrary.com

47. *பவுல் தமது நற்செய்திப் பணியை எங்கிருந்து ஆரம்பித்தார்* அந்தியோக்கியாவிலிருந்து

48. *பவுலின் நற்செய்திப் பணியின் மையக்கருத்து என்ன?* வாக்களிக்கப்பட்ட மீட்பர் இயேசு என்பதே.

49. *மறைபரப்புப் பணியை முன்னிட்டு பவுலின் நற்செய்திப் பயணங்கள் எத்தனை?* மூன்று

50. *பவுலின் மறைபரப்புப் பணி செய்த ஒரு சில இடங்களைக் கூறுக?* கொரிந்து கலாத்தியா, பிரிகியா, மாசிதோனியா, சைபிரஸ், எபேசு, இல்லிரிக்கம்

51. *பவுலின் நற்செய்திப் பணி ஆர்வத்தைக்காட்டும் விவிலிய நூல்கள் யாவை?* பவுல் எழுதிய பதினான்கு திருமுகங்கள்

52. *இறையியலில் மிகப்பெரிதும் பங்களிப்பு பெற்றுள்ள பவுலின் நூல்கள் யாவை?* பவுல் எழுதிய பதினான்கு திருமுகங்கள்

53. *கிறிஸ்துவுக்காக நற்செய்திப் பணியாற்றிய பவுலின் பாடுகள் பற்றிய வார்த்தைகள் யாவை?* "பன்முறை சிறையில் அடைபட்டேன். மூன்று முறை கப்பல் சிதைவில் சிக்கினேன்"

54. *மூன்றாம் தூதுரைப் பயணத்தின் இறுதியில் பவுலடியார் எங்கே வந்தடைந்தார்?* உரோம்

55. *பவுல் கொல்லப்பட்டபோது மன்னன் யார் ?* நீரோ

56. *பவுல் எப்போது கொல்லப்பட்டார்?* கி.பி. 67-ல்

57. *பவுல் எவ்வாறு கொல்லப்பட்டார்?* தலை வெட்டப்பட்டு இறந்தார்.

58. *திருத்தூதர்கள் யாருக்கு முதலில் இயேசுவின் நற்செய்தியை அறிவித்தனர்?* யூதர்களுக்கு

59. *எருலேம் திருச்சங்கம் கூட்டப்பட்டதன் பின்னணி என்ன?* நற்செய்தியை ஏற்றுக்கொண்ட பிற இனத்தார்களை பவுல் கிறிஸ்தவர்களாக மாற்றினார். ஆனால் கிறிஸ்தவர்களாகின்ற பிற இனத்தவர்கள் யூதர்களின் சட்டங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்று யூதக்கிறிஸ்தவர்கள் கூறினர். குறிப்பாக பிற இனத்தார்கள் விருத்தசேதனம் செய்துகொள்ளவேண்டும் என்றும் சிலர் கூறினர். இது திருச்சபையில் கருத்து வேறுபாடும், விவாதமும் ஏற்பட வழிவகுத்தது. எனவே திருத்தூதர்களும், மூப்பர்களும் இச்சிக்கலைக் குறித்து கலந்து பேசுமாறு எருசலேமில் ஒன்று கூடினர். இந்த சங்கம் எருசலேம் சங்கம் என அறியப்படுகின்றது.

60. *திருச்சபையில் கூட்டப்பட்ட முதல் திருச்சங்கம் எது?* எருசலேம் திருச்சங்கம்

61. *எருசலேம் திருச்சங்கத்தின் முதன்மையான திருத்தூதர்கள் யாவர்?* பேதுரு, பவுல்

62. ***எருசலேம் திருச்சங்கத்தின் தீர்மானம் என்ன?*** எருசலேம் திருச்சங்கத்தின் பலனாக கிறிஸ்தவர்களாக மாற பிற இனத்தார் யூதச்சட்டங்களைக் கடைபிடிக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

63. எந்த மதச்சட்டங்களிலிருந்து கிறிஸ்தவ மதம் சுதந்திரமானது? யூதமதச் சட்டங்களிலிருந்து

64. பேதுருவின் **தலைமையிலும்,** பவுலின் **இறையியல் வெளிப்பாட்டிலும்** திருச்சபை செழித்து வளர்ந்து கொண்டே இருந்தது.

65. *சீமோன் பேதுருவைப்பற்றி உயிர்ப்புக்குப்பின் இரண்டாம் ஞாயிறு திருப்பலியின் போது திருச்சபை நினைவு கூரும் பாடல் எது?*

“மீனவராம் சீமோனை ஆண்டவர் அழைத்தார்

மீன்பிடி வேலை கைவிடு நீ என்றும் சொன்னாரே

வாழ்வின் உலகம் சென்றிடவே மானிடரை

உன் வலை வீசி சேர்த்திடுவாய் சீமோனே நீயும்

உரோமையிலே சீமோன் வலைவீச

தேவர்களைப் பலரும் விட்டொழிய

www.malankaralibrary.com

இயேசுவை நம்பி வாழ்வுதனைக் கைக்கொண்டாரவர்கள்"

66. *புனித பேதுருவும், புனித பவுலும் நமக்குத் தரும் வாழ்க்கைச் சான்று என்ன?* புனித பேதுருவும், புனித பவுலும் இயேசுவின் நற்செய்திக்காக சான்று பகர்ந்தனர். அதைப்போன்று நாமும் நமது சான்று பகரும் வாழ்வின் மூலம் இயேசுவின் நற்செய்திக்கு சான்று பகர முயல்வோம்.

*67.* "நாங்கள் உங்களுக்கு அறிவித்த **நற்செய்தியினின்று** மாறுபட்ட ஒன்றை நாங்களோ **விண்ணிலிருந்து** வந்த தூதரோ யார் அறிவித்தாலும் அவர்கள் சபிக்கப்படுக". (கலாத்தியர் 1:8)

## பாடம் 3

## திருச்சபையின் இறை இயல்பு

**பயிற்சி வினாக்கள்**

*1. திருச்சபைக்கும் இறையரசுக்கும் இடையேயான உறவை விளக்கு?*

இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு ஆரம்பமானது இறையரசின் நற்செய்தியை அறிவித்துக் கொண்டே ஆகும். இயேசு "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று பறைசாற்றினார். (மாற் 1:15) இவ்வாறாக ஒருவர் மனம் மாறி இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட்டு திருமுழுக்கு பெற்றுக்கொள்வதன் வழியாக திருச்சபையின் உறுப்பினராகின்றார். அதன் வழியாக இறையரசின் குடிமகனாகவும் மாறுகிறார். ஒருவர் இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவருக்கு பணிவிடை புரியவும். இறைவனின் ஆட்சியை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் செய்வதன் வழியாக அவர் இறையரசுக்கு தகுதியுடையவராக மாறுகிறார். திருமுழுக்கின் வழியாக இறையரசின் உறுப்பினராகின்றோமெனினும் இறையரசின் முழு அனுபவம் நாம் எதிர்நோக்கியிருக்கும் ஒன்றாகும். இயேசுவின் இரண்டாம் வருகையால் மட்டுமே இறையரசின் முழுமையை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக்கொண்டு புது வாழ்க்கை வாழ்கின்ற இறைமக்களே திருச்சபை. திருமுழுக்கு வாயிலாக ஒருவர் இறையரசின் உறுப்பினரும் திருச்சபையின் உறுப்பினருமாக மாறுகிறார். திருச்சபையில் திருவருட்சாதனங்கள் வாயிலாக, குறிப்பாக நற்கருணை வாயிலாக இறையரசு அனுபவத்தில் இயேசு நம்மை வளர்க்கிறார். இறையரசில் விண்ணக விருந்தின் முன்சுவையை நற்கருணை அனுபவம் வாயிலாக நாம் பெறுகிறோம். காணப்படுகின்ற திருச்சபை இறையரசுக்கு பாதையாகவும், இறையரசின் அடையாளமாகவும் திகழ்கிறது. இறையரசாகும் நிறையனுபவம் நாம் எதிர்நோக்கியிருக்கும் ஒரு உண்மையாகும். திருச்சபை வாயிலாக இறையரசின் நிறைவுக்கு நாம் முன்னேறுகிறோம். எனவே திருச்சபையில் இறையரசின் அனுபவம் உண்டு. ஆண்டவராகிய கிறிஸ்து அறிவித்த இறையரசின் இவ்வுலக வடிவமே திருச்சபை. எனவே திருச்சபையும், இறையரசும் ஒன்றோடொன்று பிரிக்கமுடியாத உறவு கொண்டிருக்கிறது. இறையரசின் செய்தியை உலக முடிவு வரை அறிவிக்க திருச்சபை கடமைப்பட்டிருக்கிறது.

2. *திருச்சபை ஒரு மறைபொருளாக ஏற்கப்படுகிறது ஏன்?*

பிற சமூகங்களைப் போன்று பல இயக்கங்களையும் அதனுடைய பண்புகளையும் பெற்றிருப்பினும் திருச்சபை குறிப்பாக ஒரு மறையுண்மையைக் கொண்டுள்ளது. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருச்சபையின் மறைபொருள் தன்மை குறித்து தெளிவாக கற்பிக்கின்றது (திருச்சபை 10). திருச்சபையில் நிரந்தரம் செயல்பட்டுக்கொண்டிருக்கும் தூய ஆவியின் பிரசன்னத்தில் திருச்சபையின் மறைபொருள் தன்மையை நாம் காண்கின்றோம். திருச்சபையில் காணப்படுகின்ற சட்டங்களுக்குப் பின் கடவுளின் காணமுடியாத கைவன்மை செயல்படுகின்றது. தம்முடைய அன்பு நிறைந்த பாதுகாப்பின் வழியாக கடவுள் திருச்சபையை வழிநடத்துகிறார். திருச்சபையின் வழியாக நாம் கடவுளோடு ஒன்றிணைகிறோம். இறைமக்களின் மத்தியில் கடவுள் செயல்படுகிறார். இந்த செயல்பாடு மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். இதுவே திருச்சபை மறைபொருள் தன்மையின் மையம்.

மனித அறிவுக்கு எட்டாத கடவுளின் திட்டங்கள் என்பதே மறைபொருளின் பொருள். தெளிவாகக் கூறின் மெசியா தான் இந்த மறைபொருள். மெசியாவின் மீட்புத்திட்டம் திருச்சபை வழியாக தொடர்ந்து நடைபெறுவதால் அத்திருச்சபையை மறைபொருள் என்று அழைக்கின்றனர். "இறையாட்சியின்

www.malankaralibrary.com

மறைபொருளை அறிய உங்களுக்கு கொடுத்து வைத்திருக்கிறது" என்று இயேசு சீடர்களிடம் கூறினார் (மாற்கு 4:11). எனவே திருச்சபை ஒரு மறைபொருளாக கருதப்படுகிறது.

*3.திருச்சபையை கிறிஸ்துவின் அருளடையாளம் என அழைக்கிறோம் ஏன்?*

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவரைக் காணவும், கேட்கவும், தொட்டுணரவும், அவர் அளிக்கின்ற மீட்பில் பங்கு கொள்ளவும் அன்று வாழ்ந்தவர்களுக்கு முடிந்தது. ஆனால் அவருடைய இறப்புக்கும், உயிர்ப்புக்கும் பின்னர் அவரைக் காணவும், கேட்கவும், தொட்டுணரவும், அவர் அளிக்கின்ற மீட்பில் பங்குகொள்ளவும் அவரால் நிறுவப்பட்ட அருளடையாளமே திருச்சபை இயேசு இன்று நம்மோடு பேசுவதும், நம்மிடையே பிரசன்னமாவதும், நம்மை புனிதப்படுத்துவதும் இந்த திருச்சபையின் வழியாகவே ஆகும். இவ்வாறு உயிர்த்தெழுந்த இயேசுவை உலகுக்கு வெளிப்படுத்துகின்றதும், காணமுடியாத இறை அருளை நம்மில் பொழியப்படுகின்றதுமான காணக்கூடிய அடையாளமே திருச்சபை. எனவே திருச்சபை கிறிஸ்துவின் அருளடையாளம் என்று அழைக்கப்படுகிறது.

இயேசு காணமுடியாத தந்தையை வெளிப்படுத்துகின்ற அருளடையாளம் என்றும், அடையாளம் என்றும் நாம் அறிவோம். அவ்வாறு இயேசுவில் அருளடையாளங்களின் முழுமையைக் காண முடியும். எனவே மிகப்பெரிய அருளடையாளம் இயேசு கிறிஸ்துவே. தந்தையின் அடையாளமும் அவரே. இயேசு தந்தையின் அருளடையாளமானதைப் போன்று திருச்சபை இயேசுவின் அருளடையாளமாகும்.

*4. பின்வருவனவற்றின் பொருள் கூறுக.*

***a. எக்ளேசியா,*** திருச்சபை என்பதை கிரேக்க மொழியில் 'எக்ளேஸியா' என்று அழைக்கின்றனர். 'அழைக்கப்பட்டவர்களின் சமூகம்' என்பதே இந்த வார்த்தையின் பொருள்.

***b. மிஸ்டேரியோன்,*** "மிஸ்டேரியோன்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே மறைபொருள் என்று பொருள்கொள்கின்ற Mystery என்ற ஆங்கில வார்த்தை உருவானது.

***c.றோஸோ,*** சுறியானியில் மறைபொருள் என்று பொருள்கொள்கின்ற "றோஸோ" என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றனர். புனிதத்தன்மை நிறைந்த ஒன்றையே இங்கு மறைபொருள் என்பதன் வழியாகக் குறிப்பிடுகின்றனர்.

**<u>குறு வினா விடைகள்</u>**

1. *உயிர்த்தெழுந்த இயேசு மெசியா தனது பணியை தொடர்வதற்காக தூய ஆவியை அனுப்பி எதனை நிறுவினார்?* திருச்சபையை
2. *கிறிஸ்துவிலுள்ள நம்பிக்கையை அறிக்கையிட்டவர்கள் திருச்சபையின் உறுப்பினர்களாக மாறியபோது எவற்றை பெற்றுக் கொண்டனர்?* திருமுழுக்கும் தூய ஆவியையும்
3. *தொடக்ககால கிறிஸ்தவர்கள் இயேசுவை எவ்வாறு திருச்சபையில் கண்டனர்?* இயேசுவின் தொடர்ச்சியே திருச்சபை, இயேசுவின் உடலே திருச்சபை
4. *இயேசு கொண்டிருந்த இரு இயல்புகள் யாவை?* மனித இயல்பும் இறை இயல்பும்
5. *இயேசு நிறுவிய திருச்சபை கொண்டிருக்கும் இரு இயல்புகள் யாவை?* மனித இயல்பு, இறை இயல்பு
6. *திருச்சபையில் காணப்படுகின்ற மனித இயல்புகள் என்பன யாவை?* மக்கள் சமூகம், ஆட்சிமுறை, நிறுவனங்கள், இயக்கங்கள்
7. *திருச்சபையின் இறை இயல்பு எப்படிப்பட்டது?* காண முடியாததும், உள்ளியல்பை சார்ந்ததும்
8. இயேசுவில் **<u>மனித இயல்பும்</u>**, **<u>இறை இயல்பும்</u>** ஒன்றுபட்டிருப்பது போல் **<u>திருச்சபையின்</u>** புற அமைப்பும் உள்ளமைப்பும் ஒன்றுபட்டுள்ளது.
9. *இயேசுவின் இறை இயல்பு எவ்வாறு வெளிப்படுகிறது?* மனித இயல்பு வாயிலாக
10. *திருச்சபையின் இறை இயல்பு எவ்வாறு வெளிப்படுகிறது?* திருச்சபையின் புற அமைப்பிலிருந்து
11. *இயேசுவின் திருச்சபையின் இறை, மனித இயல்புகளுக்கான தொடர்பு என்ன?* இயேசுவின் மனித இயல்பு

www.malankaralibrary.com

அவருடைய இறை இயல்புக்கு ஏற்புடையதாக அமைந்தது. எனவே திருச்சபையின் புற அமைப்பு அதன் உள்ளமைப்புக்கு ஏற்புடையதாக அமைய வேண்டும்.

12. *இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு எவ்வாறு ஆரம்பமானது?* இறையரசின் நற்செய்தியை அறிவித்துக் கொண்டு

13. *இயேசு முதன்முதலில் எவ்வாறு இறையரசின் நற்செய்தியை அறிவித்தார்?* "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15)

14. *ஒருவர் எவ்வாறு திருச்சபையின் உறுப்பினராகின்றார்?* ஒருவர் மனம் மாறி இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட்டு திருமுழுக்கு பெற்றுக்கொள்வதன் வழியாக திருச்சபையின் உறுப்பினராகின்றார்.

15. *ஒருவர் எவ்வாறு இறையரசின் குடிமகனாக மாறுகிறார்?* திருச்சபையின் உறுப்பினராவதால் இறையரசின் குடிமகனாக மாறுகிறார்.

16. *ஒருவர் எவ்வாறு இறையரசுக்கு தகுதியுடையவராக மாறுகிறார்?* ஒருவர் இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவருக்கு பணிவிடை புரியவும், இறைவனின் ஆட்சியை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் செய்வதன் வழியாக அவர் இறையரசுக்கு தகுதியுடையவராக மாறுகிறார்.

17. *திருமுழுக்கின் வழியாக இறையரசின் உறுப்பினராகின்றோமெனினும் நமது எதிர்நோக்கு என்ன?* இறையரசின் முழு அனுபவம்

18. *இறையரசின் முழுமையை நாம் எப்போது பெற்றுக்கொள்ள முடியும்?* இயேசுவின் இரண்டாம் வருகையால் மட்டுமே இறையரசின் முழுமையை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

19. *திருச்சபை என்றால் என்ன?* இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக்கொண்டு புது வாழ்க்கை வாழ்கின்ற இறைமக்களே திருச்சபை.

20. *திருச்சபையின் கிரேக்கமொழிச் சொல் என்ன?* 'எக்ளேஸியா'

21. *'எக்ளேஸியா' என்பதன் பொருள் என்ன?* 'அழைக்கப்பட்டவர்களின் சமூகம்'

22. *திருமுழுக்கு வாயிலாக ஒருவர் எவற்றின் உறுப்பினராகின்றார்?* இறையரசின் உறுப்பினரும் திருச்சபையின் உறுப்பினரும்

23. *இயேசு நம்மை திருச்சபையில் எவ்வாறு வளரச்செய்கிறார்?* திருச்சபையில் திருவருட்சாதனங்கள் வாயிலாக, குறிப்பாக நற்கருணை வாயிலாக இறையரசு அனுபவத்தில் இயேசு நம்மை வளர்க்கிறார்.

24. *இறையரசில் விண்ணக விருந்தின் முன்சுவையை எதன் வாயிலாக நாம் பெறுகிறோம்?* நற்கருணை அனுபவம்

25. ***இறையரசுக்கு வழியாகவும், இறையரசின் அடையாளமாகவும் இருப்பது எது?*** காணப்படுகின்ற திருச்சபை

26. **இறையரசாகும்** நிறையனுபவம் நாம் **எதிர்நோக்கியிருக்கும்** ஒரு உண்மையாகும்.

27. *இறையரசின் நிறைவுக்கு நாம் எதன் வாயிலாக முன்னேறுகிறோம்?* திருச்சபை வாயிலாக

28. *ஆண்டவராகிய கிறிஸ்து அறிவித்த இறையரசின் இவ்வுலக வடிவம் எனப்படுவது எது?* திருச்சபை.

29. *இறையரசின் செய்தியை எக்காலம் வரை அறிவிக்க திருச்சபை கடமைப்பட்டிருக்கிறது?* உலக முடிவுவரை

30. *சமூகங்களையும் இயக்கங்களையும் போன்றே திருச்சபை குறிப்பாக கொண்டுள்ள தனித்தன்மை என்ன?* ஒரு மறையுண்மை

31. *இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருச்சபையின் இந்த மறைபொருளை குறித்து கற்பிப்பது என்ன?* இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருச்சபையைக் குறித்து கற்பிக்கும் போது திருச்சபையின் இந்த மறைபொருளை குறித்து தெளிவாக கற்பிக்கின்றது (திருச்சபை 10). திருச்சபையில் நிரந்தரம் செயல்பட்டுக்கொண்டிருக்கும் தூய ஆவியின் பிரசன்னத்தில் திருச்சபையின் மறைபொருள் தன்மையை

www.malankaralibrary.com

நாம் காண்கின்றோம். திருச்சபையில் காணப்படுகின்ற சட்டங்களுக்குப் பின் கடவுளின் காணமுடியாத கைவன்மை செயல்படுகின்றது. தம்முடைய அன்பு நிறைந்த பாதுகாப்பின் வழியாக கடவுள் திருச்சபையை வழிநடத்துகிறார். திருச்சபையின் வழியாக நாம் கடவுளோடு ஒன்றிணைகிறோம். இறைமக்களின் மத்தியில் கடவுள் செயல்படுகிறார். இந்த செயல்பாடு மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். இதுவே திருச்சபை மறைபொருள் தன்மையின் மையம்.

32. "மிஸ்டேரியோன்" என்ற *கிரேக்கச் சொல்லின் பொருள் என்ன?* மறைபொருள்
33. *மறைபொருள் என்பதன் ஆங்கிலச் சொல் என்ன?* Mystery
34. *மறைபொருள் என்பதன் சுறியானிச் சொல் என்ன*? "றோஸோ"
35. *மறைபொருள் என்பதன் வழியாகக் குறிப்பிடப்படுவது என்ன?* புனிதத்தன்மை நிறைந்த ஒன்று
36. *மறைபொருள் என்பதன் பொருள் என்ன?* மனித அறிவுக்கு எட்டாத கடவுளின் திட்டங்கள்
37. *மறைபொருள் என்பவர் யார்?* மெசியா
38. *திருச்சபையை மறைபொருள் என்பது ஏன்?* மெசியாவின் மீட்புத்திட்டம் திருச்சபை வழியாக தொடர்ந்து நடைபெறுவதால்
39. "இறையாட்சியின் **<u>மறைபொருளை</u>** அறிய உங்களுக்கு கொடுத்துவைத்திருக்கிறது"
40. *அருளடையாளம் என்றால் என்ன?* காணமுடியாத இறைவனின் அருளை காணக்கூடிய வகையில் பெற்றுத்தருகின்ற அடையாளமே அருளடையாளம்.
41. *திருச்சபையில் எத்தனை அருளடையாளங்கள் உள்ளன?* ஏழு
42. *காண முடியாத தெய்வீக வாழ்வை நமக்குத் தருகின்ற மீட்பின் அருளடையாளம் எனப்படுவது யாது?* திருச்சபை
43. *திருச்சபை என்னும் அருளடையாளத்தின் வழியாக யாருக்கு கடவுளின் கொடைகள் பொழியப்படுகிறது?* மனித இனம் முழுவதற்கும்
44. *திருச்சபை அடிப்படை அருளடையாளம் ஆவது எப்படி?* திருச்சபை அடிப்படை அருளடையாளம் அதாவது முதன்மை அருளடையாளம் ஆகும். திருச்சபை அடிப்படையான அருளடையாளமானதால் பல்வேறு அருளடையாளங்கள் திருச்சபையில் நிறைவேற்றப்படுகிறது.
45. *கிறிஸ்துவின் உயிர்ப்புக்குப் பின்னர் அவரைக் காணவும், கேட்கவும், தொட்டுணரவும், அவரால் நிறுவப்பட்ட அருளடையாளம் எனப்படுவது யாது?* திருச்சபை.
46. *இயேசு இன்று திருச்சபையின் வழியாக நமக்கு செய்வது என்ன?* நம்மோடு பேசவும், நம்மிடையே பிரசன்னமாகவும், நம்மை புனிதப்படுத்தவும் செய்கிறார்.
47. *திருச்சபை எதன் காணக்கூடிய அடையாளமாக உள்ளது?* உயிர்த்தெழுந்த இயேசுவை உலகுக்கு வெளிப்படுத்துகின்றதும், காணமுடியாத இறை அருளை நம்மில் பொழியப்படுகின்றதுமான காணக்கூடிய அடையாளமே திருச்சபை.
48. *இயேசு யாரை வெளிப்படுத்துகின்ற அருளடையாளம் என்றும், அடையாளம் என்றும் நாம் அறிவோம்?* காணமுடியாத தந்தையை
49. *அருளடையாளங்களின் முழுமையை யாரில் காண முடியும்?* இயேசுவில்
50. *மிகப்பெரிய அருளடையாளம் என்பவர் யார்?* இயேசு கிறிஸ்துவே.
51. இயேசு **<u>தந்தையின்</u>** அருளடையாளமானதைப் போன்று திருச்சபை **<u>இயேசுவின்</u>** அருளடையாளமாகும்.
52. *மோசே உடன்படிக்கைப் பேழையை நிறுவினார் என்றும், அதுவே இயேசு நிறுவிய திருச்சபையின் முன் அடையாளம் என்றும் கூதோஸ் ஈத்தோ, ஹீதோஸ் ஈத்தோ ஞாயிறுகளிலும் திருச்சபை நினைவு கூர்கின்ற பாடல் எது?*

www.malankaralibrary.com

"மோசே ஒப்பந்தப்பேழை நிறுவிய நாளில்
எல்லாரும் தம் பொருத்தனைகள்
செலுத்தி மகிழ்ந்தனரே
சீமான்கள் பொன்னும்
வெள்ளியும் நேர்ந்தனரே
ஏழைமக்கள் நூற்றுகிலும் கைம்பெண் சிறுகாசும் -
இவையெல்லாம் சபையின் முன்குறியே
மண்ணிதிலும் விண்ணிலும் சரிநிகராய்
சபையை நிறுவிய நல்நாதர் இயேசு நிதம் போற்றி"

53. "நானே திராட்சை செடி, நீங்கள் அதன் கொடிகள் ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது". (யோவான் 15:5)

## பாடம் 4

## திருச்சபையின் அடையாளங்கள்

***பயிற்சி வினாக்கள்***

*1.* ***திருச்சபையை கிறிஸ்துவின் மறையுடல் என்று கூறுவது ஏன்?*** திருச்சபை கிறிஸ்துவின் தொடர்ச்சியே ஆகும். இக்கருத்தை வெளிப்படுத்த புனித பவுல் தேர்ந்தெடுத்த ஒரு அடையாளமே 'திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' என்பது. புனித பவுல் கூறியதாவது, "திருச்சபையே அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது நிறைவு பெறுகின்றது" (எபேசியர் 1:23) "திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே" (கொலோசையர் 1:18). சவுல் என்று அழைக்கப்பட்டிருந்த பவுல் கடவுளின் திருச்சபையை துன்புறுத்தி வந்த காலத்தில் இயேசு அவருக்குத் தோன்றி இவ்வாறு கூறினார். "நீ துன்புறுத்தும் இயேசு நானே" (திருத்தூதர் பணிகள் நூல்கள் 9:5). திருச்சபையை துன்புறுத்தும் போது கிறிஸ்துவே துன்புறுத்தப்படுகிறார் என்று சவுல் உணர்ந்தார். இவ்வாறு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே பிரிக்கமுடியாத ஓர் உறவு உள்ளது. அதைப்போன்று தேவநற்கருணை அனுபவத்தில் பங்குகொள்கின்ற விசுவாசிகள் கிறிஸ்துவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவின் உடலின் உறுப்புக்களாக மாறுகின்றனர். "அப்பம் ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:17).

கிறிஸ்து தலையும் திருச்சபை அவரது உடலும் ஆகும் என்று நாம் கூறுவதிலிருந்து கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே இருப்பது ஓர் பிரிக்கமுடியாத உறவு என்பது தெளிவாகின்றது. உயிர்த்தெழுந்த பின்னர் கிறிஸ்துவுக்கு ஊன் உடல் இல்லை. மாறாக அவர் மாட்சியடைந்த உடலைப் பெற்றிருக்கிறார். திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாதலால் திருச்சபை என்னும் உடல் வழியாகவே கிறிஸ்து பேசவும், செயல்படவும் செய்கிறார். கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புக்கள் என்னும் நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஒருவருக்கொருவர் உறவு கொண்டிருக்கின்றனர். "உடல் ஒன்றே உறுப்புக்கள் பல. உடலின் உறுப்புக்கள் பலவாயினும், உடல் ஒன்றாயிருப்பது போல் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1கொரிந்தியர் 12:12-13). திருமுழுக்கின் வழியாக நாம் அனைவரும், இயேசுவின் உடலின் உறுப்புக்களானதால் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு வாழக் கடமைப்பட்டுள்ளோம். ஒரு உறுப்புக்கு வேதனை ஏற்படும் போது உடல் முழுவதும் வேதனைப்படுவதைப் போன்று திருச்சபையில் ஒரு மனிதரின் வேதனை, அனைவருடையவும் வேதனையாக மாறுகிறது. இந்த அளவுக்கு திருச்சபை உறுப்பினர்களிடையேயும், திருச்சபைக்கும் இயேசுவுக்குமிடையேயும் உறவு கொண்டிருக்கின்றனர் என்று இந்த அடையாளம் குறிப்பிடுகின்றது.

www.malankaralibrary.com

***2. 'திருச்சபை கிறிஸ்துவின் மணமகள்' - மலங்கரை வழிபாட்டு முறையின் பின்னணியில் விளக்குக?*** திருச்சபைக்கும், இயேசுவுக்கும் இடையேயான உறவைக் குறிக்க மலங்கரைத் திருச்சபை விரும்பி பயன்படுத்துகின்ற ஓர் அடையாளமே "திருச்சபை கிறிஸ்துவின் மணமகள்" என்பது. பழைய ஏற்பாட்டில் ஆண்டவருக்கும் இஸ்ரயேலருக்கும் இடையேயான உறவை மணமகளுக்கும் மணமகனுக்கும் அதாவது கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான உறவோடு இறைவாக்கினர்கள் ஒப்புமைப்படுத்தியுள்ளனர் (ஒசேயா 2:19-21, எசாயா 54:5, எரேமியா 31:32).

இந்த சிந்தனையின் அடிப்படையிலேயே கிறிஸ்துவை மணமகனாகவும், திருச்சபையை மணமகளாகவும் புனித பவுல் குறிப்பிடுகின்றார். புனித பவுல் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள அன்பு உறவை, கணவர் மனைவியருக்கு இடையேயான ஆழமான அன்பு உறவுக்கு உவமையாகக் கூறியுள்ளார் (எபேசியர் 5:23-27).

மலங்கரைத் திருச்சபையின் வழிபாட்டு முறைகளில் திருச்சபையை கிறிஸ்துவின் மணமகளாக குறிப்பிடுவதைக் காணலாம். காலை மன்றாட்டில் நாம் இவ்வாறு பாடுகிறோம். மெசியாவின் மணமகளாகும் ச-பையே பேறுடையாளே நின்திருமணவாளன் நிதனார் இரங்குக அடியார்மேல்

திருமணச்சடங்கின் செபங்களும், பாடல்களுமெல்லாம் மெசியாவை மணமகனாகவும் திருச்சபையை மணமகளாகவும் குறிக்கின்றது. இயேசு திருச்சபை என்னும் மணமகளுக்காக யோர்தான் நதியில் வைத்து திருமண ஒப்பந்தம் செய்து கல்வாரி மலையில் சிலுவையில் வைத்து அவளுக்கு தனது உடலையும், இரத்தத்தையும் மோதிரமாக வழங்கவும் செய்தார். இயேசு திருச்சபையை திருமணம் செய்து கொள்ள தனது உடலையும் இரத்தத்தையும் கொடையாகக் கொடுத்து தம் உடலையும் இரத்தத்தையும் கொண்டு திருமண விருந்து ஏற்பாடு செய்யவும் செய்தார். இவ்வாறு திருச்சபையை இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் கொடுத்து விலைக்கு வாங்கினார். "நீங்கள் விலைக்கு வாங்கப்பட்டவர்கள்" என்னும் புனித பவுலின் சிந்தனையை இந்த மன்றாட்டுகளில் காணலாம். மணமகனான இயேசு தனது உயிரைக் கொடுத்து மணமகளான திருச்சபையை அன்பு செய்யவும் அவளை உரிமையாக்கிக் கொள்ளவும் செய்தார் என்னும் சிந்தனை நமது செபங்களில் வெளிப்படுகிறது.

திருச்சபை இயேசுவின் மணமகள் என்பதன் வழியாக திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் இயேசுவின் மணமகளாக மாற்றப்படுகின்றனர். இயேசுவுக்கும் மனிதருக்கும் இடையேயான தனிப்பட்ட அன்புறவின் வழியாகவே ஒவ்வொருவரும் இயேசுவின் மணமகளாக மாறுகிறோம். இயேசு கிறிஸ்துவை மணமகளாக ஏற்றுக்கொண்டு அவரை ஆராதிக்க வேண்டும் என்பதே திருச்சபையின் அர்ப்பணத்தினுடையவும் விசுவாசத்தினுடையவும் அடிப்படை ஆகும்.

***3. 'திருச்சபை கடவுளின் ஆலயம்' குறிப்பு வரைக?*** திருச்சபையை கடவுளின் ஆலயமென்றும், கடவுளின் இல்லம் என்றும் நாம் புரிந்து கொள்கின்றோம். கடவுளின் சிறப்பு பிரசன்னம் இருப்பதாலேயே நாம் தேவாலயத்துக்கு மதிப்பளிக்கின்றோம். எருசலேம் தேவாலயத்தில் கடவுளின் சிறப்பு பிரசன்னம் இருப்பதாக யூத மக்கள் கருதினர். ஒருமுறை இயேசு கூறியதாவது. "இக்கோவிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" (யோவான் 2:19). எருசலேம் தேவாலயத்தை இடிப்பதைப் பற்றியே இயேசு கூறினார் என்று யூதர்கள் தவறாகப் புரிந்து கொண்டனர். ஆனால் தம் உடலாகிய தேவாலயத்தை இடித்தால் மூன்றாம் நாள் தான் உயிருடன் எழுப்பப்படுவேன் என்னும் பொருளிலேயே இயேசு அவ்வாறு கூறினார். இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் திருச்சபை என்னும் புதிய தேவாலயம் உருவெடுப்பதைப் பற்றியே இயேசு கூறினார். இந்த புதிய தேவாலயத்தின் மூலைக்கல்லாக இருப்பவர் கிறிஸ்து. திருத்தூதர்களை அடித்தளமாக் கொண்டு இது அமைக்கப்பட்டது. தேவாலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான விலைமதிப்பற்ற உயிருள்ள கற்களே விசுவாசிகள். திருத்தூதர்களும் இயேசுவும் ஒன்று சேர்ந்த திருச் சபையை தேவாலயத்துடன் ஒப்புமைப்படுத்தலாம் (எபேசியர் 2:20-22, 1பேதுரு 2:4-5). ஒவ்வொரு விசுவாசியும் கடவுளின் தேவாலயம் என்று புனித பவுல் கற்பிக்கின்றார் (1 கொரிந்தியர் 6:16, 19). கடவுளின் தேவாலயம் தூயதாதலால் விசுவாசிகள் ஒவ்வொருவரும் புனிதத் தன்மையில் வாழ வேண்டும் என்று திருச்சபை கற்பிக்கின்றது.

***4. திருச்சபையைக் குறிப்பிடும் பழைய ஏற்பாட்டு - புதிய ஏற்பாட்டு அடையாளங்கள் யாவை?***

**பழைய ஏற்பாட்டு அடையாளங்கள்:** வெள்ளப்பெருக்கிலிருந்து நோவாவின் பேழையின் வழியாக

www.malankaralibrary.com

அனேகமானோர் மீட்கப்பட்டதனால் திருச்சபை அத்துடன் உருவகப்படுத்தப்படுகிறது. ஆபிரகாம் ஈசாக்கை பலியிடுவதற்காக தயார் செய்த பலிபீடத்தை திருச்சபையின் அடையாளமாகக் கருதுகின்றனர். பெத்தேலில் வைத்து யாக்கோபு கனவு கண்டபோது அவரால் அருட்பொழிவு செய்யப்பட்ட அந்த கல் திருச்சபையைக் குறிக்கின்றது. மன்னாவும், உடன்படிக்கை பலகைகளும் பாதுகாக்கப்பட்டு வந்த மோசேயின் கூடாரம் திருச்சபையின் அடையாளமாக கருதப்படுகிறது.

திருச்சபையைப் பற்றிய பலவகையான எடுத்துக்காட்டுகள் நமது மன்றாட்டுக்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. தாவீது அரசர் திருச்சபையை ஆண்டவரின் நகரமென்றும், செக்கரியா இறைவாக்கினர் திருச்சபையை தூய்மையின் பலிபீடம் என்றும் எசக்கியேல் இறைவாக்கினர் திருச்சபையை நீல மணிக்கல் தோற்றமுடைய அரியணை என்றும் அழைத்தனர்.

**புதிய ஏற்பாட்டில் அடையாளங்கள்:** புதிய ஏற்பாட்டில் திருச்சபையைக் குறிக்கின்றதும், திருச்சபைக்கும், இயேசுவுக்கும் இடையேயான உறவை தெளிவாக்குகின்றதுமான பலவகையான உவமைகளைக் காணலாம். கடுகு விதை, புளிப்பு மாவு, நல்ல நிலம் போன்ற உவமைகள் திருச்சபையைக் குறிக்கின்றன. மேலும் மேய்ப்பரும் ஆடுகளும் (யோவான் 10:1-21), திராட்சை செடி (யோவான் 15:1-10), கட்டடத்தின் மூலைக்கல்லும் பிற கற்களும் (எபேசியர் 2:20-22) தலைமைக் குருவும், குருத்துவ குலமும் (எபி 5:10) உடலும் உறுப்புகளும் (1கொரிந்தியர் 12:12-31), இரண்டாம் ஆதாமும் புதிய படைப்பும் (1கொரிந்தியர் 15:22-45), மணமகனும், மணமகளும் (எபேசியர் 5:22-33) போன்ற பல்வேறு உவமைகளின் வழியாக திருச்சபையை புதிய ஏற்பாட்டில் நாம் காண முடிகிறது.

**குறு வினாக்கள்**

1. *உயிர்த்தெழுந்த இயேசு தமது பணியை எதன் வழியாக தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்?* திருச்சபையின்
2. *திருச்சபைக்கும், இயேசுவுக்கும் இடையேயான உறவை அதிகமாக புரிந்துகொள்ள உதவுவன என்ன?* அடையாளங்கள்
3. திருச்சபை **கிறிஸ்துவின்** தொடர்ச்சியே ஆகும்.
4. *திருச்சபை கிறிஸ்துவின் தொடர்ச்சியே என்பதை வெளிப்படுத்த புனித பவுல் தேர்ந்தெடுத்த அடையாளம் என்ன?* 'திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்'
5. *'திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' என்பது பற்றி பவுல் கூறியவை யாவை?* “திருச்சபையே அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது நிறைவு பெறுகின்றது” (எபேசியர் 1:23) "திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே” (கொலோசையர் 1:18).
6. *சவுல் எவ்வாறு திருச்சபையின் மேன்மையை புரிந்து கொண்டார்?* சவுல் என்று அழைக்கப்பட்டிருந்த பவுல் கடவுளின் திருச்சபையை துன்புறுத்தி வந்த காலத்தில் இயேசு அவருக்குத் தோன்றி இவ்வாறு கூறினார். “நீ துன்புறுத்தும் இயேசு நானே” (திருத்தூதர் பணிகள் நூல்கள் 9:5). திருச்சபையை துன்புறுத்தும் போது கிறிஸ்துவே துன்புறுத்தப்படுகிறார் என்று சவுல் உணர்ந்தார்.
7. “**திருச்சபையே** அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற **அவரால்** அது நிறைவு பெறுகின்றது”
8. "**திருச்சபையாகிய** உடலுக்குத் **தலையும்** தொடக்கமும் அவரே”
9. *நற்கருணை வழியாக கிறிஸ்துவின் உடலின் உறுப்புக்களாக மாறுவது எப்படி?* விசுவாசிகள் கிறிஸ்துவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் உட்கொள்வதால்
10. "**அப்பம்** ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே **உடலாய்** இருக்கிறோம்” (1 கொரிந்தியர் 10:17).
11. கிறிஸ்து **தலையும்** திருச்சபை அவரது **உடலும்** ஆகும்.
12. *உயிர்த்த கிறிஸ்துவுக்கு ஊன் உடல் இல்லை, மாறாக அவர் பெற்றிருப்பது என்ன?* மாட்சியடைந்த உடல்
13. *கிறிஸ்து திருச்சபை வழியாக பேசுவதும் செயல்படுவதும் ஏன்?* திருச்சபை கிறிஸ்துவின்

www.malankaralibrary.com

மறையுடலாதலால் திருச்சபை என்னும் உடல் வழியாகவே கிறிஸ்து பேசவும், செயல்படவும் செய்கிறார்.

14. *கிறிஸ்துவில் ஒவ்வொரு மனிதனும் ஒருவருக்கொருவர் உறவு கொண்டிருப்பது ஏன்?* கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புக்கள் என்னும் நிலையில்

15. *உடல் ஒன்றே உறுப்புக்கள் பல என்பது பற்றி புனித பவுல் கூறுவது என்ன?* "உடல் ஒன்றே உறுப்புக்கள் பல. உடலின் உறுப்புக்கள் பலவாயினும், உடல் ஒன்றாயிருப்பது போல் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1கொரிந்தியர் 12:12-13).

16. *நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு வாழ கடமைப்பட்டுள்ளோம் ஏன்?* திருமுழுக்கின் வழியாக நாம் அனைவரும், இயேசுவின் உடலின் உறுப்புக்களானதால் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு வாழ கடமைப்பட்டுள்ளோம்.

17. *ஒரு மனிதனின் வேதனை அனைவருடையவும் வேதனையாக மாறுவது எப்படி?* ஒரு உறுப்புக்கு வேதனை ஏற்படும் போது உடல் முழுவதும் வேதனைப்படுவதைப் போன்று திருச்சபையில் ஒரு மனிதரின் வேதனை அனைவருடையவும் வேதனையாக மாறுகிறது.

18. *திருச்சபையில் உறவு பற்றி கூறுக?* திருச்சபை உறுப்பினர்களிடையேயும், திருச்சபைக்கும் இயேசுவுக்குமிடையேயும் உறவு கொண்டிருக்கின்றனர்.

19. *நாம் தேவாலயத்துக்கு மதிப்பளிப்பது ஏன்?* கடவுளின் சிறப்பு பிரசன்னம் இருப்பதால்

20. *எங்கே கடவுளின் சிறப்பு பிரசன்னம் இருப்பதாக யூத மக்கள் விசுவசித்திருந்தனர்?* எருசலேம் தேவாலயத்தில்

21. *எருசலேம் தேவாலயத்தை இடிப்பது பற்றி இயேசு கூறியது என்ன?* "இக்கோவிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" (யோவான் 2:19).

22. *எருசலேம் தேவாலயத்தை இடிப்பது பற்றி இயேசு கூறியதன் பொருள் என்ன?* இயேசு தம் உடலாகிய தேவாலயத்தை இடித்தால் மூன்றாம் நாள் தான் உயிருடன் எழுப்பப்படுவேன் என்னும் பொருளில் இயேசு கூறினார். மேலும் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் திருச்சபை என்னும் புதிய தேவாலயம் உருவெடுப்பதைப் பற்றியே இயேசு கூறினார்.

23. *திருச்சபை என்னும் புதிய தேவாலயத்தின் மூலைக்கல்லாக இருப்பவர் யார்?* கிறிஸ்து.

24. *திருச்சபை என்னும் புதிய தேவாலயத்தின் அடித்தளமாக அமைக்கப்பட்டவர்கள் யாவர்?* திருத்தூதர்கள்

25. *திருச்சபை என்னும் தேவாலயத்தைக் கட்டத்தேவையான விலைமதிப்பற்ற உயிருள்ள கற்களாக இருப்பவர்கள் யாவர்?* விசுவாசிகள்.

26. *திருத்தூதர்களும் இயேசுவும் ஒன்று சேர்ந்த திருச்சபையை தேவாலயத்துடன் ஒப்புமைப்படுத்தும் விவிலியப் பகுதிகள் யாவை?* எபேசியர் 2:20-22, 1பேதுரு 2:4-5.

27. *திருச்சபை என்னும் கடவுளின் தேவாலயம் தூயதாதலால் விசுவாசிகள் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ வேண்டும்?* புனிதத் தன்மையில்

28. *திருச்சபைக்கும், இயேசுவுக்கும் இடையேயான உறவைக் குறிக்க மலங்கரைத் திருச்சபை பயன்படுத்துகின்ற அடையாளம் யாது?* "திருச்சபை கிறிஸ்துவின் மணமகள்"

29. *பழைய ஏற்பாட்டில் ஆண்டவருக்கும் இஸ்ரயேலருக்கும் இடையேயான உறவை எத்தகைய உறவோடு இறைவாக்கினர்கள் ஒப்புமைப்படுத்தியுள்ளனர்?* மணமகளுக்கும் மணமகனுக்கும் அதாவது கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான உறவோடு

30. *பழைய ஏற்பாட்டில் ஆண்டவருக்கும் இஸ்ரயேலருக்கும் இடையேயான உறவை கணவன் மனைவி உறவோடு ஒப்புமைப்படுத்தியுள்ள பகுதிகள் யாவை?* ஒசேயா 2:19-21, எசாயா 54:5, எரேமியா 31:32

31. *புனித பவுல் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள அன்பு உறவு பற்றி, எபேசியர் 5:23-27 ல் கூறுவது யாது?* புனித பவுல் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள அன்பு உறவை கணவர்

www.malankaralibrary.com

மனைவியருக்கு இடையேயான ஆழமான அன்பு உறவுக்கு உவமையாகக் கூறியுள்ளார்.

32. *திருச்சபையை கிறிஸ்துவின் மணமகளாக குறிப்பிடுவதை மலங்கரை வழிபாட்டு முறை காலை மன்றாட்டில் நாம் எவ்வாறு பாடுகிறோம்?* மெசியாவின் மணமகளாகும் ச-பையே பேறுடையாளே நின்திருமணவாளன் நிதனார் இரங்குக அடியார்மேல்

33. *மலங்கரை வழிபாட்டு முறையின் எந்த திருச்சடங்கின் செபங்களும், பாடல்களும் மெசியாவை மணமகனாகவும் திருச்சபையை மணமகளாகவும் குறிக்கின்றன?* திருமணத் திருச்சடங்கின்

34. *இயேசு திருச்சபையை மோதிரம் வழங்கி திருமணம் செய்ததை கூறுக?* இயேசு திருச்சபை என்னும் மணமகளுக்காக யோர்தான் நதியில் வைத்து திருமண ஒப்பந்தம் செய்து கல்வாரி மலையில் சிலுவையில் வைத்து அவளுக்கு தனது உடலையும், இரத்தத்தையும் மோதிரமாக வழங்கவும் செய்தார்.

35. *இயேசு திருச்சபை என்னும் மணமகளுக்காக எங்கே வைத்து திருமண ஒப்பந்தம் செய்தார்?* யோர்தான் நதியில்

36. *இயேசு திருச்சபையை எவ்வாறு திருமணம் செய்தார்?* கல்வாரி மலையில் சிலுவையில் வைத்து அவளுக்கு தனது உடலையும், இரத்தத்தையும் மோதிரமாக வழங்கி திருச்சபையை திருமணம் செய்தார்.

37. *இயேசு திருச்சபையை திருமணம் செய்த போது திருமண விருந்துக்கு எவ்வாறு ஏற்பாடு செய்தார்?* இயேசு திருச்சபையை திருமணம் செய்து கொள்ள தனது உடலையும் இரத்தத்தையும் கொடையாகக் கொடுத்து தம் உடலையும் இரத்தத்தையும் கொண்டு திருமண விருந்து ஏற்பாடு செய்யவும் செய்தார்.

38. *இயேசு எவ்வாறு திருச்சபையை விலைக்கு வாங்கினார்?* இயேசு திருச்சபையை தனது உடலையும் இரத்தத்தையும் கொடுத்து விலைக்கு வாங்கினார்.

39. *இயேசு திருச்சபையை விலைக்கு வாங்கினார் என்பது பற்றிய புனித பவுலின் கூற்று என்ன?* "நீங்கள் விலைக்கு வாங்கப்பட்டவர்கள்"

40. *மணமகனான இயேசு மணமகளான திருச்சபையை உரிமையாக்கியது பற்றி நமது செபங்களில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன?* மணமகனான இயேசு தனது உயிரைக் கொடுத்து மணமகளான திருச்சபையை அன்பு செய்யவும் அவளை உரிமையாக்கிக் கொள்ளவும் செய்தார் என்னும் சிந்தனை நமது செபங்களில் வெளிப்படுகிறது.

41. *நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் மணமகள் என்பது எவ்வாறு?* திருச்சபை இயேசுவின் மணமகள் என்பதன் வழியாக திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் இயேசுவின் மணமகளாக மாற்றப்படுகின்றனர். இயேசுவுக்கும் ஒரு மனிதருக்கும் இடையேயான தனிப்பட்ட அன்புறவின் வழியாகவே ஒருவர் இயேசுவின் மணமகளாக மாறுகிறோம். இயேசு கிறிஸ்துவை மணமகளாக ஏற்றுக்கொண்டு அவரையே ஆராதிக்க வேண்டும் என்பதே திருச்சபையின் அர்ப்பணத்தினுடையவும் விசுவாசத்தினுடையவும் அடிப்படை ஆகும்.

42. *திருச்சபை ஒரு "இன்பவனம்" என்பது பற்றிக் கூறுக?* திருச்சபையைக் குறிப்பதற்கு மலங்கரை திருச்சபை பயன்படுத்தும் மற்றொரு அடையாளமே "இன்பவனம்". தொடக்கத்தில் கடவுள் ஆதாமைப் (மனித இனத்தை) படைத்து கிழக்கே இருந்த ஏதேன் தோட்டத்தில் (இன்ப வனம்) குடியமர்த்தினார். இன்பவனம் அனைத்து நன்மைகளும் நிறைந்த இடமாகும். இன்பவனத்திலுள்ள இறை அனுபவம் திருச்சபையிலும் உண்டு. திருமுழுக்கும், இரத்த சாட்சிகளின் எலும்புகளும், பலிபீடமும், வாழ்வளிக்கும் மருந்தும் (தேவ நற்கருணை) அதனைப் பகிர்ந்தளிக்கும் குருவானவர்களும் திருச்சபையில் உள்ளனர். இவை வழியாக இன்பவனத்தின் அனுபவம் திருச்சபையில் உண்டு என புரிந்துகொள்ள முடிகிறது.

43. *திருச்சபையை தாய் என்பது ஏன்?* திருச்சபை தாய் என்னும் நிலையில் திருமுழுக்குத் தொட்டியின் வழியாக மக்களுக்கு பிறப்பை வழங்கி அவர்களுக்கு ஆன்மீக உணவை அளித்து வளர்க்கவும் ஆன்மீக பயிற்சி வழங்கவும் செய்கிறார். ஒரு தாயின் கடமைகளை செயல்படுத்துவதனால் திருச்சபையைத் தாய் என்று அழைக்கிறோம்.

44. *திருச்சபையை விண்ணக எருசலேம் என்பது ஏன்?* விண்ணக எருசலேமை அன்னையாக புனித பவுல்

www.malankaralibrary.com

குறிப்பிடுகின்றார். (கலாத்தியர் 4:26:28) இயேசுவின் மீட்பின் நிகழ்வுகள் முழுமை அடைந்ததும் திருச்சபை ஆரம்பமானதும் எருசலேமில் வைத்து ஆகும். கடவுளின் தூய நகரம் என்னும் நிலையில் எருசலேம் முக்கியமானது. எனவே திருச்சபையை விண்ணக எருசலேம் என்று அழைக்கின்றோம்.

45. *திருச்சபையை நோவாவின் பேழைக்கு ஒப்பிடுவது ஏன்?* வெள்ளப்பெருக்கிலிருந்து நோவாவின் பேழையின் வழியாக அனேகமானோர் மீட்கப்பட்டது போன்று திருச்சபை வழியாக மக்கள் மீட்பு பெறுவதால் திருச்சபை நோவாவின் பேழையோடு ஒப்பிடப்படுகிறது.

46. *மன்னாவும், உடன்படிக்கை பலகைகளும் பாதுகாக்கப்பட்டு வந்த மோசேயின் கூடாரம் எதன் அடையாளமாக குறிப்பிடப்படுகிறது?* திருச்சபையின்

47. *தாவீது அரசர் திருச்சபையை எவ்வாறு அழைத்தார்?* ஆண்டவரின் நகரம்

48. *செக்கரியா இறைவாக்கினர் திருச்சபையை எவ்வாறு அழைத்தார்?* தூய்மையின் பலிபீடம்

49. *எசக்கியேல் இறைவாக்கினர் திருச்சபையை எவ்வாறு அழைத்தார்?* நீல மணிக்கல் தோற்றமுடைய அரியணை

50. *புதிய ஏற்பாட்டில் திருச்சபைக்கும், இயேசுவுக்கும் உள்ள உறவை தெளிவாக்கும் உவமைகள் மற்றும் அடையாளச்சொற்கள் யாவை?* கடுகு விதை, புளிப்பு மாவு, நல்ல நிலம், மேய்ப்பரும் ஆடுகளும் (யோவான் 10:1-21), திராட்சை செடி (யோவான் 15:1-10), கட்டடத்தின் மூலைக்கல்லும் பிற கற்களும் (எபேசியர் 2:20-22) தலைமைக்குருவும், குருத்துவ குலமும் (எபி 5:10) உடலும் உறுப்புகளும் (1கொரிந்தியர் 12:12-31), இரண்டாம் ஆதாமும் புதிய படைப்பும் (1கொரிந்தியர் 15:22-45), மணமகனும், மணமகளும் (எபேசியர் 5:22-33)

51. *திருச்சபையை அன்பு செய்வதே இயேசுவை அன்பு செய்வது குறிப்பு வரைக?* திருச்சபையை பற்றிய பல்வேறு உவமைகளின் வழியாக திருச்சபையின் பல்வேறு பண்புகளையும், கடமைகளையும் அதிகமாக அறிந்து கொள்ளவும் திருச்சபையை அதிகமாக அன்பு செய்யவும் நம்மால் முடியும். திருச்சபையை மதித்து அன்பு செய்யும் போது இயேசுவையே நாம் அன்பு செய்கின்றோம். சுருங்கக் கூறின் திருச்சபையை அன்பு செய்வதும், இயேசுவை அன்பு செய்வதும் ஒன்றே ஆகும்.

52. *திருச்சபையை பற்றிய அடையாளங்களில் மிகவும் முக்கியமானது எது?* திருச்சபை ஒரு மணமகள்

*53. திருச்சபை இயேசுவின் மணமகள் என திருமணத் திருச்சடங்கின் போது பாடப்படும் பாடல் எது?*

“சபையாம் திருச்சபையாம் நா-னோ

உயருன்-னதரவர் வதுவானோள்

தூயசபை சொல்கின்றா-ளே ।

என்வரன் யாரோ நான் சொல்-வி

வந்து மணந்தோ ரா-ம-வரை

நா-னிதோ கைதொழுகின்-றோ-னே (அருளடையாளங்கள் பக். 68)

54. *திருச்சபையின் அடையாளங்கள் என்னும் பாடம் நமக்கு தரும் வாழ்க்கைச் சான்று என்ன?* இயேசுவின் மறையுடலே திருச்சபை. நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் மறையுடலாகிய திருச்சபையின் உறுப்பினர்கள். எனவே ஒருவருக்கொருவர் அன்போடும், ஒற்றுமையோடும் வாழவும் இயேசுவுக்கு சான்று பகரவும் முயல்வோம்.

*55.* “திருச்சபையே அவரது **உடல்** எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது **நிறைவு** பெறுகின்றது”.(எபேசியர் 1:23)

www.malankaralibrary.com

பாடம் 5

## திருச்சபையின் பண்புகள்

**பயிற்சி வினாக்கள்**

*1. **திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபை என்பதை விளக்குக?*** தொடக்க காலம் முதலே கிறிஸ்துவின் சபை கத்தோலிக்கத் திருச்சபையென்று அறியப்பட்டிருந்தது. அந்தியோக்கியாவில் கிறிஸ்துவின் சீடர்கள் முதன்முறையாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். (திருத்தூதர் பணிகள் 11:26) அவ்விடத்தைச் சார்ந்த புனித இக்னேசியஸ் ஆயரே (கி.பி. 110) கிறிஸ்துவின் சபையை கத்தோலிக்க சபை என்று முதன் முதலில் அழைத்தார். தொடர்ந்து வந்த பல ஆயர்களும் கிறிஸ்தவ சபையை கத்தோலிக்க சபை என்றே அழைத்தனர்.

*2. **திருச்சபையின் அப்போஸ்தலிக்க அடிப்படையை விளக்குக?*** 'அப்போஸ்தலிக்கம்' என்ற வார்த்தை 'அப்போஸ்தோலோஸ்' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே பிறந்தது. 'ஸ்லீஹோ', அல்லது 'அப்பஸ்தோலன்' என்னும் வார்த்தைக்கு அனுப்பப்பட்டவர் என்பது பொருள்.

இயேசு நம்மோடு இருக்கவும், தம்முடைய மீட்பின் செயல்களைப் பின்தொடரவும் பன்னிரு திருத்தூதர்கள் அல்லது அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் கண்ணால் கண்டதும், கேட்டதும், அனுபவித்துணர்ந்ததுமே அவர்களுடைய கிறிஸ்தவ அனுபவத்தின் அடிப்படை. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்னும் உயிர்த்தெழுந்த இயேசுவின் கட்டளைக்கேற்ப திருத்தூதர்கள் உலகில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று இயேசுவாகின்ற நற்செய்தியைப் பறைசாற்றினர். அவ்வாறு பல இடங்களிலும் திருத்தூதர்கள் திருச்சபைகளை நிறுவினர். ஏதேனும் ஒரு திருத்தூதரோடு அதாவது அப்போஸ்தலரோடு உறவு கொண்டு விசுவாசம் பெற்றுக்கொண்டு உருவான சபை அப்போஸ்தலிக்கத் திருச்சபை ஆகும். ஏனெனில் அப்போஸ்தலர்கள் என்னும் அடித்தளத்தின் மேலேயே திருச்சபை கட்டப்பட்டுள்ளது. புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார்: "திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்" (எபேசியர் 2:20) அப்போஸ்தலர்களாகிய அடித்தளத்தின் மேல் திருச்சபை கட்டப்பட்டுள்ளது என்பது திருச்சபையின் அடிப்படை விசுவாசமாகும். அப்போஸ்தலர்களின் போதனையையும், கிறிஸ்து அவர்களிடம் ஒப்படைத்த கடமைகளையும் திருச்சபை இன்றும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சுருங்கக் கூறின் திருத்தூதர்களின் கிறிஸ்து அனுபவத்தையும் போதனைகளுடையவும் சிறப்பே திருச்சபையின் அப்போஸ்தலிக்க பண்பின் சிறப்பு. திருத்தூதர்களின் வழிவந்தவர்களாகிய ஆயர்கள் அப்போஸ்தலிக்கத்தின் தொடர்ச்சியும் அடையாளமுமாவார்கள்.

அப்போஸ்தலர்களின் தலைவராக பேதுருவும், பிற அப்போஸ்தலர்களும் இயேசுவில் ஒன்றாக இருந்து அப்போஸ்தலிக்கத்தின் முழுமையையும், நிறைவையும் தெளிவுபடுத்தினர். அப்போஸ்தலர்களின் வழிவந்தவர்களான ஆயர்கள், அப்போஸ்தலத் தலைவரான பேதுருவின் வழி வந்தவரான திருத்தந்தையோடு ஒன்றுபட்டு அதன் வழியாக இயேசுவோடு ஒன்றாகும்போது அப்போஸ்தலிக்கம் முழுமை அடைகிறது. அப்போஸ்தலிக்க ஒற்றுமை கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டும் நடைபெறுவதால் அப்போஸ்தலிக்கத்தின் முழுமை கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டும் உள்ளது.

*3. **திருச்சபை - ஒரே திருச்சபை என்பதை விளக்குக?*** இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனிதரே திருச்சபையின் நிறுவனரும் தலையுமாவார். இயேசு கிறிஸ்துவின் உடலும் தொடர்ச்சியுமே திருச்சபை. எனவே திருச்சபை ஒன்றேயாகும். புனித பவுல் இவ்வாறு கூறுகிறார்: "நீங்கள் கிறிஸ்துவின் உடல் ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புக்கள்" (1கொரிந்தியர் 12:27]. உண்மையில் ஒன்றுபடுத்துகின்ற தூய ஆவியே திருமுழுக்கின் வழியாக ஒவ்வொருவரையும் திருச்சபையின் உறுப்பினர்களாக மாற்றுகிறார். "நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1கொரிந்தியர் 12-13) என்றும் "ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே; அவ்வாறே ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே" (எபேசியர் 4:4-5) என்றும் பவுலடியார் கற்பிக்கின்றார்.

அனைவரும் கிறிஸ்துவில் ஒருவரே என்று பவுலடியார் கூறுகிறார். "இனி உங்களிடையே யூதர்

என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28). ஒற்றுமைக்கான கிறிஸ்துவின் வேண்டலில் நாம் இவ்வாறு காண்கிறோம். "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்" (யோவான் 17:21). தமது பகிரங்க வாழ்வின் போது இந்த ஒற்றுமையேத் தம்மை பின்பற்றுபவர்களின் அடையாளமாக அமைய வேண்டும் என்று இயேசு கூறினார்.)

திருச்சபை ஒன்றாகும் என்று கூறுவதிலிருந்து திருச்சபையின் பல்வேறு மக்களுடையவும், பல்வேறு தலத்திருச்சபைகளுடையவும் வேற்றுமை மறுக்க முடியாதது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே திருச்சபை ஒன்றாகும் என்பதன் பொருள் ஆகும். பலவகைப்பட்ட மக்கள் ஒரே விசுவாசத்திலும் ஒரே அருள் அடையாள வாழ்வையும் வாழ்ந்து ஒரே அப்பத்திலிருந்து உண்டு ஒரே ஆயரின் அப்போஸ்தலிக்கத் தலைமையில் வளர்வது திருச்சபை ஒன்று என்பதன் வெளிப்படையான அடையாளமாகும். உலகத் திருச்சபையின் ஆயர்கள் பேதுருவின் வழிவந்தவரான திருத்தந்தையுடன் ஒன்றுபட்டிருப்பது திருச்சபை ஒன்று என்பதைக் குறிக்கின்றது. எனவே பேதுருவின் வழிவந்தவரான திருத்தந்தை 'உலகத்திருச்சபை ஒன்று' என்பதன் காணப்படக்கூடிய அடையாளமும் ஒற்றுமையின் மையமும் ஒற்றுமையின் பாதுகாவலரும் ஆவார். 22(23) தனி அப்போஸ்தலிக்கத் திருச்சபைகள் பேதுருவின் வழிவந்தவரின் தலைமையில் ஒன்றுபட்டு ஒரே திருச்சபையாகத் தோற்றமளிக்கின்றது. அதுவே கத்தோலிக்கத் திருச்சபை. எனவே திருச்சபை ஒன்றே என்னும் பண்பு பிற சபைகளை விடவும் கத்தோலிக்கத் திருச்சபையில் அதிகமாக காணப்படுகிறது.

ஆனால் திருச்சபை வரலாற்றில் அனேகமான பிளவுகளும், வேறுபாடுகளும் காண முடிகிறது. இவ்வேளையில் ஒற்றுமைக்கான இயேசுவின் மன்றாட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். திருச்சபையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு பிளவும் இயேசுவின் திருவுடலின் காயத்தை அதிகப்படுத்துகிறது. திருச்சபையின் உறைவிடமும், முன்மாதிரியும் மூவொரு கடவுளேயென்பதையும் திருச்சபையின் நிறுவுனரும், தலையானவரும், ஆன்மாவும் ஒன்றே என்பதையும் புரிந்துகொண்டு திருச்சபையின் ஒற்றுமை மீட்கப்பட வேண்டும்.

***4.திருச்சபை தூய்மையானது என்பதை எவ்வாறு புரிந்துகொள்வாய்?***

இயேசு கிறிஸ்துவின் தொடர்ச்சியும் அவரது மறையுடலுமான திருச்சபை தூயதாகும் திருச்சபையிலுள்ள மக்கள் பாவிகளாக இருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் உடலுதிரங்களாலும், தூய ஆவியினாலும் திருச்சபை புனிதமானது. அதனாலேயே புனித பேதுரு 'தூய மக்களினத்தினர்' என்று (1பேதுரு 2:9) திருச்சபையை அழைக்கின்றார். இயேசு கிறிஸ்துவின் மணமகள் என்றும் நிலையில் (எபேசியர் 5:26-27) நாம் பங்குசேர்வதனாலும், கடவுளின் தூய ஆலயங்களானதாலும் (1கொரிந்தியர் 3:16) புனித பவுல் திருச்சபையின் உறுப்பினர்களை 'தூயோர்' என்று அழைக்கிறார் (உரோ. 12:13). திருமுழுக்கின் வழியாகவும், உறுதிபூசுதலின் வழியாகவும் நாம் கிறிஸ்துவின் தூய்மையின் பங்கு சேர்கின்றோம்.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் பின்வருமாறு கூறுகிறது : "தந்தையோடும் தூய ஆவியோடும் ஒரே தூயவர் என்று நாம் புகழ்கின்ற இறைமகனான இயேசு கிறிஸ்து தமது மணமகளாக திருச்சபையை அன்பு செய்தார். அவளை தூய்மைப்படுத்துவதற்காக அவர் தம்மையே அர்ப்பணித்தார். அவளை தமது உடலாக மாற்றினார்" (திருச்சபை 39). திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்காகவே இயேசு தம்மை அர்ப்பணித்தார். இதன் வழியாக அவர்களை இயேசு தூய்மைப்படுத்தினார்.

திருச்சபை தூயதாகும் என்று கூறும்போது திருச்சபை பாவிகளின் சமூகம் என்பதையும் மறுக்க முடியாது. திருச்சபையின் தெய்வீகத்தன்மை எப்போதும் புனிதமானதும் மானிடத்தன்மை எப்போதும் பலவீனமுள்ளதுமாகும். திருச்சபைக்கு இறைமக்களின் பாவங்களைப் பற்றிய நினைவுள்ளதால் அனுதினம் புனிதப்படுத்தப்பட்ட வேண்டும் என்னும் சிந்தனை திருச்சபைக்கு உண்டு. திருச்சபையின் அருளடையாளங்களின் வழியாகவும் நோன்பு, உபவாசம், மன்றாட்டுக்கள் ஆகியவற்றின் வழியாகவும் புனிதப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

www.malankaralibrary.com

குறு வினா விடைகள்

1. *விசுவாசப்பிரமாணம் எப்போது உருவாக்கப்பட்டது?* கி.பி. 325-ல் நீசேயா திருச்சங்கத்தில் வைத்து
2. *நீசேயா விசுவாசப்பிரமாணத்தில் திருச்சபையின் நான்கு பண்புகள் யாவை?* ஒரே, தூய, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க
3. *கிறிஸ்துவின் சீடர்கள் முதன்முறையாக எங்கே கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர்?* அந்தியோக்கியா
4. *கிறிஸ்துவின் சபையை கத்தோலிக்க சபை என்று முதன் முதலில் அழைத்தவர் யார்?* அந்தியோக்கியாவைச் சார்ந்த புனித இக்னேசியஸ் ஆயர் (கி.பி. 110)
5. *எந்த திருச்சங்கம் வரை உலகெங்குமுள்ள கிறிஸ்தவ சபை, கத்தோலிக்கத் திருச்சபை என அறியப்பட்டிருந்தது?* கி.பி. 451-ல் நடைபெற்ற கால்செதோன் திருச்சங்கம்
6. *கி.பி.451-ல் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?* யாக்கோபாயர்கள்
7. *கி.பி. 1054-ல் கத்தோலிக்கத் திருச்சபையின் உறவை முறித்துக் கொண்ட கிழக்கத்திய கிரேக்கத் திருச்சபைகளின் பெயர் என்ன?* ஆர்த்தடோக்ஸ் சபை
8. *16-ம் நூற்றாண்டில் திருச்சபையிலிருந்து பிரிந்து போனவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?* புரொட்டஸ்டன்ட்
9. *கத்தோலிக்கம் என்பதன் பொருள் என்ன?* முழுமையான ஒன்றுபட்ட, எங்கும் நிறைந்திருக்கும்
10. *எங்கும் நிறைந்திருக்கும் என்னும் பொருளில் கத்தோலிக்கம் என்பதற்கு பயன்படுத்தப்படும் சொல் எது?* உலகளாவிய (Universal)
11. *புனித இக்னேசியஸ் கத்தோலிக்கத் திருச்சபைக்கு அளிக்கும் விளக்கம் என்ன?* ஆயர் இருக்குமிடத்தில் திருச்சபை இருக்கும் என்றும், ஆயரின் தலைமையில் திருப்பலி அர்ப்பிக்கின்ற தலத்திருச்சபைச் சமூகமே கத்தோலிக்கத் திருச்சபை என்றும் அந்தியோக்கியாவிலுள்ள புனித இக்னேசியஸ் கற்பித்தார்.
12. *கத்தோலிக்கத் திருச்சபை உலகத் திருச்சபை எனப்படுவது ஏன்?* "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்.16:15) என்ற இயேசுவின் அழைப்புக்கேற்ப உலகம் முழுவதும் திருச்சபை பரவியுள்ளது. உலகம் முழுவதும் பரவியுள்ள இத்திருச்சபையை கத்தோலிக்கத் திருச்சபை என்று அழைக்கின்றோம். எனவே கத்தோலிக்கத் திருச்சபையை உலகத் திருச்சபை என்றும் அறிந்து கொள்ளலாம்.
13. *கத்தோலிக்கத் திருச்சபையின் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை பற்றிக் கூறுக?* அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும், எல்லா கலாச்சாரங்களிலும் உட்புகுந்து செல்லவும் அழைக்கப்பட்டதுவே திருச்சபை. மக்களினங்களுக்காகவே திருச்சபை நிறுவப்பட்டுள்ளது. அனைத்து மக்களையும் திருச்சபையானது மீட்பின் பாதைக்கு அழைத்துச் செல்லுகிறது. அனைத்து மக்களினங்களையும், கலாச்சாரங்களையும் அவைகளின் பன்முகத் தன்மையிலேயே ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் கத்தோலிக்கத் திருச்சபைக்கு உண்டு (கொலோசையர் 1:18-20, மத்தேயு 28:18-20).
14. *உண்மைத்திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபை எனப்படுவது ஏன்?* ஆதித்திருச்சபையில் தப்பறை போதிப்பவர்களிடமிருந்து உண்மைத் திருச்சபையை வேறுபடுத்துவதற்காக, உண்மை விசுவாசம் கற்பிக்கும் சபை என்னும் பொருளில் கத்தோலிக்க என்னும் வார்த்தையை பயன்படுத்தத் தொடங்கினர். அவ்வாறு உண்மை விசுவாசம் போதிக்கும் சபை கத்தோலிக்க சபையென்று திருச்சபைத் தந்தையர்கள் கற்பித்தனர். நாளடைவில் உண்மைத்திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபை என்று அறியப்பட்டது. உரோமை திருத்தந்தையுடன் உறவு கொண்டிருக்கும் சபைகளே இன்று கத்தோலிக்கத் திருச்சபை என்று அறியப்படுகிறது.
15. *"கிறிஸ்துவின் சபை கத்தோலிக்கத் திருச்சபையில் நிலைகொள்கின்றது" என்ற திருச்சங்கம் எது?* இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்

www.malankaralibrary.com

16. *கத்தோலிக்கத் திருச்சபை என்பதன் பொருள் என்ன?* சுருங்கக்கூறின் கூட்டுறவும், எங்கும் நிறைந்திருப்பதும், எல்லா கலாச்சாரங்களையும், மக்களையும் ஏற்றுக்கொள்கின்றதும், உண்மை விசுவாசத்தின் முழுமையையும் கொண்ட திருச்சபை என்பதே கத்தோலிக்கத் திருச்சபை என்பதன் பொருள்.

17. *'அப்போஸ்தலிக்கம்' என்பதன் கிரேக்கச் சொல் என்ன?* 'அப்போஸ்தோலோஸ்'

18. *'ஸ்லீஹோ', அல்லது 'அப்பஸ்தோலன்' என்பதன் பொருள் என்ன?* அனுப்பப்பட்டவர்

19. *இயேசு பன்னிரு திருத்தூதர்களை எதற்காக தேர்ந்தெடுத்தார்?* இயேசு தம்மோடு இருக்கவும் தம்முடைய மீட்பின் செயல்களைப் பின்தொடரவும் பன்னிரு திருத்தூதர்கள் அதாவது அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார்.

20. *திருத்தூதர்களின் கிறிஸ்தவ அனுபவத்தின் அடிப்படை எது?* திருத்தூதர்கள் கண்ணால் கண்டதும், கேட்டதும், அனுபவித்துணர்ந்ததுமே அவர்களுடைய கிறிஸ்தவ அனுபவத்தின் அடிப்படை.

21. *திருச்சபை அப்போஸ்தலிக்கம் ஆவது எப்படி?* ஏதேனும் ஒரு திருத்தூதரோடு அதாவது அப்போஸ்தலரோடு உறவு கொண்டு விசுவாசம் பெற்றுக்கொண்டு உருவான சபை அப்போஸ்தலிக்கத் திருச்சபை ஆகும். ஏனெனில் அப்போஸ்தலர்கள் என்னும் அடித்தளத்தின் மேலேயே திருச்சபை கட்டப்பட்டுள்ளது.

22. *திருச்சபையின் அப்போஸ்தலிக்கம் பற்றி புனித பவுல் கூறுவது என்ன?* "திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்" (எபேசியர் 2:20)

23. *அப்போஸ்தலிக்கத்தின் தொடர்ச்சியும் அடையாளமுமாக உள்ளோர் யாவர்?* திருத்தூதர்களின் வழிவந்தவர்களாகிய ஆயர்கள்

24. *அப்போஸ்தலிக்கத்தின் முழுமை கத்தோலிக்கத் திருச்சபையில் எவ்வாறு காணப்படுகிறது?* அப்போஸ்தலர்களின் தலைவராக பேதுருவும், பிற அப்போஸ்தலர்களும் இயேசுவில் ஒன்றாக இருந்து அப்போஸ்தலிக்கத்தின் முழுமையையும், நிறைவையும் தெளிவுபடுத்தினர். அப்போஸ்தலர்களின் வழிவந்தவர்களான ஆயர்கள், அப்போஸ்தலத்தலைவரான பேதுருவின் வழி வந்தவரான திருத்தந்தையோடு ஒன்றுபட்டு அதன் வழியாக இயேசுவோடு ஒன்றாகும்போது அப்போஸ்தலிக்கம் முழுமை அடைகிறது. அப்போஸ்தலிக்க ஒற்றுமை கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டும் நடைபெறுவதால் அப்போஸ்தலிக்கத்தின் முழுமை கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டும் உள்ளது.

25. *திருச்சபையின் நிறுவனரும் தலையுமானவார் யார்?* இயேசு கிறிஸ்து

26. *இயேசு கிறிஸ்துவின் உடலும், அவரது தொடர்ச்சியும் எனப்படுவது யாது?* திருச்சபை

27. *திருச்சபை கிறிஸ்துவின் உடல் என்பது பற்றி புனித பவுல் கூறுவது என்ன?* "நீங்கள் கிறிஸ்துவின் உடல் ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புக்கள்" (1கொரிந்தியர் 12:27].

28. *உண்மையில் ஒன்றுபடுத்துகின்ற தூய ஆவியைப் பற்றி பவுலடியார் கற்பிக்கும் கருத்துக்கள் யாவை?* 1. "நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1கொரிந்தியர் 12-13) 2. "ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே; அவ்வாறே ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே" (எபேசியர் 4:4-5)

29. *கிறிஸ்துவில் அனைவரும் ஒன்றே என்ற பவுலடியாரின் கூற்று யாது?* "இனி உங்களிடையே யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28).

30. *யோவான் நற்செய்தியில் காணப்படும் ஒற்றுமைக்கான கிறிஸ்துவின் வேண்டல் யாது?* "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்"

www.malankaralibrary.com

31. *திருச்சபையில் வேற்றுமையில் ஒற்றுமை பற்றிக் கூறுக?* திருச்சபை ஒன்றே என்று கூறினாலும் திருச்சபையின் பல்வேறு மக்களுடையவும், பல்வேறு தலத்திருச்சபைகளுடையவும் வேற்றுமை மறுக்க முடியாதது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே திருச்சபை ஒன்றாகும் என்பதன் பொருள் ஆகும். பலவகைப்பட்ட மக்கள் ஒரே விசுவாசத்திலும் ஒரே அருள் அடையாள வாழ்வையும் வாழ்ந்து ஒரே அப்பத்திலிருந்து உண்டு ஒரே ஆயரின் அப்போஸ்தலிக்கத் தலைமையில் வளர்வது திருச்சபை ஒன்று என்பதன் வெளிப்படையான அடையாளமாகும்.

32. *திருத்தந்தை 'உலகத்திருச்சபை ஒன்று' என்பதன் அடையாளம் எனப்படுவது எவ்வாறு?* உலகத் திருச்சபையின் ஆயர்கள் பேதுருவின் வழி வந்தவரான திருத்தந்தையுடன் ஒன்றுபட்டிருப்பது திருச்சபை ஒன்று என்பதைக் குறிக்கின்றது. எனவே பேதுருவின் வழிவந்தவரான திருத்தந்தை 'உலகத்திருச்சபை ஒன்று' என்பதன் காணப்படக்கூடிய அடையாளமும் ஒற்றுமையின் மையமும் ஒற்றுமையின் பாதுகாவலரும் ஆவார்.

33. *திருச்சபை ஒன்றே என்னும் பண்பு பிற சபைகளைவிட கத்தோலிக்கத் திருச்சபையில் அதிகமாக காணப்படுவது எப்படி?* 22(23) தனி அப்போஸ்தலிக்க திருச்சபைகள் பேதுருவின் வழிவந்தவரின் தலைமையில் ஒன்றுபட்டு ஒரே திருச்சபையாகத் தோற்றமளிக்கின்றது. அதுவே கத்தோலிக்கத் திருச்சபை. எனவே திருச்சபை ஒன்றே என்னும் பண்பு பிற சபைகளைவிடவும் கத்தோலிக்கத் திருச்சபையில் அதிகமாக காணப்படுகிறது.

34. திருச்சபையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு **<u>பிளவும்</u>** இயேசுவின் திருவுடலின் **<u>காயத்தை</u>** அதிகப்படுத்துகிறது.

35. *திருச்சபையின் ஒற்றுமை மீட்கப்பட வேண்டியது எப்படி?* திருச்சபையின் உறைவிடமும், முன்மாதிரியும் மூவொரு கடவுளேயென்பதையும் திருச்சபையின் நிறுவனரும், தலையானவரும், ஆன்மாவும் ஒன்றே என்பதையும் புரிந்துகொண்டு திருச்சபையின் ஒற்றுமை மீட்கப்பட வேண்டும்.

36. *மக்கள் பாவிகளாயினும் திருச்சபை புனிதமாவது ஏன்?* இயேசு கிறிஸ்துவின் தொடர்ச்சியும் அவரது மறையுடலுமான திருச்சபை தூயதாகும். திருச்சபையிலுள்ள மக்கள் பாவிகளாக இருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் உடலுதிரங்களாலும், தூய ஆவியினாலும் திருச்சபை புனிதமானது.

37. *புனித பேதுரு திருச்சபையை எவ்வாறு அழைத்தார்?* 'தூய மக்களினத்தினர்' (1பேதுரு 2:9)

38. *புனித பவுல் திருச்சபையினரை 'தூயோர்' என்பது ஏன்?* இயேசு கிறிஸ்துவின் மணமகள் என்னும் நிலையில் (எபேசியர் 5:26-27) நாம் பங்குசேர்வதனாலும், கடவுளின் தூய ஆலயங்களானதாலும் (1கொரிந்தியர் 3:16) புனித பவுல் திருச்சபையின் உறுப்பினர்களை 'தூயோர்' என்று அழைக்கிறார் (ரோ. 12:13).

39. *கிறிஸ்துவின் தூய்மையில் நாம் பங்கு சேர்வது எவ்வாறு?* திருமுழுக்கின் வழியாகவும், உறுதிபூசுதலின் வழியாகவும்

40. *இயேசு திருச்சபையை தூய்மைப்படுத்துவது பற்றி இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுவது யாது?* “தந்தையோடும் தூய ஆவியோடும் ஒரே தூயவர் என்று நாம் புகழ்கின்ற இறைமகனான இயேசு கிறிஸ்து தமது மணமகளாக திருச்சபையை அன்பு செய்தார். அவளை தூய்மைப்படுத்துவதற்காக அவர் தம்மையே அர்ப்பணித்தார். அவளை தமது உடலாக மாற்றினார்” (திருச்சபை 39). திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்காகவே இயேசு தம்மை அர்ப்பணித்தார். இதன் வழியாக அவர்களை இயேசு தூய்மைப்படுத்தினார்.

41. *திருச்சபை பாவிகளின் சமூகமாய் உள்ளதால் புனிதப்படுத்தப்படுவது எவ்வாறு?* திருச்சபை தூயது எனினும் அது பாவிகளின் சமூகம் என்பதையும் மறுக்க முடியாது. திருச்சபையின் தெய்வீகத்தன்மை எப்போதும் புனிதமானதும் மானிடத்தன்மை எப்போதும் பலவீனமுள்ளதுமாகும். திருச்சபைக்கு இறைமக்களின் பாவங்களைப் பற்றிய நினைவுள்ளதால் அனுதினம் புனிதப்படுத்தப்பட்ட வேண்டும் என்னும் சிந்தனை திருச்சபைக்கு உண்டு. திருச்சபையின் அருளடையாளங்களின் வழியாகவும் நோன்பு, உபவாசம், மன்றாட்டுக்கள் ஆகியவற்றின் வழியாகவும் புனிதப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

www.malankaralibrary.com

42. *கிறிஸ்துவின் உண்மையான திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபை என்பது ஏன்?* நாம் வாழும் சமூகத்தில் பலவகையான திருச்சபை சமூகங்கள் உள்ளன. திருச்சபையின் நான்கு பண்புகளும் மற்ற எல்லா திருச்சபை சமூகங்களை விடவும் அதிகமாக கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டுமே காணப்படுகிறது. இதுவே கத்தோலிக்கத் திருச்சபையை பிற திருச்சபைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. அதனாலேயே கிறிஸ்துவின் உண்மையான திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபை என்று நாம் கூறுகின்றோம்.

43. *திருச்சபையின் அப்போஸ்தலிக்க அடிப்படை பற்றி ஆயர்கள் சிலுவை முத்தச் செய்யும்போது பாடப்படும் பாடல் எது?*

"திருச்சபை சொன்னாள் தன் பிரிவினையாளருடன்,

என் அடித்தளம் சீமோன் பாறையின்மேல் ஆகும்.

உண்டெனக்காய் தூணுகள் பன்னிருவர்களால்;

தூயவர்கள் என்னில்,

பதிலுரையாகச் சொன்னார்

என் பணியில் இறைவாக்கினர் உறுதிக்காய்

திருத்தூதர்கள் சான்றோர்களும் எனக்காய்

பலமுள்ள அரண் களாயினர்.

அழகுறும் மணவாட்டியை போல் நான்

மெசியாவில் என்றும் நிலைப்பட்டேன்".

44. "திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை **<u>அடித்தளமாகவும்,</u>** கிறிஸ்து இயேசுவையே **<u>மூலைக்கல்லாகவும்</u>** கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்". (எபேசியர் 2:20)

## பாடம் 6

## திருச்சபை - இறைமக்கள்

***பயிற்சி வினாக்கள்***

1. ***பழைய ஏற்பாட்டில் இறைமக்கள் எவ்வாறு உருவாயினர்?*** ஆபிரகாமின் வழியாக கடவுளால் உருவாக்கப்பட்ட இஸ்ரயேல் சமூகத்தையே பழைய ஏற்பாட்டில் இறைமக்கள்' என்று அழைக்கின்றனர். "நீங்கள் என் மக்களும் நான் உங்கள் கடவுளுமாயிருப்பேன்" என்று கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கையின் வழியாகவே இறைமக்கள் உருவாகின்றனர். கட்டளைகள் கடைபிடிப்பது, பலி செலுத்துவது திருநாட்களைக் கொண்டாடுவது போன்றவற்றின் வழியாக ஆண்டுதோறும் இஸ்ரயேல் மக்கள் இந்த உடன்படிக்கையை புதுப்பித்து வந்தனர். தாங்கள் யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்னும் உணர்வு அவர்களுக்கு இருந்தது. அவ்வாறாக பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் இறைமக்கள் என்று அறியப்பட்டிருந்தனர்.

2. ***புதிய ஏற்பாட்டின் இறைமக்களே திருச்சபை விளக்குக?*** புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவால் அழைத்து வேறுபடுத்தப்பட்ட மக்களே இறைமக்கள். அதாவது புதிய ஏற்பாட்டின் இஸ்ரயேலே திருச்சபை. அது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கூட்டமாகும். பழைய ஏற்பாட்டிலுள்ள இஸ்ரயேலராகின்ற இறைமக்கள் புதிய ஏற்பாட்டிலுள்ள இறைமக்களாகின்ற திருச்சபையின் தொடக்கமும் அடையாளமும் ஆவர்.

புதிய ஏற்பாட்டில் இயேசு இறைமக்களுடன் உடன்படிக்கை செய்தது இறுதி இரவுணவின் வழியாகவும் கல்வாரி சிலுவை இறப்பின் வழியாகவும் ஆகும். இறுதி இரவுணவின் வேளையில் இயேசு சீடர்களிடம் கூறியதாவது : "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலை நிறுத்தப்படும் புதிய உடன்படிக்கை" (லூக்கா 22:20). இந்த உடன்படிக்கையை இயேசு கல்வாரி மலையில் நிறைவேற்றினார். பழைய ஏற்பாட்டில் மக்கள் விலங்குகளின் இரத்தத்தால் உடன்படிக்கை செய்து கொண்டனர். புதிய ஏற்பாட்டில் இயேசு

www.malankaralibrary.com

தமது இரத்தத்தால் அழிவில்லாத நிலையான உடன்படிக்கை செய்து கொண்டார். பழைய உடன்படிக்கையின் நிறைவே இயேசு நிறைவேற்றிய புதிய உடன்படிக்கை. புதிய இறைமக்கள் இயேசு இரத்தம் சிந்தியதின் பலனாகும். புதிய உடன்படிக்கையின் வழியாக இயேசு கிறிஸ்துவோடு ஒன்றிணைந்த புதிய இறைமக்களே திருச்சபை. மோசேயின் திருச்சட்டமே பழைய ஏற்பாட்டு இறைமக்களின் அடிப்படையாக அமைந்திருந்தது. ஆனால் தூய ஆவியால் உருவாக்கப்பட்ட புதிய இறைமக்களின் சட்டம் தூய ஆவியின் சட்டமாகும். அது இறையன்பின் சட்டமாகும். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் வழிமரபினர்கள் மட்டுமே இறைமக்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கினால் ஒன்றிணைவதன் வழியாக அனைவரும் புதிய இறைமக்களாக மாறமுடியும். புதிய இறைமக்களையே திருச்சபை என்று அழைக்கின்றனர்.

கடவுளின் மக்கள் என்னும் உணர்வு முதல் கிறிஸ்தவர்களில் மிகுந்து காணப்பட்டது 'கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்', 'அழைத்து ஒன்றுபடுத்தியவர்களின் சமூகம்' என்றெல்லாம் புனித பவுல் திருச்சபையை அழைக்கின்றார். புனித பேதுரு திருச் சபையைக் குறித்து பின்வருமாறு கூறினார். "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள் முன்பு நீங்கள் ஒரு மக்களினமாய் இருக்கவில்லை. இப்போது கடவுளுடைய மக்களாக இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9-10).

***3. 'ஆண்டவர் தம் திரு இரத்தத்தால் வாங்கப் பெற்ற கடவுளின் திருச்சபை' என்பதன் பொருள் யாது?*** திருப்பலியின் போது செதறாவில் நாம் இவ்வாறு மன்றாடுகிறோம் ஆண்டவரே உம் திரு இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பெற்ற உம் பங்கிலிருந்து (திருச்சபையிலிருந்து) உமது கருணையை தடை செய்யாதீர்". ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது விலை மதிப்பற்ற இரத்தத்தால் திருச்சபையை விலைக்கு வாங்கினார் என்ற உணர்வு பூர்வமான வேண்டலில் திருச்சபையின் ஆன்மீக உணர்வு வெளிப்படுகிறது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 20:28). "ஆண்டவர் தமது திரு இரத்தத்தால் வாங்கப்பெற்ற கடவுளின் திருச்சபை" என்பதன் வழியாக இயேசுவின் பகிரங்க வாழ்வு, சிலுவைப்பலி ஆகியவை பொருள்கொள்ளப்படுகிறது. புதிய இறைமக்களான திருச்சபை திருப்பலியின் வழியாக இந்த புதிய உடன்படிக்கையை புதுப்பித்து கிறிஸ்துவில் புதிய மக்களாக வளரவும் செய்கின்றார். திருப்பலி செலுத்துதலின் வழியாக ஆண்டவர் தம் திரு இரத்தத்ததால் வாங்கப்பெற்ற திருச்சபை என்னும் சிந்தனை நினைவு கூரப்படுகிறது.

***4. இறைமக்கள் திருச்சபை அனுபவத்தில் வளர்வது ஆயருடன் கொண்டிருக்கிற நட்புறவின் வழியாகவே ஆகும் என்பதை விளக்குக?*** திருச்சபை இறைமக்கள் என்று கூறும் போது ஒருவரோடொருவர் உறவுகொண்டிராத தனிமைப்பட்டவர்களின் கூட்டமல்ல. மாறாக விசுவாசத்திலும், அருள் அடையாளங்களிலும், தலைமையிலும் தூய ஆவியில் ஒன்றிணைந்தவர்களின் நட்புறவே திருச்சபை. இறைமக்கள் என்பது திருச்சபையின் ஒரு தனிப்பட்ட பிரிவினர் அன்று, மாறாக திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட அனைவரும் இறைமக்களாவார். திருமுழுக்கின் வழியாக இறைமக்களான, விசுவாசிகளின் சமூகத்தை வழிநடத்துவது அப்போஸ்தலர்களின் (திருத்தூதர்) வழிவந்தவர்களான ஆயர்களே. அப்போஸ்தலிக்க அதிகாரம் படைத்த ஆயர்களின் திருப்பணிகளை இறைமக்கள் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அன்புடன் கீழ்ப்படியவும் செய்யும் போது திருச்சபை என்னும் உண்மை புலப்படுகிறது. எனவே அப்போஸ்தலிக்க அதிகாரம் படைத்த ஆயர்கள் இன்றியோ ஆயர்களின் அதிகாரத்தை எதிர்த்தோ இறைமக்களால் தனித்திருச்சபையாக செயல்பட முடியாது. ஆகவே, இறைமக்கள் ஆயர்களோடு உள்ள உறவு வாயிலாக உண்மையான திருச்சபை அனுபவத்துக்கு கடந்து வருகிறார்கள்.

அப்போஸ்தலர்களின் தலைவர் பேதுரு. அதைப்போன்று ஆயர்களின் தலைவர் பேதுருவின் வழிவந்தவரான உரோமை திருத்தந்தை. எல்லா ஆயர்களும் அவர்கள் பணிவிடை செய்கின்ற இறைமக்களும் திருத்தந்தையுடன் நட்புறவு கொண்டிருப்பதன் வழியாக திருச்சபை என்னும் உண்மை இன்னும் அதிகமாக புலப்படுகிறது.

***5. இறை ஆராதனை (வழிபாடு) திருச்சபையின் அடிப்படையாகும் விளக்குக?*** ஆராதனை (வழிபாடு) திருச்சபையின் அடிப்படையான பண்புகளுள் ஒன்றாகும். இறைமக்கள் ஆராதனை (வழிபாடு)யின் வழியாகவே ஒரு திருச்சபையாகத் தங்களையே வெளிப்படுத்துகிறார்கள். முதல் கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் தலைமையில் ஒன்றுகூடி ஆராதனை (வழிபாடு) மற்றும் அப்பம் பிட்குதல் திருச்சடங்கில் ஒரே மனத்துடன் பங்கு கொண்டனர். உயிர்த்தெழுந்த இயேசுவின் பங்கேற்பை முதல் கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்குதல் என்னும்

www.malankaralibrary.com

ஆராதனை (வழிபாடு)யின் வழியாகவே அனுபவித்துணர்ந்தார்கள். அதனால் ஆராதனை (வழிபாடு) நேரத்தில் குறிப்பாக அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் போது அதாவது திருப்பலியின் போது உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் அவர்களோடு இருந்தது என்ற உணர்வு அவர்களுக்கு வலுப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் மீட்பின் அனுபவம் வெளிப்படையாக திருச்சபையில் செயல்படுகிறது என்று திருச்சபை விசுவசிக்கின்றது.

திருப்பலி செலுத்தும் போது இறைமக்களும், அப்போஸ்தலிக்க அதிகாரம் படைத்த ஆயர்களும், ஆயர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குருக்களும், இயேசுவின் மீட்புச் செயல்களின் பிரசன்னமும் உள்ளதனால் திருப்பலியில் அதன் முழுமையான பொருளில் நாம் காணமுடிகிறது. இறைமக்கள், அப்போஸ்தலிக்க அதிகாரம், இயேசுவின் மீட்புச் செயல் ஆகிய மூன்றும் திருச்சபையை முழுமையடையச் செய்கின்றன. இதன் அடிப்படையில் திருப்பலி செலுத்தும் போது திருச்சபையின் உண்மையான பிரசன்னம் அங்கே உண்டு என்று நாம் கூறுகின்றோம். அதனால் ஆராதனை (வழிபாடு) திருச்சபையை உருவாக்குகிறது, திருச்சபையை ஒளிரச்செய்கிறது, திருச்சபையை எப்போதும் வெளிப்படுத்துகிறது என்று கூறுகிறோம். ஆராதனை (வழிபாடு) திருச்சபையின் உயிரும், சுவாசமும், இதயத்துடிப்புமாகும். ஆராதனை (வழிபாடு)யின் வழியாக திருச்சபை தன்னைத் தானே வெளிப்படுத்துகிறது. ஆராதனை (வழிபாடு) இல்லையென்றால் திருச்சபைக்கு உயிரில்லை என்று மட்டுமல்ல, திருச்சபையே இல்லை என்று கூறலாம். ஆராதனை (வழிபாடு)யில் குறிப்பாக திருப்பலியில் இயேசுவின் மீட்புச் செயல்களின் பிரசன்னமே இறைமக்களை உண்மையான திருச்சபையின் முழுமைக்கு அழைத்துச் செல்கின்றது.

***6. இறைமக்களின் கடமைகள் யாவை விளக்குக?***

பழைய ஏற்பாட்டில் குருக்களையும், இறைவாக்கினர்களையும், அரசர்களையும் திருப்பொழிவு செய்தனர். வரவிருக்கின்ற மீட்பர் குருவானவரும், இறைவாக்கினரும், அரசருமான மெசியா அதாவது திருப்பொழிவு செய்யப்பட்டவராக இருப்பார் என்று யூத மக்கள் எண்ணினர். மெசியா என்னும் நிலையில் இயேசுவுக்கு குரு, இறைவாக்கினர், அரசர் போன்ற கடமைகள் உண்டு. திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை போன்ற புகுமுக அருளடையாளங்களைப் பெற்றுக்கொண்டு இயேசுவுடன் நட்புறவு கொண்டிருக்கும் இறைமக்களுக்கும் இந்த மூன்று கடமைகளும் உண்டு. இயேசுவைப் போன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடவுளுக்கு ஏற்புடைய பலி செலுத்தவும், அவருடைய இறைவார்த்தைகளை போதிக்கவும், உலகுக்கு பணிவிடை புரியவும் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளான்.

**அரச குருக்களின் கூட்டத்தினர்:** இறைமக்களனைவரும் இயேசுவின் குருத்துவத்தில் பங்கு கொள்பவர்கள். அதாவது அவருடைய பலி வாழ்க்கையின் தொடர்ச்சியாகவே அவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். அனுதின வாழ்க்கையில் ஏற்படும் வேதனைகளையும், சிலுவைகளையும் இறைமக்கள் தாங்கிக்கொண்டு கிறிஸ்து வழியாக தந்தையிடம் ஒப்படைக்கும் போது அது ஒரு பலியாக மாறுகிறது. கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு கொள்கின்ற நாம் குருக்களுடன் சேர்ந்து திருப்பலியின் போது பலி செலுத்துகின்றோம். இதன் வழியாக இறைமக்கள் அவர்களுடைய குருத்துவப் பணியை நிறைவேற்றுகின்றனர்.

**இறைவாக்கினர்களின் கூட்டம்:** இறைமக்கள் இயேசுவின் குருத்துவப் பணியில் பங்குகொள்வதைப் போன்று அவருடைய இறைவார்த்தைப் பணியிலும் பங்கு கொள்ள வேண்டும். இறைவாக்கினர் என்னும் நிலையில் இறைமக்கள் உலகம் முழுவதும் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைச் சான்றின் மூலமாகவும், வார்த்தையின் மூலமாகவும் இயேசுவின் நற்செய்தியை போதிக்க கடமைப்பட்டவர்களாவர். அவர்கள் தீயசக்திகளுக்கு எதிராகப் போராடவும், சமூகத்தில் ஏற்படும் அநீதி, சமத்துவமின்மை போன்றவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கவும் வேண்டும். இப்பணிக்காக உயிரைக் கொடுக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம் (எபேசியர் 6:10-17).

**அரசர்களின் குலம்:** இயேசுகிறிஸ்து என்றென்றைக்கும் அரசரே ஆவர். அவருடைய அரசு இவ்வுலக வலிமை, அதிகாரத்தன்மை, தலைமைப்பண்பு போன்றவற்றின் அரசு அன்று, மாறாக அன்பு, பணிவிடை, இரக்கம் போன்றவற்றின் அரசு ஆகும். இயேசு தமது பகிரங்க வாழ்வின் போது நோயாளிகளையும், பிறரால் கைவிடப்பட்டவர்களையும், விதவைகளையும் தன்னிடம் அழைத்தார். ஒரு நல்ல ஆயரைப் போன்று அவர்களுக்கு அன்புப்பணிகளைச் செய்து வந்தார். அவ்வாறு தமது அரச பதவி பணிவிடை பெறுவதற்கன்று மாறாக பணிவிடை புரிவதற்கும் அனைவருக்குமாக உயிர்கொடுக்கவும் வேண்டியது என்று கற்பித்தார். அதனால் சமூகத்தில் துன்பப்படுபவர்களுக்கும், ஏழைகளுக்கும், புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் பணிவிடை

www.malankaralibrary.com

புரியவும், அவர்களுக்காக உயிரைக் கொடுக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு நாம் சமூகத்தில் பணிவிடை புரியும்போது உண்மையான அரசர்களின் குலமாக மாறுகின்றோம்.

**குறு வினாவிடைகள்**

1. *திருச்சபையின் அடிப்படை சிந்தனை என்ன?* திருச்சபை என்பது இறைமக்களே
2. *இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருச்சபையைப் பற்றிய படிப்பினையில் எந்த கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தது?* இறைமக்கள்
3. *ஆபிரகாமின் வழியாக கடவுளால் உருவாக்கப்பட்ட இஸ்ரயேல் சமூகத்தை பழைய ஏற்பாட்டில் எவ்வாறு அழைக்கிறோம்?* இறைமக்கள்'
4. *இஸ்ரயேல் மக்கள் இறைமக்கள் என்பதன் உடன்படிக்கை என்ன?* "நீங்கள் என் மக்களும் நான் உங்கள் கடவுளுமாயிருப்பேன்"
5. *இஸ்ரயேல் மக்கள் இறைவனோடுள்ள உடன்படிக்கையை எவ்வாறு புதுப்பித்து வந்தனர்?* கட்டளைகளை கடைபிடிப்பது, பலி செலுத்துவது திருநாட்களைக் கொண்டாடுவது போன்றவற்றின் வழியாக
6. *இஸ்ரயேல் மக்கள் யாவேயோடு கொண்டிருந்த உணர்வு யாது?* தாங்கள் யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்
7. *பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் எவ்வாறு அறியப்பட்டிருந்தனர்?* இறைமக்கள்
8. *புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவால் அழைத்து வேறுபடுத்தப்பட்ட மக்கள் எனப்படுபவர்கள் யாவர்?* இறைமக்கள்.
9. *புதிய ஏற்பாட்டின் இஸ்ரயேல் என்பது என்ன?* திருச்சபை.
10. *திருச்சபை என்பது எத்தகையோரின் கூட்டமாகும்?* தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கூட்டம்
11. பழைய ஏற்பாட்டிலுள்ள இஸ்ரயேலராகின்ற **<u>இறைமக்கள்</u>** புதிய ஏற்பாட்டிலுள்ள இறைமக்களாகின்ற **<u>திருச்சபையின்</u>** தொடக்கமும் அடையாளமும் ஆவர்.
12. *புதிய ஏற்பாட்டில் இயேசு இறைமக்களோடு எவ்வாறு உடன்படிக்கை செய்தார்?* இறுதி இரவுணவின் வழியாகவும் கல்வாரி சிலுவை இறப்பின் வழியாகவும்
13. *இறுதி இராவுணவின் வேளையில் இயேசு சீடர்களிடம் கூறிய உடன்படிக்கையின் வார்த்தைகள் யாவை?* "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" (லூக்கா 22:20).
14. *இயேசு இறைமக்களோடுள்ள உடன்படிக்கையை எங்கே நிறைவேற்றினார்?* கல்வாரி மலையில்
15. *பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைக்கும் புதிய ஏற்பாட்டு உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடு என்ன?* பழைய ஏற்பாட்டில் மக்கள் விலங்குகளின் இரத்தத்தால் உடன்படிக்கை செய்து கொண்டனர். புதிய ஏற்பாட்டில் இயேசு தமது இரத்தத்தால் அழிவில்லாத நிலையான உடன்படிக்கை செய்து கொண்டார்.
16. *பழைய உடன்படிக்கையின் நிறைவு யாது?* இயேசு நிறைவேற்றிய புதிய உடன்படிக்கை.
17. *இயேசு இரத்தம் சிந்தியதன் விளைவாக உருவானவர்கள் யாவர்?* புதிய இறைமக்கள்
18. *புதிய உடன்படிக்கையின் வழியாக இயேசு கிறிஸ்துவோடு ஒன்றிணைந்த புதிய இறைமக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?* திருச்சபை.
19. *பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு சட்டங்கள் யாவை?* மோசேயின் திருச்சட்டமே பழைய ஏற்பாட்டு இறைமக்களின் அடிப்படையாக அமைந்திருந்தது. ஆனால் தூய ஆவியால் உருவாக்கப்பட்ட புதிய இறைமக்களின் சட்டம் தூய ஆவியின் சட்டமாகும். அது இறையன்பின் சட்டமாகும்.
20. *பழைய ஏற்பாட்டில் யார் மட்டுமே இறைமக்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர்?* ஆபிரகாமின் வழி மரபினர்கள்

21. *புதிய ஏற்பாட்டு இறைமக்கள் எனப்படுபவர்கள் யாவர்?* புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கின் வழியாக அனைவரும் புதிய இறைமக்களாகின்றனர். இந்த புதிய இறைமக்களையே திருச்சபை என்றும் அழைக்கின்றனர்.

22. *எப்படிப்பட்ட உணர்வு முதல் கிறிஸ்தவர்களில் மிகுந்து காணப்பட்டது?* கடவுளின் மக்கள் என்னும் உணர்வு

23. *புனித பவுல் திருச்சபையை எவ்வாறு அழைக்கின்றார்?* 'கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்', 'அழைத்து ஒன்றுபடுத்தியவர்களின் சமூகம்'

24. *புனித பேதுரு திருச்சபையைக் குறித்து கூறியவை என்ன?* "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள் முன்பு நீங்கள் ஒரு மக்களினமாய் இருக்கவில்லை. இப்போது கடவுளுடைய மக்களாக இருக்கிறீர்கள்"(1பேதுரு2:9-10).

25. *திருப்பலியின் போது செதறாவில் நாம் திருச்சபையைப் பற்றி எவ்வாறு மன்றாடுகிறோம்?* ஆண்டவரே உம் திரு இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பெற்ற உம் பங்கிலிருந்து (திருச்சபையிலிருந்து) உமது கருணையை தடை செய்யாதீர்". ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது விலை மதிப்பற்ற இரத்தத்தால் திருச்சபையை விலைக்கு வாங்கினார் என்ற உளப்பூர்வமான வேண்டலில் திருச்சபையின் ஆன்மீக உணர்வு வெளிப்படுகிறது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 20:28).

26. *"திருப்பலி வழியாக எவ்வாறு இறைவனோடுள்ள உடன்படிக்கை புதுப்பிக்கப்படுகிறது?* புதிய இறைமக்களான திருச்சபை திருப்பலியின் வழியாக இந்த புதிய உடன்படிக்கையை புதுப்பித்து கிறிஸ்துவில் புதிய மக்களாக வளரவும் செய்கின்றார். திருப்பலி செலுத்துதலின் வழியாக ஆண்டவர் தம் திரு இரத்தத்ததால் வாங்கப்பெற்ற திருச்சபை என்னும் சிந்தனை நினைவு கூரப்படுகிறது.

27. *பழைய ஏற்பாட்டு மக்கள் திருப்பயண சமூகம் எனப்பட்டது எப்போது?* பழைய ஏற்பாட்டு மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு புனிதப்பயணம் மேற்கொண்டபோது அவர்கள் திருப்பயண சமூகம் என்று அறியப்பட்டிருந்தனர். இஸ்ரயேல் மக்கள் பாலைநிலத்தில் நெருக்கடிகளின் வழியாக கடந்து சென்றதைப் போன்று புதிய இஸ்ரயேல் மக்கள் இந்த உலகத்தின் நெருக்கடிகளின் வழியாகவும், துன்பங்களின் வழியாகவும் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

28. *புதிய ஏற்பாட்டு மக்கள் திருப்பயண சமூகம் எனப்படுவது எப்படி?* விண்ணுலகைக் குறிக்கோளாகக் கொண்டு இந்த உலகத்தின் வழியாய் புனிதப் பயணம் மேற்கொள்பவர்களே புதிய ஏற்பாட்டு இறைமக்கள். ஆண்டவரின் இரண்டாம் வருகை வரையிலான காலகட்டமே திருச்சபையின் திருப்பயணம். ஆண்டவரின் இரண்டாம் வருகையினால் மட்டுமே திருச்சபையின் இந்த புனிதப் பயணம் நிறைவடையும். தூய ஆவியினால் உருவாக்கப்பட்ட இந்த புதிய ஏற்பாட்டின் திருப்பயண சமூகம் தூய ஆவியினால் தினமும் புதுப்பிக்கப்பட்டு இயேசுவின் சிலுவையின் வழியாக விண்ணுலகை குறிக்கோளாகக் கொண்டு உலக முடிவு வரை பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

29. *திருச்சபை என்பது தனிநபரல்ல மாறாக ஒரு சமூகம் என்பதை விளக்குக?* திருச்சபை இறைமக்கள் என்று கூறும் போது ஒருவரோடொருவர் உறவுகொண்டிராத தனிநபர்களின் கூட்டமல்ல. மாறாக விசுவாசத்திலும், அருள் அடையாளங்களிலும், தலைமையிலும் தூய ஆவியில் ஒன்றிணைந்தவர்களின் நட்புறவே திருச்சபை. இறைமக்கள் என்பது திருச்சபையின் ஒரு தனிப்பட்ட பிரிவினர் அன்று, மாறாக திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட அனைவரும் இறைமக்களாவார்.

30. *திருமுழுக்கின் வழியாக இறைமக்களான, விசுவாசிகளின் சமூகத்தை வழிநடத்துவது யாவர்?* அப்போஸ்தலர்களின் (திருத்தூதர்) வழிவந்தவர்களான ஆயர்களே.

31. *இறைமக்கள் எப்போது திருச்சபை என்னும் உண்மையை புரிந்து கொள்கின்றனர்?* அப்போஸ்தலிக்க அதிகாரம் படைத்த ஆயர்களின் திருப்பணிகளை இறைமக்கள் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அன்புடன் கீழ்படியவும் செய்யும் போது திருச்சபை என்னும் உண்மை புலப்படுகிறது.

32. *இறைமக்களால் தனித்திருச்சபையாக செயல்பட முடியாத இரு காரணிகள் யாவை?* அப்போஸ்தலிக்க அதிகாரம் படைத்த ஆயர்கள் இன்றியோ, ஆயர்களின் அதிகாரத்தை எதிர்த்தோ

www.malankaralibrary.com

33. *இறைமக்கள் யாரோடுள்ள உறவு வாயிலாக உண்மையான திருச்சபை அனுபவத்துக்கு கடந்து வருகிறார்கள்?* ஆயர்களோடு

34. *திருத்தந்தையுடன் நட்புறவு கொண்டிருப்பதன் வழியாக திருச்சபை என்னும் உண்மை எவ்வாறு புலப்படுகிறது?* அப்போஸ்தலர்களின் தலைவர் பேதுரு. அதைப்போன்று ஆயர்களின் தலைவர் பேதுருவின் வழிவந்தவரான உரோமை திருத்தந்தை. எல்லா ஆயர்களும் அவர்கள் பணிவிடை செய்கின்ற இறைமக்களும் திருத்தந்தையுடன் நட்புறவு கொண்டிருப்பதன் வழியாக திருச்சபை என்னும் உண்மை இன்னும் அதிகமாக புலப்படுகிறது.

35. *இறைமக்கள் எதன் வழியாக ஒரு திருச்சபையாக தங்களை வெளிப்படுத்துகிறார்கள்?* திருச்சபையின் அடிப்படையான பண்புகளுள் ஒன்றான ஆராதனை (வழிபாடு)யின் வழியாகவே

36. *முதல் கிறிஸ்தவர்களின் ஆராதனை (வழிபாடு) பற்றி குறிப்பு வரைக?* முதல் கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் தலைமையில் ஒன்றுகூடி ஆராதனை (வழிபாடு) மற்றும் அப்பம் பிட்குதல் திருச்சடங்கில் ஒரே மனத்துடன் பங்கு கொண்டனர். உயிர்த்தெழுந்த இயேசுவின் பங்கேற்பை முதல் கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்குதல் என்னும் ஆராதனை (வழிபாடு)யின் வழியாகவே அனுபவித்துணர்ந்தார்கள். அதனால் ஆராதனை (வழிபாடு) நேரத்தில் குறிப்பாக அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் போது அதாவது திருப்பலியின் போது உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் அவர்களோடு இருந்தது என்ற உணர்வு அவர்களுக்கு வலுப்பட்டது.

37. *இயேசு கிறிஸ்துவின் மீட்பின் அனுபவம் பற்றி திருச்சபை விசுவசிப்பது என்ன?* இயேசு கிறிஸ்துவின் மீட்பின் அனுபவம் வெளிப்படையாக திருச்சபையில் செயல்படுகிறது என்று திருச்சபை விசுவசிக்கின்றது.

38. *திருச்சபையை முழுமையடையச் செய்கின்ற மூன்று காரணிகள் யாவை?* திருப்பலி செலுத்தும் போது இறைமக்களும், அப்போஸ்தலிக்க அதிகாரம் படைத்த ஆயர்களும், ஆயர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குருக்களும், இயேசுவின் மீட்புச் செயல்களின் பிரசன்னமும் உள்ளதனால் திருப்பலியை அதன் முழுமையான பொருளில் நாம் காணமுடிகிறது. இறைமக்கள், அப்போஸ்தலிக்க அதிகாரம், இயேசுவின் மீட்புச் செயல் ஆகிய மூன்றும் திருச்சபையை முழுமையடையச் செய்கின்றன.

**39.** ஆராதனை (வழிபாடு) திருச்சபையின் **உயிரும்**, **சுவாசமும்**, **இதயத்துடிப்புமாகும்.**

40. ஆராதனை (வழிபாடு)யில் குறிப்பாக திருப்பலியில் இயேசுவின் மீட்புச் செயல்களின் **பிரசன்னமே** இறைமக்களை உண்மையான திருச்சபையின் **முழுமைக்கு** அழைத்துச் செல்கின்றது.

41. *மெசியா என்னும் நிலையில் இயேசு பெற்றிருந்த மூன்று நிலைகள் யாவை?* குரு, இறைவாக்கினர், அரசர்

42. *இயேசுவின் குரு, இறைவாக்கினர், அரசர் என்ற மூன்று நிலைகளுக்கும் திருச்சபைக்கும் உள்ள தொடர்பு என்ன?* திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை போன்ற புகுமுக அருளடையாளங்களைப் பெற்றுக்கொண்டு இயேசுவுடன் நட்புறவு கொண்டிருக்கும் இறைமக்களுக்கும் இந்த மூன்று கடமைகளும் உண்டு. இயேசுவைப் போன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடவுளுக்கு ஏற்புடைய பலி செலுத்தவும், அவருடைய இறைவார்த்தைகளை போதிக்கவும், உலகுக்கு பணிவிடை புரியவும் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளான்.

43. *இயேசுவின் குருத்துவத்தில் பங்கு கொள்பவர்கள் யாவர்?* இறைமக்கள் அனைவரும்

44. *இறைவாக்கினர் என்னும் நிலையில் இறைமக்கள் எவ்வாறு உலகம் முழுவதும் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும்?* ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைச் சான்றின் மூலமாகவும், வார்த்தையின் மூலமாகவும் இயேசுவின் நற்செய்தியை போதிக்க வேண்டும். அவர்கள் தீயசக்திகளுக்கு எதிராகப் போராடவும், சமூகத்தில் ஏற்படும் அநீதி, சமத்துவமின்மை போன்றவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கவும் வேண்டும். இப்பணிக்காக உயிரைக் கொடுக்கவும் வேண்டும். (எபேசியர் 6:10-17).

45. *இயேசுகிறிஸ்துவின் அரசு கொண்டுள்ள பண்புகள் யாவை?* அன்பு, பணிவிடை, இரக்கம்

***46. இயேசு திருச்சபை வழியாக இறைமக்களுடன் பேசுகிறார் என்று இரவு மன்றாட்டில் நாம் நினைவு கூரும் பாடல் எது?***

www.malankaralibrary.com

"வான்புவியின் மன்னவனார்

திருச்சபையை உருவாக்கி தனதுறையுள் அதுவாக்கி

புகுந்ததனுள் வாழ்ந்தாரே அவரொடு சொல்-லாடிடவே

விழைவோரே வந்திடுவின் வந்தவரின் சபை புகுமின்

அவரதனில் இலங்குகிறார்

அம் ஹாலே ஏ லூயா உ ஹாலே ஏ லூயா

சபையைப் பேணும் பரனே

அருள் புரிவீர் அடியார் மேல்".

(இரவு மன்றாட்டு 1- ம் கௌமா)

*47.* "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட **வழிமரபினர்**, அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தார் அவரது **உரிமைச் சொத்தான** மக்கள்".(1பேதுரு 2:9)

பாடம் 7

## திருச்சபையில் பேதுருவின் முதன்மை இடம்

**பயிற்சி வினாக்கள்**

*1. திருத்தூதர் குழுவில் இயேசு புனித பேதுருவுக்கு முதன்மை இடத்தை வழங்கினார். மறைநூலின் அடிப்படையில் விளக்குக?*

திருத்தூதர்களுள் இயேசு பேதுருவுக்கு முதன்மை இடத்தை அளித்திருந்தார். இயேசுவிடமிருந்து நேடியாக அதிகாரம் பெற்ற ஒருவரே பேதுரு. "முதலாவது பேதுரு என்னும் சீமோன்" (மத்தேயு 10:2) என்று கூறி நற்செய்திகள் பேதுருவை அறிமுகப்படுத்துகின்றன (மாற்கு 3:16, லூக்கா 6:14). பல வேளைகளிலும் திருத்தூதர்களின் பிரதிநிதியாக பேசுபவரும் பேதுருவே. பன்னிருவர்களின் கூட்டத்தில் பேதுரு எப்போதும் முன்னிலையில் இருந்ததை நற்செய்திகள் தெளிவாக்குகின்றன (மாற்கு 8:29, 9:5, மத்தேயு 18:21, யோவான் 21:15-19). தனது பகிரங்க வாழ்வின் முக்கியமான அனைத்து நிகழ்வுகளிலும் இயேசு பேதுருவை அழைத்தார். தாபோர் மலையில் மறுவுருவான போதும், கெத்சமனி தோட்டத்தில் செபத்தின் வேளையிலும் இதைப் பார்க்கிறோம். புனித மத்தேயு எழுதிய நற்செய்தி திருச்சபையின் தலைமைப் பொறுப்பை பேதுருவுக்கு அளித்த நிகழ்ச்சியை விவரிக்கிறது. பேதுருவிடம் இயேசு பின்வருமாறு கூறினார். "உன் பெயர் பேதுரு, இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" (மத்தேயு 16:18-20).

தமது சிலுவை மரணத்துக்குப்பின் பிளவுகள் ஏற்படாமல் இருக்கவும் பிற திருத்தூதர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் திருத்தூதர்களுக்கு தலைவராக இயேசு பேதுருவை நியமித்தார். "சீமோனே, சீமோனே இதோ கோதுமையைப் போல் உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிபடுத்து" (லூக் 22:31-32).

உயிர்ப்புக்குப் பின்னர் திருத்தூதர்களுக்குத் தோன்றி திருச்சபையை வழிநடத்துவதற்கான அதிகாரத்தை இயேசு பேதுருவுக்கு வழங்கினார். "என் ஆடுகளைப் பேணி வளர், என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்று கூறி பேதுருவை திருச்சபையின் ஆயரும், தலைவருமாக இயேசு உயர்த்தினார் (யோவான் 21:15-19).

*2. மலங்கரை வழிபாட்டு முறையில் புனித பேதுருவின் முதன்மை இடத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக?*

'திருத்தூதர்களின் தலைவா', 'தலை', 'குடும்பத்தின் தலைவன்', 'அடிப்படைக்கல்' என்னும் சிறப்புப்

பெயர்களின் மூலம் புனித பேதுருவின் முதன்மை இடத்தை மலங்கரை ஆராதனை (வழிபாடு)முறை விளக்குகிறது.

அடிப்படைக் கல்லான பேதுருவின் கைகளிலேயே திருச்சபையின் திறவுகோல் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை ஞாயிறு காலை மன்றாட்டில் திருச்சபை நினைவு கூர்கின்றது.

சபையே நின் தாழ்க்கோல் அடித்தளக் கல்லாம்

சீமோன் கையில் சபையே சுவிகா- ரிணி தேவா

இரங்குக அடியார் மேல்.

திருமணச் சடங்கின் போது பாடப்படும் "கற்புடையாள் கழுமமுறா சபையே" என்ற பாடலில் வீட்டின் மேற்பார்வையாளராக பேதுருவை ஏற்படுத்துவதாக திருச்சபை நினைவு கூர்கின்றது. இறந்து போன குருக்களுக்கான தூப மன்றாட்டின் போது சீடர்களின் தலை பேதுரு என்றும், அவரை வீட்டுரிமையாளராய் நியமனம் செய்ததாகவும் விண், மண் உலகின் திறவுகோல்களை சீமோனிடம் ஒப்படைத்ததாகவும், பாவ மன்னிப்பின் அதிகாரம் வழங்கியதாகவும் திருச்சபை நினைவு கூர்கின்றது.

*திருத்தூதர்களின் தலைவராகும்*

*சீமோனிடமாய் ஈசன் குருத்துவம்*

*குறித்துரைத்த தேனா -ர் மொழிகளிதோ*

*வீட்டுரிமையனாய் நானுன்னை நியமனம் செய்தேன்*

*வான்வை உலகின் திறவுகோல்கள் தந்தேன் உன்னிடமாய்*

*நீ தடையின் - வானிலும் நான் தடைவேன்*

*" நீ அவிழ்க்கின்-வானிலும் நான் அவிழ்ப்பேன்*

*பாவம் செய்தோர்க்காய் வேண்டின் கேட்பேன் உன் வேண்டல்.*

இவ்வாறு பேதுருவை திருத்தூதர்களின் தலைவராக அறிக்கையிடும் செபங்களும் பாடல்களும் மலங்கரை வழிபாட்டு முறையில் ஏராளம் உள்ளன.

*3. பேதுருவின் வழிவந்தவர் என்னும் நிலையில் திருத்தந்தையின் அதிகாரங்கள் யாவை?*

புனித பேதுரு எருசலேமிலும் சமாரியா, அந்தியோக்கியா, கொரிந்து போன்ற இடங்களிலும் நற்செய்தி அறிவித்தார். இறுதியில் உரோமில் நற்செய்தி அறிவிக்கவும், இரத்தசாட்சியாக நல்லடக்கம் செய்யப்படவும் செய்தார். பேதுரு உரோமை ஆயரும், திருச்சபை முழுவதற்கும் தலைவருமாயிருந்த காலத்திலேயே இரத்தசாட்சியாக இறந்தார். அதனால் அன்று முதல் உரோமை மறைமாவட்டத்தின் ஆயர் பேதுருவின் வழிவந்தவராகவும் உலகத் திருச்சபையின் தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

பேதுருவின் வழிவந்தவரான உரோமை ஆயர் திருத்தந்தையாக அறியப்பட்டார். திருத்தந்தைக்கு பேதுருவின் வழிவந்தவர் என்னும் நிலையில் பல்வேறு அதிகாரங்கள் உண்டு. முதலாவதாக திருத்தந்தை உரோமை மறைமாவட்டத்தின் ஆயர். இரண்டாவதாக அவர் உரோமைத் திருச்சபையின் அதாவது இலத்தீன் வழிபாட்டு முறையின் தந்தையும் ஆவார். மூன்றாவதாக அவர் பேதுருவின் வழிவந்தவர் என்னும் நிலையில் ஆயர்க்கூட்டத்தின் தலைவரும், உலகத் திருச்சபையின் தலைவரும், திருச்சபையின் ஒன்றிப்பின் அடையாளமுமாவார்.

பேதுருவின் வழிவந்தவராக உரோமை திருத்தந்தையை அங்குள்ள தலத் திருச்சபைகள் ஏற்றுக்கொண்டதாக நாம் அறிந்து கொள்கின்றோம். பல தலத்திருச்சபைகளின் செயல்பாடுகளிலும் பங்குகொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை திருத்தந்தை செய்து வந்தார். முதன் முதலில் வளர்ச்சியடைந்து வந்த ஐந்து திருச்சபை மையங்களே உரோமன், கான்ஸ்டான்டிநோபிள், அந்தியோக்கியா, எருசலேம், அலக்சாண்டரியா போன்றவை. இங்கு ஆட்சிபுரிந்து வந்த ஐந்து பிதாபிதாக்களில் உரோமை பிதாபிதாவுக்கு முதல் இடம் இருந்ததாக மரபு கூறுகின்றது. சுருங்கக் கூறின் உரோமை ஆயரின் முதன்மை

www.malankaralibrary.com

இடம் தொடக்கத் திருச்சபை காலம் முதல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

4. *திருத்தந்தையின் வழுவாவரம் என்பதன் பொருள் யாது?*

திருத்தூதர்களில் பேதுருவுக்கு இருந்த அதே இடம் ஆயர் குழுவில் (திருச்சங்கம்) திருத்தந்தைக்கும் இருக்கிறது. பேதுரு திருத்தூதர் குழுவின் தலைவராக இருந்ததைப் போன்று திருத்தந்தை ஆயர் குழுவின் தலைவரும் உலகத் திருச்சபைகளின் தலைவருமாவார். ஆயர்சங்கத்தின் தலைவர் என்னும் நிலையில் விசுவாசத்தைக் குறித்தும், நன்னெறிகளைக் குறித்தும் உலகத் திருச்சபையைக் கற்பிக்கும் போது திருத்தந்தைக்கு தவறு வருவதில்லை என்பது கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினை. இதற்கு தூய ஆவியார் அவருக்குத் துணை புரிந்து வருகிறார். இந்த வரம் திருத்தந்தையின் வழுவாவரம் (Infallibility) என்னும் பெயரில் அறியப்படுகிறது.

5. *ஆயர்களின் கூட்டாண்மை என்றால் என்ன?*

ஒரு தலத்திருச்சபையை கற்பிக்கவும், புனிதப்படுத்தவும், வழிநடத்தவும் தேவையான முழு அதிகாரம் ஆயருக்கு உண்டு. ஒரு இடத்தின் திருத்தூதரின் அடையாளமே ஆயர். இவ்வாறாக ஆயரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு தலத்திருச்சபை சமூகத்தை மறைமாவட்டம் என்று அழைக்கிறோம்.

ஒவ்வொரு ஆயரும் ஆயர் என்னும் நிலையில் தன் ஆடுகளை மேய்க்கக் கடமைப்பட்டுள்ளார். ஒவ்வொரு ஆயருக்கும் தமது மறைமாவட்டத்தின் பொறுப்பு மட்டுமன்று ஆயர் குழுவின் உறுப்பினர் என்னும் நிலையில் உலகத்திருச்சபைகளின் வளர்ச்சியில் கூட்டுப்பொறுப்பும் உண்டு. இவ்வாறான ஆயர்களின் கூட்டுப் பொறுப்பை ஆயர்களின் கூட்டாண்மை (Collegiality of Bishops) என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் அழைக்கிறது.

குறு வினாவிடைகள்

1. *பன்னிரு திருத்தூதர்கள் என்பவர்கள் யார்?* இயேசு கிறிஸ்து தமது பணியைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து பயிற்றுவித்தார். அவர்களைப் பன்னிரு திருத்தூதர்கள் என்கிறோம்.
2. *பன்னிரு திருத்தூதர்களில் பேதுரு முக்கிய இடம் வகித்ததாக குறுப்பிடும் வரலாற்றுத் தெளிவுகள் யாவை?* இயேசு தேர்ந்தெடுத்த பன்னிரு திருத்தூதர்களில் பேதுரு முக்கிய இடம் வகித்ததாக திருவிவிலியத்திலும், ஆதித்திருச்சபை வரலாற்றிலும், திருச்சபையின் செபங்களிலும் நாம் காண்கின்றோம்.
3. *பேதுருவின் முதன்மை இடம் இன்று யார் வழியாக தொடர்கிறது?* உரோமைத் திருத்தந்தை
4. *இயேசுவிடமிருந்து நேடியாக அதிகாரம் பெற்ற திருத்தூதர் யார்?* பேதுரு.
5. *நற்செய்திகள் பேதுருவை எவ்வாறு அறிமுகப்படுத்துகின்றன?* “முதலாவது பேதுரு என்னும் சீமோன்” (மத்தேயு 10:2)
6. *நற்செய்திகளில் பல வேளைகளிலும் திருத்தூதர்களின் பிரதிநிதியாக பேசியவர் யார்?* பேதுரு
7. *திருத்தூதர்களின் பிரதிநிதியாக பேதுரு முன்னிலையில் இருந்ததை குறிப்பிடும் நற்செய்திகள் யாவை?* மாற்கு 8:29, 9:5, மத்தேயு 18:21, யோவான் 21:15-19
8. *இயேசு தனது பகிரங்க வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளில் பேதுருவை அழைத்தது எப்போது?* தாபோர் மலையில் மறுவுருவான போதும், கெத்சமனி தோட்டத்தில் செபத்தின் வேளையிலும்
9. *புனித மத்தேயு நற்செய்தி திருச்சபையின் தலைமைப் பொறுப்பை பேதுருவுக்கு அளித்த நிகழ்ச்சியை எவ்வாறு விவரிக்கிறது?* பேதுருவிடம் இயேசு பின்வருமாறு கூறினார். “உன் பெயர் பேதுரு, இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்” (மத்தேயு 16:18-20).

www.malankaralibrary.com

10. *சிலுவை மரணத்துக்குப்பின் திருத்தூதர்களை இயேசு எவ்வாறு உறுதிப்படுத்தினார்?* தமது சிலுவை மரணத்துக்குப்பின் பிளவுகள் ஏற்படாமல் இருக்கவும் பிற திருத்தூதர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் திருத்தூதர்களுக்கு தலைவராக இயேசு பேதுருவை நியமித்தார். "சீமோனே, சீமோனே இதோ கோதுமையைப் போல் உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிபடுத்து" (லூக் 22:31-32).
11. *உயிர்ப்புக்குப் பின்னர் இயேசு பேதுருவுக்கு வழங்கிய அதிகாரம் பற்றி குறிப்பிடு?* உயிர்ப்புக்குப் பின்னர் திருத்தூதர்களுக்குத் தோன்றி திருச்சபையை வழிநடத்துவதற்கான அதிகாரத்தை இயேசு பேதுருவுக்கு வழங்கினார். "என் ஆடுகளைப் பேணி வளர், என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்று கூறி பேதுருவை திருச்சபையின் ஆயரும், தலைவருமாக இயேசு உயர்த்தினார் (யோவான் 21:15-19).
12. *பேதுருவின் செயல்களில் அவரது தலைமைப்பண்பு எப்போது முதல் வெளிப்படுகிறது?* ஆண்டவரின் உயிர்ப்புக்குப் பின்னர்
13. *பெந்தக்கோஸ்து திருநாளின் போது திருத்தூதர்களின் பெயரால் முதலில் மக்கள் கூட்டத்தோடு பேசியவர் யார்?* பேதுரு
14. *திருத்தூதர்களின் கூட்டத்தில் யூதாசுக்குப் பதிலாக மத்தியாவை தேர்ந்தெடுக்கும் நிகழ்வில் தலைமை வகித்தார யார்?* பேதுரு
15. *யூத தலைமைச் சங்கத்தின் முன் திருத்தூதர்களுக்காக பரிந்து பேசியவர் யார்?* பேதுரு (திருத்தூதர் பணிகள் நூல்கள் 4:5-12).
16. *இயேசுவின் பெயரால் முதல் அற்புதத்தை செய்தவர் யார்?* பேதுரு
17. *கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட சீடர்களுக்காக வாதிட்டவர் யார்?* பேதுரு
18. *பிற இனத்தவரான கொர்னேலியுவை திருச்சபையில் ஏற்றுக்கொண்டவர் யார்?* பேதுரு
19. *திருத்தூதர்களின் தலைவர் என்னும் நிலையில் அனனியாவுடையவும், சப்பரியாவுடையவும் நிகழ்வில் செயல்பட்டவர் யார்?* பேதுரு
20. *எருசலேம் திருச்சங்கத்திற்கு தலைமை ஏற்று செய்திகளை வழங்கியவர் யார்?* பேதுரு
21. *பேதுருவை சந்தித்து அவருடன் தங்கி அவருடைய முதன்மை இடத்தை அங்கீகரித்தவர் யார்?* புனித பவுல்
22. *பேதுருவின் முதன்மை பற்றி ஆதித்திருச்சபையினர் கொண்டிருந்த சான்றுகள் யாவை?* 'முதலாவது பேதுரு என்னும் சீமோனே', 'பேதுருவும் பதினொருவரும்' (1 கொரிந்தியர் 15:5, திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:14-37; 5:29) என்ற சொல்வழக்கிலிருந்து பேதுருவின் முக்கிய இடத்தை ஆதித்திருச்சபையினர் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.
23. *புனித கிறிஸோஸ்டோம் பேதுருவின் முதன்மையிடம் பற்றிக் கூறுவது என்ன?* "புனித பேதுரு, திருத்தூதர் குழுவின் தலைவர், திருத்தூதர்களின் நாவு, திருச்சபைக் குடும்பத்தின் தலைவர் திருச்சபையின் அடிப்படைக்கல், உலகின் ஆட்சியாளர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.
24. *புனித சிறில் பேதுருவின் முதன்மையிடம் பற்றிக் கூறுவது என்ன?* "திருத்தூதர்களில் முதன்மையானவர் பேதுரு"
25. *புனித பேதுருவின் முதன்மை இடத்தைப் பற்றி கூறியுள்ள முக்கிய திருச்சபைத் தந்தையர்கள் யாவர்?* புனிதர்களான எஃப்ரேம், அகுஸ்தினார், சிப்றியான், தெர்த்தூல்யன், ஒரிஜன்
26. *புனித பேதுருவின் முதன்மை இடத்தைப் பற்றி கிரேக்க ஆர்த்தடோக்ஸ் திருச்சபை கூறுவது என்ன?* 'திருச்சபையின் அடிப்படை', 'உலகப் போதனையாளர்', 'மந்தைகளின் தலைவர்' என்னும் சிறப்புப் பெயர்களில் கிரேக்க ஆர்த்தடோக்ஸ் திருச்சபை புனித பேதுருவை முதல் இடத்துக்கு உயர்த்துகிறது.
27. *புனித பேதுருவின் முதன்மை இடத்தை பற்றி மலங்கரை ஆராதனை (வழிபாடு)முறை விளக்கும் சிறப்புப்*

www.malankaralibrary.com

*பெயர்கள் யாவை?* 'திருத்தூதர்களின் தலைவா', 'தலை', 'குடும்பத்தின் தலைவன்', 'அடிப்படைக்கல்'

28. *அடிப்படைக்கல்லான பேதுருவின் கைகளிலேயே திருச்சபையின் திறவுகோல் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை ஞாயிறு காலைமன்றாட்டில் திருச்சபை நினைவு கூர்கின்ற பாடல் யாது?* சபையே நின் தாழ்க்கோல் அடித்தளக் கல்-லாம் சீமோன் கையில் சபையே சுவிகா- ரிணி தேவா இரங்குக அடியார் மேல்.

29. *புனித பேதுருவின் முதன்மை இடத்தைப் பற்றி திருமணச் சடங்கின் போது பாடப்படும் பாடல் யாது?* “கற்புடையாள் கமுமமுறா சபையே” என்ற பாடலில் வீட்டின் மேற்பார்வையாளராக பேதுருவை ஏற்படுத்துவதாக திருச்சபை நினைவு கூர்கின்றது.

30. *புனித பேதுருவின் முதன்மை இடம் பற்றி இறந்து போன குருக்களுக்கான தூப மன்றாட்டின் போது பாடுவது என்ன?*

*திருத்தூதர்களின் தலைவராகும் சீமோனிடமாய்*

*ஈசன் குருத்துவம் குறித்துரைத்த தேனா -ர் மொழிகளிதோ*

*வீட்டுரிமையனாய் நானுன்னை நியமனம் செய்தேன்*

*வான்வை உலகின் திறவுகோல்கள் தந்தேன் உன்னிடமாய்*

*நீ தடையின் - வானிலும் நான் தடையவேன்*

*" நீ அவிழ்க்கின்-வானிலும் நான் அவிழ்ப்பேன்*

*பாவம் செய்தோர்க்காய் வேண்டின் கேட்பேன் உன் வேண்டல்.*

31. *புனித பேதுரு நற்செய்தி அறிவித்த இடங்கள் யாவை* எருசலேம் சமாரியா, அந்தியோக்கியா, கொரிந்து

32. *புனித பேதுரு இறுதியில் நற்செய்தி அறிவித்த இடம் யாது* உரோம்

33. *புனித பேதுரு* இரத்தசாட்சியாக நல்லடக்கம் செய்யப்பட்ட *இடம் யாது* உரோம்.

34. *புனித பேதுரு இரத்தசாட்சியாக உரோமில் நல்லடக்கம் செய்யப்பட்ட போது கொண்டிருந்த அதிகார நிலைகள் யாவை?* பேதுரு உரோமை ஆயரும், திருச்சபை முழுவதற்கும் தலைவருமாயிருந்த காலத்திலேயே இரத்தசாட்சியாக இறந்தார். அதனால் அன்று முதல் உரோமை மறைமாவட்டத்தின் ஆயர் பேதுருவின் வழிவந்தவராகவும் உலகத் திருச்சபையின் தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

35. *பேதுருவின் வழிவந்தவரான உரோமை ஆயர் எப்பெயரால் அழைக்கப்பட்டார்?* திருத்தந்தை

36. *பேதுருவின் வழிவந்தவர் என்னும் நிலையில் திருத்தந்தையின் அதிகாரங்கள் யாவை?* 1. முதலாவதாக திருத்தந்தை உரோமை மறைமாவட்டத்தின் ஆயர். 2. இரண்டாவதாக அவர் உரோமைத் திருச்சபையின் அதாவது இலத்தீன் வழிபாட்டு முறையின் தந்தையும் ஆவார். 3. மூன்றாவதாக அவர் பேதுருவின் வழிவந்தவர் என்னும் நிலையில் ஆயர்க்கூட்டத்தின் தலைவரும், உலகத் திருச்சபையின் தலைவரும், திருச்சபையின் ஒன்றிப்பின் அடையாளமுமாவார்.

37. *தொடக்கத் திருச்சபையில் வளர்ச்சியடைந்து வந்த ஐந்து திருச்சபை மையங்கள் யாவை?* உரோமன், கான்ஸ்டாட்டிநோபிள், அந்தியோக்கியா, எருசலேம், அலக்சாண்டரியா

**38.** *ஐந்து திருச்சபை மையங்களிலும் ஆட்சிபுரிந்து வந்த ஐந்து பிதாபிதாக்களில் யாருக்கு முதல் இடம் இருந்ததாக மரபு சான்று கூறுகின்றது?* உரோமை பிதாபிதாவுக்கு

39. *கத்தோலிக்கத் திருச்சபையில் வேறுபட்ட தன்மைகளையுடைய தனித்திருச்சபைகள் எத்தனை?* 22 (23)

40. *22 திருச்சபைகளின் ஆயர்களும் ஒருமை என்ன?* 22 திருச்சபைகளின் ஆயர்களும் திருத்தூதர்களின் வழிவந்தவர்கள் ஆவார்.

41. *கத்தோலிக்கத் திருச்சபை என்றால் என்ன?* பேதுருவின் வழிவந்தவரான உரோமை திருத்தந்தையுடன் ஒன்றித்திருந்த ஆயர்களும், அவர்களுடைய திருச்சபை சமூகமும் கத்தோலிக்கத் திருச்சபை என்று அறியப்படுகிறது. இவ்வாறாக உலகிலுள்ள 22 தனித்திருச்சபைகள் விசுவாசத்திலும்

www.malankaralibrary.com

அருளடையாளங்களிலும் திருத்தந்தையின் தலைமையிலும் ஒன்றித்திருக்கின்ற திருச்சபையே கத்தோலிக்கத் திருச்சபை.

42. *ஆயர் மாமன்றம் என்பது யாது?* பேதுருவின் தலைமையிலான திருத்தூதர் குழுவிடமே கிறிஸ்து தமது பணியை தொடர்ந்து செயல்படுத்தும் பொறுப்பை ஒப்படைத்தார். இந்த திருத்தூதர் குழுவின் தொடர்ச்சியே திருத்தந்தையின் தலைமையிலான ஆயர் மாமன்றம்.

43. *ஆயர் மாமன்றத்தின் அதிகாரங்கள் எது?* கிறிஸ்து திருத்தூதர்களுக்கு அளித்த எல்லா அதிகாரமும் ஆயர் மன்றத்திற்கு உண்டு.

44. *திருச்சபையின் மிக உயர்ந்த அமைப்பு யாது?* ஆயர்களின் மாமன்றம்.

45. *திருத்தூதர்களில் பேதுருவுக்கு இருந்த முதன்மை இடத்தை ஆயர் குழுவில் (திருச்சங்கம்) கொண்டுள்ளவர் யார்?* பேதுரு திருத்தூதர் குழுவின் தலைவராக இருந்ததைப் போன்று திருத்தந்தை ஆயர் குழுவின் தலைவரும் உலகத் திருச்சபைகளின் தலைவருமாவார்.

46. *திருத்தந்தையின் வழுவாவரத்திற்கு (Infallibility) துணை புரிபவர் யார்?* தூய ஆவியார்

47. *மறைமாவட்டம் என்றால் என்ன?* ஒரு தலத்திருச்சபையை கற்பிக்கவும், புனிதப்படுத்தவும், வழிநடத்தவும் தேவையான முழு அதிகாரம் ஆயருக்கு உண்டு. ஒரு இடத்தின் திருத்தூதரின் அடையாளமே ஆயர். இவ்வாறாக ஆயரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு தலத்திருச்சபை சமூகத்தை மறைமாவட்டம் என்று அழைக்கிறோம்.

48. *ஆயர்களின் கூட்டாண்மை (Collegiality of Bishops) பற்றி விளக்கும் திருச்சங்கம் எது?* இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்

49. *ஆயர்களின் பணியில் குருக்களின் பங்கு என்ன?* ஆயர்களின் பணியில் உதவி புரிபவர்களே குருக்கள். ஆயரின் பிரதிநிதி என்னும் நிலையில் குருவானவர்கள் திருச்சபை சமூகத்தை புனிதப்படுத்தவும், கற்பிக்கவும், வழிநடத்தவும் செய்கின்றனர். ஒரு பங்கின் ஆயரும், தந்தையும் குரு ஆவார். ஆயருடன் சேர்ந்து மறைமாவட்டத்தின் முழு செயல்பாடுகளிலும் குருக்கள் உதவி புரிகின்றனர்.

50. *கிறிஸ்து தமது ஆயர்பணியை யார் வழியாக இன்று தொடர்கின்றார்?* திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் வழியாக

51. *இறைமக்கள் திருச்சபை அதிகாரிகளை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும்?* தங்களின் ஆன்மீக தந்தையும், ஆயருமாக

52. *திருச்சபையின் அதிகாரம் என்பது எதற்கானது?* பணிவிடை புரிவதற்கு

53. *திருச்சபையின் அதிகாரம் பணிவிடை புரிவதற்கு என்பது பற்றி இயேசு கூறியது என்ன?* இயேசு கூறியதாவது, “உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மாற்கு 10:43-45).

54. *இயேசு பணிவிடை செய்வதற்கு தேவையான அடிப்படையான பாடத்தை எவ்வாறு கற்பித்தார்?* சீடர்களின் காலடிகளைக் கழுவி

55. *புனித பேதுரு பணிவிடை செய்வது பற்றி ஆயர்களுக்கு கூறிய அறிவுரை என்ன?* “உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள். கட்டாயத்தினால் அல்ல கடவுளுக்கேற்ப மன உவப்புடன் மேற்பார்வை செய்யுங்கள் : ஊதியத்திற்காகச் செய்யாமல் விருப்பத்தோடு பணி செய்யுங்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருங்கள்” (1பேதுரு 5:2-3).

56. *கடவுள் திருச்சபைக்கு வழங்கிய பணிவிடை அமைப்புகளுள் ஒன்றே எனப்படுவது யாது?* பேதுருவின் முதன்மை இடம்.

www.malankaralibrary.com

57. *இயேசு கிறிஸ்துவின் ஒன்றிப்பினுடையவும், நட்புறவினுடையவும் காணப்பட்ட பாதுகாவலர் யார்?* புனித பேதுரு.

58. *பேதுருவின் முதன்மை இடத்தை ஏற்கும்போது தலத்திருச்சபைகள் எதன் முழுமையை அடைகின்றன?* கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்

59. *ஆயர்களை வரவேற்கும் போது பாடப்படும் பாடலின் வழியாக புனித பேதுருவின் முதன்மையிடத்தை திருச்சபை அறிக்கையிடுவது யாது?*

"வரவேற்கின்றோமே நல் ஆயரே! வரவேற்கின்றோமே...

நலமுடனே வந்திடுவீர் எங்கள் ஆயர் பெருந்தகையே..

பேதுரு போய் சபை தன் அடித்தளமாய்

முற்றிலும் பவுலடியார் போன்றே...

இறைவாக்கினரின் உயிர் நண்பா

அப்போஸ்தல சமூகத்தின்

எலியாவைப் போல் ஒளிர்பவரே

யோவானைப் போல் நோன்பிருப்போர்

உம்மை ஏற்றது திருச்சபையோ

அவள் தான் என்றும் பேறுடையோள்".

60. "உன் பெயர் **பேதுரு**; இந்தப் பாறையின் மேல் என் **திருச்சபையைக்** கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் **திறவுகோல்களை** நான் உன்னிடம் தருவேன்.

61. **மண்ணுலகில்** நீ தடை செய்வது **விண்ணுலகிலும்** தடை செய்யப்படும், மண்ணுலகில் நீ அனுமதிப்பது **விண்ணுலகிலும்** அனுமதிக்கப்படும்" (மத்தேயு 16:18-19)

## பாடம் 8

## கத்தோலிக்க திருச்சபை-திருச்சபைகளின் உறவொன்றிப்பு

**பயிற்சி வினாக்கள்**

**1. பல்வேறு திருச்சபை சமூகங்கள் உருவானது எவ்வாறு என்பதை விளக்குக?**

இயேசுவின் சீடர்களான பன்னிரு திருத்தூதர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நற்செய்தியை பறைசாற்றினர். ஒவ்வொரு திருத்தூதர்களும் தாங்கள் இயேசுவிடமிருந்து கண்டதும், கேட்டதும், அறிந்து கொண்டதுமான கிறிஸ்து அனுபவத்தையே ஒவ்வொரு பகுதியிலும் பறைசாற்றினர். பன்னிரு திருத்தூதர்களும் ஒரே இயேசுவையே கற்றுணர்ந்தார்களெனினும் பன்னிருவருடையவும் கிறிஸ்து அனுபவம் வேறுபட்டதாக இருந்தன. அதனால் ஒவ்வொரு திருத்தூதர்களும் அவர்கள் அனுபவித்தறிந்த இயேசுவையே பறைசாற்றினர்.

திருத்தூதர்கள் நற்செய்தி பறைசாற்றிய பகுதிகளில் வாழ்ந்த மக்களின் கலாச்சாரமும், மொழியும் வேறுபட்டதாக இருந்தது. ஒவ்வொரு திருத்தூதரும் நற்செய்தி அறிவித்த இடத்தின் கலாச்சாரத்தினுடைய தனிச்சிறப்பும் அவரது கிறிஸ்து அனுபவத்தின் தனித்தன்மையையும் பொறுத்து உருவான சபை சமூகங்களுக்கு அதற்கே உரித்தான தனிச்சிறப்புகள் இருந்தன. அவ்வாறாக தொடக்கத் திருச்சபையில் வேறுபாடுகள் நிறைந்த பல்வேறு திருச்சபைகள் உருவாயின. எருசலேம் திருச்சபை, அந்தியோக்கியன் திருச்சபை, அலக்சாண்ட்ரியன் திருச்சபை, உரோமைத் திருச்சபை, பேர்ஷியன் திருச்சபை, இந்தியத் திருச்சபை என பல்வேறு திருச்சபைச் சமூகங்கள் உருவாயின. இந்த திருச்சபை சமூகங்களின் கலாச்சாரமும், மொழியும், அப்போஸ்தலிக்க மரபும் வேறுபட்டிருந்தமையால் அவர்களின் வழிபாட்டு முறைகளும், வேறுபட்டிருந்தன. தொடக்கத் திருச்சபையில் ஒவ்வொரு பகுதியில் உள்ள திருச்சபைகளும் ஒவ்வொரு ஆராதனை (வழிபாடு) சமூகங்களாக வளர்ந்து வந்தன. ஆராதிக்கும் சமூகம் என்ற நிலையில் இச்சபைகளை

www.malankaralibrary.com

'றீத்' (Rite) என அழைத்தனர். இது பலி செலுத்துதலின் செயல் முறைகளை குறிப்பிடுகின்ற Ritus' என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகிறது. மொழிகளின் பெயர்களிலும் திருச்சபைகள் அறியப்படத் தொடங்கின. சுறியானி, இலத்தீன், கிரேக்கம் என்னும் மொழிகளின் அடிப்படையில் சுறியானி சபை, இலத்தீன் சபை, கிரேக்க சபை என்னும் திருச்சபைகள் அறியப்படலாயின.

திருத்தூதர்களின் கிறிஸ்து அனுபவத்தின் வழியாகவும் அந்தந்த இடத்தின் கலாச்சாரங்களின் படியும் ஒவ்வொரு திருச்சபையும் உருவாயின. நாளடைவில் தனித்தனி வழிபாட்டு முறைகளினாலும், திருச்சபைத் தந்தையர்களின் இறையியல் சிந்தனைகளினாலும், ஆன்மீக பாரம்பரியங்களினாலும், சட்டங்களினாலும் ஒவ்வொரு திருச்சபையும் தனித்துவம் வாய்ந்த ஆளுமையில் வளர்ந்து வந்தன. இவ்வாறாக தனி வழிபாட்டு முறையும், இறையியல் சிந்தனையும், ஆன்மீக பாரம்பரியமும், சட்டங்களும் உள்ள திருச்சபைகளையே தனித்திருச்சபைகள் என்கிறோம். இந்த நான்கு அம்சங்களும் ஒரு திருச்சபையை மற்றொரு திருச்சபையிலிருந்து வேறுபடுத்துகின்றன.

2. **கிழக்கத்திய மேற்கத்திய திருச்சபைகள் என்றால் என்ன?** இன்று கத்தோலிக்கத் திருச்சபையில் 22 தனித்திருச்சபைகள் உள்ளன. அவற்றில் 21 கிழக்கத்தியத்திருச்சபைகளும், ஒரு மேற்கத்தியத்திருச்சபையும் உள்ளன. கி.பி. நான்காம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசை கிழக்கத்திய நாடு என்றும் மேற்கத்திய நாடு என்றும் பிரித்தனர். கிழக்கத்திய உரோமைப் பேரரசில் வளர்ந்து வந்த திருச்சபைகளை, கிழக்கத்திய திருச்சபைகள் என்றும், மேற்கத்திய உரோமைப் பேரரசில் வளர்ந்து வந்த திருச்சபைகளை மேற்கத்திய திருச்சபைகள் என்றும் அழைத்தனர். கிழக்கத்திய திருச்சபையில் 21 திருச்சபைகளும், மேற்கத்திய திருச்சபையில் 1 திருச்சபையும் இன்று காணப்படுகின்றன. ஏனெனில் மேற்கத்திய திருச்சபையில் இருந்த 5 ஆராதனை (வழிபாடு) சமூகங்களும் அதாவது திருச்சபைகளும் படிப்படியாக உரோமை வழிபாட்டு முறையில் மாற்றப்பட்டு இன்று உரோமைத் திருச்சபை அதாவது இலத்தீன் திருச்சபை என்னும் ஒரே பெயரில் அறியப்படுகின்றன. இன்றைய 22 தனித்திருச்சபைகளும் ஆறு ஆராதனை (வழிபாடு)க் குடும்பத்தில் உள்ளடங்கியவை ஆகும். அலக்சாண்டரியன், அந்தியோக்கியன், அர்மேனியன், கல்தேயா, பைசென்டெயின், உரோமன் என்னும் திருச்சபைகளின் பிரிவுகளே மற்றத் திருச்சபைகள்.

**3.கத்தோலிக்கத் திருச்சபையில் தனித்திருச்சபைகளின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் விவரி?**

22 தனித்திருச்சபைகளின் குழுமமே கத்தோலிக்கத் திருச்சபை. கத்தோலிக்கத் திருச்சபையின் இந்த ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைவது தூய திரித்துவத்தின் ஒன்றிப்பாகும். தந்தை, மகன், தூய ஆவி என்னும் திருத்துவத்தின் மூன்று நபர்களுடையவும் அன்புறவிலிருந்தே திருச்சபை உருவாகின்றது. திருத்துவத்தின் மூன்று நபர்களும் அன்புறவில் ஒன்றுபட்டு ஒருவராயிருக்கின்றனர். இந்த ஒன்றிப்பு திருச்சபையின் இறைமக்களிடையேயும், திருச்சபைகளிடையேயும் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

இயேசு உலக ஒற்றுமைக்காக இவ்வாறு வேண்டுகிறார் : “தூய தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” (யோவான் 17:11). "நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன் (யோவான் 17:22). இந்த மன்றாட்டுக்களின் வழியாக திருத்தூதர்களின் ஒன்றிப்பையும், திருத்தூதர்களால் நிறுவப்படும் திருச்சபைகளின் ஒன்றிப்பையும், இயேசு விரும்பினார் என்பது தெளிவாகிறது. புனித பவுல் கூறியதாவது : “உடல் ஒன்றே உறுப்புக்கள் பல” (1கொரிந்தியர் 12:12) இவ்வாறு திருச்சபைகள் பலவாயினும் அவை ஒரே உடலைப் போன்று ஒன்றுபட்டிருக்கின்றன. கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் படியே நீங்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டீர்கள் என்றும், நீங்களனைவரும் கிறிஸ்துவில் ஒன்றே என்றும் உங்களிடையே பிளவுகள் ஏற்பட வேண்டாம் என்றும் தூய பவுல் கேட்டுக்கொள்கிறார் (கலாத்தியர் 3:27-28, உரோமையர் 12:5-8, 1 கொரிந்தியர் 1:10).

கத்தோலிக்கத் திருச்சபையில் உள்ள 22 தனித்திருச்சபைகளும் அவைகளின் தனித்தன்மைகளுடன் ஒரே உடலைப் போன்று ஒன்றுபட்டிருக்கின்றன. இந்த ஒன்றிப்பு தெய்வீமாகும். பிரச்சனைகளின் போதும், இடர்களின் போதும் தூய ஆவியாரே இந்த ஒன்றிப்பை பாதுகாத்து வருகிறார். இறையன்பை மக்களுக்கு

www.malankaralibrary.com

பகிர்ந்து கொண்டு தூய ஆவியார் திருச்சபைக்கு ஒன்றிப்பையும், உயிரையும் அளிக்கின்றார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் தனித்திருச்சபைகள் மூன்று செயல்களில் ஒன்றுபட்டிருக்கின்றன. (1) விசுவாசத்தில் ஒற்றுமை : இயேசு கிறிஸ்துவிலும் அவர் வெளிப்படுத்தின மீட்பின் மறைபொருளிலும் உள்ள விசுவாசம் எல்லாத் திருச்சபைகளிலும் ஒன்றேயாகும். (2) அருளடையாளங்களில் ஒற்றுமை: திருச்சபையில் ஏழு அருளடையாளங்கள் உண்டு என்றும் திருப்பலியே திருவருட்சாதன வாழ்வின் மையம் என்றும் எல்லாத் திருச்சபைகளும் விசுவசிக்கின்றன. ஏழு அருளடையாளங்களின் அடிப்படை உண்மைகளில் எல்லா சபைகளின் விசுவாசமும் ஒன்றேயாகும். (3) திருச்சபை தலைமைத்துவத்தின் ஒற்றுமை (ஆட்சி அமைவு) : திருச்சபையில் தெளிவான ஒரு தலைமை அமைப்பை இயேசு உருவாக்கினார். திருத்தூதர் குழுவுக்கு தலைவராக பேதுருவை ஏற்படுத்தியது மறைநூலில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. தனித்திருச்சபைகளின் ஆயர்கள் அனைவரும் திருத்தூதர்களின் வழிவந்தவர்கள். அவர்கள் பேதுருவின் வழிவந்தவரான உரோமைத் திருத்தந்தையின் தலைமையில் ஒன்றுபட்டிருக்கின்றனர்.

அப்போஸ்தலிக்கத் திருச்சபைகளான 22 தனித்திருச்சபைகளும் விசுவாசத்திலும், அருளடையாளங்களிலும், திருச்சபைத் தலைமைத்துவத்திலும் ஒன்றுபட்டிருக்கின்றனர். ஆனால் அதே வேளையில் ஆராதனை (வழிபாடு), ஆன்மீகம், இறையியல், சட்டதிட்டங்கள் போன்றவற்றில் வேறுபட்டிருக்கின்றனர். இதுவே கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமை களும், வேற்றுமைகளும் ஆகும்.

**4. மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை ஒன்றிப்பின் அடையாளம் எவ்வாறு?**

கத்தோலிக்கத் திருச்சபை உலகத்திருச்சபையில் ஒன்றிப்பின் அடையாளமாகத் திகழ்கிறது. ஆனால் பல தலத்திருச்சபைகள் ஒற்றுமையின்றி வளர்ந்து வருவதைத் திருச்சபை வரலாற்றில் நாம் காண்கின்றோம். இவ்வாறு இயேசவின் மறையுடலான திருச்சபை இன்று பிளவுண்ட நிலையிலேயே தொடர்கிறது. இந்தியாவிலும் கத்தோலிக்கத் திருச்சபையுடன் உறவொன்றிப்பின்றி செயல்படும் அனேகம் திருச்சபை சமூகங்கள் உள்ளன. உள்நாட்டு திருச்சபைகளுக்கிடையேயும் திருச்சபை வரலாற்றில் உண்டான பிளவுகளுக்கிடையேயும் மீண்டும் ஒன்றிணைய மறுக்கும் இத்திருச்சபை சமூகத்தினரிடையே மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபை ஒன்றிப்பின் அடையாளமாகத் திகழ்கிறது.

**குறு வினா விடைகள்**

1. *கத்தோலிக்கத் திருச்சபை திருச்சபைகளின் குழுமம் என்பதை எடுத்தியம்பிய திருச்சங்கம் யாது?* இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்
2. ஒவ்வொரு இடத்தைச் சார்ந்த **<u>தனித்திருச்சபைகளும்</u>** அவற்றின் தன்மையை **<u>இழக்காமல்</u>** உரோமைத் திருத்தந்தையுடன் ஒன்றுபட்டிருக்கின்றன.
3. *கத்தோலிக்கத் தனித்திருச்சபைகளின் குழுமம் எவற்றில் ஒன்றுபட்டிருக்கின்றன?* விசுவாசம், அருளடையாளங்கள், ஆட்சிமுறை ஆகியவற்றில்
4. *இந்தியாவில் கத்தோலிக்கக் குழுமத்தைச் சார்ந்த தனித் திருச்சபைகள் எத்தனை? அவை யாவை?* மூன்று. இலத்தீன் திருச்சபை, சீறோ மலபார் திருச்சபை, சீறோ மலங்கரைத் திருச்சபை
5. *'சீறோ' என்னும் வார்த்தை பயன்படுத்துவது ஏன்?* சுறியானி திருச்சபைகளானதால்
6. *பன்னிரு திருத்தூதர்கள் உலகெங்கும் சென்று எவ்வாறு நற்செய்தியை பறைசாற்றினர்?* திருத்தூதர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் இயேசுவிடமிருந்து கண்டதும், கேட்டதும், அறிந்து கொண்டதுமான கிறிஸ்து அனுபவத்தையே ஒவ்வொரு பகுதியிலும் பறைசாற்றினர்.
7. *பன்னிரு திருத்தூதர்கள் நற்செய்தியை பறைசாற்றியதன் ஒற்றுமை வேற்றுமை என்ன?* பன்னிரு திருத்தூதர்களும் ஒரே இயேசுவையே கற்றுணர்ந்தார்களெனினும் பன்னிருவருடையவும் கிறிஸ்து அனுபவம் வேறுபட்டதாக இருந்தது. அதனால் ஒவ்வொரு திருத்தூதர்களும் அவரவர்களுக்கு அனுபவமுள்ள இயேசுவையே பறைசாற்றினர்.
8. *திருச்சபையில் வேறுபாடுகள் நிறைந்த பல்வேறு திருச்சபைகள் உருவாகக் காரணம் என்ன?* திருத்தூதர்கள் நற்செய்தி பறைசாற்றிய பகுதிகளில் வாழ்ந்த மக்களின் கலாச்சாரமும், மொழியும்

www.malankaralibrary.com

வேறுபட்டதாக இருந்தன. ஒவ்வொரு திருத்தூதரும் நற்செய்தி அறிவித்த இடத்தின் கலாச்சாரத்தினுடைய தனிச்சிறப்பும் அவரது கிறிஸ்து அனுபவத்தின் தனித்தன்மையையும் பொறுத்து உருவான திருச்சபை சமூகங்களுக்கு அதற்கே உரித்தான தனிச்சிறப்புகள் இருந்தன. அவ்வாறாக தொடக்கத் திருச்சபையில் வேறுபாடுகள் நிறைந்த பல்வேறு திருச்சபைகள் உருவாயின.

9. *தொடக்கத் திருச்சபையில் உருவான திருச்சபைச் சமூகங்கள் யாவை?* எருசலேம் திருச்சபை, அந்தியோக்கியன் திருச்சபை, அலக்சாண்ட்ரியன் திருச்சபை, உரோமைத் திருச்சபை, பேர்ஷியன் திருச்சபை, இந்தியத் திருச்சபை என பல்வேறு திருச்சபைச் சமூகங்கள் உருவாயின.

10. *தொடக்கத் திருச்சபைச் சமூகங்களின் வழிபாட்டு முறைகள் வேறுபட்டிருந்ததன் காரணம் என்ன?* தொடக்கத் திருச்சபை சமூகங்களின் கலாச்சாரமும், மொழியும், அப்போஸ்தலிக்க மரபும் வேறுபட்டிருந்தமையால் அவர்களின் வழிபாட்டு முறைகளும், வேறுபட்டிருந்தன.

11. *ஒவ்வொரு பகுதியிலும் உள்ள தொடக்கத் திருச்சபைகள் எவ்வாறு வளர்ந்து வந்தன?* வெவ்வேறு வழிபாட்டு முறை சமூகங்களாக

12. *வழிபடும் சமூகம் என்ற நிலையில் தொடக்கத் திருச்சபைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?* 'றீத்' (Rite)

13. *'றீத்' (Rite) என்பதன் பெயர்க்காரணம் என்ன?* 'றீத்' (Rite) என்னும் சொல் பலி செலுத்துதலின் செயல் முறைகளை குறிப்பிடுகின்ற Ritus' என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகிறது.

14. *மொழிகளின் பெயர்களில் அறியப்பட்ட திருச்சபைகள் யாவை?* சுறியானி, இலத்தீன், கிரேக்கம் என்னும் மொழிகளின் அடிப்படையில் சுறியானி சபை, இலத்தீன் சபை, கிரேக்க சபை என்னும் திருச்சபைகள் அறியப்படலாயின.

15. *தொடக்கத் திருச்சபைகள் உருவானதன் அடிப்படைக்காரணிகள் யாவை? 1.* திருத்தூதர்களின் கிறிஸ்து அனுபவங்கள் 2. அந்தந்த இடத்தின் கலாச்சாரங்கள்

16. *நாளடைவில் ஒவ்வொரு திருச்சபையும் தனித்துவம் வாய்ந்த ஆளுமையில் வளர்ந்து வந்ததன் காரணிகள் யாவை?* தனித்தனி வழிபாட்டு முறைகளினாலும், திருச்சபைத் தந்தையர்களின் இறையியல் சிந்தனைகளினாலும், ஆன்மீக பாரம்பரியங்களினாலும், சட்டங்களினாலும்

17. *தனித்திருச்சபைகள் என்றால் என்ன?* தனி வழிபாட்டு முறையும், இறையியல் சிந்தனையும், ஆன்மீக பாரம்பரியமும், சட்டங்களும் உள்ள திருச்சபைகளையே தனித்திருச்சபைகள் என்கிறோம்.

18. *ஒரு திருச்சபையை மற்றொரு திருச்சபையிலிருந்து வேறுபடுத்துகின்ற நான்கு அம்சங்கள் யாவை?* 1. தனி வழிபாட்டு முறையும், 2. இறையியல் சிந்தனையும், 3. ஆன்மீக பாரம்பரியமும், 4. சட்டங்களும்

19. *தற்போது கத்தோலிக்கத் திருச்சபையில் எத்தனை தனித்திருச்சபைகள் உள்ளன?* 22

20. *கிழக்கத்திய தனித்திருச்சபைகள் எத்தனை? 21*

21. மேற்கத்திய *தனித்திருச்சபைகள் எத்தனை? 1*

22. *உரோமைப் பேரரசை கிழக்கத்திய நாடு என்றும் மேற்கத்திய நாடு என்றும் எப்போது பிரித்தனர்?* கி.பி. நான்காம் நூற்றாண்டில்

23. *ஒரே இலத்தீன் திருச்சபை உருவாகக் காரணம் கூறுக?* மேற்கத்திய திருச்சபையில் இருந்த 5 வழிபாட்டு முறை சமூகங்களும் அதாவது திருச்சபைகளும் படிப்படியாக உரோமை வழிபாட்டு முறையில் மாற்றப்பட்டு இன்று உரோமைத் திருச்சபை அதாவது இலத்தீன் திருச்சபை என்னும் ஒரே பெயரில் அறியப்படுகின்றன.

24. *22 தனித்திருச்சபைகளின் வழிபாட்டு முறைக் குடும்பங்கள் யாவை?* அலக்சாண்டரியன், அந்தியோக்கியன், அர்மேனியன், கல்தேயா, பைசென்டெயின், உரோமன்

25. *22 தனித்திருச்சபைகளின் குழுமம் எனப்படும் கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைவது எது?* தூய மூவோரிறைவனின் ஒன்றிப்பாகும்.

26. *மூவோரிறைவனின் ஒன்றிப்பு திருச்சபையின் ஒன்றிப்புக்கு எவ்வாறு வழிகாட்டியாக அமைகின்றது?*

www.malankaralibrary.com

தந்தை, மகன், தூய ஆவி என்னும் திருத்துவத்தின் மூன்று நபர்களுடையவும் அன்புறவிலிருந்தே திருச்சபை உருவாகின்றது. திருத்துவத்தின் மூன்று நபர்களும் அன்புறவில் ஒன்றுபட்டு ஒருவராயிருக்கின்றனர். இந்த ஒன்றிப்பு திருச்சபையின் இறைமக்களிடையேயும், திருச்சபைகளிடையேயும் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

27. *திருச்சபையின் ஒன்றிப்புக்கான விவிலியக் கோட்பாடுகள் யாவை?* இயேசு இவ்வாறு வேண்டுகிறார் : “தூய தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம்பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” (யோவான் 17:11). "நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன் (யோவான் 17:22). இந்த மன்றாட்டுக்களின் வழியாக திருத்தூதர்களின் ஒன்றிப்பையும், திருத்தூதர்களால் நிறுவப்படும் திருச்சபைகளின் ஒன்றிப்பையும், இயேசு விரும்பினார் என்பது தெளிவாகிறது. புனித பவுல் கூறியதாவது : “உடல் ஒன்றே உறுப்புக்கள் பல” (1கொரிந்தியர் 12:12) இவ்வாறு திருச்சபைகள் பலவாயினும் அவை ஒரே உடலைப் போன்று ஒன்றுபட்டிருக்கின்றன. கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படியே நீங்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டீர்கள் என்றும், நீங்களனைவரும் கிறிஸ்துவில் ஒன்றே என்றும் உங்களிடையே பிளவுகள் ஏற்பட வேண்டாம் என்றும் தூய பவுல் கேட்டுக்கொள்கிறார் (கலாத்தியர் 3:27-28, உரோமையர் 12:5-8, 1 கொரிந்தியர் 1:10).

28. *22 தனித்திருச்சபைகளும் தூய ஆவியால் தெய்வீகமாவது எப்படி?* கத்தோலிக்கத் திருச்சபையில் உள்ள 22 தனித்திருச்சபைகளும் அவைகளின் தனித்தன்மைகளுடன் ஒரே உடலைப் போன்று ஒன்றுபட்டிருக்கின்றன. இந்த ஒன்றிப்பு தெய்வீமாகும். பிரச்சனைகளின் போதும், இடர்களின் போதும் தூய ஆவியாரே இந்த ஒன்றிப்பை பாதுகாத்து வருகிறார். இறையன்பை மக்களுக்கு பகிர்ந்து கொண்டு தூய ஆவியார் திருச்சபைக்கு ஒன்றிப்பையும், உயிரையும் அளிக்கின்றார்.

29. *கத்தோலிக்கத் திருச்சபையின் தனித்திருச்சபைகள் எந்த மூன்று செயல்களில் ஒன்றுபட்டிருக்கின்றன?* (1) விசுவாசத்தில் ஒற்றுமை (2) அருளடையாளங்களில் ஒற்றுமை (3) திருச்சபை தலைமைத்துவத்தின் ஒற்றுமை (ஆட்சி அமைவு)

30. *கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமையில் வேற்றுமை எனப்படுவது எப்படி?* அப்போஸ்தலிக்கத் திருச்சபைகளான 22 தனித்திருச்சபைகளும் விசுவாசத்திலும், அருளடையாளங்களிலும், திருச்சபைத் தலைமைத்துவத்திலும் ஒன்றுபட்டிருக்கின்றனர். ஆனால் அதே வேளையில் வழிபாடு, ஆன்மீகம், இறையியல், சட்டதிட்டங்கள் போன்றவற்றில் வேறுபட்டிருக்கின்றனர். இதுவே கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் ஆகும்.

31. *திருத்தூதர் தோமையாரால் நிறுவப்பட்ட இந்திய கிறிஸ்தவ சமூகம் எந்தெந்த நாட்டு திருச்சபைகளோடு உறவில் இருந்தன?* பாரசீக திருச்சபையுடனும் அதன் வழியாக உரோமைத் தந்தையுடனும் நற்புடவும், ஒன்றிப்பும் இருந்து வந்தது.

32. *பழையகூர், புத்தன்கூர் குழுக்கள் உருவாகிய பின்னணி என்ன?* பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுகீசிய மிஷனறிகள் கேரளாவுக்கு வருகை புரிந்து இங்குள்ள திருச்சபையில் இலத்தீன் வழிபாட்டு முறைகளையும் பழக்கவழக்கங்களையும் புகுத்த முயன்றனர். இவ்வாறு திருச்சபையில் பிரச்சனைகள் உடலெடுத்தன. 1653-ல் ஏற்படுத்தப்பட்ட கூனன்குரிசு சபதத்தின் வழியாக மேற்கத்திய நாட்டு மிஷனறிகளின் உறவை விட்டுவிட இங்குள்ள திருச்சபைகள் முடிவெடுத்தன. தொடர்ந்து போர்த்துகீசிய ஆயருக்குப்பின் திருத்தந்தை ஏற்படுத்திய இந்நாட்டு ஆயரான பறம்பில் சாண்டி ஆயரை அனேகமானோர் ஏற்றுக்கொண்டனர். ஆனால் பறம்பில் சாண்டி ஆயரை ஏற்றுக் கொள்ளாத ஒரு சமூக மக்கள் அன்றைய ஆர்ச் டீக்கனான முதலாம் மார்த்தோமாவின் தலைமையில் ஒன்றிணைந்திருந்தனர். அவர்கள் 1665-ல் அந்தியோக்கியாவிலிருந்து வந்த யாக்கோபாய ஆயருடன் நட்புறவு கொண்டனர். இவர்கள் யாக்கோபாயர் எனவும் புத்தன்கூர் மக்கள் எனவும் அறியப்படலாயினர். யாக்கோபாய ஆயரை ஏற்றுக்கொண்டதால் உரோமைத் திருத்தந்தையுடனும், கத்தோலிக்கத் திருச்சபையுடனும் அவர்கள் கொண்டிருந்த உறவொன்றிப்பு முறிந்தது. இவர்கள் புத்தன்கூர் மக்கள் என அழைக்கப்பட்டனர். பறம்பில் சாண்டி ஆயரை ஏற்றுக்கொண்டவர்கள் பழையகூர் மக்கள் என அறியப்பட்டனர். இவர்கள் உரோமைத் திருத்தந்தையுடனும், கத்தோலிக்கத் திருச்சபையுடனும் நட்புறவு கொண்டிருந்தனர். இவர்கள்

www.malankaralibrary.com

கத்தோலிக்கர் என அழைக்கப்பட்டனர்.

33. *புத்தன்கூர் மக்கள் முதல் மலங்கரை கத்தோலிக்கர் வரை குறிப்பு வரைக?* கத்தோலிக்கத் திருச்சபையின் உறவொன்றிப்பை இழந்த புத்தன்கூர் மக்கள் மீண்டும் கத்தோலிக்கத் திருச்சபையுடன் ஒன்றிணைய முயற்சிகள் மேற்கொண்டனர். பல காரணங்களால் அவை வெற்றியடையவில்லை. கத்தோலிக்கத் திருச்சபையுடனும், உரோமைத் திருச்சபையுடனும் ஒன்றுபடுவதன் வழியாக மட்டுமே இங்குள்ள திருச்சபைக்கு இயேசு விரும்பிய ஒன்றிப்பும் முழுமையும் கிடைக்கும் என்று மார் இவானியோஸ் ஆயர் புரிந்து கொண்டார். அவ்வாறு மறு ஒன்றிப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கிய ஒன்றிப்பின் இறைவாக்கினரே கீவர்க்கீஸ் மார் இவானியோஸ் ஆண்டகை. மார் இவானியோஸ் ஆண்டகையும், மார் தியோபிலஸ் ஆண்டகையும் அவர்களுடன் மூவரும் 1930 செப்டம்பர் 20-ம் நாள் கத்தோலிக்கத் திருச்சபையுடன் மறு ஒன்றிப்பு அடைந்தனர். இவ்வாறு மறு ஒன்றிப்பு அடைந்தவர்கள் மலங்கரை கத்தோலிக்கர் என்று அறியப்படுகின்றனர்.

34. *கத்தோலிக்கத் திருச்சபையில் தனித்திருச்சபையாக மாற மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபைக்கு இருந்த அடிப்படை காரணிகள் யாவை?* புத்தன்கூர் மக்கள் பயன்படுத்தி வந்த வழிபாட்டு முறை, ஆன்மீகம், இறையியல், சட்டதிட்டங்கள் ஆகியவற்றுடன் ஒரு உறவொன்றிப்பில் பங்குபெற மறுஒன்றிப்படைந்தவர்களுக்கு முடிந்தது.

35. *20-ம் நூற்றாண்டின் மிகப்பெரிய மறு ஒன்றிப்பு இயக்கம் எனப்படுவது யாது?* மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை

**36.** *உலகத் திருச்சபையில் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற சபையே மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை என்றவர் யார்?* திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்

**37.** *மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் மறு ஒன்றிப்பு இயக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி யாது?* 2005 பிப்ரவரி 10-ம் நாள் மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபையை உயர் பேராயத் திருச்சபையாகவும், அதன் தலைவரை உயர் பேராயராகவும், காதோலிக்கோஸாகவும் உயர்த்தப்பட்ட திருத்தந்தையின் அறிவிப்பு

38. *தனித்திருச்சபைகளை அட்டவணைப்படுத்துக*

| திருச்சபைகள் | பிரிவுகள் | இடங்கள் |
|---|---|---|
| 1. அலக்சாண்டிரியன் | 1. எத்தியோப்பியன் | எத்தியோப்பியா |
| | 2. கோப்திக் | எகிப்து |
| 2. அந்தோக்கியன் | 3. சிறியன் | சிரியா, லெபனோன், துருக்கி, ஈராக், ஆஸ்திரேலியா, அமெரிக்கா |
| | 4.சீறோ மலங்கரை | இந்தியா |
| | 5. மாரனைட் | லெபனான், சிரியா, எகிப்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா |
| 3. அர்மேனியன் | 6. அர்மேனியன் | அர்மேனியா, சிரியா, துருக்கி, ஈராக், எகிப்து, லெபனான், அமெரிக்கா |
| 4. கல்தேயன் | 7. கல்தேயன் | ஈராக்-ஈரான், சிரியா, துருக்கி, லெபனோன். |
| | 8. சீறோ மலபார் | இந்தியா |
| 5. பைசென்தெயின் | 9. அல்பேனியன் | அல்பேனியா |
| | 10. பலாரூசியன் | உக்ரயின், பலாரூஸ் |
| | 11. பல்கேரியன் | பல்கேரியா |

www.malankaralibrary.com

| | | |
|---|---|---|
| | 12. கிரேக்கம் | கிரீஸ், துருக்கி, அமெரிக்கா |
| | 13. கிரேக்க- மெல்கயிட் | சிரியா, எகிப்து, யோர்தான், இஸ்ரயேல், லெபனோன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா |
| | 14. ஹங்கேரியன் | ஹங்கேரி, அமெரிக்கா |
| | 15. இத்தாலோ - அல்பேனியன் | இத்தாலி, அமெரிக்கா |
| | 16. யூக்கோஸ்லாவியன் | யூக்கோஸ்லாவியா, அமெரிக்கா |
| | 17. ரூமேனியன் | ரூமேனியா, அமெரிக்கா |
| | 18. ரஷ்யன் | ரஷ்யா, போலந்து, அமெரிக்கா |
| | 19. ருத்தேனியன் | அமெரிக்கா, போலந்து, கங்கேரி |
| | 20. ஸ்லோவாக் | செக்கோஸ்லாவியா |
| | 21. உக்ரேனியன் | உக்ரயின் |
| 6.உரோமன் (இலத்தீன்) | 22. உரோமன் | உலகின் பல இடங்களிலும் |
| | - அம்புரோசியன்<br>- காலிக்கன்<br>- ஐரிஷ் (கெல்டிக்) - மொசராபிக்<br>(விசிகோத்திக்<br>-துறவறத் திருச்சபைச் சமூகங்கள் (சிஸ்டேசியன் கர்த்துூசியன்) | மிலான் (இத்தாலி) லியோண்ஸ் (பிரான்சு) அயர்லாந்து<br>தொளெதோ (ஸ்பெயின்) |

*39. உலகெங்குமுள்ள திருச்சபையின் மக்கள் இயேசுவின் உயிர்ப்பில் மகிழ்ச்சி கொள்கின்றனர் என்பதை உயிர்ப்புத் திருநாளின் போது திருச்சபை நினைவு கூர்கின்ற பாடல் எது*

“திருச்சபையே நீ விழித்தெழுவாய் திருப்புகழ் பாடிடுவாய்

தூயமைந்தன் மெசியாவாம் அரசர் உயிர்த்தாரே

உன்னில் வசிக்க மகிழ்வுடன் வந்தாரே

பலிபீடமதில் உடல் நிணம் தந்தாரே

அதனால் உன்னை நாள்தோறும் பேணி வளர்ப்பாரே

எனவே சபையே அகமகிழ்வாய் உன் புதல்வர்களோடு

ஹாலேலூய்யா இறைமகனுயிர்த்தாரே”

(உயிர்ப்பு திருநாள் திருப்பலி முறை)

40. "தூய தந்தையே நாம் **ஒன்றாய்** இருப்பதுபோல் அவர்களும் **ஒன்றாய்** இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் **பெயரின்** ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்" (யோவான் 17:11)

www.malankaralibrary.com

## பாடம் 9

## திருமுழுக்கு

**பயிற்சி வினாக்கள்**

1. திருமுழுக்கின் திருவிவிலிய அடிப்படையை விளக்குக? நிக்கதேம் என்னும் யூதத்தலைவர் ஓர் இரவில் இயேசுவிடம் வந்தார். இயேசு அவரைப் பார்த்து: "ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்" (யோவான் 3:5-6). நிக்கதேமுக்கு இயேசு கூறிய வார்த்தையின் பொருளை புரிந்து கொள்ள முடியவில்லை. மீண்டும் பிறந்தால் என்பதன் வழியாக இயேசு பொருள் கொள்வது திருமுழுக்கு என்பதாகும். அதாவது திருமுழுக்கின் வழியாக வரும் இரண்டாம் பிறப்பைப் பற்றியே இயேசு கூறினார். திருமுழுக்கின் வழியாக நாம் தண்ணீராலும் தூய ஆவியாலும் மீண்டும் பிறந்து எல்லா பாவங்களிலிருந்தும் விடுபட்டு இறைவாழ்வில் பங்குபெறுகின்றோம்.

இயேசு தமது பகிரங்க வாழ்வை ஆரம்பிக்கும் முன் யோர்தான் நதியில் வைத்து யோவானிடமிருந்து திருமுழுக்கைப் பெற்றார். இறைவாழ்வை பெற்றுக்கொள்ள அனைவரும் திருமுழுக்குப் பெறவேண்டும் என்று இயேசு கற்பித்தார். இயேசு சீடர்களிடம், "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத்தேயு 28:19) என்று கூறினார்.

இயேசுவின் கட்டளைகளுக்கேற்ப திருத்தூதர்கள் நற்செய்தி அறிவிக்கவும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கவும் செய்தனர் (திப : 2:38-41; 8:12-13). அவ்வாறு கிறிஸ்துவால் நிறுவப்பட்டதும் திருத்தூதர்களால் திருச்சபையில் ஆரம்பிக்கப்பட்டதுமான அருளடையாளமே திருமுழுக்கு.

2. புகுமுக அருளடையாளங்கள் எவை? ஏன் அவ்வாறு அழைக்கிறோம்? திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை என்னும் அருளடையாளங்களை புகுமுக அருளடையாளங்கள் என்று அழைக்கின்றோம். தூய ஆவியைப் பெற்றுக்கொண்டு நாம் இறைமக்களாக மாறுவது இந்த அருளடையாளங்களின் வழியாகவே ஆகும். ஒருவர் கிறிஸ்தவ வாழ்வில் நுழைவதும், திருச்சபையின் உறுப்பினராக மாறுவதும், இயேசுவின் மீட்புத்திட்டத்தில் முழுமையாக பங்கு கொள்வதும் இந்த அருளடையாளங்கள் வழியாகவே. ஆதலால் இவற்றை புகுமுக அருளடையாளங்கள் என்கிறோம்.

3. மேற்குத் திசையில் திரும்பி நின்று சாத்தானை புறக்கணித்தல் கிழக்குத் திசையில் திரும்பி நின்று இயேசுவை ஏற்றுக்கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன?

மேற்குத் திசையில் திரும்பி நின்று அலகையைப் புறக்கணிப்பது ஒரு அடையாளமாகும். சூரியன் மறையும் திசை மேற்காகும். சூரியன் மறையும் போது இருள் உருவாகின்றது. இருள் சாத்தானின் அடையாளமாகவும், தீய ஆவியின் ஆட்சிப் பகுதியாகவும் கருதப்படுகிறது. எனவே தான் திருமுழுக்கப் பெறுபவர் மேற்குத் திசையில் திரும்பி நின்று அலகையைப் புறக்கணிக்கின்றார்.

கிழக்குப் பகுதியில் திரும்பி நின்று கிறிஸ்துவை அறிக்கையிடுவது பொருள் மிக்கதாகும். கிழக்குத் திசையிலேயே சூரியன் உதிக்கின்றது. சூரியன் உதிக்கும் போது ஒளி உருவாகின்றது. ஒளி கிறிஸ்துவின் அடையாளமாகும். மட்டுமன்று இன்பவனம் கிழக்குத் திசையிலேயே இருக்கிறது என்றும், இன்பவன வாசல் சாத்தானை புறக்கணித்த, ஒருவருக்கு திறக்கப்படுகிறது என்றும் கிழக்குத் திசையைப் பார்த்து இயேசுவை அறிக்கையிடுவதிலிருந்து பொருள் கொள்ளப்படுகிறது.

4. ஜென்ம பாவம் என்பதன் பொருள் யாது? இறைவாழ்வை இழந்த ஆதி பெற்றோரின் வழிமரபினர்களெல்லாம் இறைவாழ்வற்ற நிலையிலேயே இவ்வுலகில் பிறக்கின்றனர். இறைவாழ்வற்ற நிலை என்பது தூய ஆவியின் பிரசன்னமற்ற நிலையாகும். இதுவே ஜென்ம பாவம் என்பதன் பொருள்.

5. திருமுழுக்குத் தண்ணீரின் அடையாளத்தால் பொருள் கொள்வது என்ன?

திருமுழுக்குத் தண்ணீரை ஆன்மீக உதரம், அழியாமையின் உலை என அழைக்கிறோம். திருமுழுக்குத் தண்ணீரிலிருந்து புது வாழ்வைப் பெற்றுக் கொள்வதனாலேயே அதனை ஆன்மீக உதரம் என்று அழைக்கிறோம். பொன்னைப் புடமிட்டுத் தூய்மைப்படுத்துவதைப் போன்று திருமுழுக்குத் தண்ணீரின் வழியாக ஒருவர் தூய்மைப் படுத்தப்படுகிறார். இதனாலேயே அழியாமையின் உலை என்று அழைக்கிறோம்.

www.malankaralibrary.com

குறு வினாவிடைகள்

1. ஆதிபெற்றோர்கள் பாவம் செய்ததன் வழியாக **இறை வாழ்வை** இழந்தனர்.
2. மக்களை மீட்பதற்காக தம் **ஒரே மகனை** கடவுள் இவ்வுலகிற்கு அனுப்பினார் (யோவான் 3:16).
3. எந்த இறைநிகழ்வுகளின் வழியாக மனித குலத்திற்கு இறைவாழ்வு திரும்பக் கிடைத்தது? இறைமகனான இயேசுவின் மனிதராதல், பகிரங்க வாழ்வு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், பெந்தகோஸ்து போன்ற நிகழ்வுகளின் வழியாக மனித குலத்திற்கு இழந்த இறைவாழ்வு திரும்பக் கிடைத்தது.
4. இயேசுவின் பகிரங்க வாழ்வின் போது அவரில் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் அவர் **இறைவாழ்வை** அளித்தார்.
5. இயேசுவின் உயிர்ப்புக்குப்பின்னர் இறைவாழ்வை தொடர்ந்து அளிப்பதற்காக எதனை நிறுவினார்? திருச்சபையை
6. மீட்புச் செயல்கள் இன்றும் யார் வழியாக திருச்சபையில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன? தூய ஆவியின்
7. திருச்சபையில் அருளடையாளங்களின் தேவை என்ன? இயேசுவின் கட்டளைப்படி இறைவாழ்வு அதாவது அருள்வரம் திருச்சபையில் பகிர்ந்தளிப்பது அருளடையாளங்களின் வழியாகவே ஆகும்.
8. அருளடையாளம் என்பதன் சுறியானி வார்த்தை என்ன? கூதாசை
9. கூதாசை என்பதன் பொருள் என்ன? 'புனிதப்படுத்துதல்
10. எதன் வழியாக திருச்சபையில் இயேசுவின் மீட்புச் செயலில் இன்று நாம் பங்கேற்கிறோம்? அருளடையாளங்களின்
11. இயேசுவின் பிரசன்னத்திற்கும் அருளடையாளங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? அருளடையாளங்களின் வழியாக இயேசு மனித வாழ்வில் பிரசன்னமாகி இறைவாழ்வை பகிர்ந்தளிக்கின்றார். இவ்வாறு இயேசு மக்களில் பிரசன்னமாகி இறைவாழ்வை பகிர்ந்தளிக்கும் இறைச்செயல்களே அருளடையாளங்கள்.
12. திருச்சபையில் ஏழு அருள் அடையாளங்கள் யாவை? திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை, ஒப்புரவு, நோயில்பூசுதல், குருத்துவம், திருமணம்.
13. "ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என இயேசு எந்த யூதத்தலைவரிடம் கூறினார்? நிக்கதேம்
14. இயேசு நிக்கதேமுக்கு கூறிய மீண்டும் பிறந்தால் என்ற வார்த்தையின் பொருள் என்ன? திருமுழுக்கின் வழியாக வரும் இரண்டாம் பிறப்பை பற்றியே இயேசு கூறினார்
15. திருமுழுக்கின் வழியாக உள்ள இரண்டாம் பிறப்பு என்ன? திருமுழுக்கின் வழியாக நாம் தண்ணீராலும் தூய ஆவியாலும் மீண்டும் பிறந்து எல்லா பாவங்களிலிருந்தும் விடுபட்டு இறைவாழ்வில் பங்குபெறவும் செய்கின்றோம்.
16. இயேசு தமது பகிரங்க வாழ்வை ஆரம்பிக்கும் முன் **யோர்தான் நதியில்** வைத்து யோவானிடமிருந்து திருமுழுக்கைப் பெற்றார்.
17. இறைவாழ்வைப் பெற்றுக்கொள்ள அனைவரும் **திருமுழுக்குப்** பெறவேண்டும் என்று இயேசு கற்பித்தார்.
18. "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் **திருமுழுக்குக்** கொடுங்கள்" (மத்தேயு 28:19)
19. இயேசுவின் கட்டளைகளுக்கேற்ப திருத்தூதர்கள் **நற்செய்தி** அறிவிக்கவும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு **திருமுழுக்குக்** கொடுக்கவும் செய்தனர் (திப : 2:38-41; 8:12-13).
20. **கிறிஸ்துவால்** நிறுவப்பட்டதும் **திருத்தூதர்களால்** திருச்சபையில் ஆரம்பிக்கப்பட்டதுமான அருளடையாளமே **திருமுழுக்கு**.

www.malankaralibrary.com

21. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை அருளடையாளம் எது? திருமுழுக்கு
22. ஆன்மீக வாழ்வின் ஆரம்பமாகவும் பிற அருளடையாளங்களுக்கு வாயிலாகவும் அமைவது எது? திருமுழுக்கு
23. மலங்கரை கத்தோலிக்க திருமுழுக்கின் போது வழங்கப்படும் மற்று அருளடையாளங்கள் யாவை? உறுதிபூசுதலும், நற்கருணையும்
24. தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவ புகுநிலையினர் என்பவர்கள் யாவர்? தொடக்கத் திருச்சபையில் திருத்தூதர்களின் நற்செய்தி அறிவித்தலின் வழியாக ஏராளம் பிற இனத்தார்கள் திருச்சபையின் உறுப்பினராயினர். இவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பயிற்சி அளித்தனர். இவர்கள் கிறிஸ்தவ புகுநிலையினர் (Catechumens) என்கிறோம். இவ்வாறு விசுவாசம் பயின்றவர்களுக்கு மட்டுமே திருமுழுக்கு கொடுத்து வந்தனர்.
25. கிறிஸ்தவ புகுநிலையினர் என்பதன் மறுபெயர் என்ன? Catechumens
26. தொடக்கத் திருச்சபையில் குழந்தைத் திருமுழுக்கு பற்றி கூறுக? விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு குழந்தைப் பருவத்திலேயே திருமுழுக்குக் கொடுக்கும் முறை தொடக்கத் திருச்சபையில் திருத்தூதர்களின் காலத்திலும் இருந்தது. பிற மதங்களிலிருந்து விசுவாசம் பயின்று கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் மிகச்சிலரே. கிறிஸ்தவர்களின் குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்திலேயே திருமுழுக்கு அளிக்கும் திருத்தூதர்களின் வழக்கு இன்றும் திருச்சபையில் பின்பற்றப்பட்டு வருகிறது.
27. மலங்கரைத் திருச்சபையில் திருமுழுக்கின் இரண்டு பகுதிகள் யாவை? (1) ஆயத்தத் திருச்சடங்கு (2) திருநீராட்டு (திருமுழுக்கு).
28. திருமுழுக்கு பெறுவோரின் முகத்தில் மூன்றுமுறை ஊதும் நிகழ்வு எப்போது? ஆரம்ப செபம், புறுமியோன், செதறா, எத்றோ, நற்செய்தி வாசகம் போன்றவற்றிற்குப் பின்னர் குருவானவர் திருமுழுக்குப் பெறுபவருக்கு நேராக திரும்பி அவருடைய முகத்தில் மூன்றுமுறை ஊதுகிறார்.
29. திருமுழுக்கு பெறுவோரின் முகத்தில் மூன்றுமுறை ஊதும்போது குருவானவர் செபிப்பது என்ன? இறைவனாகிய ஆண்டவரே, உமது ஒரே மகன் திருத்தூதர்கள் மீது ஊதிய இறைமூச்சை இவனுளுக்கும் அளித்தருளும். உமது தூய ஆவியைப் பெறும் பொருட்டு இவனை(ளை) ஆயத்தப் படுத்துவதுடன் சிலை வழிபாட்டின் எல்லா துச்சங்களும் இவனை(ளை) விட்டு நீங்கிப்போகுமாறும் செய்தருளும்.
30. ஆண்டவர் ஆதாமின் நாசிகளில் தம் உயிர்மூச்சை ஊதியதன் பொருள் என்ன? ஆண்டவர் ஆதாமின் நாசிகளில் தம் உயிர்மூச்சை ஊதி உயிர் உள்ளவனாக்கினார். அவ்வாறு ஆதிபெற்றோர்கள் இறைவாழ்வை பெற்றவர்களாயினர். ஆனால் அவர்கள் பாவம் செய்தபோது இறைவாழ்வை அதாவது தூய ஆவியை இழந்தனர். "என் ஆவி தவறிழைக்கும் மனிதனில் என்றென்றும் தங்கப் போவதில்லை. அவன் வெறும் சதை தானே" (தொடக்கநூல். 6:3) என்று கூறி ஆண்டவர் மனிதனை எண்ணிக் கவலை கொண்டார்.
31. மனிதன் இழந்த தூய ஆவியை எவ்வாறு பெற்றுக்கொண்டான்? மனிதனின் நிலைகுலைந்த வாழ்வைக் கண்டு இழந்த தூய ஆவியை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கடவுள் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். மனிதன் தான் இழந்த ஆவியை இயேசுவின் மீட்புச் செயல்களின் வழியாக பெந்தக்கோஸ்து திருநாளின் போது திரும்பப் பெற்றுக்கொண்டான். "மனிதனில் என் ஆவி இனிமேல் குடிகொள்ளாது என்னும் விதியை பெந்தகோஸ்து நாளில் கடவுள் ஆவியை அனுப்பி மாற்றி எழுதினார்" (பெந்கோஸ்து மூன்றாம் திருச்சடங்கு).
32. குருவானவர் திருமுழுக்குப் பெறுவோரின் முகத்தில் மூன்றுமுறை ஊதுவதன் பொருள் என்ன? ஆதாமின் பெந்தகோஸ்தின் போது இயேசு வாக்களித்த தூய ஆவியை ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வது திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தின் வழியாகவே ஆகும். இன்பவனத்தில் வைத்து கடவுள் ஆதிமனிதரில் உயிர்மூச்சை ஊதியது போலவும், மாளிகையில் வைத்து சீடர்களின் மேல் இயேசு உயிர்மூச்சை ஊதியது போலவும் (யோவான் 20:22-23). திருமுழுக்கின் போது இயேசுவின் பிரதிநிதியான குருவானவர் திருமுழுக்குப் பெற்றுக்கொள்பவர் மீது ஊதுகிறார். இவ்வாறு தூய ஆவியைப் பெற்றுக்கொண்டு குழந்தை மறுபிறப்பிற்காக தயார்படுத்தப்படுகின்றது.

www.malankaralibrary.com

33. திருமுழுக்கின்போது குருவானவர் குழந்தைக்கு பெயர் சூட்டுவது எவ்வாறு? குருவானவர் எண்ணெய் பூசாமல் திருமுழுக்குப் பெற்றுக்கொள்பவரின் நெற்றியில் மூன்று முறை சிலுவை அடையாளம் வரைந்து தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் குழந்தைக்கு பெயர் சூட்டுகின்றார். மூவொரு இறைவனின் பெயரால் சிலுவை அடையாளத்தில் முத்திரை இட்டு பெயர் சூட்டி குழந்தையை கடவுளுக்காக வேறுபடுத்துகின்றார்.

34. ஞானப்பெற்றோர் சாத்தானை புறக்கணித்து அறிக்கையிடுவது எவ்வாறு? அலகையை புறக்கணிப்பதற்கான மன்றாட்டை குருவானவர் சொன்னவுடன் குழந்தையை மேற்கு திசையைப் பார்த்து நிற்கச் செய்து ஞானப்பெற்றோர் மூன்று முறை சாத்தானை புறக்கணித்து அறிக்கையிடுகின்றனர். ஞானப்பெற்றோர் தனது இடது கையால் குழந்தையின் இடது கையைப் பிடித்துக் கொண்டு குழந்தைக்காக மன்றாட்டை ஏற்றுச் சொல்கின்றனர். இம்மன்றாட்டின் வழியாக குழந்தையை தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்து அக்குழந்தையின் புத்தியையும், மனதையும் தூய்மைப்படுத்துகின்றனர்.

35. ஆன்மா இல்லாத சடலம் சாத்தானின் உறைவிடம் குறிப்பு வரைக? தூய ஆவியின் பிரசன்னமில்லையெனில் அது ஒரு சடலமாகும். ஆன்மா இல்லாத சடலம் சாத்தானின் உறைவிடம் ஆகும். அதனாலேயே திருமுழுக்குப் பெறும் குழந்தையிடமிருந்து சாத்தானை புறக்கணிக்கவும், தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள ஆயத்தம் செய்யவும் செய்கின்றோம். இயேசு கூறியதாவது : “மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்” (யோவான் 3:6).

36. ஞானப்பெற்றோர் கிறிஸ்துவை அறிக்கையிடுவது எவ்வாறு? குழந்தையை கிழக்குத்திசையைப் பார்த்து நிற்கச் செய்து ஞானப்பெற்றோர் கிறிஸ்துவை மூன்றுமுறை அறிக்கையிடுகின்றனர். ஞானப்பெற்றோர் தமது வலது கையால் குழந்தையின் வலது கையைப் பிடித்துக் கொண்டு கிறிஸ்துவை அறிக்கையிடுகின்றனர்.

37. சைத்து எண்ணெயால் அருட்பொழிவு செய்வது எவ்வாறு? குருவானவர் சைத்து அதாவது ஒலிவ எண்ணெயினால் திருமுழுக்குப் பெற்றுக் கொள்பவரின் நெற்றியில் மூன்றுமுறை சிலுவை அடையாளத்தால் முத்திரையிடுகிறார்.

38. சைத்து எண்ணெயால் அருட்பொழிவு செய்வதால் என்ன மாற்றம் ஏற்படுகிறது? சைத்து எண்ணெயால் அருட்பொழிவு செய்வதன் மூலம் திருமுழுக்கு பெற்றுக்கொள்பவர் தூய்மையாக்கப்படவும், ஒரு புதுப்பிறப்பாக மாற்றப்படவும் செய்கிறார். இதன் வழியாக ஒருவர் கிறிஸ்துவின் மகனாக/மகளாக மாற்றப்படுகிறார்.

39. சைத்து எண்ணெயால் அருட்பொழிவு செய்வதை எதனோடு ஒப்புமைப் படுத்தலாம்? இயேசு யோர்தானில் அருட்பொழிவு செய்யப்பட்டதை சைத்து எண்ணெயால் அருட்பொழிவு செய்வதுடன் ஒப்புமைப்படுத்தலாம்.

40. சைத்து எண்ணெயால் அருட்பொழிவு செய்வதன் பொருள் என்ன? உண்மை ஒலிவமரமான இயேசுவில் நாம் ஒட்டப்படுவதற்காகவே ஒலிவ எண்ணெயால் அருட்பொழிவு செய்யப்படுகிறோம்.

41. திருமுழுக்கில் வெந்நீரின் பொருள் என்ன? வெந்நீர் திருமுழுக்குத் தண்ணீரின் எரிகின்ற இறை வல்லமையைக் குறிக்கின்றது. இயேசுவின் திருமுழுக்கின் போது இறை வல்லமையால் யோர்தானில் இருந்த நீர் சூடாக மாறியது என்று கருதப்படுகிறது.

42. திருமுழுக்குத் தொட்டியில் தூய ஆவியின் பிரசன்னத்தைக் காட்ட எந்த எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது? தூய மூறோன்

43. திருமுழுக்குத் தண்ணீரின் மறுபெயர்கள் யாவை? ஆன்மீக உதரம், அழியாமையின் உலை

44. திருமுழுக்கின் மகிமையின் ஆடை எனப்படுவது யாது? திருமுழுக்கின் வழியாக ஒருவர் அழியா ஆடை அதாவது மகிமையின் ஆடையை உடுத்திக் கொள்கிறார். இன்பவனத்தில் ஆதாம் இழந்த மகிமையின் ஆடை இறைவாழ்வாகும். அதாவது தூய ஆவியாகும் திருமுழுக்கின் போது கிடைக்கின்ற புது ஆடை இறைவாழ்வைக் குறிக்கின்றது.

45. தண்ணீர் மறைநூலில் எவ்வாறு பொருள் கொள்கின்றது? தண்ணீர் மறைநூலில் இறப்பினுடையவும்,

www.malankaralibrary.com

விடுதலையினுடையவும் அடையாளமாகும். நோவாவின் காலத்தில் தீயவர்களை அழித்ததும், நோவாவை மீட்டதும் நீரின் வழியாகவே ஆகும் (தொடக்கநூல் 68). செங்கடலின் நீரின் வழியாகவே பார்வோனின் அழிவும், இஸ்ரயேலரின் மீட்பும் நடைபெற்றது. யோசுவாவும் இஸ்ரயேல் மக்களும் வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டை அடைந்தது யோர்தான் ஆற்றின் நீர் வழியாகவே ஆகும். இயேசு தமது யோர்தான் திருமுழுக்கின் வழியாகவே புதிய இஸ்ரயேலை இறையரசுக்கு அழைத்தார். சாத்தானின் தோல்வியும், ஒருவரின் விண்ணுலக நுழைவும் நிகழ வேண்டுமாயின் அவன் திருமுழுக்குத் தண்ணீரின் வழியாக கடந்து செல்ல வேண்டும்.

46. திருமுழுக்குத் தொட்டியில் குழந்தையை அமரச்செய்வது எவ்வாறு? தண்ணீரை ஆசீர்வதித்த பின்னர் குழந்தையை திருமுழுக்குத் தொட்டியில் கிழக்குத் திசையைப் பார்த்து அமரச் செய்கிறார்.

47. திருமுழுக்குத் தொட்டியில் குழந்தைக்கு திருமுழுக்கு அளிப்பது எவ்வாறு? குருவானவர் மேற்குத் திசையில் திரும்பி நின்று வலது கையை குழந்தையின் தலையில் வைத்து இடதுகையால் திருமுழுக்குத் தண்ணீரை எடுத்து குழந்தையின் தலையில் ஊற்றுகிறார்.

48. குழந்தைக்கு திருமுழுக்கு அளிக்கும் போது குருவானவர் கூறுவது என்ன? “வாழ்வையும் பாவ மன்னிப்பையும் எதிர்நோக்கி (+) தந்தையுடையவும் (+) மகனுடையவும் (+) வாழ்வின் தூய ஆவியுடையவும் திருப்பெயராலே (பெயர்) நிலைவாழ்விற்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கின்றான்(ள்)” என்று கூறிக்கொண்டு குருவானவர் திருமுழுக்கு அளிக்கிறார்.

49. திருமுழுக்கின் வழியாக ஒருவர் இயேசுவின் **பாஸ்கா மறைபொருளில்** பங்கு கொள்கின்றார்.

50. திருமுழுக்கு புனித பவுல் கூறுவது என்ன? திருமுழுக்கின் வழியாக, இயேசுவின் இறப்பிலும், கல்லறை அடக்கத்திலும் நாம் ஒன்றித்திருக்கின்றதனால் அவருடைய உயிர்த்தெழுதலின் போதும் நாம் அவரோடு ஒன்றித்திருப்போம் என்று புனித பவுல் கூறுகின்றார் (உரோமையர் 6:1-11). “ஒருவர் தண்ணீராலும், ஆவியாலும் **பிறந்தாலன்றி** **இறையாட்சிக்கு** உட்பட இயலாது என்று மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” (யோவான் 3:5)

51. குழந்தையை விசுவாசத்தில் வளர்க்க கடமைப்பட்டவர்கள் யார்? ஞானப்பெற்றோர்

52. திருமுழுக்குத் தொட்டியில் வெந்நீரும், குளிர்ந்த நீரும் ஊற்றப்படும் முறை என்ன? குருவானவர் வெந்நீரும், குளிர்ந்த நீரும் இரு கரங்களிலும் சிலுவை வடிவில் பிடித்துக்கொண்டு திருமுழுக்குத் தொட்டியில் ஊற்றுகிறார்.

53. திருமுழுக்குத் தொட்டியில் மென்துகிலின் பயன் என்ன? திருமுழுக்குத் தொட்டி சிலுவை அடையாளமுள்ள மென்துகிலால் மூடப்பட்டு பின்னர் அதனை உயர்த்தி கொண்டாடப்படுகிறது.

54. திருமுழுக்கில் மகிமையின் ஆடையை உடுத்திக்கொள்வது ஏன்? திருமுழுக்கின் வழியாக ஒருவர் அழியா ஆடை அதாவது மகிமையின் ஆடையை உடுத்திக்கொள்கிறார். இன்பவனத்தில் ஆதாம் இழந்த மகிமையின் ஆடை இறை வாழ்வாகும். அதாவது தூய ஆவியாகும். திருமுழுக்கின் போது கிடைக்கின்ற புது ஆடை இறைவாழ்வைக் குறிக்கின்றது.

55. திருமுழுக்குத் தண்ணீரில் முழ்குவது **இறப்பின்** அடையாளமாகவும் தண்ணீரிலிருந்து வெளியே வருவது **உயிர்ப்பின்** அடையாளமாகவும் கருதப்படுகிறது.

56. **திருமுழுக்கின்** வழியாக ஒருவர் பழைய மனிதனை எடுத்து மாற்றி புதுமனிதனை உடுத்திக்கொள்கிறார்.

57. எதன் வழியாக ஒருவர் ஆன்மாவின் புதுப்படைப்பாக மீண்டும் பிறக்கின்றார். **திருமுழுக்கின்**

58. தூய ஆவியின் வழியாக இயேசுவோடும் அவருடைய மறைஉடலாகிய **திருச்சபையோடும்**, தந்தைக்கடவுளோடும் ஒருவர் **நட்புறவு** கொள்கின்ற முதல் அருளடையாளமே **திருமுழுக்கு**.

59. இயேசு தமது யோர்தான் திருமுழுக்கின் வழியாகவே புதிய இஸ்ரயேலை **இறையரசுக்கு** அழைத்தார்.

60. சாத்தானின் தோல்வியும், ஒருவரின் விண்ணுலக நுழைவும் நிகழ வேண்டுமாயின் அவன் **திருமுழுக்குத் தண்ணீரின்** வழியாக கடந்து செல்ல வேண்டும்.

www.malankaralibrary.com

61. திருமுழுக்குத் தண்ணீர் ஆசீர்வதிக்கும் போது இயேசு யோர்தானில் திருமுழுக்குப் பெற்றதையும் யோவான் இயேசுவின் திருமுழுக்குத் தண்ணீரை ஆயத்தம் செய்வதையும் நினைவு கூரும் பாடல் எது?

"கேண்மின்! அனைத்தார்களுமே-ஹா,

தண்ணீரைச் சேர்த்தார் யோவான் திருமுழுக்கது நல்-க,

மெசியா அதிலே முழுகியதால், புனிதம் செய்தாரே.

நீரின்றவரும் கரையேறும் போது,

வான்வையங்கள் வெகுமதி நல்கினவே,

ஆத-வன் கதிரால் வணங்கியதே,

தொழுதன விண்மீன்கள் தண்ணீ-ரூற்றுகளைத்

தூய்மை செய்யும், மெசியாவை ஹா-உ-ஹா-"

## பாடம் 10

## உறுதி பூசுதல்

பயிற்சி வினாக்கள்

1. உறுதிபூசுதல் என்பதன் பொருள் யாது? மூறோன் என்ற கிரேக்க வார்த்தைக்கு 'நறுமணத் தைலம்' என்பது பொருள். ஒலிவ எண்ணெயும் பலவகையான நறுமணப் பொருட்களும் சேர்ந்த எண்ணெயை புனிதப்படுத்தும்போது மூறோன் எண்ணெயாக மாறுகிறது. மூறோன் எண்ணெயினால் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் முத்திரையிடப்பட்டு ஒருவரை முழுமையாக அருட்பொழிவு செய்வதனால் இந்த அருளடையாளத்தை மூறோன் பூசுதல் (உறுதி பூசுதல்) என்று அழைக்கிறோம்.

2. உறுதிபூசுதல் பழைய - புதிய ஏற்பாட்டு பின்னணிகளை விளக்குக?

**பழைய ஏற்பாட்டில்:** பழைய ஏற்பாட்டில் அரசர்களையும், இறைவாக்கினர்களையும் குருக்களையும் திருநிலைப்படுத்தப்படும் போது எண்ணெயினால் அருட்பொழிவு செய்தனர். அருட்பொழிவு செய்யப்படும் மக்களும், உடமைகளும் கடவுளுக்காக வேறுபடுத்தப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டு வந்தனர். அருட்பொழிவு செய்யப்படுவதன் வழியாக அரசர்களுக்கும் இறைவாக்கினர்களுக்கும் குருக்களுக்கும் கடவுளின் ஆவி மிகுதியாக கிடைத்தது என்று இஸ்ரயேல் மக்கள் விசுவசித்திருந்தனர். தாவீதை அவருடைய சகோதரர்களின் முன்னிலையில் வைத்து சாமுவேல் கொம்பிலிருந்த எண்ணெயால் அவரை அருட்பொழிவு செய்தார். அன்றுமுதல் கடவுளின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது (1சாமு 16:13). இறைவாக்கினர்களும் அருட்பொழிவு செய்யப்படுவதன் வழியாக ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். ஏசாயா இறைவாக்கினர் இவ்வாறு கூறுகின்றார். "ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார்" (ஏசாயா 61:1). ஆரோனையும் அவர் புதல்வர்களையும் குருத்துவப்பணி புரிவதற்கு அருட்பொழிவு செய்ய ஆண்டவர் மோசேயிடம் ஒப்படைத்தார் (விடுதலைப்பயணம் 28:41-43). அருட்பொழிவு செய்யப்பட்டவர்கள் தூய்மையும், கடவுளின் ஆவியும் பெற்றுக்கொள்வர் என பழைய ஏற்பாடு கற்பிக்கிறது.

**புதிய ஏற்பாட்டில்:** சீடர்களின் மேல் தூய ஆவியை அனுப்புவேன் என்ற வாக்களிப்பை பெந்தகோஸ்து நாளில் கிறிஸ்து நிறைவேற்றி சீடர்களை விசுவாசத்தில் நிலை நிறுத்தவும், திடப்படுத்தவும் செய்தார். திருச்சபையின் உறுப்பினர்களாக மாறுகின்ற அனைவருக்கும் இயேசு தூய ஆவியை வாக்களித்தார். திருத்தூதர்கள் இதனை அறிந்திருந்ததனாலேயே திருமுழுக்கு அளித்த பின்னர் தூய ஆவியின் ஆட்கொள்ளுதலுக்காக தலையில் கைவைத்து வேண்டுதல் செய்து வந்தனர். திருமுழுக்குப் பெற்றுக்கொள்வது மட்டுமன்று தூய ஆவியையும் பெற்றுக்கொள்ளும் பழக்கம் ஆதித்திருச்சபையில் இருந்து வந்தது. திருத்தூதர்கள் திருமுழுக்கு அளித்த பின்னர் தனிப்பட்ட செயல் வழியாக தூய ஆவியை விசுவாசிகளுக்கு அளித்து வந்ததாக மறைநூல் சான்று பகர்கின்றது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 8:14-17).

3. இயேசுகிறிஸ்துவே உண்மையாக அருட்பொழிவு செய்யப்பட்டவர் என்று கூறக்காரணம் யாது? இயேசு கிறிஸ்துவே உண்மையாக அருட்பொழிவு செய்யப்பட்டவர். இயேசு தூய ஆவியால் அருட்பொழிவு

www.malankaralibrary.com

செய்யப்பட்டவர் என்பது யோர்தானில் வைத்து வெளிப்படுத்தப்பட்டது. திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவோடு சேர்க்கப்படும் விசுவாசிக்கும் கிறிஸ்துவின் அதே தூய ஆவி அளிக்கப்படுகிறது. மெசியா என்ற வார்த்தையின் பொருள் அருட்பொழிவு செய்யப்பட்டவர் என்பதாகும். இயேசு அருட்பொழிவு செய்யப்பட்டவராதலால் அவர் அரசரும், இறைவாக்கினரும், குருவுமாயிருக்கிறார். இதன் அடையாளமாகவே இயேசுவுக்கு பொன்னும், தூபமும், வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொண்டு வந்தனர். தூய ஆவியின் அருட்பொழிவு தன்னிடம் உண்டு என்பதை இயேசு நசரேத்து தொழுகைக்கூடத்தில் வைத்து வெளிப்படுத்தினார் (லூக்கா 4:18). திருமுழுக்குத் தண்ணீரின் வழியாக நாம் கிறிஸ்துவின் இறப்பிலும், உயிர்ப்பிலும் ஒன்றித்திருக்கிறோம். அப்ப இரசங்களின் வழியாக இயேசுவின் திரு உடலிலும் திரு இரத்தத்திலும் நாம் ஒன்றித்திருக்கிறோம். மூறோனால் அருட்பொழிவு செய்யப்படுவதன் வழியாக கிறிஸ்துவின் அருள்பொழிவில் நாம் ஒன்றித்திருக்கிறோம். அவ்வாறாக விசுவாசிகளனைவரும் அரசர், இறைவாக்கினர், குருவானவர் என்னும் பதவிக்கு தகுதியுடையவர்களாக மாற்றப்படுகின்றனர்.

4. உறுதிபூசுதல் தூய ஆவியின் முத்திரையாகும் - விளக்குக?

உறுதிபூசுதல் தூய ஆவியின் முத்திரை ஆகும். இந்த முத்திரை படைப்பாளருக்கு படைப்புகளின் மேல் உள்ள அதிகாரத்தையும், உரிமையையும் குறிக்கின்றது. உறுதி பூசுதலின் வழியாக கடவுள் ஒருவரை முத்திரையிட்டு அவரை கடவுளுக்கு உரிமையாக்கிக் கொள்கின்றார். அவ்வாறாக ஒருவர் கிறிஸ்துவின் போர்வீரராகவும் கிறிஸ்துவுக்கு உரிமையாளராகவும் மாறுகிறார். திருமுழுக்கின் வழியாக ஒரு விதையின் அளவாகக் கிடைத்த தூய ஆவியின் கொடை உறுதிபூசுதலின் வழியாக முழு வளர்ச்சியடைகிறது. அவ்வாறாக இது ஒருவரை தூய ஆவியின் கொடைகளால் நிரப்பி முழுமையான வளர்ச்சியை அடைய அவரை வழிநடத்துகிறது. உறுதிபூசுதலின் வழியாக தூய ஆவியின் கொடைகளான ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தெய்வ பயம் என்பவற்றை ஒருவர் பெற்றுக்கொள்கிறார். அவ்வாறு ஒருவரை உத்தம கிறிஸ்தவனாகவும், கிறிஸ்துவின் போர்வீரனாகவும் மாற்றுகின்ற அருளடையாளமே உறுதி பூசுதல். ஆரம்ப செபத்துக்குப் பின்னர் குருவானவர் குழந்தையின் நெற்றியில் மூறோன் எண்ணெயால் மூன்றுமுறை சிலுவை அடையாளத்தில் முத்திரையிடுகிறார். மெய்யான விசுவாசத்தின் முத்திரையும், அடையாளமும், தூய ஆவியினுடைய நல்வரங்களின் நிறைவும் மெசியாவின் பரிமளமுமாகிய இப்பரிசுத்த மூறோனால் (+) தந்தையுடையவும் (+) மகனுடையவும் (+) உயிருள்ள தூய ஆவியுடையவும் திருப்பெயராலே நிலைவாழ்வுக்கு (பெயர்) முத்திரையிடப்படுகிறார்.

**குறு வினா விடைகள்**

1. திருமுழுக்கின் வழியாக கடவுளின் மக்களாக மாறிய ஒவ்வொருவருக்கும் **தூய ஆவியை** வழங்கி உறுதிப்படுத்தவும் நிறைவாக்கவும் செய்வது **உறுதிபூசுதல்** ஆகும்.
2. உறுதிபூசுதல் வழியாக ஒருவன் எவ்வாறாக மாற்றப்படுகிறான்? தூய ஆவியின் ஆட்கொள்ளுதலால் உறுதிபூசுதல் என்ற அருளடையாளம் ஒருவனை உண்மை கிறிஸ்தவராகவும், விசுவாசத்தில் நிலைத்திருப்பவராகவும், கிறிஸ்துவின் போர்வீரராகவும் மாற்றுகிறது.
3. மூறோன் என்ற கிரேக்க வார்த்தைக்கு பொருள் என்ன? 'நறுமணத் தைலம்'.
4. உறுதிபூசுதலில் பயன்படுத்தப்படும் எண்ணெய் யாது? மூறோன்
5. மூறோன் உருவாக்கப் பயன்படும் எண்ணெய் யாது? ஒலிவ எண்ணெய்
6. பழைய ஏற்பாட்டில் யாரை எண்ணெயினால் அருட்பொழிவு செய்தனர்? அரசர்களையும், இறைவாக்கினர்களையும். குருக்களையும்
7. அருட்பொழிவு செய்வதன் வழியாக இஸ்ரயேல் மக்கள் என்ன விசுவசித்திருந்தனர்? அருட்பொழிவு செய்யப்படுவதன் வழியாக அரசர்களுக்கும் இறைவாக்கினர்களுக்கும் குருக்களுக்கும் கடவுளின் ஆவி மிகுதியாக கிடைத்தது என்று இஸ்ரயேலர்கள் விசுவசித்திருந்தனர்.
8. தாவீது அருட்பொழிவு செய்யப்பட்டதைக் கூறுக? தாவீதை அவருடைய சகோதரர்களின் முன்னில் வைத்து சாமுவேல் கொம்பிலிருந்த எண்ணெயால் அவரை அருட்பொழிவு செய்தார். அன்றுமுதல்

www.malankaralibrary.com

கடவுளின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது (1சாமு 16:13).

9. இறைவாக்கினர்கள் அருட்பொழிவு செய்யப்பட்டதைக் கூறுக? இறைவாக்கினர்களும் அருட்பொழிவு செய்யப்படுவதன் வழியாக ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். ஏசாயா இறைவாக்கினர் இவ்வாறு கூறுகின்றார். “ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார்” (ஏசாயா 61:1).

10. ஆரோன் அருட்பொழிவு செய்யப்பட்டதைக் கூறுக? ஆரோனையும் அவர் புதல்வர்களையும் குருத்துவப்பணி புரிவதற்கு அருட்பொழிவு செய்யும் பொருட்டு ஆண்டவர் மோசேயிடம் ஒப்படைத்தார் (விடுதலைப்பயணம் 28:41-43).

11. **<u>அருட்பொழிவு</u>** செய்யப்பட்டவர்கள் தூய்மையும், **<u>கடவுளின் ஆவியும்</u>** பெற்றுக்கொள்வார்கள் என்று பழைய ஏற்பாடு கற்பிக்கிறது.

12. ஆதித்திருச்சபையில் தூய ஆவியை பெற்றுக்கொள்வது பற்றிக் கூறுக? திருமுழுக்குப் பெற்றுக்கொள்வது மட்டுமன்று தூய ஆவியையும் பெற்றுக்கொள்ளும் பழக்கம் ஆதித்திருச்சபையில் இருந்து வந்தது. திருத்தூதர்கள் திருமுழுக்கு அளித்த பின்னர் தனிப்பட்ட செயல் வழியாக தூய ஆவியை விசுவாசிகளுக்கு அளித்து வந்ததாக மறைநூல் சான்று பகர்கின்றது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 8:14-17).

13. இயேசு தூய ஆவியால் **<u>அருட்பொழிவு</u>** செய்யப்பட்டவர் என்பது **<u>யோர்தானில்</u>** வைத்து வெளிப்பட்டது.

14. இயேசுவுக்கு பொன்னும், தூபமும், வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொண்டு வந்ததன் அடையாளம் என்ன? இயேசு அருட்பொழிவு செய்யப்பட்டவராதலால் அவர் அரசரும், இறைவாக்கினரும், குருவுமாயிருக்கிறார். இதன் அடையாளமாகவே இயேசுவுக்கு பொன்னும், தூபமும், வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொண்டு வந்தனர்.

15. தூய ஆவியின் அருட்பொழிவு தன்னிடம் உண்டு என்பதை இயேசு **<u>நசரேத்து</u>** தொழுகைக்கூடத்தில் வைத்து வெளிப்படுத்தினார் (லூக்கா 4:18).

16. திருமுழுக்குத் தண்ணீரின் வழியாக நாம் கிறிஸ்துவின் **<u>இறப்பிலும்</u>**, **<u>உயிர்ப்பிலும்</u>** ஒன்றித்திருக்கிறோம்.

17. அப்ப இரசங்களின் வழியாக இயேசுவின் **<u>திரு உடலிலும்</u>** **<u>திரு இரத்தத்திலும்</u>** நாம் ஒன்றித்திருக்கிறோம்.

18. மூறோனால் அருட்பொழிவு செய்யப்படுவதன் வழியாக கிறிஸ்துவின் **<u>அருட்பொழிவில்</u>** நாம் ஒன்றித்திருக்கிறோம்.

19. உறுதி பூசுதலால் விசுவாசிகளனைவரும் எந்தெந்த பதவிகளுக்கு தகுதியுடையவர்களாகின்றனர்? அரசர், இறைவாக்கினர், குருவானவர்

20. உறுதிபூசுதல் திருச்சடங்கு எப்போது எங்கே நடத்தப்படுகிறது? திருமுழுக்கு முடிந்தவுடன் குருவானவரும் திருமுழுக்கு பெற்றுக்கொள்பவரும் மற்றனைவருமாக செப மேசையின் முன்னால் வந்து உறுதிபூசுதல் திருச்சடங்கை ஆரம்பிக்கின்றனர்.

21. உறுதிபூசுதல் திருச்சடங்கின் ஆரம்ப செபம் பற்றிக் கூறுக? திருமுழுக்கின் வழியாக குழந்தைக்கு கிடைத்த விசுவாசத்தைக் குறித்தும் உறுதிபூசுதல் வழியாகப் பெற்றுக்கொள்ளப்போகும் சிறப்பு ஆசீரைக் குறித்தும் ஆரம்ப செபத்தில் விவரிக்கப்படுகிறது.

22. கிறிஸ்தவ விசுவாசி அடையாளமும் முத்திரையும் எவ்வாறு பெற்றுக்கொள்கிறார்? திருமுழுக்கின் வழியாக கிறிஸ்தவ விசுவாசம் பெற்றுக்கொண்டு விசுவாசிகளின் கூட்டத்தில் உறுப்பினராகும் ஒருவருக்கு அடையாளமும் முத்திரையும் வழங்கப்படுவது உறுதிபூசுதலின் வழியாகவே ஆகும்.

23. அழிந்துபோகாத முத்திரையை பதிக்கும் அருளடையாளங்கள் யாவை? திருமுழுக்கு, உறுதி பூசுதல், குருத்துவம் என்னும் அருளடையாளங்கள் ஒருபோதும் அழிந்துபோகாத முத்திரையை ஆன்மாவில் பதியச் செய்கின்றன.

24. ஒருமுறை மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டிய அருளடையாளங்கள் யாவை? திருமுழுக்கு, உறுதி பூசுதல், குருத்துவம்

www.malankaralibrary.com

25. உறுதிபூசுதல் **தூய ஆவியின்** முத்திரை ஆகும்.

26. **திருமுழுக்கின்** வழியாக ஒரு விதையின் அளவாகக் கிடைத்த தூய ஆவியின் கொடை **உறுதிபூசுதலின்** வழியாக முழு வளர்ச்சியடைகிறது.

27. உறுதிபூசுதலின் வழியாக பெற்றுக்கொள்ளும் தூய ஆவியின் கொடைகள் யாவை? உறுதிபூசுதலின் வழியாக தூய ஆவியின் கொடைகளான ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தெய்வ பயம் என்பவற்றை ஒருவர் பெற்றுக்கொள்கிறார்.

28. ஒருவரை உத்தம **கிறிஸ்தவனாகவும்,** கிறிஸ்துவின் **போர்வீரனாகவும்** மாற்றுகின்ற அருளடையாளமே உறுதி பூசுதல்.

29. மூறோன் எண்ணெயால் முத்திரையிடுதல் பற்றிக் கூறுக? ஆரம்ப செபத்துக்குப் பின்னர் குருவானவர் குழந்தையின் நெற்றியில் மூறோன் எண்ணெயால் மூன்றுமுறை சிலுவை அடையாளத்தில் முத்திரையிடுகிறார். மெய்யான விசுவாசத்தின் முத்திரையும், அடையாளமும், தூய ஆவியினுடைய நல்வரங்களின் நிறைவும் மெசியாவின் பரிமளமுமாகிய இப்பரிசுத்த மூறோனால் (+) தந்தையுடையவும் (+) மகனுடையவும் (+) உயிருள்ள தூய ஆவியுடையவும் திருப்பெயராலே நிலைவாழ்வுக்கு (பெயர்) முத்திரையிடப்படுகிறார்.

30. குழந்தையின் தலை முதல் பாதம் வரை மூறோன் பூசுவதன் பொருள் என்ன? அருட்பொழிவு மன்றாட்டுக்குப்பின்னர் குழந்தையின் உடல் உறுப்புக்களில் தலை முதல் பாதம் வரை மூறோன் பூசுகிறார். ஆரோனை மாசற்றவராக மாற்ற எண்ணெய் பூசியது போன்று குருவானவர் திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட இந்த குழந்தையையும் எண்ணெயால் பூசி தூய ஆவியின் ஆசீர்வாதம் வழங்கி தூய்மைப்படுத்துகிறார்.

31. குழந்தைக்கு மகுடம் அணிவிக்கப்படுதல் பற்றிக் கூறுக? மூறோன் அருட்பொழிவுக்குப்பின் குழந்தைக்கு மகுடம் அணிவிக்கப்படுகிறது. மலங்கரை வழிபாட்டு முறைப்படி மகுடத்திற்கு பதிலாக திருவுடையின் கையுறையோ ஹைம்னியாயோ குழந்தையின் தலையில் வைக்கப்படுகிறது. கிறிஸ்தவ மரபுப்படி மகுடமணிவித்தல் முக்கியத்துவம் வாய்ந்ததும் பொருள் மிகுந்ததும் ஆகும்.

32. மகுடம் பற்றிய பழைய ஏற்பாட்டு விளக்கம் என்ன? மகுடம் அரசரின் அடையாளமாகவும், வெற்றியின் சின்னமாகவும் விளங்கியதை பழைய ஏற்பாட்டில் காண்கின்றோம் (ஏசாயா 28:5, எரேமியா 13:18, திருப்பாடல்கள் 21:3).

33. மகுடம் பற்றிய புதிய ஏற்பாட்டு விளக்கம் என்ன? புதிய ஏற்பாட்டில் மகுடம் விண்ணக மகிமையாகவும், விண்ணக ஒளியாகவும், நிலைவாழ்வின் அடையாளமாகவும் விளங்குகின்றது.

34. உறுதிபூசுதலின்போது குழந்தைக்கு திரு இரத்தம் வழங்குவது பற்றிக்கூறுக? கிண்ணத்திலிருந்து ஒரு துள்ளி திரு இரத்தம் குழந்தையின் நாவில் வைக்கப்படுகின்றது. 'இன்பவனத்தில் ஆதாம் சுவைக்காத கனி இதோ உன் நாவில் மகிழ்ச்சியோடு வைக்கப்படுகிறது' என்று கூறிக்கொண்டு குருவானவர் குழந்தைக்கு நற்கருணை வழங்குகிறார்.

35. உறுதிபூசுதலில் தைலம் பூசும்போது பாடப்படும் பாடல் எது?

“சொன்னாரிறைவன் பூசுமினாரோனைப்)/ புனிதமடைவான் பாவன தைலத்தால்/

பூசுகிறோமே ஸ்நானம் ஏற்றோரிந்நல்/ சிறுமேழமிதை சீரெழு தைலத்தால்./

ஸ்நானம் ஏற்றோர்- ஆட்டின் - குட்டியை/ அழகாய்ப் பூசும் தைலம் இதுவன்றோ!

'றூஹா' - மறைவாய்த் தம் லாஞ்சனையருளி / தெய்வீகமாய் வாழ்ந்திவர் மீதருள்புரிவார்”.

36. “கடவுளே எங்களை **உங்களோடு** சேர்த்துள்ளார். இவ்வாறு கிறிஸ்துவோடு நமக்கு இருக்கும் **உறவை** அவர் உறுதிப்படுத்துகிறார்.

37. அவரே நமக்கு **அருட்பொழிவு** செய்துள்ளார். அவரே நம் மீட்பை உறுதிப்படுத்தும் அடையாளமாகத் தூய ஆவியை நம் உள்ளத்தில் பொழிந்து நம்மீது தம் **முத்திரையை** பதித்தார்”. (2 கொரிந்தியர் 1:21-22)

www.malankaralibrary.com

## பாடம் 11

## நற்கருணை

**பயிற்சி வினாக்கள்**

1. இயேசு நற்கருணை நிறுவியதை விவரி? இயேசு பன்னிரு திருத்தூதர்களுடன் பாஸ்கா விழா கொண்டாடிய போது நற்கருணையை நிறுவினார். பாஸ்கா விருந்தின் போது இயேசு அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி அதைப் பிட்டு சீடருக்குக் கொடுத்து, "இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல்" என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து, "இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" என்றார் (மத்தேயு 26:26-28).

2. பலியைப்பற்றிய பழைய ஏற்பாட்டு புரிதல்கள் என்ன? யூதமதத்தில் பலி ஒப்புக்கொடுத்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஆபேலின் பலி, நோவாவின் பலி, ஆபிரகாமின் பலி எனப் பலவகையான பலிகளை பழைய ஏற்பாட்டில் காணமுடிகிறது. நெருப்புப்பலி, சமாதானபலி, பாவபரிகாரபலி என்னும் பல்வேறு பலிகள் மோசேயின் காலத்துக்குப்பின் யூதமதத்தில் நடைமுறைக்கு வந்தன. நற்கனிகளையும், ஆடுமாடுகளையும் பலி ஒப்புக்கொடுக்க பயன்படுத்தி வந்தனர். ஆடுமாடுகளின் இரத்தம் சிந்தி ஒப்புக்கொடுக்கின்றதான பலியே முக்கியத்துவம் வாய்ந்தது. இரத்தம் சிந்துதல் பலியின் முக்கிய பகுதியாகும். இரத்தம் சிந்துதலின் வழியாக தங்களது உயிரையே ஒப்புக்கொடுப்பதாக யூதர்கள் எண்ணினர். "இரத்தம் சிந்துதலின்றி பாவமன்னிப்பு இல்லை " (எபிரேயர் 9:22).

கடவுளின் அதிகாரத்தையும், மகிமையையும் அங்கீகரிப்பதற்கும், கடவுளோடு நட்புறவு ஏற்படுத்துவதற்கான வழியாகவும், பாவமன்னிப்புச் செயலாகவும் பலியை யூதர்கள் கண்டிருந்தனர். தானியமும், ஊனும் மக்களின் உணவு வகைகளாகும். இவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே மக்கள் வாழ்க்கையில் அதிகம் உழைக்கின்றனர். உணவு வகைகளை கடவுளுக்கு அளிப்பதன் வழியாக தங்கள் வாழ்க்கையையே அளிப்பதாக யூதர்கள் எண்ணியிருந்தனர். பலிபீடம் கடவுளின் பிரசன்னம் உள்ள இடமாக யூதர்கள் கருதினர். ஒரு விலங்கின் இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்றும் பலிபீடத்தில் இரத்தம் சிந்தும்போது பலி ஒப்புக்கொடுக்கின்ற நபருடைய உயிரையே கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கின்றனர் என்றும் யூதர்கள் விசுவசித்திருந்தனர்.

பழைய ஏற்பாட்டு பலிகளில் இரத்தம் சிந்துதல் இயேசுவின் கல்வாரி பலியின் அடையாளமாகும். இயேசுவின் பலியில் இரத்தம் சிந்துதல் மனித இனம் முழுவதற்கும் என்றென்றைக்கும் பாவமன்னிப்பும், மீட்பும் வாக்களிக்கின்றது (எபிரேயர் 9:11-13).

3. தொடக்கத் திருச்சபையின் நற்கருணை அனுபவத்தை விவரி? யூதபாஸ்காவின் பின்னணியில் நற்கருணை நிறுவிய பின்னர் இயேசு "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அவ்வாறாக தான் நிறுவிய பாஸ்காவின் நினைவு கூறுதல் நடத்த இயேசு திருத்தூதர்களுக்குக் கட்டளையிட்டார். இயேசுவின் விருப்பப்படி ஆதித்திருச்சபையில் நற்கருணை அர்ப்பணம் அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் வழியாக தொடர்ந்தது. முதலில் வீடுகளிலேயே அப்பம் பிட்குதல் திருச்சடங்கு நடத்தப்பட்டது. பின்னர் அது தேவாலயத்துக்கு மாற்றப்பட்டது.

சிலுவையில் இறந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பிரசன்னம் தங்களிடையே இருந்ததை முதல் கிறிஸ்தவர்கள் உணர்ந்தது நற்கருணை கொண்டாட்டத்தின் வழியாகவே ஆகும். எம்மாவு என்னும் ஊருக்குச் சென்ற சீடர்கள் அப்பம் பிட்டு உண்டபோதே இயேசுவைக் கண்டுகொண்டார்கள் (லூக்கா 24:23-35). கிறிஸ்துவின் முழு பிரசன்னத்தை முதல் கிறிஸ்தவர்கள் கண்டுகொண்டது நற்கருணை உட்கொள்ள ஒன்று கூடியபோதே ஆகும் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:42-46). ஆண்டவரின் உயிர்ப்பு நாளான ஞாயிற்றுக்கிழமை முதல் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி அப்பம் பிட்டு வந்தனர். இயேசுவின் பாஸ்காவும், சிலுவை மரணமும், உயிர்ப்பும் அவர்கள் அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் வழியாக நினைவு கூர்ந்தனர். உயிர்த்தெழுந்த இயேசு அப்பத்தினுடையவும், இரசத்தினுடையவும் வடிவில் அவர்களிடையே வாழ்கிறார் என்னும் நம்பிக்கை ஆதித்திருச்சபையில் வலுப்பெற்றிருந்தது. அவ்வாறு தேவநற்கருணையில் ஆண்டவரின் பிரசன்னமும், திருவுடலையும், திரு இரத்தத்தையும் உட்கொள்வதன் வழியாக அவர்களுக்கு கிடைத்த கிறிஸ்து அனுபவமும்

www.malankaralibrary.com

இயேசு அவர்களிடையே வாழ்கிறார் என்பதன் சான்றாகும். அவ்வாறு நற்கருணை இறைமனித உறவின் அடிப்படையாக மாறியது. நற்கருணையில் அவர்கள் இயேசுவின் மீட்பளிக்கும் பிரசன்னத்தை அதிகமாக அனுபவித்தனர்.

4. மலங்கரை திருப்பலி மீட்பின் வரலாற்றின் நினைவுகூர்தல் எவ்வாறு?

இயேசுவின் பாஸ்கா கொண்டாட்டத்தினுடையவும் சிலுவை மரணத்தினுடையவும் நினைவுகூர்தல் மட்டுமன்று திருப்பலி. "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் கட்டளையின் வழியாக இயேசு கிறிஸ்துவின் முழுமையான மீட்பின் வரலாறு முழுவதையும் நற்கருணைப்பலி வழியாக திருச்சபை நினைவுகூர்கின்றது. மலங்கரைத் திருப்பலியில் இரண்டு பகுதிகள் உண்டு. அவை ஆயத்தத் திருச்சடங்கும், பகிரங்கத் திருச்சடங்குமாகும். உலகப்படைப்பு, மனிதபடைப்பு, மனிதனின் பாவம், ஆபிரகாமின் அழைப்பு, இயேசு கிறிஸ்து வரையிலான இஸ்ரயேலரின் வரலாறு போன்ற பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் ஆயத்தத்திருச்சடங்கில் நினைவுகூரப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, திருமுழுக்கு, பகிரங்க வாழ்வு, பாஸ்கா கொண்டாட்டம், பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவியின் வருகை, இயேசுவின் இரண்டாம் வருகை போன்றவற்றை பகிரங்கத் திருச்சடங்கில் திருச்சபை நினைவு கூர்கின்றது. சுருங்கக்கூறின் உலகப் படைப்பு முதல் இயேசுவின் முழுமையான மீட்பின் வரலாற்றை திருச்சபை திருப்பலியின் வழியாக நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றது.

திருப்பலியின்போது பாடப்படும் பாடலின் வழியாக இந்நிகழ்ச்சிகளை திருச்சபை நினைவு கூர்கின்றது.

*"ஆண்டவரே உம் பிறப்பும் திருமுழுக்கும் பாடுகளும்*

*சிலுவை இறப்பும் உயிர்ப்பும் விண்ணேற்பும் யாவையும்*

*மறைமுன்னோர்களையும் நாங்கள்*

*வேள்வியில் நினைக்கின்றோம் நாதா" (திருப்பலி முறை)*

இவ்வாறாக மீட்பின் நிகழ்வுகளோடு தொடர்பு கொண்டு முழுமையாக இயேசுவோடு சேர்ந்து வாழ்வதற்கு திருப்பலி விசுவாசிகளுக்குத் துணைபுரிகிறது.

5. நற்கருணை பெற்றுக்கொள்வதனால் மட்டுமே நற்கருணைப் பலி முழுமையடையும் என்னும் உண்மையை விவரி? கல்வாரியில் இயேசுவின் பலி ஒப்புக்கொடுத்தலும், பாஸ்கா விருந்தும் நற்கருணை ஒரே நேரத்தில் பலியும் விருந்தும் என்பதைக் குறிக்கிறது. நற்கருணை என்னும் விருந்தை உட்கொண்டால் மட்டுமே பலி ஒப்புக்கொடுத்தல் முழுமையடையும். "நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்" (1கொரி. 11:26). இயேசுவோடு நட்புறவு கொள்ளவும், இயேசுவின் அருளைப் பெற்றுக்கொள்ளவும் நற்கருணையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்" (யோவான் 6:53). அதனால் திருப்பலியில் கலந்துகொள்பவர்கள் நற்கருணைப் பெற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றனர்.

தொடக்கத்திருச்சபையில் நற்கருணையை உட்கொள்ளாமல் ஒருவர் கூட இருந்ததில்லை. நோயின் மூலம் ஆராதனை (வழிபாடு)யில் பங்குகொள்ள முடியாதவர்களுக்கு திருத்தொண்டர்கள் நற்கருணையை வீடுகளுக்கு சென்று கொடுப்பது வழக்கத்திலிருந்தது. நற்கருணை பலியில் பங்குகொள்ளும் அனைவரும் தகுதியுடன் நற்கருணை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே திருச்சபையின் விருப்பம். நற்கருணை பெற்றுக்கொள்வது என்பது ஒவ்வொருவருடையவும் உரிமையாகும். ஒருவர் திருச்சபையின் உறுப்பினர் என்னும் நிலையில் முழுமையடைவது நற்கருணை பெற்றுக்கொள்வதன் வழியாகவே ஆகும்.

நம்மில் ஏதேனும் பாவம் இருக்கிறது என்னும் உணர்வு ஏற்பட்டால் ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக்கொண்ட பின்னரே நற்கருணை உட்கொள்ள வேண்டும். மற்றச் சூழல்களில் நற்கருணை பலியில் வரும் பாவமன்னிப்பு செபம் வழியாக பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டு நற்கருணையை உட்கொள்ளலாம். நற்கருணை பலியில் பங்குகொண்டு எந்த காரணமுமின்றி நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் விலகி நிற்பவர்கள் தாமே கிறிஸ்துவிடமிருந்து அகன்று நிற்கின்றனர். விருந்துக்குச் சென்று விருந்து உண்ணாமல் செல்வது போன்றதே நற்கருணை பலியாகின்ற விருந்தில் பங்குகொண்டு நற்கருணை பெற்றுக்கொள்ளாமல்

www.malankaralibrary.com

செல்வது. ஆதலால் தக்க காரணமின்றி நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் விலகி நிற்பது கிறிஸ்துவோடும் அவருடைய உடலுதிரங்களோடும் நாம் கொள்கின்ற ஆதரவின்மையே ஆகும். அதனால் தகுந்த ஆயத்தமுடன் நற்கருணை பெற்றுக்கொள்ள நாம் முயல்வோம். அவ்வாறாக இயேசுவோடு முழுமையான நட்புறவில் வாழ நம்மால் முடியும்.

**குறுவினா விடைகள்**

1. அருளடையாளங்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் அருளடையாளங்களின் மகுடமாகவும் திகழ்வது எது? நற்கருணை.
2. இயேசு எப்போது நற்கருணையை நிறுவினார்? இயேசு பன்னிரு திருத்தூதர்களுடன் சேர்ந்து பாஸ்கா கொண்டாடினார். இந்த பாஸ்கா விருந்தில் வைத்து இயேசு நற்கருணையை நிறுவினார்.
3. “இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல்” என இயேசு யாரிடம் கூறினார்? திருத்தூதர்களிடம்
4. “ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்” என இயேசு யாரிடம் கூறினார்? திருத்தூதர்களிடம்
5. எந்த மதப் பின்னணியில் இயேசு புதிய பாஸ்காக் கொண்டாடினார்? யூத பாஸ்காவின்
6. யூத பாஸ்காவின் இரண்டு அடிப்படையான கூறுகள் யாவை? பாஸ்கா ஆட்டுக்குட்டியின் பலியும், பாஸ்கா உணவும்,
7. புதிய பாஸ்காவில் எவ்வாறு இயேசு உண்மையான பாஸ்கா ஆட்டுக்குட்டி ஆனார்? கல்வாரிமலையில் பலியாகப்போகிற தமது உடலை அப்பம் பிட்டு அளித்தலின் வழியாகவும், தான் சிந்த வேண்டிய இரத்தத்தை இரசத்தின் வடிவாகவும், இயேசு குறிப்பிடுகின்றார். புதிய பாஸ்காவில் இயேசு தமது திரு உடலும், திரு இரத்தமும் கொண்டு விருந்து ஏற்பாடு செய்ததன் வழியாக பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றதான உண்மையான பாஸ்கா ஆட்டுக்குட்டியே தான் என்பதை முன்னறிவிக்கின்றார்.
8. உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி என்று இயேசுவைக் குறித்துக் கூறியவர் யார்? திருமுழுக்கு யோவான்
9. கல்வாரி சிலுவைப்பலியை இயேசு எவ்வாறு பாஸ்கா பின்னணியில் முன்னறிவித்தார்? இரத்தம் சிந்துகின்ற பலியும், விருந்தும் பாஸ்காவின் அடிப்படையான கூறுகளானதைப் போன்று புதிய பாஸ்காவிலும் இரத்தம் சிந்தலும், விருந்தும் ஒன்றுபடுகிறது.
10. பழைய ஏற்பாட்டில் உள்ள பலிகளுக்கு எடுத்துக்காட்டுகள் யாவை? ஆபேலின் பலி, நோவாவின் பலி, ஆபிரகாமின் பலி
11. மோசேயின் காலத்துக்குப்பின் யூதமதத்தில் நடைமுறைக்கு வந்த பலிகள் யாவை? நெருப்புப்பலி, சமாதானபலி, பாவபரிகாரபலி, நற்கனிகளையும், ஆடுமாடுகளையும் பலி ஒப்புக்கொடுக்க பயன்படுத்தி வந்தனர். ஆடுமாடுகளின் இரத்தம் சிந்தி ஒப்புக்கொடுக்கின்றதான பலியே முக்கியத்துவம் வாய்ந்தது.
12. யூதமதத்தில் இரத்தம் சிந்துதலின் பொருள் என்ன? இரத்தம் சிந்துதல் யூதமதத்தில் பலியின் முக்கிய பகுதியாகும். இரத்தம் சிந்துதலின் வழியாக தங்களது உயிரையே ஒப்புக்கொடுப்பதாக யூதர் எண்ணினர். “இரத்தம் சிந்துதலின்றி பாவமன்னிப்பு இல்லை ” (எபிரேயர் 9:22).
13. பலியை எவ்வாறு யூதர்கள் புரிந்து கொண்டிருந்தனர்? கடவுளின் அதிகாரத்தையும், மகிமையையும் அங்கீகரிப்பதற்கும், கடவுளோடு நட்புறவு ஏற்படுத்துவதற்கான வழியாகவும், பாவமன்னிப்புச் செயலாகவும் பலியை யூதர்கள் கண்டிருந்தனர்.
14. யூதர்களின் பலியும் உழைப்பும் எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டது? தானியமும், ஊனும் மக்களின் உணவு வகைகளாகும். இவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே மக்கள் வாழ்க்கையில் அதிகம் உழைக்கின்றனர். உணவு வகைகளை கடவுளுக்கு அளிப்பதன் வழியாக தங்கள் வாழ்க்கையையே அளிப்பதாக யூதர் எண்ணியிருந்தனர்.

www.malankaralibrary.com

15. யூதர்கள் மிருக பலியில் எவ்வாறு விசுவசித்திருந்தனர்? பலிபீடம் கடவுளின் பிரசன்னம் உள்ள இடமாக யூதர்கள் கருதினர். ஒரு விலங்கின் இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்றும் பலிபீடத்தில் அதன் இரத்தம் சிந்தும்போது பலி ஒப்புக்கொடுக்கின்ற நபருடைய உயிரையே கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கின்றனர் என்றும் யூதர்கள் விசுவசித்திருந்தனர்.

16. பழைய ஏற்பாட்டு பலிகளில் **இரத்தம் சிந்துதல்** இயேசுவின் **கல்வாரி பலியின்** அடையாளமாகும்.

17. **இயேசுவின்** பலியில் இரத்தம் சிந்துதல் மனித இனம் முழுவதற்கும் என்றென்றைக்கும் **பாவமன்னிப்பும்**, மீட்பும் வாக்களிக்கின்றது (எபிரேயர் 9:11-13).

18. இயேசுவின் பாஸ்காவின் நினைவு கூர்தல் பற்றிக் கூறுக? யூதபாஸ்காவின் பின்னணியில் நற்கருணையை நிறுவிய பின்னர் இயேசு "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அவ்வாறாக தான் நிறுவிய பாஸ்காவின் நினைவு கூர்தல் நடத்த இயேசு திருத்தூதர்களுக்குக் கட்டளையிட்டார்.

19. தொடக்கத் திருச்சபையில் அப்பம் பிட்குதல் திருச்சடங்கு எங்கே நடத்தப்பட்டது? இயேசுவின் விருப்பப்படி ஆதித்திருச்சபையில் நற்கருணை அர்ப்பணம் அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் வழியாக தொடர்ந்தது. முதலில் வீடுகளிலேயே அப்பம் பிட்குதல் திருச்சடங்கு நடத்தப்பட்டது. பின்னர் அது தேவாலயத்துக்கு மாற்றப்பட்டது.

20. சுறியானி திருச்சபையில் அப்பம் பிட்குதல் திருச்சடங்கிற்கு என்ன பெயர்? 'தூய குர்பான'

21. 'குர்பான' என்ற சொல்லுக்கு பொருள் என்ன? காணிக்கை செலுத்துதல், பலி செலுத்துதல், வழிபாடு

22. எம்மாவு சென்ற சீடர்கள் எப்போது இயேசுவைக் கண்டுகொண்டார்கள்? அப்பத்தை பிட்டு உண்டபோது (லூக்கா 24:23-35).

23. முதல் கிறிஸ்தவர்கள் எவ்வாறு கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணர்ந்தனர்? கிறிஸ்துவின் முழுப்பிரசன்னத்தை முதல் கிறிஸ்தவர்கள் கண்டுகொண்டது நற்கருணை உட்கொள்ள ஒன்று கூடியபோதே ஆகும் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:42-46).

24. முதல் கிறிஸ்தவர்கள் எவ்வாறு கிறிஸ்து அவர்களிடையே வாழ்கிறார் என சான்று பகர்ந்தனர்? தேவநற்கருணையில் ஆண்டவரின் பிரசன்னமும், திருவுடலையும், திரு இரத்தத்தையும் உட்கொள்வதன் வழியாக அவர்களுக்கு கிடைத்த கிறிஸ்து அனுபவமும் இயேசு அவர்களிடையே வாழ்கிறார் என்பதன் சான்றாகும்.

25. பல்வேறு வழிபாட்டு முறைகள் எப்போது முதல் வளரத்தொடங்கின? நான்காம் நூற்றாண்டிலிருந்து பல்வேறு இடங்களில், பல்வேறு வழிபாட்டு முறைகள் வளர்ந்து வரலாயின. கத்தோலிக்கத் திருச்சபையில் இன்று 22 மாறுபட்ட வழிபாட்டு முறைகள் உண்டு.

26. மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை பயன்படுத்தும் திருவழிபாட்டு முறை எது? அந்தியோக்கியன் வழிபாட்டு முறை

27. அந்தியோக்கியன் திருப்பலி முறை எந்த திருத்தூதரின் பெயரால் அறியப்படுகிறது? நமது ஆண்டவரின் சகோதரரும், திருத்தூதரும் எருசலேமின் முதல் தலைமை குருவுமான புனித யாக்கோவின் பெயரிலேயே அந்தியோக்கியன் திருப்பலி முறை அறியப்படுகிறது.

28. திருச்சபை நற்கருணைப்பலி வழியாக எதனை நினைவுகூர்கின்றது? இயேசுவின் பாஸ்கா கொண்டாட்டத்தினுடையவும் சிலுவை மரணத்தினுடையவும் நினைவுகூர்தல் மட்டுமன்று திருப்பலி. "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் கட்டளையின் வழியாக இயேசு கிறிஸ்துவின் முழுமையான மீட்பின் வரலாறு முழுவதையும் நற்கருணைப்பலி வழியாக திருச்சபை நினைவுகூர்கின்றது.

29. மலங்கரைத் திருப்பலியில் இரண்டு பகுதிகள் யாவை? ஆயத்தத் திருச்சடங்கு, பகிரங்கத் திருச்சடங்கு

30. மலங்கரைத் திருப்பலியின் ஆயத்தத்திருச்சடங்கில் நினைவுகூரப்படுபவை யாவை? உலகப்படைப்பு, மனிதபடைப்பு, மனிதனின் பாவம், ஆபிரகாமின் அழைப்பு, இயேசு கிறிஸ்து வரையிலான இஸ்ரயேலரின்

www.malankaralibrary.com

வரலாறு போன்ற பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் ஆயத்தத்திருச்சடங்கில் நினைவுகூரப்படுகின்றன.

31. மலங்கரைத் திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் நினைவுகூரப்படுபவை யாவை? இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, திருமுழுக்கு, பகிரங்க வாழ்வு, பாஸ்கா கொண்டாட்டம், பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவியின் வருகை, இயேசுவின் இரண்டாம் வருகை போன்றவற்றை பகிரங்கத் திருச்சடங்கில் திருச்சபை நினைவு கூர்கின்றது.

32. மீட்பு வரலாற்றை திருப்பலி வழியாக நினைவுகூரும் பாடல் எது?

"ஆண்டவரே உம் பிறப்பும் திருமுழுக்கும் பாடுகளும்

சிலுவை இறப்பும் உயிர்ப்பும் விண்ணேற்பும் யாவையும்

மறைமுன்னோர்களையும் நாங்கள்

வேள்வியில் நினைக்கின்றோம் நாதா" (திருப்பலி முறை)

33. நற்கருணைப் பெற்றுக்கொள்வதன் வழியாகவே **இயேசுவோடுள்ள** உறவு முழுமையடைகிறது.

34. விண்ணக அனுபவம் தரும் அந்தியோக்கியன் வழிபாட்டு முறை பற்றிக்கூறுக? யூத பின்னணியில் உருவான அந்தியோக்கியன் வழிபாட்டு முறை ஏராளம் பழைய ஏற்பாட்டு அடையாளங்களை கொண்டுள்ளது. இறையனுபவத்தை ஆழப்படுத்துகின்றத் திருச்சடங்குகள் திருப்பலியில் நிறைந்துள்ளன. விண்ணகத்தை பூமியில் இறக்கிக் கொண்டு வருவது போன்ற பெரிய இறைபிரசன்னம் திருப்பலியின் போது இறைமக்களுக்கு அனுபவமாகின்றது. விண்ணகத்தை குறிக்கின்றதான தூயகமும், பலவண்ணங்களும், பலவகையான அடையாளங்களும் இறைபிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. திருப்பலியில் உள்ள பாடல்களும், மன்றாட்டுக்களுமெல்லாம் இசை வடிவிலானதாகும். அவ்வாறாக திருப்பலியால் ஒரு விண்ணக அனுபவம் பூமியில் உருவாகிறது.

35. அந்தியோக்கிய வழிபாட்டு முறையில் அதிகமாக காணப்படும் மறைபொருள் கருத்து என்ன? எல்லாம் வல்லவரும், மகிமை நிறைந்தவருமான கடவுள் ஒரு மறைபொருளென்றும், மனிதனுக்கு படைப்பாளரான கடவுளை அறிந்துகொள்ளவும், உட்கொள்ளவும் மனிதர்களுக்கு திறமையில்லை என்பதையும் குறிக்கின்ற அடையாளமே வழிபாட்டு முறையில் அதிகமாகவும் உள்ளன.

36. நற்கருணையில் இறைபிரசன்னம் என்பதை நாம் எவ்வாறு உணரமுடிகிறது? ஆதித்திருச்சபையில் அப்பம் பிட்கும் போது கடவுளின் பிரசன்னத்தை இறைமக்கள் அனுபவித்திருந்தனர். இன்று நற்கருணையின் வழியாக எல்லாம் வல்லவரான கடவுள் நம்மிடையே பிரசன்னமாயிருக்கிறார். நமது கண்களால் கண்டுணர முடியாத இறைபிரசன்னம் அப்ப இரசங்களின் வடிவத்தில் உணவாகவும், பானமாகவும் நற்கருணைப்பலியின் போது நம் உள்ளங்களில் எழுந்தருளி வருகின்றது. ஆண்டவர் நம்முடனே என்னும் அனுபவம் நற்கருணைப் பலியால் இறைமக்களுக்குக் கிடைக்கின்றது.

37. இயேசு நிறுவிய நற்கருணை பழைய ஏற்பாட்டு அடையாளங்களின் நிறைவாகும், குறிப்பு வரைக? 1. ஆபேல் தம் பலியால் நற்கருணையைக் குறிப்பிடுகின்றார். 2. தலைமைக்குருவான மெல்கிசதேக் அப்பரசங்களை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது நற்கருணையின் அடையாளமாகும். 3. முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஆட்டுக்குட்டியை பலிசெலுத்தியதன் வழியாக ஆபிரகாமின் வாளிலிருந்து ஈசாக்கு உயிர் தப்பினார். இந்த பலி நற்கருணை பலியைக் குறிக்கின்றது. 4. மோசே முட்புதரில் கண்ட இறைபிரசன்னம் நற்கருணையில் உள்ள இறை பிரசன்னத்தைக் குறிக்கின்றது. 5. அழிக்கும் தூதனின் கைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இஸ்ரயேல் மக்கள் பாஸ்கா ஆட்டினை அடித்தது நற்கருணையின் முன்னடையாளமாகும். 6. முதலாம் மாதம் 14-ஆம் நாள் நீங்கள் ஆட்டினை அடித்து பாஸ்கா கொண்டாட வேண்டும் என்று யோசுவா கூறியது நற்கருணையைக் குறிக்கின்றது. 7. சாமுவேல் இறைவாக்கினர் பால்குடி மாறாத ஆட்டுக்குட்டியைக் கொன்று நற்கருணையின் மறையுண்மையை வெளிப்படுத்தினார். 8. அதிதூயகத்தில் வைத்து ஏசாயாவுக்கு வானதூதர் அளித்த நெருப்புத்தழல் நற்கருணையின் அடையாளமாகும். 9. இன்பவனத்தில் ஆதாம் சுவைக்காத கனி நற்கருணையைக் குறிக்கிறது. 10. பாலைவனத்தில் இஸ்ரயேலர் உண்ட மன்னா நற்கருணையை குறிக்கிறது. 11. எசேக்கியேல் இறைவாக்கினர் தேரில் கண்ட மனுவுரு நற்கருணையில்

www.malankaralibrary.com

பிரசன்னமாயிருக்கும் கிறிஸ்துவைக் குறிக்கின்றது.

38. "நீங்கள் இந்த **அப்பத்தை** உண்டு **கிண்ணத்திலிருந்து** பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்" (1கொரி. 11:26).

39. திருப்பலியில் கலந்துகொண்டு நற்கருணைப் பெற்றுக்கொள்ள வேணிடியதன் விவிலியக் கோட்பாடு என்ன? "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்" (யோவான் 6:53). அதனால் திருப்பலியில் கலந்துகொள்பவர்கள் நற்கருணைப் பெற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றனர்.

40. நற்கருணை மற்றும் பாவமன்னிப்பு அருளடையாளங்களின் ஒப்புமை என்ன? நம்மில் ஏதேனும் பாவம் இருக்கிறது என்னும் உணர்வு ஏற்பட்டால் ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக்கொண்ட பின்னரே நற்கருணை உட்கொள்ள வேண்டும். மற்றச் சூழல்களில் நற்கருணை பலியில் வரும் பாவமன்னிப்பு செபம் வழியாக பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டு நற்கருணையை உட்கொள்ளலாம்.

41. திருப்பலியில் நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் இருப்பது எதைப் போன்றது? விருந்துக்குச் சென்று விருந்து உண்ணாமல் செல்வது போன்றதே நற்கருணை பலியாகின்ற விருந்தில் பங்குகொண்டு நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் செல்வது. ஆதலால் தக்க காரணமின்றி நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் விலகி நிற்பது கிறிஸ்துவோடும் அவருடைய உடலுதிரங்களோடும் நாம் கொள்கின்ற ஆதரவின்மையே ஆகும்.

42. திருப்பலி ஆரம்பத்தில் இயேசுக் கிறிஸ்துவின் கல்வாரி பலியைத் திருச்சபை நினைவு கூர்கின்ற பாடல் எது?

"உலகின் பாவம் யாவையும் தீர்த்திடவே ஆண்டவரே

தாமே பலியாய் மாறிய மெசியாவே நின் பலிபோல்

எங்களைத் தருகின்றோம் நாங்கள்

பலியிதை ஏற்றருளும் நாதா"

**43.** "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். **மானிடமகனுடைய** சதையை உண்டு அவருடைய **இரத்தத்தைக்** குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்" (யோவான் 6:53)

## பாடம் 12

## ஒப்புரவு

**பயிற்சி வினாக்கள்**

1. பாவமன்னிப்பின் அதிகாரத்தை திருத்தூதர்களுக்கு அதாவது திருச்சபைக்கு இயேசு அளித்தார் என்பதை மறைநூலை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

இறைமகனான இயேசு கிறிஸ்து தமது பகிரங்க வாழ்வின்போது பாவிகளான பலருக்கும் பாவமன்னிப்பு வழங்கியதாக மறைநூலில் நாம் வாசிக்கின்றோம். இயேசு பாவமன்னிப்பின் அதிகாரத்தைத் திருத்தூதர்களுக்கு அளித்தார்; அதாவது திருச் சபைக்கு அளித்தார். இயேசு பேதுருவிடம், "உன் பெயர் பேதுரு இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்றார் (மத்தேயு 16:18-19). மற்றொரு முறை இயேசு சீடர்களிடம் "மண்ணுலகில் நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்றார் (மத்தேயு 18:18).

இவ்வாறாக கட்டவும் அழிக்கவும் தேவையான அதிகாரத்தை இயேசு சீடர்களுக்கு அளித்தார். உயிர்த்தெழுந்த பின்னர் இயேசு சீடர்களின் மேல் ஊதி தூய ஆவியை வழங்கிக் கொண்டு "எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை

www.malankaralibrary.com

மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா" என்றார் யோவான் 20:23). இவ்வாறு இயேசு திருத்தூதர்களுக்கு அளித்த பாவமன்னிப்பின் அதிகாரமானது திருத்தூதர்களின் வழிவந்தவர்களான ஆயர்கள் வழியாகவும், குருக்கள் வழியாகவும் தொடர்கிறது. இயேசுவின் மீட்புப்பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்த இயேசு தூய ஆவியால் திருச்சபையை நிறுவினார். அதனால் இயேசுவின் பாவமன்னிப்பின் அதிகாரம் திருச்சபைக்கே அளிக்கப்பட்டிருக்கிறது. திருச்சபை வழியாக அந்த அதிகாரம் ஆயர்களுக்கும் அவர்கள் வழியாக குருக்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

2. குருவானவரோடு பாவம் அறிக்கையிடுவதன் வழியாக கடவுளோடும், திருச்சபை சமூகத்தோடும் பாவங்களை அறிக்கையிடுகிறோம் என்று கூறக் காரணம் யாது? குருவானவர் ஒரே நேரத்தில் திருச்சபையின் அதாவது இறைமக்களின் பிரதிநிதியும் இயேசுவின் பிரதிநிதியும் ஆவார். ஒருவர் குருவானவரிடம் பாவங்களை அறிக்கை யிடும்போது அவர் இயேசுவின் பிரதிநிதி என்னும் நிலையில் இயேசுவோடும், திருச் சபையின் பிரதிநிதி என்னும் நிலையில் திருச்சபை சமூகத்தோடும் அவர் பாவங்களை அறிக்கையிடுகிறார். குருவானவர் பாவமன்னிப்பு அளிக்கும் போது இயேசுவே பாவ மன்னிப்பு அளிக்கிறார். அதுபோன்று திருச்சபை சமூகம் பாவியானவரை மன்னித்து அவரை திருச்சபை சமூகத்தோடு ஒன்றிணைக்கிறது. இவ்வாறு திருச்சபையாகும் உடலோடு தொடர்பு படுத்திய பாவ அறிக்கையும், பாவ மன்னிப்பும் நடைபெறுகிறது.

3. பாவம் திருச்சபையாகிய உடலுக்கு கேடு விளைவிப்பது எவ்வாறு?

இயேசுவின் மறையுடலே திருச்சபை. உடலில் பல்வேறு உறுப்புக்கள் இருப்பது போன்று திருச்சபையாகும் உடலில் பல்வேறு நபர்கள் உள்ளனர். உடலில் ஏதேனும் ஒரு உறுப்புக்கு முறிவு ஏற்பட்டால் அது உடல் முழுவதையும் பாதிக்கும். உடல் முழுவதற்காகவே நாம் மருத்துவம் பார்க்கிறோம். முறிவு புண்ணானால் உடல் முழுவதும் வலி ஏற்படுகிறது. முறிவு குணமானால் உடல் முழுவதும் ஆறுதலடைகிறது.

எனவே திருச்சபையாகும் உடலில் உள்ள ஒருவரின் பாவம் அவருக்கு மட்டுமன்று திருச்சபை முழுவதற்கும் கேடுவிளைவிக்கிறது. பாவத்தில் விழுகின்ற ஒருவர் அவருக்கு மட்டும் கேடு விளைவிப்பதில்லை. மாறாக திருச்சபை உடல் முழுவதற்கும் கேடு விளைவிக்கவும் வலி ஏற்படுத்தவும் செய்கிறார். அதனால் பாவம் செய்த ஒருவர் மனம் வருந்தி பாவத்தை அறிக்கையிட்டு திருச்சபையின் கூட்டமைப்பில் ஒன்றிணைய வேண்டும். மனந்திரும்புகின்ற ஒரு பாவியைக் குறித்து திருச்சபை முழுவதும், விண்ணக தூதர்களும் மகிழ்ச்சியடைகின்றனர்.

4. ஒப்புரவு - மனமாற்றத்தின் அருளடையாளம் எவ்வாறு?

மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" (மத்தேயு 4:17) என்று கூறியே இயேசு தமது பகிரங்க வாழ்வை ஆரம்பித்தார். பாவத்துடன் விட்டு விடுதலும் கடவுளுடன் திரும்பி வருதலுமே மனமாற்றம். காணாமல் போன மகன் தந்தையிடமிருந்து அகன்று தாறுமாறாக வாழ்ந்து அனைத்தையும் இழந்த போது அவன் தன் தவற்றை உணர்ந்து மனமாற்றமடைந்தான். அவன் இவ்வாறு கூறினான்: "நான் புறப்பட்டு என் தந்தையிடம் போவேன்". எல்லா மனமாற்றத்திலும் நிகழ்வது இதுவேயாகும்.

பாவத்தைப் பற்றிய உணர்வால் பாவத்தைக் களைந்துவிட்டு இறையன்பில் அடைக்கலமாவதே மனமாற்றம் என்பதன் பொருள். இவ்வாறாக மனமாற்றத்தின் வழியாக கடவுளிடம் திரும்பிவர துணைபுரிகின்ற அருளடையாளமே ஒப்புரவு. அதனாலேயே ஒப்புரவை மனமாற்றத்தின் அருளடையாளம் என்று அழைக்கிறோம்.

5. ஒப்புரவு - ஒப்புரவின் அருளடையாளம் குறிப்பு வரைக?

பாவத்தை அறிக்கையிடும்போது ஒருவருக்கு கிடைக்கின்ற இறையருளே ஒப்புரவும், பாவமன்னிப்பும். கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக அமைவது ஒரே ஒரு கட்டளையாகும். அதுவே அன்பின் கட்டளை. அதனால் எல்லா பாவமும் அன்புக்கு எதிரானதாகும். பாவம் ஒருவரில் மூன்று விதமானப் பிரிவினையை உருவாக்கும். பாவம் நம்மை கடவுளிடமிருந்தும், சகோதரரிடமிருந்தும், நம்மிலிருந்தும் அகற்றுகிறது. ஒருவர் தன்னிடமும் சகோதரர்களிடமும், கடவுளிடமும் பாவத்தை அறிக்கையிடுதலையே ஒப்புரவு என்கிறோம்.

இவ்வாறாக பாவசங்கீர்த்தனம் என்னும் அருளடையாளத்தின் வழியாக மூன்று வகையான ஒப்புரவு

www.malankaralibrary.com

நடைபெறுகிறது. பாவசங்கீர்த்தனத்தின் வழியாக ஒப்புரவு அடையும்போது அவரிடமிருந்து மன அமைதியின்மை அகன்று இறைவனின் சமாதானமும், மகிழ்ச்சியும் வந்தடைகிறது.

பாவத்தை அறிக்கையிட்டு நல்லுறவு ஏற்படுத்துவதைக் குறித்து இயேசு கூறியதாவது : "நீங்கள் உங்கள் காணிக்கையை பலிபீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்" (மத்தேயு 5:23-24). பாவசங்கீர்த்தனத்தின் வழியாக பாவத்தை அறிக்கையிட்டு ஒப்புரவு அடைவதனால் பாவசங்கீர்த்தனம் ஒப்புரவின் அருளடையாளம் ஆகும்.

**குறுவினா விடைகள்**

1. திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை என்னும் புகுமுக அருளடையாளங்களின் வழியாக ஒருவருக்கு **இறைவாழ்வு** கிடைக்கின்றது.
2. மனிதன் இறைவாழ்வை இழந்து விடும் வாய்ப்பு எப்படி ஏற்படுகிறது? வலுவற்றதும், உடைந்து போகக்கூடியதுமான மண்பாண்டங்களிலேயே மனிதன் இந்த இறைவாழ்வை பாதுகாக்கின்றான். மனிதனின் பாவம் வழியாக இந்த இறைவாழ்வுக்கு தோய்வு ஏற்படவோ, அதனை இழந்து விடவோ வாய்ப்புண்டு.
3. இயேசு கிறிஸ்து பாவிகளுக்கு பாவமன்னிப்பு அளிக்க முடிந்தது ஏன்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உடலினுடையவும், ஆன்மாவினுடையவும் மருத்துவராதலால் தமது பகிரங்க வாழ்வின் போது ஏராளம் பாவிகளுக்கு பாவ மன்னிப்பு அளித்தார்.
4. இயேசுவின் பாவமன்னித்தல் திருப்பணி எவ்வாறு திருச்சபையில் தொடர்கின்றது? இயேசுவின் இந்த பாவமன்னித்தல் திருப்பணி தூய ஆவியின் வழியாக திருச்சபையில் தொடர்கின்றது.
5. உடலுக்கும் ஆன்மாவுக்கும் நலமளிக்கும் அருளடையாளங்கள் யாவை? மனிதன் இழந்த இறைவாழ்வை திரும்ப அளிப்பதும் உடலுக்கும் ஆன்மாவுக்கும் நலமளிப்பதுமான இரண்டு அருளடையாளங்களே ஒப்புரவும், நோயில்பூசுதலும் ஆகும்.
6. பாவம் என்றால் என்ன? கடவுள் மனிதனுக்கு அளித்த சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தீமையைத் தேர்ந்தெடுப்பதே பாவமாகும்.
7. பாவம் பற்றிய மதங்களின் அடிப்படை சிந்தனை என்ன? மனித இயல்பின் ஒரு பகுதியே பாவம். மக்களனைவரும் பாவிகள் என்பதும், பாவி தனது தவற்றை உணர்ந்து மனம் வருந்தும் போது கடவுள் அவனுக்கு பாவமன்னிப்பு அளிப்பார் என்பதும் எல்லா மதங்களின் அடிப்படையான சிந்தனை ஆகும்.
8. இந்து, முஸ்லீம் சமூகத்தினர் எவ்வாறு பாவமன்னிப்பு வேண்டினர்? இந்து மதப்படி கங்கை நதியில் நீராடுவதும், நோன்பிருந்து சபரிமலைக்கு செல்வதும், முஸ்லீம் சமூகத்தில் கடினமான நோன்பு நோற்பதும் இறைபரிவுக்கும், பாவமன்னிப்புக்குமேயாகும்.
9. யூத மக்கள் பாவ மன்னிப்புக்காக என்ன செய்தனர்? பழைய ஏற்பாட்டில் யூத மக்கள் பாவ மன்னிப்புக்காக பலி ஒப்புக்கொடுத்தனர்.
10. பாவமன்னிப்புக்காக திருமுழுக்கு யோவான் எவ்வாறு செயல்பட்டார்? புதிய ஏற்பாட்டில் பாவமன்னிப்புக்காக பாவங்களை அறிக்கையிட்டு மனம் வருந்தி திருமுழுக்குப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று திருமுழுக்கு யோவான் மக்களுக்கு அழைப்பு விடுத்தார். அதற்கேற்ப ஏராளமானோர் யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டனர்.
11. பரிசேயரான சீமோனின் வீட்டில் இயேசு பாவிப்பெண்ணுக்கு பாவமன்னிப்பு வழங்கியது எப்படி? பரிசேயரான சீமோனின் வீட்டில் இயேசு உண்பதற்கு அமர்ந்தபோது அந்நகரில் உள்ள பாவியான ஒரு பெண் இயேசுவின் அருகில் வந்தார். அவள் தன் கண்ணீரால் இயேசுவின் காலடிகளை நனைத்து தன் கூந்தலால் துடைத்து அவருடைய காலடிகளில் நறுமணத்தைலம் பூசினார். இயேசு அப்பெண்ணைப் பார்த்து "உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார் (லூக்கா 2:1-12).

www.malankaralibrary.com

12. இயேசு எவ்வாறு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை மன்னித்தார்? விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் அவளுடைய பாவங்களை மன்னித்துக்கொண்டு இயேசு "இனிமேல் பாவம் செய்யாதே" என்றார்.
13. இயேசு எவ்வாறு சக்கேயுவை மன்னித்தார்? இயேசுவை தமது வீட்டில் வரவேற்ற சக்கேயு தனது பாவங்களைக் குறித்து மனம் வருந்தி அதற்கு பரிகாரம் செய்வதாகக் கூறியபோது இயேசு அவனை பாவத்திலிருந்து மீட்பின் அனுபவத்திற்கு அழைத்துச் சென்றார் (லூக்கா 19:1-10).
14. இயேசு எவ்வாறு சிலுவையில் தொங்கிய கள்வனுக்கு இரக்கம் காட்டினார்? சிலுவையில் தொங்கியபடி மனம் வருந்திய கள்வனுக்கு இயேசு இரக்கம் காட்டி இன்பவனத்தின் அனுபவத்தை அளித்தார்.
15. இயேசு பாவமன்னிப்புக்காக பயன்படுத்திய உவமைகளுக்கு எடுத்துக்காட்டு கூறுக? காணாமல் போன மகன், காணாமல் போன ஆடு போன்ற உவமைகளின் வழியாக பாவமன்னிப்பின் அடிப்படையான சிந்தனைகளை இயேசு கற்பித்தார்.
16. இயேசு பாவமன்னிப்பின் அதிகாரத்தைத் யாருக்கு வழங்கினார்? இயேசு பாவமன்னிப்பின் அதிகாரத்தைத் திருத்தூதர்களுக்கு அளித்தார்; அதாவது திருச்சபைக்கு அளித்தார்.
17. இயேசு பேதுருவிடம் பாவமன்னிப்பு பற்றிக் கூறிய வார்த்தைகள் யாவை? இயேசு பேதுருவிடம், "உன் பெயர் பேதுரு இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்றார் (மத்தேயு 16:18-19).
18. "**மண்ணுலகில்** நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் **விண்ணுலகிலும்** தடைசெய்யப்படும். **மண்ணுலகில்** நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் **விண்ணுலகிலும்** அனுமதிக்கப்படும்" (மத்தேயு 18:18).
19. உயிர்த்த இயேசு திருத்தூதர்களுக்கு வழங்கிய பாவமன்னிப்பு அதிகாரம் என்ன? உயிர்த்தெழுந்த பின்னர் இயேசு சீடர்களின் மேல் ஊதி தூய ஆவியை வழங்கிக் கொண்டு "எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா" என்றார் யோவான் 20:23).
20. உயிர்த்த இயேசு வழங்கிய பாவமன்னிப்பு அதிகாரம் எவ்வாறு இன்றும் செயல்படுகிறது? இயேசு திருத்தூதர்களுக்கு அளித்த பாவமன்னிப்பின் அதிகாரமானது திருத்தூதர்களின் வழிவந்தவர்களான ஆயர்கள் வழியாகவும், குருக்கள் வழியாகவும் தொடர்கிறது. இயேசுவின் மீட்புப்பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்த இயேசு தூய ஆவியால் திருச்சபையை நிறுவினார். அதனால் இயேசுவின் பாவமன்னிப்பின் அதிகாரம் திருச்சபைக்கே அளிக்கப்பட்டிருக்கிறது. திருச்சபை வழியாக அந்த அதிகாரம் ஆயர்களுக்கும் அவர்கள் வழியாக குருக்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.
21. குருவானவர் யாருடைய பிரதிநிதியாக உள்ளார்? குருவானவர் ஒரே நேரத்தில் திருச்சபையின் அதாவது இறைமக்களின் பிரதிநிதியும் இயேசுவின் பிரதிநிதியும் ஆவார்.
22. ஒருவர் குருவானவரிடம் பாவங்களை அறிக்கையிடும்போது நிகழும் பிரதிநிதித்துவம் என்ன? ஒருவர் குருவானவரிடம் பாவங்களை அறிக்கையிடும்போது அவர் இயேசுவின் பிரதிநிதி என்னும் நிலையில் இயேசுவோடும், திருச்சபையின் பிரதிநிதி என்னும் நிலையில் திருச்சபை சமூகத்தோடும் அவர் பாவங்களை அறிக்கையிடுகிறார்.
23. திருச்சபையோடும் இயேசுவோடும் இணைந்த பாவமன்னிப்பு எப்படி? குருவானவர் பாவமன்னிப்பு அளிக்கும் போது இயேசுவே பாவமன்னிப்பு அளிக்கிறார். அதுபோன்று திருச்சபை சமூகம் பாவியானவரை மன்னித்து அவரை திருச்சபை சமூகத்தோடு ஒன்றிணைக்கிறது. இவ்வாறு திருச்சபையாகும் உடலோடு தொடர்பு படுத்திய பாவ அறிக்கையும், பாவ மன்னிப்பும் நடைபெறுகிறது.
24. எவ்வாறு திருச்சபையில் உள்ள ஒருவரின் பாவம் திருச்சபை முழுவதற்கும் கேடுவிளைவிக்கிறது? திருச்சபையாகும் உடலில் உள்ள ஒருவரின் பாவம் அவருக்கு மட்டுமன்று திருச்சபை முழுவதற்கும் கேடுவிளைவிக்கிறது. பாவத்தில் விழுகின்ற ஒருவர் அவருக்கு மட்டும் கேடு விளைவிப்பதில்லை.

www.malankaralibrary.com

மாறாக திருச்சபை உடல் முழுவதற்கும் கேடு விளைவிக்கவும் வலி ஏற்படுத்தவும் செய்கிறார்.

25. பாவம் செய்தவர் மனம் வருந்தி பாவ மன்னிப்பு பெறவேண்டியதன் அவசியம் என்ன? பாவம் செய்த ஒருவர் மனம் வருந்தி பாவத்தை அறிக்கையிட்டு திருச்சபையின் கூட்டமைப்பில் ஒன்றிணைய வேண்டும். மனந்திரும்புகின்ற ஒரு பாவியைக் குறித்து திருச்சபை முழுவதும், விண்ணக தூதர்களும் மகிழ்ச்சியடைகின்றனர்.

26. யூத மரபுப்படி பாவம் ஒரு **நோயாகக்** கருதப்பட்டது.

27. பாவம் செய்த மக்களை ஒரு **நோயாளியை** போன்று பாவித்து இரக்கத்தோடும் கருணையோடும் **கடவுள்** கனிவு கொள்கின்றார்.

28. இயேசு பாவிகளின் நல்ல மருத்துவர் என்பதை விளக்குக? ஒருவர் தன்னுடைய தவற்றின் வழியாக நோயாளியானாலும் அவரைத் தண்டிக்காது அவருக்கு மருத்துவம் பார்க்கிறார். தவறுக்கு தண்டனையன்று, மாறாக மருத்துவமும், நலனுமே முதன்மையான சிந்தனை. திருச்சபை தம் மக்களின் பாவங்களை நோயின் ஆரம்பமாகக் கருதி அவர்களுக்கு மருத்துவம் பார்க்க விரும்புகிறது. அது நோயாளியைத் தண்டிப்பதற்கு அன்று மாறாக நலன் அளிக்கவும், மீட்பளிக்கவுமேயாகும். இதற்காகவே இயேசு நல்ல மருத்துவராக வந்தார்.

29. கிறிஸ்து நீதிபதியா மருத்துவரா? உலகத்திற்கு தீர்ப்பளிக்கின்ற நீதிபதி என்பதைவிட மக்களை உடல் நோயிலிருந்தும் ஆன்மீக நோயிலிருந்தும் விடுதலையளித்து நிலை வாழ்விற்கு வழிநடத்துகின்ற மிகப்பெரிய மருத்துவரே கிறிஸ்து.

30. திருச்சபை பாவத்தை எவ்வாறு புரிந்துகொள்கிறது? அன்பின் மீறுதலே பாவம், திருச்சபை பாவத்தை இறையன்போடும் பிறரன்போடும் தொடர்புபடுத்தியே புரிந்துகொள்கிறது.

31. பாவம் செய்தேன் என்னும் திட உணர்வு பற்றிக்கூறுக? ஒருவர் தீமை அல்லது பாவம் செய்தார் என்னும் திட உணர்வு அவருக்கு இருப்பின் அது அவருக்கு கவலையையும், வருத்தத்தையும் உருவாக்கும். அவ்வாறாக இறையன்பிற்கு எதிராகவும், சகோதர அன்பிற்கு எதிராகவும் பாவம் செய்தேன் என்னும் திட உணர்விலிருந்து உருவாகின்ற கவலையும் வருத்தமுமே உண்மையான மனம் வருந்துதல்.

32. இயேசுவின் காலடிகளை கழுவிய பாவியான பெண் மனம் வருந்தியது பற்றிக் கூறுக? பாவியான ஒரு பெண் இயேசுவின் காலடிகளை தன் கண்ணீரால் கழுவியதும் தன் கூந்தலால் துடைத்ததும், பின்னர் அவருடைய காலடிகளில் நறுமணத்தைலம் பூசியதும் அவருடைய பாவத்தைப் பற்றிய ஆழமான உணர்விலிருந்து உருவான கவலைகளுடையவும் வருத்தத்தினுடையவும் அடையாளங்களாகும்.

33. ஒப்புரவை மனம் வருந்துதலின் அருளடையாளம் என்பது ஏன்? பாவ உணர்வும், அதிலிருந்து உருவாகின்ற மனவருத்தமும் ஒப்புரவின் அடிப்படையான பகுதிகளானதால் ஒப்புரவை மனம் வருந்துதலின் அருளடையாளம் என்று அழைக்கிறோம்.

34. "**மனம்** மாறுங்கள், ஏனெனில் **விண்ணரசு** நெருங்கி வந்துவிட்டது" (மத்தேயு 4:17)

35. மனமாற்றத்தின் அருளடையாளம் என்பது யாது? ஒப்புரவு

36. காணாமல் போன மகன் பாவ அறிக்கை செய்தது எப்படி? காணாமல் போன மகன் தனது தவற்றை உணர்ந்து மனமாற்றமடைந்து தந்தையிடம் திரும்பி வந்தார். அவன் தந்தையிடம் தன் பாவங்களை அறிக்கையிட்டான். "அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன். உம்முடைய கூலியாட்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்" (லூக்கா 15:18-19). பாவங்களை அறிக்கையிட்ட மகனை தந்தை கட்டித்தழுவி முத்தமிட்டு வரவேற்றார்.

37. பாவத்தை அறிக்கையிடுவது பற்றி விவிலியம் கூறுவது என்ன? பாவத்தை அறிக்கையிடுவது பாவமன்னிப்பு பெறுதலுக்கான அடிப்படையான செயலாக திருச்சபை கருதுகின்றது (திருப்பாடல்கள் 32:3-5). யாக்கோபு தனது திருமுகத்தில் இவ்வாறு கூறுகிறார் : "ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்துகொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள்" (யாக்கோபு 5:16).

www.malankaralibrary.com

38. பாவ சங்கீர்த்தனம் என்பதன் பொருள் என்ன? ஒப்புரவிற்கு பாவ சங்கீர்த்தனம் என்ற பெயரும் உண்டு. பாவசங்கீர்த்தனம் என்ற வார்த்தையின் பொருள் அறிக்கையிடுதல்' என்பதாகும்.

39. ஒப்புரவை அறிக்கையிடுதலின் அருளடையாளம் என்பது ஏன்? ஒருவர் தனது தவறுகளைப் பற்றிய உணர்வையும் மனவருத்தத்தையும் மனம் திரும்புதலுக்கான விருப்பத்தையும் அதிகாரபூர்வமாக அறிக்கையிடுதலில் வெளிப்படுத்துகிறார். அறிக்கையிடுதல் ஒப்புரவின் அடிப்படைக் கூறாக இருப்பதால் ஒப்புரவை அறிக்கையிடுதலின் அருளடையாளம் என்கிறோம்.

40. பாவத்தை அறிக்கையிடும்போது ஒருவருக்கு கிடைக்கின்ற **இறையருளே** ஒப்புரவும், **பாவமன்னிப்பும்.**

41. பாவத்தை அறிக்கையிட்டு ஒப்புரவு அடைவதன் விவிலியக்கோட்பாடு என்ன? "நீங்கள் உங்கள் காணிக்கையை பலிபீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்" (மத்தேயு 5:23-24).

42. ஒப்புரவை பாவமன்னிப்பின் அருளடையாளம் என்பது ஏன்? பாவ உணர்வு, மனவருத்தம், மனமாற்றம் இவற்றின் வழியாக ஒருவர் பாவங்களை அறிக்கையிடும்போது அவருக்குக் கிடைக்கின்ற இறையருளே பாவமன்னிப்பு. பாவியான பெண் ஆண்டவரின் முன்னிலையில் கண்ணீரால் அவருடைய காலடிகளை கழுகி அவள் தன் பாவ நிலையை அறிக்கையிட்டாள். அப்போது இயேசு "உன்னுடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டிருக்கின்றன" என்று கூறி அவளுக்கு பாவ மன்னிப்பு அளித்தார். அவ்வாறு அவள் மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும் திரும்பிச் சென்றாள். ஒருவர் ஒப்புரவு அருளடையாளத்தில் கடவுளுடையவும், திருச்சபையினுடையவும் பிரதிநிதியான குருவானவரோடு பாவங்களை அறிக்கையிடும்போது அவர் பாவமன்னிப்பு பெற்று மகிழ்ச்சியும் சமாதானமும் அனுபவிக்கிறார். எனவே ஒப்புரவை பாவமன்னிப்பின் அருளடையாளம் என்கிறோம்.

43. ஒப்புரவு பற்றி மலங்கரைத் திருச்சபை கற்பிப்பது என்ன? கத்தோலிக்க மரபுபடி ஒருவர் கனமான பாவம் செய்தால் குருவானவரிடம் பாவங்களை அறிக்கையிட்டு பாவமன்னிப்பு பெற்றுக்கொண்ட பின்னரே நற்கருணை உட்கொள்ள வேண்டும். அதனால் எப்போது ஒப்புரவு நடத்த வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் முடிவெடுக்க வேண்டும். கனமான பாவம் எதுவும் செய்யாமலிருந்தால் மட்டும் ஆன்ம சோதனை நடத்தி மனம் வருந்தி திருப்பலியின் இடையே பாவமன்னிப்பு பெற்றுக்கொண்டு நற்கருணை உட்கொள்ளலாம். கத்தோலிக்கத் திருச்சபையின் பொதுவான சட்டத்தின்படி ஆண்டிற்கொரு முறையேனும் ஒப்புரவு நடத்தி நற்கருணை பெற்றுக்கொள்ள வேண்டும். மட்டுமன்று எல்லா நோன்பு காலங்களிலும் முடிந்த அளவு ஒப்புரவு நடத்தி நற்கருணை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திருச்சபை நினைவூட்டுகின்றது. அடிக்கடி ஒப்புரவு நடத்துவதன் வழியாக திருச்சபை மக்கள் ஆன்மீக வாழ்வில் வளர்ந்து வர வேண்டும் என்பதே திருச்சபையின் ஆசை. அது போன்று பிறந்தநாள், திருமண நாள் போன்ற தனிநபர் திருநாட்களிலும் ஒப்புரவு நடத்தி நற்கருணை பெற்றுக்கொள்வது ஆசீர் மிகுந்ததாகும்.

44. ஒப்புரவு அருளடையாளத்திற்கும் உடல் உள்ள நோய்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? பாவம் செய்த ஒருவர் எப்போதும் குற்ற உணர்வோடு வாழ்கிறார். குற்றவுணர்வும், சமாதானமின்மையும் பலவேளைகளிலும் உடல் நோய் உருவாக காரணமாய் அமைகிறது. ஆனால் ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக ஒருவர் கடவுளுடைய கருணையும், அன்பும் பெற்றுக்கொள்வதன் வழியாக ஆன்மீக அளவிலும், மன அளவிலும் விடுதலை அடைகிறார். உளவியல் சம்மந்தமான ஆற்றுப்படுத்தல் மனதின் பிரச்சினைகளிலிருந்து விடுபட துணை செய்தாலும் ஆன்ம விடுதலையோ, பாவ மன்னிப்போ, இறையருளோ அளிக்க துணைபுரியாது. ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக மட்டுமே ஒருவருக்கு இறையருள் அளிக்கின்ற பாவமன்னிப்பும், ஆன்மீக விடுதலையும், சமாதானமும் பெற்றுக்கொள்ள முடியும்.

45. பாவங்களுக்குப் பரிகாரமாக அர்ப்பணிக்க கண்ணீர் துளிகள் மட்டுமே உள்ளன என்று கூறி பாவமன்னிப்புக்காக வேண்டுகின்ற பாடல் எது?

"என் பாவத்தில் நான் சாகும்

www.malankaralibrary.com

அவலம் நிகழாது இறைவா நீர்
காத்தருளிடுவீர்
கண்ணீரேற்றருள்வீர்
மறியோ மாடிடபம் எதுமோ
வெண்புறாவின் சிறு குஞ்சதுமோ
பொருத்தனையாய் நான்
செலுத்துகிறேனில்லை
சீயோன் மனையகமாய் வந்தோள்
கணிகை சிந்திய கண்ணீர்போல்
என் கண்ணீரும்
கனிவுடனேற்றருளும்
திருமகனின் பேரன்பாலும்
மாதாவின் வேண்டுதலாலும்
ஹாலேலூயா பாவம் பொறுத்தருள்வீர்". (அருளடையாளம்)

**46.** "என் குற்றத்தை நான் **அறிக்கையிடுகிறேன்.** என் பாவத்தின் பொருட்டு நான் **அஞ்சுகிறேன்".** (திருப்பாடல்கள் 38:18)

பாடம் 13

## நோயில்பூசுதல்

பயிற்சி வினாக்கள்

1. நோயில்பூசுதலின் புதிய ஏற்பாடு பின்னணிகளை விவரி?

இயேசுநாதர் பாலஸ்தீனா முழுவதும் சென்று நற்செய்தி பறைசாற்றவும் ஏராளம் நோயாளிகளை குணப்படுத்தவும் செய்தார் என்று மறைநூல் சான்று பகர்கின்றது. நோயாளிகளுக்கு குணமளிக்கும் செயல் விண்ணரசின் அடையாளமாகவே ஆண்டவர் கற்பித்தார். இறையரசு பற்றிய நற்செய்தியும் நோய்களிலிருந்துள்ள விடுதலையும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. இயேசு தம் சீடர்களுக்குத் தீய ஆவிகளை ஓட்ட அதிகாரம் கொடுத்தார் (மத்தேயு 10:1). அதன் வழியாக சீடர்கள் தீய ஆவிகளை ஓட்டவும், நலம் குன்றியவர்களைக் எண்ணெய் பூசி குணமாக்கவும் செய்தனர் (மத்தேயு 10:8). அதுபோன்று 72 சீடர்களை அனுப்பியபோதும் இயேசு அவர்களிடம் நீங்கள் ஏதேனும் நகருக்குச் சென்றால் அங்கிருக்கும் நோயாளிகளுக்கு நலமளித்து இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்று அறிவியுங்கள் என்றார்.

திருத்தூதரான புனித யாக்கோபு நோயில்பூசுதலைக் குறித்தும் அதன் வழியாகக் கிடைக்கின்ற கொடைகளைக் குறித்தும் கூறுகிறார். "உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய்பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்பு பெறுவார்" (யாக்கோபு 5:14-15). பாவத்திற்கும் நோய்க்கும் இடையேயான தொடர்பு புதிய ஏற்பாடு முழுவதும் காணமுடிகிறது. பாவத்தின் பலனாகவே நோய் வருவதால் கிறிஸ்துவின் பெய ரால் நடத்துகின்ற நோயில்பூசுதல் வழியாக ஒருவருக்கு நோன்பிலிருந்து விடுதலையும், பாவமன்னிப்பும் கிடைக்கின்றது. இயேசு முடக்குவாதமுற்றவரின் பாவத்தை மன்னித்து அவருக்கு நோயிலிருந்து விடுதலையளித்ததாக நற்செய்தியில் நாம் வாசிக்கின்றோம் (மாற்கு 2:1-5).

2. நோயில்பூசுதலின் அடையாளங்களை தெளிவுபடுத்துக?

அருளடையாளங்களுக்கு பயன்படுத்தும் ஒவ்வொரு பொருள்களுக்கும் உருவக அடையாளங்கள்

www.malankaralibrary.com

உண்டு. நோயில்பூசுதல் அடையாளத்தில் பயன்படுத்தப்படும் எண்ணெய் ஆசீர்வதிக்கப்பட்ட ஒலிவெண்ணெய் ஆகும். திருச்சபைத் தந்தையான தெர்த்தூல்லியன் (கி.பி. 160-220) பின்வருமாறு கூறுகிறார்: "புனிதத் தைலத்தால் நோயுற்றவர் பூசப்படும்போது அவருடைய ஆன்மா தூய்மைப்படுத்தப்படுகிறது". நோயாளி கிறிஸ்துவின் உடலின் உறுப்பாதலால் அவரைக் குறித்து திருச்சபை மக்களனைவரும் ஆவலும், அக்கரையும், கவனமும் உள்ளவர்களென்றும் நோயாளி ஆன்மீகமாகவும், உடல்நலத்திலும் குணமடைவதே திருச்சபையின் குறிக்கோள் என்பதுமான உண்மைகளை இந்த புனிதத்தைலம் பூசுதல் திருச்சடங்கு குறிக்கின்றது. நோயாளியை பலரும் சந்தித்து செபங்களால் ஆறுதல் கூறவும், அவருக்கு ஆன்மீகமான பல அறிவுரைகளை வழங்குவதும் மேற்சொன்ன கருத்தை தெளிவுபடுத்துகிறது. இந்த அன்புறவு மனப்பாங்கு நோயாளிக்கு சமாதானமும் மகிழ்ச்சியுடன் இறப்பை வரவேற்கும் ஆற்றலும் அனைத்திற்கும் மேலாக முழுமையாக இறையருளும் வழங்கும் என்பதில் ஐயமில்லை. சுருங்கக்கூறின் பாவமன்னிப்பு அதாவது பாவத்திலிருந்து விடுதலை, இறப்பின் மேல் வெற்றி, நிலைவாழ்வின் வாயில், தூய ஆவியின் வருகை என்பனவற்றின் அடையாளமாக நோயில்பூசுதல் திகழ்கிறது (யாக்கோபு 5:20).

3. கந்தலோ திருச்சடங்கு என்றால் என்ன?

குருக்களுடையவும், ஆயர்களுடையவும் நோயில்பூசுதல் திருச்சடங்கிற்கு "கந்தலோ திருச்சடங்கு" என்று பெயர். 'கந்தலோ' என்னும் சுறியானி வார்த்தைக்கு 'திரிகள்' என்பது பொருள். திரிகளை எரியச் செய்துகொண்டு ஆரம்பிக்கின்ற திருச்சடங்காதலால் இப்பெயர் பெற்றது. கந்தலோ திருச்சடங்கை பல குருக்கள் சேர்ந்து ஒரு கொண்டாட்டமாகவே நடத்துவர்.

குறுவினா விடைகள்

1. நோயில்பூசுதல் என்றால் என்ன? நோயாளி ஒருவருக்கு இறையருளை அளித்து அவரை நோயிலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுவிக்கின்ற அருளடையாளமே நோயில்பூசுதல். இறப்பதற்கு முன்னால் ஒருவருக்கு இவ்வருளடையாளம் அளிக்கப்படுகிறது.
2. 'நோயில்பூசுதல்' எவ்வாறு திருச்சபை முழுவதும் நடத்துகின்ற திருச்சடங்கு எனப்படுகிறது? 'நோயில்பூசுதல்' என்னும் பெயருக்கேற்ப இது நோயாளிக்கு மட்டுமே அளிக்கின்ற ஒரு அருளடையாளமாகும். இது திருச்சபையின் ஒரு உறுப்பினரின் நலனுக்காக திருச்சபை முழுவதும் நடத்துகின்ற ஒரு திருச்சடங்காகும். நோயாளிகளுக்கு திருச்சபையின் பெயரால் புனிதத் தைலம் பூசி அருட்பொழிவு செய்யும் அடையாளமே இது.
3. திருத்தூதர் யாக்கோபு நோயில்பூசுதலைக் குறித்து கூறுவது என்ன? "உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய்பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்பு பெறுவார்" (யாக்கோபு 5:14-15).
4. நோயில்பூசுதல் அடையாளத்தில் பயன்படுத்தப்படும் எண்ணெய் எது? ஆசீர்வதிக்கப்பட்ட ஒலிவ எண்ணெய்
5. தெர்த்துல்லியன் நோயில்பூசுதலைக் குறித்து கூறுவது என்ன? "புனிதத் தைலத்தால் நோயுற்றவர் பூசப்படும்போது அவருடைய ஆன்மா தூய்மைப்படுத்தப்படுகிறது".
6. மலங்கரைத் திருச்சபையில் எப்போது நோயில்பூசுதல் வழங்கப்படுகிறது? திருச்சபை உறுப்பினருள் ஒருவர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்தால், அவர் சுய நினைவை இழக்கும் முன்னரே அவருக்கு நோயில்பூசுதல் நடத்தி நற்கருணை கொடுக்கும் வழக்கம் மலங்கரைத் திருச்சபையில் இருந்து வருகிறது.
7. மலங்கரைத் திருச்சபையில் எங்கே நோயில்பூசுதல் மன்றாட்டுகள் நடத்தப்படுகிறது? மலங்கரை வழிபாட்டு முறைப்படி நோயில்பூசுதல் நோயாளி படுத்திருக்கும் அறையிலோ அல்லது அதற்கடுத்த அறையிலோ நடத்தப்படுகிறது.
8. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதல் மன்றாட்டுகள் யாவை? இரக்க மன்றாட்டு, பாவ மன்னிப்பு,

www.malankaralibrary.com

விண்ணரசின் மகிழ்ச்சி போன்றவையே நோயில்பூசுதல் மன்றாட்டுக்களில் காணப்படுகிறது.

9. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதல் திருச்சடங்களை குருவானவர் எவ்வாறு ஆரம்பிக்கிறார்? துன்புறுபவர்களை இரக்கமுடன் கண்ணோக்கவும், நோயாளிகளைக் குணப்படுத்தவும், மனத்துயரால் வாடுவோர்க்கு ஆறுதலளிக்கவும், தூய திரித்துவத்துடன் மன்றாடியவாறே குருவானவர் நோயில்பூசுதல் திருச்சடங்களை ஆரம்பிக்கிறார்.

10. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதல் திருச்சடங்கு நடத்தப்படும் முறையை விளக்குக? துவக்க மன்றாட்டு, திருப்பாடல்கள், ஆயத்த மன்றாட்டு, பரிந்துரை மன்றாட்டு, தூப மன்றாட்டு போன்ற மன்றாட்டுக்களுக்குப் பின்னர் மறைநூல் வாசிக்கப்படுகிறது. பின்னர் மார் யாக்கோபின் மன்றாட்டு சொல்லப்படுகிறது. இது நோயாளியின் நலனுக்காக சமூகம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து மன்றாடுகின்ற மன்றாட்டாகும். அவ்வேளையில் குருவானவர் நோயாளியின் தலையில் கைவைத்துக் கொண்டு மன்றாட்டு சொல்கிறார். தொடர்ந்து நோயாளி பாவசங்கீர்த்தன செபம் சொல்லி பாவசங்கீர்த்தனம் நடத்துகிறார். பாவசங்கீர்த்தன செபம் சொல்ல நோயாளிக்கு இயலவில்லையெனில் மற்றொருவர் செபம் சொல்லிக்கொடுக்கவும் நோயாளி தன் பாவங்களை எண்ணி மனவருத்தத்தோடு பாவமன்னிப்புக்காக மன்றாடுகிறார். பாவசங்கீர்த்தனத்திற்குப் பின் தைலம்பூசுதல் திருச்சடங்கு நடத்தப்படுகிறது. நோயில்பூசுதல் திருச்சடங்கிற்குப் பின்னர் இறையன்னை, புனிதர்கள் ஆகியோரின் புகழ்மாலையும், இறுதி ஆசீர்வாதமும் அளிப்பதுடன் திருச்சடங்கு முடிவடைகிறது.

11. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதல் திருச்சடங்கில் மார் யாக்கோபின் மன்றாட்டின் உள்ளடக்கம் என்ன? மார் யாக்கோபின் மன்றாட்டு நோயாளியின் நலனுக்காக சமூகம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து மன்றாடுகின்ற மன்றாட்டாகும். சீமோன் பேதுருவின் மாமியாரை இயேசு குணப்படுத்தியவுடன் அவர் எழுந்து இயேசுவுக்கு பணிவிடை செய்தார். அதுபோன்று இந்த நோயாளியையும் குணப்படுத்தி உமக்கு பணிவிடை செய்ய துணைபுரிய வேண்டுமென்று அனைவரும் சேர்ந்து இரக்கம் நிறைந்த ஆண்டவரிடம் மன்றாடுகின்றனர்.

12. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதல் திருச்சடங்கில் பாவசங்கீர்த்தனம் நடத்தப்படும் முறை பற்றிக் கூறுக? நோயில்பூசுதல் திருச்சடங்கில் நோயாளி பாவசங்கீர்த்தன செபம் சொல்லி பாவசங்கீர்த்தனம் நடத்துகிறார். பாவசங்கீர்த்தன செபம் சொல்ல நோயாளிக்கு இயலவில்லையெனில் மற்றொருவர் செபம் சொல்லிக்கொடுக்கவும் நோயாளி தன் பாவங்களை எண்ணி மனவருத்தத்தோடு பாவமன்னிப்புக்காக மன்றாடுகிறார்.

13. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதல் திருச்சடங்கில் பாவமன்னிப்புக்கான இரு மன்றாட்டுக்கள் யாவை? பாவமன்னிப்புக்காக இரண்டு மன்றாட்டுக்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டுள்ளன. முதல் மன்றாட்டில் உடல் உள்ளங்களின் வழியாக அவர் செய்த பாவங்களை எண்ணி மனவருத்தமுற்று பாவமன்னிப்பு வேண்டுகிறார். இரண்டாவது மன்றாட்டில் ஐம்புலன்களான கண், காது, மூக்கு, வாய், மெய் இவை வழியாகவும், அகப்புலன்களாகிய உணர்ச்சி, சிந்தனை, அறிந்துகொள்ளும் தன்மை, ஞானம், பகுத்தறிவு இவை வழியாகவும் இவர் செய்த பாவங்களை எண்ணி மனவருத்தமுற்று பாவமன்னிப்பு வேண்டுகிறார்.

14. மலங்கரைத் திருச்சபையில் நோயில்பூசுதலில் தைலம்பூசுதல் திருச்சடங்கு பற்றிக் கூறுக? நோயில்பூசுதலில் பாவசங்கீர்த்தனத்திற்குப் பின் தைலம்பூசுதல் திருச்சடங்கு நடத்தப்படுகிறது. குருவானவர் பெருவிரலில் தைலம் தொட்டு பின்வரும் மன்றாட்டைக் கூறிக்கொண்டு நோயாளியின் நெற்றியில் மூன்றுமுறை சிலுவை வரைகிறார். நோயாளியின் நெற்றியில் சிலுவை வரையும்போது, “தந்தையுடையவும் (+) மகனுடையவும் (+) தூய ஆவியுடையவும் திருப்பெயரால் நீ தூய்மையடைந்து புனிதப்படுவாயாக. மனதோடும், மனதில்லாமலும், அறிந்தும் அறியாமலும் நீ செய்த பாவங்களும் உன் கடன்களும் மன்னிக்கப்படுவனவாக. எல்லா தீயசிந்தனைகளும், அலகைக்கேற்ற செயல்களும் உன்னிடமிருந்து மாய்க்கப்படுவதாக” என மன்றாடுகிறார். நெற்றியில் தைலம் பூசிய பின்னர் பிற உறுப்புக்களில் தைலம் பூசப்படுகிறது.

15. 'கந்தலோ' என்னும் சுறியானி வார்த்தைக்கு என்ன பொருள்? 'திரிகள்'

www.malankaralibrary.com

16. ஒப்புரவு அருளடையாளம் எவ்வாறு முழுமையடைகிறது? திருமுழுக்கு, உறுதிபூசுதலில் முழுமையடைவது போன்று ஒப்புரவு, நோயில்பூசுதலில் முழுமையடைகிறது. இறப்பின் பயத்தை அகற்றி இயேசுகிறிஸ்து இன்று அருளடையாளத்தின் வழியாக நோயாளிக்கு ஆறுதலளித்து திடப்படுத்துகிறார்.

17. நோயில்பூசுதலின் வழியாக நோயாளிகளுக்கு பாவமன்னிப்பும், நோயிலிருந்து விடுதலையும் கிடைக்குமென்று திருச்சபை பாடும் பாடல் எது?

"விலைதருவேன் தருவேன் தைலம் தாரும்

என்றே வணிகனிடம் கேட்கும் விலைமாதாகும்

பேதையின் குரலினிதே தாரும் தரமுயர்

நல் தைலம் யானது வென்கண்ணீருடனே

இறைமகனின்-னல்பூங்குழல் சார்த்திடுவேன்

நன்னறு தைலமதா லெந்தன் குற்றம் குறைகள் போக்கிடுவா

ரென்றவரிடமாய் சரண்புகுகின்றேனே

தைலமுடன் வந்தோள் பாவை தன்

விசுவாசம் கண்டபரன் ஹாலேலூயா

பொறுத்தருள் செய்தாரே".

18. "ஒருவருக்கொருவர் **பாவங்களை** அறிக்கை செய்து கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது **குணமடைவீர்கள்.** நேர்மையாளருடைய வல்லமைமிக்க மன்றாட்டு பயன்விளைவிக்கும்". (யாக். 5:16) .

பாடம் 14

## குருத்துவம்

**பயிற்சி வினாக்கள்**

1.பழைய ஏற்பாட்டில் குருத்துவம் பற்றிய கண்ணோட்டம் என்ன?

யூத வரலாற்றின் முதற்கால கட்டத்தில் 'குருக்கள்' என தனிப்பிரிவினர் இருந்திருக்கவில்லை. ஆதாமின் புதல்வர்களான காயினும், ஆபேலும் ஆண்டவருக்கு பலி ஒப்புக்கொடுத்து இறை வழிபாடு நடத்தியதாக மறைநூலில் நாம் வாசிக்கிறோம். நமது குல முதல்வர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்கள் பலிபீடங்களை அமைத்து பலி ஒப்புக்கொடுத்தனர். குடும்பத்தின் தலைவர் என்னும் நிலையிலேயே அவர்கள் பலி ஒப்புக்கொடுத்திருந்தனர். குடும்பத்தின் தலைமகன்கள் குடும்பத்துக்காகக் குருத்துவச் செயல்பாடுகளை செய்து வந்தனர். பின்னர் மோசேயின் காலத்தில் இஸ்ரயேலரிடையே இறைவனின் கட்டளைப்படி குருத்துவம் வெளிப்படையாக நிறுவப்பட்டது. இறை வழிபாட்டுக்காக தனிச்சட்டங்கள் இயற்றப்பட்டன.

இஸ்ரயேலரிடையே குருத்துவத்திற்கு மூன்று நிலைகள் இருந்தன. அவை முறையே தலைமைக்குரு, குரு, லேவியர் என்பனவாகும். மோசேயின் சகோதரனான ஆரோனையும், அவருடைய புதல்வர்களையும் கடவுள் குருத்துவப் பணிபுரிய அழைத்தார். இறைக்கட்டளைப்படி மோசே அவர்களை குருக்களாக அருட்பொழிவு செய்தார் (எண்ணிக்கை 18:1-7). குருக்களுக்கு துணைபுரிய லேவியர்களையும் நியமித்தார். ஆனால் அவர்கள் அருட்பொழிவு செய்யப்படவில்லை. தலைமைக் குருக்களும், குருக்களும் எண்ணெய் பூசி அருட்பொழிவு செய்து திருநிலைப்படுத்தப்பட்டார்கள் (லேவியர் 8, விடுதலைப்பயணம் 29). பொதுவாக குருக்கள் பலி செலுத்தி தூபம் அர்ப்பித்து இறைவெளிப்பாட்டிற்கு சான்றுபகரவும் செய்து வந்தனர்.

2.குருத்துவத்தின் முழுமை இயேசு கிறிஸ்துவில் அடங்கியிருக்கிறது விவரி?

இயேசு கிறிஸ்துவின் வருகையால், முன்னடையாளமாக நடத்தப்பட்டு வந்த யூதபலியும், யூதகுருத்துவமும் முடிவுக்கு வந்தது. பின்னர் புதிய உடன்படிக்கையின் படியான பலியையும்,

www.malankaralibrary.com

குருத்துவத்தையும் இயேசுகிறிஸ்து நிறுவினார். முழுக்கடவுளான இயேசுகிறிஸ்து தமது மனித அவதாரத்தின் வழியாக முழு மனிதனாகவும், தந்தைக் கடவுளுக்கும் மனித இனத்துக்கும் இடையேயான ஒரே இணைப்பாளராகவும் மாறினார். பழைய ஏற்பாட்டில் குருக்களும், அரசர்களும், இறைவாக்கினர்களும் அருட்பொழிவு செய்யப்பட்டனர். யூதமக்கள் நிலையான மெசியாவை அதாவது அருட்பொழிவு செய்யப்பட்டவரை எதிர்பார்த்திருந்தனர். இயேசு யூதமக்கள் எதிர்பார்த்திருந்த மெசியா அதாவது அருட்பொழிவு செய்யப்பட்டவராதலால் அவர் நிலையான குருவும், இறைவாக்கினரும், அரசரும் ஆவார். இயேசுகிறிஸ்து தந்தைக் கடவுளுக்கும் மனித இனத்துக்கும் இடையேயான ஒரே இணைப்பாளராதலாலும் அவர் மெசியாவானதாலும் அவரே உண்மை குருவானவர். உண்மைக் குருத்துவம் இயேசுவின் குருத்துவமே. எனவே இயேசுவில் மட்டுமே ஒப்பற்றதும் நிறைவானதுமான குருத்துவம் நிலைகொள்கிறது.

3.பொதுக்குருத்துவத்திற்கும், பணிக்குருத்துவத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட விசுவாசிகள் தூய ஆவியினால் அருட்பொழிவு செய்யப்பட்டவர்களாதலால் மெசியாவைப் போன்று அவர்கள் ஒவ்வொருவரும் குருவும், இறைவாக்கினரும், அரசருமாவர். மெசியாவைப் போன்று எல்லா விசுவாசிகளும் இந்த கடமைகளை நிறைவேற்றவேண்டும். அதனாலேயே திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் மெசியாவின் குருத்துவத்தில் பங்குகொள்கின்றனர் என்று கூறப்படுகின்றது. தூய திருமுழுக்கின் போது தைலம் பூசுவதும், மகுடம் அணிவித்தலும், பலிபீடத்தை முத்தம் செய்வதும் இதன் அடையாளங்களாகும். "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள்" *(1பேதுரு 2:9)* என்று திருச்சபை உறுப்பினர்களைக் குறித்து புனித பேதுருவின் திருமுகத்தில் நாம் காண்கின்றோம். இதனாலேயே 'குருத்துவ நல்வரமுடைய உமது திருச்சபையை ஆசீர்வதித்தருளும் என்று திருப்பலியில் நாம் மன்றாடுகிறோம். இவ்வாறாக திருச்சபையில் அனைவருக்கும் உள்ள குருத்துவத்தை பொதுக்குருத்துவம் அதாவது அரசகுருத்துவம் என்று கூறுகிறோம்.

அனைவருக்கும் குருத்துவம் இருப்பினும் திருச்சபையில் அருளடையாளங்கள் நிறைவேற்றவும், இறைமக்களை தூய்மைப்படுத்தவும், கற்பிக்கவும், வழிநடத்தவும் இறைமக்களிடமிருந்து சிலர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆயரால் குருவாக திருநிலைப்படுத்தப்படுகிறார்கள். அவ்வாறு அவர்கள் பணிக்குருத்துவத்தில் பங்குகொள்கின்றனர். இவர்கள் இயேசுவின் குருத்துவத்தில் தனிப்பட்ட முறையில் பங்குபெற்று இயேசுவின் குருத்துவப்பணியை திருச்சபையில் நிறைவேற்றுகின்றனர்.

4.திருச்சபையின் குருத்துவ நிலைகளைக் குறித்து எழுதுக?

அந்தியோக்கிய திருச்சபை மரபின்படி குருத்துவத்தில் ஏழு படிநிலைகள் உள்ளன. அவையே உறுதிமொழி எடுப்பவர், பாடல் பாடுபவர், வாசகம் வாசிப்பவர், வாசல் காவல்காரர், திருத்தொண்டர், குருவானவர், ஆயர் போன்றவைகளாகும். இவற்றில் திருத்தொண்டர், குருவானவர், ஆயர் என்னும் மூன்று நிலைகள் மட்டுமே குருத்துவ நிலையில் அடங்கியுள்ளன. அவர்களின் அருட்பொழிவு அருளடையாளமாகக் கருதப்படுகிறது. ஆனால் பிறநான்கு நிலைகளும் குருத்துவத்திற்கான படிகளாகும்.

**திருத்தொண்டர்கள்:** இது தேவாலயத்தில் அதிகாரபூர்வமான ஒரு பதவியாகும். குருத்துவத்திற்கான மூன்றாவது நிலையை வகிப்பவர்களே திருத்தொண்டர்கள். பணிவிடை செய்பவர், திருத்தொண்டு செய்பவர் என்றும் ஆங்கிலத்தில் Deacon என்றும் இவர் அழைக்கப்படுகிறார். யூத சபையில் குருத்துவத்தின் மூன்றாம் நிலையிலுள்ள லேவியர்களுடன் இவர்களை ஒப்புமைப்படுத்தலாம். தேவாலயத் திருச்சடங்குகளில் குருக்களுக்கு உதவி புரிவதே இவர்களின் முதன்மையான கடமை. நற்செய்தி போதிக்கவும், திருமுழுக்கு அளிக்கவும், திருத்தொண்டர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 6:10, 8:5, 2:18,1 திமொத்தேயு 3:8-13).

**குருக்கள்:** இது குருத்துவத்தின் இரண்டாம் நிலையாகும். இதனை கிரேக்க மொழியில் Presbyteros என்றும் ஆங்கிலத்தில் Elder என்றும் சுறியானியில் 'கசீசோ' என்றும் அழைப்பர். திருத்தூதர்களுக்கு ஆண்டவர் கொடுத்த அதிகாரங்களில் பெரும்பான்மையான அதிகாரங்களும் குருக்களுக்கு உண்டு. தொடக்கத் திருச்சபையில் ஒரு சமூகத்தின் பொறுப்பு ஆயர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. திருச்சபை வளர்ந்து வந்தபோது இறைமக்களுக்கு பல்வேறு இடங்களில் பணிவிடை புரிய ஆயர்கள் சிலரை தேர்ந்தெடுத்து தங்கள் கைகளை அவர்கள் மேல்

www.malankaralibrary.com

வைத்து அதிகாரம் அளித்தனர். அவர்களே குருக்கள். ஆயர்களின் பிரதிநிதியாக நின்று மக்களுக்கு மேய்ப்புப்பணி புரிவதே குருக்களின் கடமை. ஆயரின் பிரதிநிதிகளாகவே குருக்கள் பங்குகளில் பணி செய்கின்றனர்.

**ஆயர்கள்:** குருத்துவத்தின் முழுமையே ஆயர் பதவி. குருத்துவத்தின் முதல் நிலையை வகிப்பவர்கள் இவர்களே. ஆயர்கள் திருத்தூதர்கள் கூட்டத்தின் உறுப்பினர் ஆவர். புனிதப்படுத்துதல், கற்பித்தல், வழிநடத்துதல் என்னும் திருத்தூதர்களின் மூன்றுவிதமான கடமைகளே ஆயர்களின் அடிப்படைக் கடமையாகும். ஒரு திருச்சபை சமூகத்தின் முழு பொறுப்பும் ஆயருக்கு உள்ளது. திருச்சபையிலுள்ள ஏழு குருத்துவ நிலைகளும் அளிப்பதற்கான உரிமையும், அதிகாரமும் ஆயருக்கு மட்டுமே உள்ளது. குருக்களுக்கு 'குருத்துவம் தவிர பிற அருளடையாளங்கள் வழங்கவே அதிகாரம் உள்ளது. பேராயர், காதோலிக்க பாவா, பிதாப்பிதா, திருத்தந்தை போன்றவை ஆயர்களுக்கிடையேயான தலைமையிடங்களாகும். ஆயர்களுக்கு மேலாக சில அதிகாரங்கள் உடையவரே பேராயர். ஒரு உள்நாட்டு திருச்சபை சமூகத்தின் தலைவரே காதோலிக்கா பாவா மற்றும் பிதாப்பிதா. பேதுருவின் வழிவந்தவர் என்றும் உலகத்திருச்சபையின் தலைவரும், ஆயர்மன்றத்தின் தலைவரும் திருத்தந்தை ஆவார்.

5.குருவானவர் தனது தூய வாழ்வாலும் சான்றாலும் பணிவிடையாலும் மக்களை வழிநடத்த வேண்டும் - விவரி?

ஒரு ஆயன் தன் ஆட்டுமந்தையை மேய்ப்பதுடன் குருத்துவப் பணிகளை ஒப்புமைப்படுத்தலாம். ஆட்டுமந்தைகளுக்கு முன்னால் நடந்து மிகுந்த கவனமுடன் அவைகளை மேய்ப்பதே ஒரு குருவின் கடமை. இயேசு கிறிஸ்துவின் பெயரால் இறைமக்களை ஒன்று சேர்த்து ஒரு சமூகமாக வளர்க்க வேண்டும். இயேசுவின் மீட்புச் செயல்களை மக்களிடையே செயல்படுத்துவதே குருத்துவத் திருப்பணி. நல்ல ஆயர் தன் ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்க முன்வருவதைப் போன்று குருவானவர் தன் மக்களுக்காக தன்னையே முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இறைமக்களை கற்பிக்கவும், வழிநடத்தவும், புனிதப்படுத்தவும் அழைக்கப்பட்டவர்களே குருக்கள்.

கிறிஸ்துவாகின்ற நற்செய்தியை உலக முடிவு வரை அனைவருக்கும் கற்பிக்க வேண்டிய கடமை குருக்களுக்கு உள்ளது. அருளடையாளங்களின் வழியாக இறைமக்களைப் புனிதப்படுத்துதலே குருவானவரின் இன்றியமையாத கடமையாகும். குருக்கள் தங்கள் வாழ்க்கைத் தூய்மை வழியாகவும் வாழ்க்கைச் சான்றின் வழியாகவும் பணிவிடை புரிவதன் வழியாகவும் இறைமக்களை வழிநடத்த வேண்டும்.

**குறுவினா விடைகள்**

1. குருக்கள் எதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்? மக்களுக்காக கடவுளுக்கு பலி ஒப்புக்கொடுக்கவும் அவர்களுக்குக் கடவுளிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தரவும் குருக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
2. குரு என்னும் வார்த்தைக்கு பொருள் என்ன? குரு என்னும் வார்த்தைக்கு 'பலி கொடுப்பவர்' என்னும் பொருள் உண்டு.
3. குருக்களை நாம் எவ்வாறு அறிந்து கொள்கின்றோம்? மதம் சார்ந்த திருச்சடங்குகளுக்கு தலைமை ஏற்பவர், முன்னால் நின்று செயல்படுத்துபவர் என குருக்களை நாம் அறிந்து கொள்கின்றோம்.
4. பழைய ஏற்பாட்டில் எப்போது குருத்துவம் நிறுவப்பட்டது? மோசேயின் காலத்தில் இஸ்ரயேலரிடையே இறைவனின் கட்டளைப்படி குருத்துவம் வெளிப்படையாக நிறுவப்பட்டது. இறை ஆராதனை (வழிபாடு)க்காக தனிச்சடங்கள் இயற்றப்பட்டன.
5. இஸ்ரயேலரிடையே குருத்துவத்தின் நிலைகள் யாவை? இஸ்ரயேலரிடையே குருத்துவத்திற்கு மூன்று நிலைகள் இருந்தன. அவை முறையே தலைமைக்குரு, குரு, லேவியர் என்பனவாகும்.
6. மோசே யாரை முதன் முதலாக குருக்களாக அருட்பொழிவு செய்தார்? மோசேயின் சகோதரனான ஆரோனையும், அவருடைய புதல்வர்களையும் கடவுள் குருத்துவ பணிபுரிய அழைத்தார். இறைக்கட்டளைப்படி மோசே அவர்களை குருக்களாக அருட்பொழிவு செய்தார் எண்ணிக்கை 18:1-7).
7. குருக்களுக்கு துணைபுரிய யாரை நியமித்தார்கள்? குருக்களுக்கு துணைபுரிய லேவியர்களையும்

www.malankaralibrary.com

நியமித்தார். ஆனால் அவர்கள் அருட்பொழிவு செய்யப்படவில்லை.

8. ஏன் இயேசுவில் நிறைவான குருத்துவம் நிலைகொள்கிறது? இயேசு யூதமக்கள் எதிர்பார்த்திருந்த மெசியா அதாவது அருட்பொழிவு செய்யப்பட்டவராதலால் அவர் நிலையான குருவும், இறைவாக்கினரும், அரசரும் ஆவார். இயேசுகிறிஸ்து தந்தைக் கடவுளுக்கும் மனித இனத்துக்கும் இடையேயான ஒரே இணைப்பாளராதலாலும் அவர் மெசியாவானதாலும் அவர் மட்டும் உண்மை குருவானவர். உண்மைக் குருத்துவம் இயேசுவின் குருத்துவமே. எனவே இயேசுவில் மட்டுமே ஒப்பற்றதும் நிறைவானதுமான குருத்துவம் நிலைகொள்கிறது.

9. இயேசு புதிய ஏற்பாட்டுக் குருத்துவம் நிறுவியது பற்றிக்கூறுக? ஒரே இணைப்பாளர் என்னும் நிலையில் மனித இனத்தின் பாவபரிகாரத்துக்காக இயேசு கல்வாரி மலையில் என்றென்றைக்குமாக தம்மைத்தாமே பலியாக்கிக் கொண்டார். அவ்வாறாக இயேசுகிறிஸ்து பலி ஒப்புக்கொடுக்கும் குருவானவரும் பலிப்பொருளுமாக மாறினார். இயேசு தம்மைத்தாமே பலியாக்கிக்கொண்டு தாம் குருவானவர் என்பதை தெளிவுபடுத்தவும் புதிய ஏற்பாட்டுக் குருத்துவத்துக்கு அடித்தளமிடவும் செய்தார்.

10. இயேசு ஏன் தமது குருத்துவ பதவியை திருத்தூதர்களுக்கு அளித்தார்? மனித மீட்புக்காக இயேசு ஒப்புக்கொடுத்த பலியை உலக முடிவுவரை தொடர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். அதற்காக பன்னிரு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்துத் தமது குருத்துவ பதவியை அவர்களுக்கு அளித்து குருத்துவம் என்னும் அருளடையாளத்தை நிறுவினார் (யோவான் 20:21-23, மாற்கு 16:15-16, லூக்கா 29:19, மத்தேயு 28:19-20).

11. பன்னிரு திருத்தூதர்களின் வழிவந்தவர்களே குருக்கள் குறிப்பு வரைக? பன்னிரு திருத்தூதர்கள் இயேசுவால் திருச்சபையில் சிறந்த குருக்களாக மாறினர். அவர்கள் தங்கள் வழிவந்தவர்களாக ஆயர்களையும், (episcopo) குருக்களையும் (மூப்பர்கள்) அருட்பொழிவு செய்தனர் (1பேதுரு 5:1, 1தீமோத்தேயு 4:14). இவ்வாறாக அருட்பொழிவு செய்யப்பட்ட குருக்களே இயேசு கல்வாரியில் ஒப்புக்கொடுத்த பலியை இன்றும் ஒப்புக்கொடுத்து வருகின்றனர்.

12. "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட **வழிமரபினர்,** அரசகுருக்களின் **கூட்டத்தினர்,** தூய **மக்களினத்தினர்**, அவரது உரிமைச் சொத்தான மக்கள்" (1பேதுரு 2:9)

13. பணிக்குருத்துவத்தின் அவசியம் என்ன? அனைவருக்கும் குருத்துவம் இருப்பினும் திருச்சபையில் அருளடையாளங்கள் நிறைவேற்றவும், இறைமக்களை தூய்மைப்படுத்தவும், கற்பிக்கவும், வழிநடத்தவும் இறைமக்களிலிருந்து சிலர் ஆயரால் குருவாக அருட்பொழிவு செய்யப்படுகிறார்கள். அவ்வாறு அவர்கள் பணிக்குருத்துவத்தில் பங்கு கொள்கின்றனர்.

14. குருத்துவத்தில் படிநிலைகள் எத்தனை அவை யாவை? அந்தியோக்கிய திருச்சபை மரபின்படி குருத்துவத்தில் ஏழு படிநிலைகள் உள்ளன. அவையே உறுதிமொழி எடுப்பவர், பாடல் பாடுபவர், வாசகம் வாசிப்பவர், வாசல் காவல்காரர், திருத்தொண்டர், குருவானவர், ஆயர் போன்றவைகளாகும்.

15. குருத்துவ நிலையில் அடங்கியுள்ள நிலைகள் யாவை? திருத்தொண்டர், குருவானவர், ஆயர் என்னும் மூன்று நிலைகள் மட்டுமே குருத்துவ நிலையில் அடங்கியுள்ளன. அவர்களின் அருட்பொழிவு அருளடையாளமாகக் கருதப்படுகிறது.

16. திருத்தொண்டர் ஆங்கிலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? Deacon

17. திருத்தொண்டர்களின் பணிகள் யாவை? நற்செய்தி போதிக்கவும், திருமுழுக்கு அளிக்கவும், திருத்தொண்டர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது (திருத்தூதர் பணிகள் நூல்கள் 6:10, 8:5, 2:18,1 திமொத்தேயு 3:8-13).

18. குருக்கள், என்பதன் கிரேக்க, சுறியானி சொற்கள் யாவை? குருக்களை கிரேக்க மொழியில் Presbyteros என்றும் ஆங்கிலத்தில் Elder என்றும் சுறியானியில் 'கசீசோ' என்றும் அழைப்பர்.

19. ஆயர்களின் அடிப்படைக் கடமைகள் யாவை? புனிதப்படுத்துதல், கற்பித்தல், வழிநடத்துதல் என்னும் திருத்தூதர்களின் மூன்றுவிதமான கடமைகளே ஆயர்களின் அடிப்படைக் கடமைகளாகும்.

www.malankaralibrary.com

20. ஆயர்களின் தலைமைப் பதவிகள் யாவை? பேராயர், காதோலிக்க பாவா, பிதாப்பிதா, திருத்தந்தை போன்றவை ஆயர்களுக்கிடையேயான தலைமையிடங்களாகும். ஆயர்களுக்கு மேலாக சில அதிகாரங்கள் உடையவரே பேராயர். ஒரு உள்நாட்டு திருச்சபை சமூகத்தின் தலைவரே காதோலிக்கா பாவா மற்றும் பிதாப்பிதா. பேதுருவின் வழிவந்தவர் என்னும் உலகத்திருச்சபையின் தலைவரும், ஆயர்மன்றத்தின் தலைவரும் திருத்தந்தை ஆவார்.

21. மலங்கரை கத்தோலிக்க வழிபாட்டு குருத்துவ அருட்பொழிவு திருச்சடங்கு எவ்வாறு நடைபெறுகிறது?

திருப்பலியின் இடையே குருத்துவ அருட்பொழிவு திருச்சடங்கு ஆரம்பமாகின்றது. தூயகத்தின் நுழைவாயிலில் முழந்தாளில் நிற்கும் குருத்துவப்பட்டம் பெற்றுக்கொள்ளும் நபருக்கு குருத்துவப் பணிக்குத் தேவையான தகுதிகளைக் குறித்து ஆயர் நினைவூட்டுகிறார். குருத்துவ நிலைப்பாட்டிற்கு நிற்பவர் விசுவாசம் அறிக்கையிட்டு கீழ்ப்படிதல் வாக்களித்து சிலுவை அடையாளத்தால் முத்திரையிடுகிறார். அதற்குப்பின் அனைத்தையும் புறக்கணித்துவிட்டு இயேசுவை பின்பற்றுவதன் அடையாளமாக ஆயர் அருட்பொழிவு செய்யப்படுபவரின் தலையிலிருந்து சிலுவை அடையாளத்தில் முடியை வெட்டுகிறார். "தூயத் திருச்சபையில் குருத்துவ பணிபுரிய தூய ஆவியார் உம்மை அழைக்கிறார்" என்று கூறி ஆயர் அருட்பொழிவு செய்யப்படுபவரை தூயகத்தினுள் அழைத்துச் செல்கிறார்.

நற்செய்தி வாசகத்திற்கிடையே "அவர் அவர்கள் மேல் ஊதி" என்று வாசிக்கும் போது ஆயர் அருட்பொழிவு செய்யப்படுபவரின் முகத்தில் மூன்றுமுறை சிலுவை அடையாளத்தில் ஊதுகிறார். இது கிறிஸ்து சீடர்களின் மேல் ஊதி தூய ஆவியை அவர்களுக்கு அளித்தது போன்று கிறிஸ்துவின் பிரதிநிதியான ஆயரிடமிருந்து குருத்துவ அருட்பொழிவு செய்யப்படுபவர் தூய ஆவியைப் பெற்றுக்கொள்கிறார் என்பதன் அடையாளமாகும். தொடர்ந்து சொல்லப்படுகின்றதான மன்றாட்டுக்கள் தூய ஆவியின் வருகையை மையமாகக் கொண்டவையாகும்.

தூய ஆவியார் தனிப்பட்ட முறையில் அருட்பொழிவு செய்யப்படுபவரின் மேல் வந்து அவரை குருவாக அருட்பொழிவு செய்யும் நிகழ்ச்சியின் போது ஆயர் அருட்பொழிவு செய்யப்படுபவரை தன் திருவுடையால் மறைத்துக் கொள்கிறார். தொடர்ந்து தூய மறையுண்மைகளின் மேல் கைவைத்து அவற்றிலிருந்து இறைவல்லமையைப் பெற்று அருட்பொழிவு செய்யப்படுபவரின் தலையில் வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து ஆயர் புதுக்குருவின் தலையில் கைவைத்து குறிப்பிட்டுள்ள மன்றாட்டுக்களைக் கூறிக்கொண்டு நெற்றியில் மூன்றுமுறை சிலுவை வரைந்து முத்திரையிடுகிறார். குருத்துவ அருட்பொழிவு முடிந்த பின்னர் ஆயரும், புதுக்குருவும் இணைந்து திருப்பலியை நிறைவு செய்கின்றனர்.

22. குருத்துவத்தின் முதன்மை பற்றிய பாடல் யாது?

"குருகுலமே விழித்தெழுமின் நீங்கள்

உங்கள் பதவியதோ மேன்மை

ஆண்டவராம் மெசியா சொன்னது போல்

நீங்கள் தடையின் தடைந்ததாமே!

வாழ்வை யுலகின் தாழ்கோல்கள்

ஏந்துவதும் நீங்கள் தானே

"நல்ல ஆயன் நானே.

ஆண்டவர் விருப்பம் செய்-வீரேல்

மகிழ்வின் மணவறையை நீங்கள்

பெறுமாப் பேற்றை பெறுவீர்கள் (குருப்பட்டத் திருச்சடங்கு)

**23.** நல்ல ஆயன் தன் **<u>ஆடுகளுக்காக</u>** தம் **<u>உயிரைக்</u>** கொடுப்பார்". (யோவா 10:11)

www.malankaralibrary.com

பாடம் 15

## திருமணம்

**பயிற்சி வினாக்கள்**

1. திருமணத்தைக் குறித்த புனித பவுலடியாரின் பார்வை எவ்வாறு அமைந்திருந்தது? திருமணத்தை கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவின் அடிப்படையிலேயே புனித பவுலடியார் விளக்குகின்றார் (எபேசியர் 5:1-24). கிறிஸ்துவை மணமகனாகவும் திருச்சபையை மணமகளாகவும் என்றும் புனித பவுலடியார் கூறுகிறார். தன் உயிரை அளித்து அன்பு செய்த மணமகனான கிறிஸ்துவுடன் திருச்சபை அன்பில் ஒன்றிணைந்திருக்கிறது. கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையேயான இந்த தூய அன்புறவே கணவன் மனைவி உறவுக்கு முன்மாதிரியாக உள்ளது. சிலுவைப்பலியான கிறிஸ்துவின் தன்னலமற்றதும், தியாகமனப்பான்மை உடையதுமான அன்பே திருமணத்தின் குறிக்கோள் என்று புனித பவுலடியார் கற்பிக்கின்றார் (1கொரிந்தியர் 6:12-20, 7:3-7).

2. திருமணவாழ்வு தூயமூவொரு கடவுளுடனான ஒன்றுபடுதலே என்னும் சிந்தனை தெளிவுபடுத்துக? கிறிஸ்தவ வாழ்வு என்பது மூவொரு கடவுளின் வாழ்விலுள்ள பங்கேற்பு ஆகும். கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கமும் முடிவும் தூய மூவொரு கடவுளில் அடங்கியிருக்கிறது. இத்திருமணவாழ்வின் குறிக்கோளும் மூவோரு கடவுளுடனான ஒன்றுபடுதலேயாகும். திருமணத்திருச்சடங்கு ஆரம்பமாவதும், மோதிரம் அர்ச்சித்தலும், தாலி அர்ச்சித்தலும் தூய மூவொரு கடவுளின் பெயராலேயே ஆகும். திருமணத் திருச்சடங்கின் போது நாம் இவ்வாறு மன்றாடுகிறோம். தந்தை மகன் தூய ஆவியைப் போற்றிப் புகழ்ந்து வாழ்நாளெல்லாம் இன்பம் அடைவாயாக. தந்தையும் மகனும் தூய ஆவியும் மூன்று அரண்களாக நின்று மணமகளான திருச்சபையை பாதுகாக்கின்றனர். அவ்வாறே தூயமூவொரு கடவுள் திருமணவாழ்வையும் பாதுகாத்து வருகின்றார். இதனையே “சபையிங்ஙனமாய் மொழிகின்றாள்” என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன. மூவொரு கடவுளில் உள்ள மூன்று நபர்களும் ஒருவருக்கொருவர் அன்புறவில் ஒன்றித்திருப்பது போன்று திருமணமாகின்றவர்கள் ஒன்றித்திருக்க வேண்டும் என்று திருச்சபை கற்பிக்கின்றது. அதனால் மூவொரு கடவுளின் அன்புறவே திருமணமானவர்களின் அன்புறவின் முன்மாதிரி.

3. இல்லறவாழ்வு இவ்வுலக வாழ்வின் முடிவு வரை நிலைத்திருக்க வேண்டிய ஒன்றாகும் என்னும் உண்மையை விளக்குக? கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்... எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் (மத்தேயு 19:5-6). திருமணத்தின் ஒன்றிப்பையும், முறிவுபடாத் தன்மையும் பற்றியதே இயேசுவின் இவ்வார்த்தை. விரும்பும்போது பெற்றுக்கொள்ளவும், நினைக்கும் போது புறக்கணிக்கவுமான ஒன்றன்று கிறிஸ்தவ திருமணம். கடவுளே ஆணையும், பெண்ணையும் திருமண வாழ்க்கைக்கு அழைத்துச்சென்று அவர்களைப் பாதுகாத்து வருகிறார். அதன் வழியாக இறப்பு வரையிலுமான ஒரு அன்பின் உடன்படிக்கை செய்யவும், தங்களையே ஒப்புக்கொடுக்கவும் அழைக்கப்பட்டவர்களே மணமக்கள். கிறிஸ்தவ மணமக்களின் இல்லற அன்பின் முன்மாதிரியாக இருப்பது கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையேயான அன்புறவு ஆகும். இயேசுவுக்கும் திருச்சபைக்கும், இடையேயுள்ள உறவானது உலக முடிவு வரை நிலைத்திருப்பது போன்று கணவன் மனைவி உறவும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்க வேண்டும்.

4. மலங்கரை திருமண முறையில் மோதிரம் அர்ச்சிக்கும் திருச்சடங்கு என்ன பொருள்கொள்கிறது? திருமண ஒப்பந்தத்தின் திருச்சடங்கே மோதிரம் அர்ச்சித்தல் சடங்கு ஆகும். தொடக்க செபம், 51-ம் சங்கீதம் முதலியவற்றின் பின்னர் பாடப்படும் பாடல் திருமண ஒப்பந்தத்தின் அடையாளமான மோதிரத்தைப் பற்றியதாகும்.

*“குருவானவர்கள் திருப்பெயரால் நல்கும் மோதிரங்கள் நின் வலங்கையாலாண்டவரே-ஆசீர்வதித்தருளும் மெசியாவின் மணமகளானாள் சபையும் மோதிரத்தால் அவளவதின் திருவுடலுதிரம் நாளும் பருகுகிறாள்”* கிறிஸ்து திருச்சபையை தமது உடலுதிரங்கள் அளித்து ஏற்றுக்கொண்டதன் அடையாளமே, உடன்படிக்கையின் அடையாளமான மோதிரம். நிலையானதும், என்றும் நிலைத்திருப்பதுமான உடன்படிக்கையால் மணமகனான கிறிஸ்து திருச்சபையை மணமகளாகத் தேர்ந்தெடுத்தார்.

தனது நிலையான உடன்படிக்கையின் அடையாளமாக தனது உடலுதிரங்களை மோதிரமாக மெசியா

www.malankaralibrary.com

திருச்சபைக்கு அளித்தார். அதுபோன்று கணவன் மனைவியருக்கு இடையேயான திருமண உடன்படிக்கை முத்திரை இடப்பட்டதன் அடையாளமாகவே மோதிரம் அர்ச்சித்து அணிவிக்கப்படுகிறது.

5. திருமண அருளடையாளத்தில் மகுடம் அர்ச்சித்தலின் முக்கியத்துவம் யாது?

தொடக்க செபத்துக்குப்பின் பாடப்படும் பாடல் மிகுந்த பொருள் செறிந்ததாகும். ஆதி பெற்றோர்களையும் குலமுதுவர்களையும் வாழ்த்திய இறைவன் இவ்வடியார்களையும் வாழ்த்தட்டும் என்று கூறியே மணமக்களை வாழ்த்துகின்றனர்.

நற்செய்தி வாசகத்துக்குப் பின்னர் மகுடம் அர்ச்சித்தல் திருச்சடங்கு ஆரம்பமாகின்றது. மகுடங்களையும் அவற்றை அணியும் மணமக்களையும் ஆசீர்வதித்து குருவானவர் மன்றாடுகிறார். மகுடத்துக்குப் பதிலாக சிலுவை உள்ள பொன்மாலையை மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையில் பயன்படுத்துகின்றனர்.

*“வான் நின் - றொரு மா-ண்மகுடம் இறங்குவது மிறைவன் கையால்*

*குரு மணமகனா-மிவரை/மணமகளா-மிவரை அணிவிக்கும் மகுடம் மகிதம்”*

என்று பாடிக்கொண்டு பொன்மாலையை சிலுவை வடிவிலும், மகுடத்தின் வடிவிலும் மணமகனுடையவும் மணமகளுடையவும் தலையில் வைத்து அர்ச்சித்து அவர்களுக்கு அணிவிக்கப்படுகிறது. இந்த மகுடங்களை வெளிப்படையாக அணிவிப்பவர் குருவாக இருந்தாலும் அவை விண்ணகத்திலிருந்த ஆண்டவரின் கைகளால் அணிவிக்கப்படுகிறது என்பதை இப்பாடல் தெளிவுப்படுத்துகிறது.

பகைவனுக்கு எதிராக உள்ள வல்லமை பொருந்திய படைக்கருவியே இந்த மகுடம். இந்த மகுடம் உடலை அழகுபடுத்துவதை விட அதிகமாக ஆன்மாவை அழகுபடுத்துகிறது. இயேசுவின் முள்முடியுடன் ஒப்புமைப்படுத்தப்படுகின்றதான இந்த மகுடம் திருமண வாழ்வில் ஏற்றுக்கொள்ள வேண்டிய தியாகத்தினுடையவும், பொறுமையினுடையவும், தற்கையளிப்பினுடையவும் அடையாளமாகும்.

இந்திய பண்பாட்டிலிருந்து கிறிஸ்தவ சமூகம் பெற்றுக்கொண்ட ஒன்றே தாலி கட்டுதல். தாலி ஒன்றிப்பின் அடையாளமும், மணமக்களை ஒன்றிணைக்கும் கருவியுமாகும். நூலில் அல்லது தங்கச்செயினில் இணைக்கப்பட்டுள்ள சிலுவையடையாளமுள்ள தாலி மணமகன் மணமகளின் கழுத்தில் அணிவதன் வழியாக திருமணம் சிலுவையால் முழுமையாக முத்திரை இடப்படுகிறது. தாலி கட்டிய பின்னர் மணமகன் மணமகளின் தலையில் திருமண புடவையை அணிவிக்கின்றார். உலகில் கபடமற்றவர்களாக வாழ்ந்து விண்ணுலகில் நிலையான மகிமையின் அங்கியினை அணிவதன் முன்னடையாளமாகவே இது நடத்தப்படுகிறது.

தொடர்ந்து வருகின்ற ஆசீர்வாத பாடலுக்கும், அறிவுரைக்கும் பின்னர் இப்பொழுது முதல் நான் உங்களை ஒருவருக்கொருவர் ஒப்படைக்கிறேன் என்று கூறி குரு மணமக்களை ஒருவரையொருவர் கைகோர்க்கச் செய்கின்றார். இது அவர்களின் மனதார்ந்த ஒப்புக்கொடுத்தலின் வெளிப்படையான ஒரு அடையாளமும் இறைத்திட்டத்தின் முழுமையுமாகும். குருவானவர் மணமக்களுக்கும், விசுவாசிகளுக்கும் இறுதி ஆசிர்வாதம் அளித்து திருமணத் திருச்சடங்கை நிறைவு செய்கின்றார்.

**குறுவினா விடைகள்**

1. ஆதியில் கடவுள் தம் **உருவிலும்** தம் **சாயலிலும்** மனிதரைப் படைத்தார் (தொடக்கநூல் 1:26).
2. கடவுளால் முதல் குடும்பம் எவ்வாறு உருவாக்கப்பட்டது? மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன் (தொடக்க நூல் 2:18) என்று கூறி கடவுள் ஒரு பெண்ணைப் படைத்தார். அவர்கள் இருவரையும் இணைத்து ஒரு குடும்பமாக ஏதேன் தோட்டத்தில் குடியமர்த்தினார். இதுவே முதல் திருமணமும், முதல் குடும்பமும் ஆகும்.
3. திருமணம் என்னும் அருளடையாளம் என்றால் என்ன? வயது வந்த ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் திருமணத்தின் வழியாக இணைந்து வாழ விரும்பும் போது கடவுள் காண முடியாத அருளை வழங்கி அவர்களை ஒன்றிணைக்கின்றதான அருளடையாளமே திருமணம்.
4. திருவிவிலியத்தில் தொடக்க இறுதி திருமண நிகழ்வுகள் யாவை? படைப்புகளின் தொடக்கத்தில் ஆதி

www.malankaralibrary.com

பெற்றோர்களின் திருமணம் முதல் திருவிவிலியம் ஆரம்பமாகின்றது. திருவெளிப்பாடு நூலில் ஆட்டுக்குட்டியின் திருமணவிருந்துடன் திருவிவிலியம் முடிவடைகின்றது. (திரு வெளிப்பாடு 19:7-9)

5. பழைய ஏற்பாட்டில் இறைவன் ஆசீர்வதித்த குலமுதுவர்களின் இல்லற வாழ்க்கை யாவை? ஆதாம்-ஏவாள், ஆபிரகாம்-சாரா, ஈசாக்கு - ரெபேக்கா, யாக்கோபு ராகேல் முதலான குல முதுவர்களின் இல்லற வாழ்க்கையை கடவுள் ஆசீர்வதித்திருந்ததாக பழைய ஏற்பாடு கூறுகின்றது.

6. பழைய ஏற்பாட்டில் கணவன் மனைவி உறவு எவ்வாறு ஒப்புமைப்படுத்தப்பட்டது? பழைய ஏற்பாட்டில் யாவே-க்கும் இஸ்ரயேலருக்கும் இடையேயான உறவை கணவன் மனைவி உறவுடன் ஒப்புமைப்படுத்தியிருந்தனர். யாவே மணமகனும் இஸ்ரயேலர் மணமகளும் என்னும் அடையாளம் பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. யாவே கடவுளும், இஸ்ரயேல் மக்களும் சீனாய் மலையில் நடத்திய உடன்படிக்கையே திருமணமாகின்ற கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான உறவினுடையவும் நிலையான உடன்படிக்கையினுடையவும் முன்மாதிரியுமாகும்.

7. இயேசு எவ்வாறு திருமணத்தின் நிலைத்தன்மையைக் குறித்துக் கற்பித்தார்? படைப்பின் வரலாற்றில் திருமணம் நன்மை வாய்ந்ததும் கடவுளின் மீட்புத்திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அமைந்திருந்தது. இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல் எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் (மத்தேயு 19:4-6) என்று கூறிக்கொண்டு இயேசு திருமணத்தின் நிலைத்தன்மையைக் குறித்துக் கற்பித்தார்.

8. இயேசு ஆசீர்வதித்த முதல் திருமணம் யாது? இயேசுவின் முதல் அற்புதம் ஒரு திருமண வீட்டிலேயே நடந்தது. கானாவூர் திருமண வீட்டில் இயேசுவின் பிரசன்னத்துக்கு திருச்சபை மிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதனால் திருமணம் கிறிஸ்துவின் பிரசன்னத்தின் அடையாளமாகும் என்று திருச்சபை கற்பிக்கின்றது (யோவான் 2:1-12).

9. திருமணம் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஓர் அருளடையாளம் விளக்குக? திருமணம் காணமுடியாத இறையருளை வழங்கி ஒரு ஆணையும் பெண்ணையும் புனிதப்படுத்துகிறது. படைப்பின் தொடக்கத்தில் கடவுள் ஏற்படுத்தின திருமண உறவு இயேசுவின் மீட்புச் செயல்களின் வழியாக ஒரு அருளடையாளமாக மாறியது. திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக இவர்கள் இறையருளைப் பெற்றுக்கொண்டு இயேசுவின் மீட்புத்திட்டத்துடன் ஒன்றிணைந்து வாழ தகுதியுடையவர்களாக மாற்றப்படுகிறார்கள்.

10. திருமணம் ஒரு இறையழைத்தல் விளக்குக? சட்டத்தின்படி திருமணமாகின்ற ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் கடவுள் தனது அன்பிலும் படைப்புச் செயலிலும் பங்குபெற அழைப்பு விடுக்கிறார். ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அன்பு செய்வதும், திருமணத்தின் வழியாக ஒன்றிணைவதும் மனிதப்பார்வையில் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகத் தோன்றினாலும் கடவுளே அவர்கள் இருவரையும் அழைத்து வேறுபடுத்தி ஒன்றிணைக்கிறார். இது கடவுள் திட்டமிட்டிருந்த இறைத்திட்டத்தின் வெளிப்பாடாகும். அதனால் திருமணம் கடவுளின் கொடையும், அழைப்பும், இறைத்திட்டமும் ஆகும். ஆதாம்-ஏவாள் முதலான தம்பதிகளின் வரலாற்றைப் படிக்கும்போது அங்கெல்லாம் கடவுளின் செயல்பாடுகள் நிகழ்ந்ததைக் காணமுடிகிறது. எனவே குருத்துவமும், துறவறமும் போன்று திருமணமும் ஒரு இறையழைத்தல் ஆகும்.

11. திருமணமும் திருச்சபையும் எவ்வாறு இணைந்து செயல்படுகின்றன? ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஆளுமையும், வாழ்வு நிலையும் திருச்சபையில் வேரூன்றி உள்ளது. அதனால் திருமணம் என்பது ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையன்று. மாறாக திருச்சபையிலும், திருச்சபையின் வழியாகவுமே ஆணும் பெண்ணும் திருமணமாகின்றனர். *வான்நின்றொரு மாண்மகுடம் இறங்குவதுமிறைவன் கையால் குருமணமகனாமிவரை/ மணமகளாமிவரை அணிவிக்கும் மகுடம் மகிதம் சீரெழு குருக்கள் வழியாய் தம்பதிகட்காய் தரவே..........* (திருச்சடங்கு) என்ற பாடல்களின் வழியாக திருச்சபை மணமகனையும், மணமகளையும் திருமணத் திருச்சடங்கின் வழியாக ஒன்றிணைக்கிறது. குருவானவர் இயேசுவின் பிரதிநிதியாக நின்று மணமக்கள் நடத்துகின்றதான உடன்படிக்கைக்கு முத்திரைப்பதிக்கின்றார். திருச்சபையே அவர்களுக்கு உடன்படிக்கையின் அடையாளமாக மோதிரத்தை அளிக்கிறது. அதனாலேயே

www.malankaralibrary.com

திருச்சபையினுடையவும் இயேசுவினுடையவும் பிரதிநிதியான குரு மோதிரத்தை அளிக்கிறார்.

12. திருமணம் வழியாக நன்மக்கட்செல்வம் பெற ஆசியுரை என்ன? மலங்கரைத் திருமண திருச்சடங்கில் வாழ்வினுடையவும், விசுவாசத் தினுடையவும் பகிர்தலை திருச்சபை பின்வருமாறு நினைவு கூர்கின்றது. ஆபிரகாம் ஈசாக்கிலும், ஈசாக்கு யாக்கோபிலும், யாக்கோபு யோசேப்பிலும், மகிழ்வடைந்தவாறே நீங்களும் மகிழ்வெய்துமாறு நன்மக்கட்செல்வங்களை ஆண்டவர் உங்களுக்கு அளிப்பாராக. நீங்கள் பலுகிப் பெருகி இப்பூமியை நிரப்புங்கள் எனக்கூறி நோவாவுக்கும் அவரது சந்ததியார்க்கும் இறைவன் அளித்த ஆசிமொழி உங்களுக்கும் உண்டாவதாக.

13. திருமணம் வழியாக நம்பிக்கை அடுத்த தலைமுறைக்கு கைமாறுவது எப்படி? திருமணம் வழியாக ஏற்படுத்தப்படுகின்ற குடும்பம் சமூகத்தின் ஒரு பகுதியாகும். நம்பிக்கையின் அடிப்படை உண்மைகளை தலைமுறைக்கு கைமாறுவது திருமணம் வழியாக உருவாக்குகின்ற குடும்பத்தின் வழியாகவேயாகும்.

14. நம்பிக்கை அடுத்த தலைமுறைக்கு கைமாறுவது பற்றி திருமணத்திருச்சடங்கு கூறுவது என்ன? திருமணத் திருச்சடங்கின்போது திருச்சபை பின்வருமாறு நினைவு கூர்கின்றது. 1. உம்மீது கொண்ட உண்மையான விசுவாசத்தினால் இவர்கள் உறுதிபெறவும், இவர்களின் வழிமரபினர் அதனை உரிமைச் சொத்தாக பெற்றுக்கொள்ளவும் நீர் இவர்களுக்கு உதவியாய் இருந்தருளும். 2. மதிப்பீடுகளை மையமாக கொண்ட வாழ்வு குடும்பத்தில் தான் ஆரம்பமாகிறது. தங்களின் அன்புறவின் பலனான மக்களை இறைபயத்திலும், உலக அறிவிலும் வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். குட்டித் திருச்சபையாகும் குடும்பத்தின் வழியாக விசுவாசம் மற்றும் அறநெறிவாழ்வின் படிப்பினைகள் அடுத்த தலைமுறைக்கு கைமாறுதல் செய்யப்படுகிறது.

15. மலங்கரைத் திருச்சபையில் திருமண விருப்பம் கேட்டல் பற்றிக் கூறுக? மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபையில் திருமண விருப்பம் கேட்டல் முதலே திருமணத்திருச்சடங்கு ஆரம்பமாகின்றது. மணமக்கள் திருமணம் செய்துகொள்ள வருவது சுதந்திரமான முடிவோடும், விருப்பத்தோடும் என்பதை சாட்சிகள் முன்பாக உள்ள திருமண விருப்ப அறிக்கை உறுதிப்படுத்துகின்றது.

16. மலங்கரைத் திருச்சபையில் திருமணத் திருச்சடங்குகளின் பகுதிகள் யாவை? திருமணத்திருச்சடங்குக்கு இரண்டு பகுதிகள் உள்ளன. முதல் பகுதி மோதிரம் அர்ச்சித்தல் திருச்சடங்கு, இரண்டாவது பகுதி மகுடம் அர்ச்சித்தல் திருச்சடங்கு ஆகும்.

17. மகுடம் அர்ச்சித்தல் திருச்சடங்கில் மகுடத்துக்குப் பதிலாக என்ன பயன்படுத்தப்படுகிறது? மகுடத்துக்குப் பதிலாக சிலுவை உள்ள பொன்மாலையை மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையில் பயன்படுத்துகின்றனர்.

18. மகுடம் அர்ச்சித்தலின் பொருள் என்ன? பகைவனுக்கு எதிராக உள்ள வல்லமை பொருந்திய படைக்கருவியே இந்த மகுடம். இந்த மகுடம் உடலை அழகுபடுத்துவதை விட அதிகமாக ஆன்மாவை அழகு படுத்துகிறது. இயேசுவின் முள்முடியுடன் ஒப்புமைப்படுத்தப்படும் இந்த மகுடம் திருமண வாழ்வில் ஏற்றுக்கொள்ள வேண்டிய தியாகத்தினுடையவும், பொறுமையினுடையவும், தற்கையளிப்பினுடையவும் அடையாளமாகும்.

19. தாலி கட்டுதல் பற்றிக் குறிப்பு வரைக? இந்திய பண்பாட்டிலிருந்து கிறிஸ்தவ சமூகம் பெற்றுக்கொண்ட ஒன்றே தாலி கட்டுதல். தாலி ஒன்றிப்பின் அடையாளமும், மணமக்களை ஒன்றிணைக்கும் கருவியுமாகும். சிலுவையை நூலில் அல்லது தங்கச் சங்கிலியில் இணைக்கப்பட்ட தாலி மணமகன் மணமகளின் கழுத்தில் அணிவதன் வழியாக திருமணம் சிலுவையால் முழுமையாக முத்திரை இடப்படுகிறது.

*20.* திருமணத் திருச்சடங்கின் மகுடத்தை ஆசீர்வதிக்க வேண்டும் பாடல் யாது? *“வான் நின்றொரு மாண் மகுடம், இறங்குதுமிறைவன் கையால், குரு மணமகனாமிவரை/ மணமகளாமிவரை, அணிவிக்கும் மகுடம் மகிதம், சீரெழு குருக்கள் வழியாய் தம்பதிகள்காய் தரவே...”. (திருச்சடங்கு முறை)*

21. “நான் உங்களிடம் **<u>அன்பு</u>** கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மற்றவரிடம் **<u>அன்பு</u>** கொண்டிருக்கவேண்டும் என்பதே என் கட்டளை.

**22.** தம் நண்பர்களுக்குக்காக **<u>உயிரைக்</u>** கொடுப்பதை விட சிறந்த **<u>அன்பு</u>** யாரிடமும் இல்லை” (யோவான் 15:12-13)

www.malankaralibrary.com

## பாடம் 16

## திருச்சபை - முதல் நான்கு நூற்றாண்டுகளில்

**பயிற்சி வினாக்கள்**

1. மத துன்புறுத்தல்கள் ஏற்படக் காரணங்கள் யாவை?

முதல் கிறிஸ்தவர்கள் மிக அதிகமான எதிர்ப்புகளை எதிர்கொண்டனர். யூதர்கள் ஸ்தேவானை கல்லால் எறிந்து கொன்றனர். புனித யாக்கோபை வாளுக்கு இரையாக்கினர். தொடர்ந்து மறைபரப்பு பணியாளர்கள் மதத்தின் பெயரால் பல துன்பங்கள் ஏற்கவேண்டியிருந்தது. பல இடங்களிலும் யூதர்கள் பிற இனத்தைச் சார்ந்தவர்களை கிறிஸ்தவர்களுக்கு எதிராக தூண்டி விட்டார்கள். கிரேக்க நாட்டைச் சார்ந்த இலக்கிய வல்லுநர்கள் கிறிஸ்தவ மதத்தையும், கிறிஸ்தவர்களையும் துன்புறுத்தவும் மக்களிடையே அவர்களை ஏளனம் செய்யவும் முயற்சி செய்தனர். உரோமை ஆட்சித்தலைவர்கள் ஏறத்தாழ 300 ஆண்டுகள் கிறிஸ்தவ மதத்தை துன்புறுத்தினார்கள். என் பெயரின் பொருட்டு எல்லா மக்களினத்தவரும் உங்களை வெறுப்பர் (மத்தேயு 24:9) என்று ஆண்டவர் அவர்களுக்கு முன்னெச்சரிக்கை அளித்திருந்ததால் அவர்கள் அதை மனம் தளராமல் தாங்கிக்கொண்டார்கள்.

கிரேக்கர்களுடையவும் உரோமையர்களுடையவும் கடவுள் உண்மைக் கடவுள் இல்லையென்றும் அவை மனிதப் படைப்பு மட்டும் தான் என்றும் இயேசு கிறிஸ்து மட்டுமே உண்மையான கடவுள் என்றும் கிறிஸ்தவர்கள் கூறியது பிற இனத்தவர்களை கோபத்திற்குள்ளாக்கியது. கொடிய தண்டனைகளுக்கு அவர்கள் கிறிஸ்தவர்களை உட்படுத்தினர். கொதித்த எண்ணெயில் இடுதல், பசித்திருக்கும் கொடிய விலங்குகளுக்கு உணவாகப் போடுதல், துணியைச் சுற்றி பந்தங்களாக நெருப்பை பற்ற வைத்து தெருக்களில் நிற்கச் செய்தல் முதலியன போன்ற கொடிய துன்பங்களுக்கு கிறிஸ்தவர்கள் உட்படுத்தப்பட்டு வந்தனர். உரோமிலுள்ள ஒரு முக்கிய இடமே கோலோசியம். இங்கு மதத்தின் பெயரால் கிறிஸ்தவர்கள் பெருமளவில் துன்புறுத்தப்பட்டனர். வட்ட வடிவிலான இந்த பொழுதுபோக்கு இடத்தில் மனிதரும் விலங்குகளுமாக இருவர் போராட்டம் நடத்தவும் அரசர்கள் அதைக் கண்டு ஆனந்தமடையவும் செய்தனர். ஏராளம் மக்கள் இவ்விடத்தில் வைத்து விலங்குகளால் கொல்லப்பட்டு மறைசாட்சியாக இறந்தனர். பல முறைகளிலும் கிறிஸ்தவ மதத்தை நாட்டின் பொது எதிரியாகவே எண்ணித் துன்புறுத்தி வந்தார்கள்.

நீரோ மன்னரின் காலம் முதல் (கி.பி. 54-68) கான்ஸ்டன்டெயின் மன்னரின் காலம்வரை (கி.பி. 313) மதத்தின் பெயரால் மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இயற்கைச் சீற்றமும், தொற்றுநோய்களும், பட்டினியும், பஞ்சமும் வருவது கிறிஸ்தவர்களின் பொருட்டேயாகும் என்று அவர்கள் கூறினார்கள். ஆயிரக்கணக்கன கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சிகளாக தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டனர். அவர்களுடைய சூடான இரத்தத்திலிருந்தும் ஆன்ம உணர்வு பெற்று பலர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். உரோமை பேரரசைப் போன்று பேர்ஷியன் பேரரசிலும் சமயத்தின் பெயரால் துன்பங்கள் நடந்தன.

2. திருச்சபைக்கு எவ்வாறு சுதந்திரம் கிடைத்தது?

கிபி. 313-ல் மிலான் சாசனம் என்று அறியப்படுகின்ற அரச ஆணையின்படி கான்ஸ்டான்டெயின் மன்னர் கிறிஸ்தவ திருச்சபைக்கு சுதந்திரம் அளித்தார். கி.பி 312-ல் நடைபெற்ற மெல்வியன் போரில் சிலுவை அடையாளத்தில் போர் செய்ய மன்னருக்கு காட்சி கிடைத்தது என்றும் அவ்வாறு போர் செய்தபோது அவருக்கு வெற்றி கிடைத்தது என்றும் நம்பப்படுகிறது. கான்ஸ்டன்டெயின் மன்னன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதைத் தொடர்ந்து உரோமைப் பேரரசில் கிறிஸ்தவ மதம் அதிவேகமாக வளர்ந்து வந்தது. தொடர்ந்து வந்த மன்னர்களும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புபவர்களாக மாறினர். துன்பங்கள் ஏற்ற திருச்சபை சுதந்திரமானது. அவ்வாறாக கிறிஸ்தவ மதம் உரோமைப் பேரரசின் அதிகாரப்பூர்வமான மதமாக மாறியது. நாளடைவில் பழமை வாய்ந்த கிரேக்க - உரோமை மதங்கள் எல்லாம் மறைந்து போயின.

3. முதல் கிறிஸ்தவர்களின் வழிபாட்டு முறையை விளக்குக?

பாடுகளின் போதும், தடைகளின் போதும் ஆதித்திருச்சபையை தளரவிடாமல் நிலைத்து நிற்கச் செய்தது அவர்களின் மன்றாட்டுகளும் நட்புறவு அனுபவங்களும் அப்பம் பிட்குதல் திருச்சடங்குமாகும். மதத்தின் பெயரால் மக்களைத் துன்புறுத்தி வந்த காலத்தில் ஆராதனை (வழிபாடு) வாழ்க்கை அதிகமாகவும்

மறைவிடங்களிலேயே நடைபெற்றது. முதல் நூற்றாண்டுகளிலேயே நற்கருணை, ஒப்புரவு, திருமுழுக்கு, திருமணம் என்னும் அருளடையாளங்கள் நடைமுறையில் இருந்தன. பயிற்சிக் காலம் முடிவடைந்தவர்களுக்கு உயிர்ப்பின் முந்தைய நாளிலும், பெந்தக்கோஸ்து நாளிலும் திருமுழுக்கு அளித்து வந்தனர். திருமுழுக்கும், உறுதிபூசுதலும், நற்கருணையும் தொடக்கத்திருச்சபையில் ஒன்றாக சேர்ந்து அளித்து வந்தனர்.

தொடக்க காலம் முதலே கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்றாகக்கூடி அப்பம் பிட்டு வந்தனர். ஞாயிற்றுக்கிழமையை ஆண்டவரின் நாள் என்று அவர்கள் அழைத்திருந்தனர். ஓய்வு நாளுக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையை அவர்கள் கடைபிடிக்கத் தொடங்கினர். நாளடைவில் திருப்பலிக்கு முறையான வடிவமும், அமைப்பும், வழிபாட்டு முறைகளும் உருவாயின. திருப்பலிக்கு முன்னர் பாவங்களை அறிக்கையிடுகின்ற முறை மிகப் பழமைவாய்ந்த ஒன்றாகும். திருச்சபை தலைவரின் முன்னிலையில் திருமண அருளடையாளம் நடத்தும் முறையும் முதலிலேயே உடலெடுத்தது.

எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆண்டவரின் பாஸ்காவின் நினைவை கொண்டாடினர். அது மட்டுமன்று ஆண்டில் ஒருமுறை ஆண்டவரின் பாஸ்கா என்னும் பெயரில் பாடுகளும், இறப்பும், உயிர்த்தெழுதலும் நினைவுகூர்ந்து கொண்டாடி வந்தனர். அதுபோன்று விண்ணேற்றம், பெந்தகோஸ்து, ஆண்டவரின் பிறப்பு, திருமுழுக்கு முதலிய நிகழ்வுகளையும் ஆண்டில் ஒருமுறை கொண்டாடப்படும் வழக்கம் ஏற்பட்டது. இந்த முக்கிய நிகழ்வுகளின் கொண்டாட்டத்திற்கு முன்னர் நோன்பிருக்கவும், மன்றாட்டுகளுடன் ஆயத்தம் செய்யவும் செய்கின்றதான வழக்கம் ஏற்பட்டது. அவ்வாறாகவே இருபத்து ஐந்து நோன்பு, ஐம்பது நோன்பு போன்ற நோன்புகளும் தோன்றலாயின.

4. குறிப்பு வரைக 1. புதிய ஏற்பாடு 2. திரிபுக் கொள்கைகள் 3. சமய உட்பிளவாளர்கள்

**1.புதிய ஏற்பாடு:** இயேசுவின் அடையாளங்களையும், போதனைகளையும் திருத்தூதர்கள் தொடக்கத் திருச்சபைக்கு கற்பித்தனர். நாளடைவில் அவை நூல் வடிவமாக மாறியது. அவை நான்கு நற்செய்திகளாகும். அவ்வாறே திருத்தூதர்கள் பல்வேறு திருச்சபை சமூகங்களுக்கு அளித்திருந்த திருமுகங்களையும் தொடக்கத்திருச்சபை திருநூலில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டது. அவ்வாறு பழைய ஏற்பாட்டுடன் புதிய ஏற்பாடும் உருவானது. கி.பி. 50-க்கும் கி.பி. 100-க்கும் காலத்திலேயே புதிய ஏற்பாட்டிலுள்ள மிகுதியான நூல்களும் எழுதப்பட்டன.

**2.திரிபுக் கொள்கைகள்:** திருச்சபையின் வெளியேயிருந்து தாக்குதல்கள் உருவானது போன்று திருச்சபையின் உள்ளிருந்தும் தாக்குதல்கள் உருவாயின. உண்மை விசுவாசத்தில் போலியானவற்றை சேர்க்கவும் கிறிஸ்தவ மறைக்கு எதிரான கருத்துக்களைக் கற்பிக்கவும் சிலர் முன் வந்தார்கள். இவ்வாறாக அரைகுறையான போதனைகளைக் கற்பிக்கவும், பின்பற்றவும் செய்தவர்கள் திரிபுக் கொள்கையாளர்கள். அதாவது தவறாக கொள்கையை போதிப்பவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். மூவொரு கடவுளைக் குறித்தும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், தூய ஆவியின் செயல்பாடுகளைக் குறித்தும் திரிபுக் கொள்கைகள் உருவாயின.

**3.சமய உட்பிளவாளர்கள்:** வேறு சிலர் திருச்சபையில் சட்ட பூர்வமான தலைமைக்கு எதிராகச் செயல்பட்டு எதிர் சமூகங்களுக்கு உருவம் கொடுத்து திருச்சபையில் கலவரத் தையும், பிரிவினை சிந்தனைகளையும் புகுத்திவிட்டனர். இவர்கள் சமய உட்பிளவை எற்படுத்தியவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தந்த காலகட்டத்தில் வாழ்ந்து வந்த திருச்சபைத் தந்தையர்கள் இவற்றை இல்லாமல் செய்யவும் உண்மை விசுவாசத்தில் திருச்சபையை நிலைநிறுத்தவும் அயராது உழைத்தனர்.

குறு வினாவிடைகள்

1. திருச்சபை வரலாறு கற்பதன் அவசியம் என்ன? திருச்சபை வரலாற்றை கற்றால் மட்டுமே திருச்சபையை அறியவும் அன்பு செய்யவும் முடியும். நமது நாட்டை அறியவும் அன்பு செய்யவும் முடியும். நம் நாட்டின் வரலாற்றை கற்பது போன்று திருச்சபை வரலாற்றைக் கற்றால் அது திருச்சபையைக் குறித்து ஆழமான அறிவுக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

2.கிறிஸ்தவ **திருச்சபை** இயேசு கிறிஸ்துவின் **தொடர்ச்சியே** ஆகும்.

www.malankaralibrary.com

3.திருச்சபையில் அடங்கியுள்ள இரு இயல்புகள் தன்மைகள் யாவை? கிறிஸ்து கடவுளும் மனிதருமாவார். அது போன்று திருச்சபைக்கும் இறைத்தன்மையும் மனிதத் தன்மையும் உண்டு. திருச்சபையின் ஆன்மா தூய ஆவியே ஆவார். ஆனால் வலுவற்ற மனிதர்களின் வழியாக திருச்சபை செயல்பட்டு வருவதால் மனித தன்மைகளனைத்தும் திருச்சபையின் செயல்பாடுகளில் காணப்படுகிறது.

4.திருச்சபை வரலாற்றின் தனித்தன்மை என்ன? திருச்சபையின் இறைத்தன்மையை ஏற்காது மனிதத்தன்மையை மட்டும் ஏற்றுக்கொண்டால் திருச்சபை வரலாறு ஒரு இயக்கத்தின் வரலாறு போன்றதாக மாறும்.

5.திருச்சபை கடவுளை அடைய வேண்டிய வழி என்றால் என்ன? திருச்சபை கடவுளிடமிருந்து ஆரம்பமாகின்றது. திருச்சபையை கடவுள் வழிநடத்துகிறார். திருச்சபை கடவுளை சென்றடைய வேண்டிய ஒன்றதாகும்.

5.திருத்தூதர்கள் திருச்சபையை கட்டியெழுப்பியது ஏன்? உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களிடம் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் (மாற்கு 16:15) என்று கட்டளையிட்டார். இந்த கட்டளையை ஏற்றுக்கொண்ட சீடர்கள் பெந்தகோஸ்து நாளன்று தூய ஆவியைப் பெற்றுக்கொண்டு உலகெங்கும் சென்று இயேசுவுக்கு சான்று பகர்ந்தனர்.

6.திருத்தூதர் பேதுரு திருச்சபையை நிறுவிய இடங்கள் யாவை? பேதுரு அந்தியோக்கியாவில் நற்செய்தியை பறைசாற்றினார். பின்னர் உரோமையில் சென்று திருச்சபையை நிறுவி மறைசாட்சியாக இறந்தார்.

7.திருத்தூதர் அந்திரேயா திருச்சபையை நிறுவிய இடம் யாது? அலக்ஸாண்டிரியா

8.திருத்தூதர் யாக்கோபு திருச்சபையை நிறுவிய இடம் யாது? எருசலேம்

9.திருத்தூதர் தோமையார் திருச்சபையை நிறுவிய இடம் யாது? புனித தோமையார் இந்திய நாட்டுக்கு வருகை தந்து கிறிஸ்தவ திருச்சபைக்கு அடித்தளமிட்டு சென்னை மயிலாப்பூரில் இரத்த சாட்சியாக இறந்தார்.

10.புனித பவுல் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? புனித பவுல் பிற இனத்தாரிடையே நற்செய்தி அறிவித்ததால், பிற இனத்தாரின் திருத்தூதர் என அழைக்கப்பட்டார்.

11.முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை பற்றி திருத்தூதர் பணிகள் நூல் நூல் கூறுவது என்ன? முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையைக் குறித்து திருத்தூதர் பணிகள் நூல்களில் பின்வருமாறு கூறப்படுகிறது. அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (திருத்தூதர் பணிகள் நூல்கள் 2:42). ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக முதல் கிறிஸ்தவர்கள் ஆயத்தமாகிக் காத்திருந்தார்கள்.

12.திருத்தூதர்களுக்கு திருச்சபையை எளிதில் கட்டியெழுப்ப அமைந்திருந்த காரணிகள் யாவை? திருச்சபையின் தொடக்கக் காலத்தில் உரோமைப் பேரரசில் அமைதியான நிலை நிலவியிருந்ததால் மறைபரப்புப் பணியாளரின் பயணம் பாதுகாப்பானதாக அமைந்தது. அன்று அனைத்து நாடுகளிலும் யூதர்கள் வாழ்ந்து வந்தனர். சீடர்கள் முதல் முதலாக யூதர்களிடையே நற்செய்தியை பறைசாற்றினர்.

13.திருத்தூதர்கள் நற்செய்தி பறைசாற்ற பயன்படுத்திய மொழிகள் யாவை? திருத்தூதர்கள் முதலில் சுறியானி மொழியில் நற்செய்தி பறைசாற்றினர். பின்னர் கிரேக்க மொழியும், இலத்தீனும் பயன்படுத்தத் தொடங்கினர்.

14.தொடக்க கால மூன்று திருச்சபைகள் யாவை? முதலில் யூதர்களிடமிருந்து தோன்றிய சுறியானி திருச்சபை ஒன்றாம் திருச்சபையென்றும், கிரேக்கர்களிடமிருந்து தோன்றிய திருச்சபை இரண்டாம் திருச்சபையென்றும், இலத்தீனியர்களிடமிருந்து தோன்றிய திருச்சபை மூன்றாம் திருச்சபை என்றும் அறியப்பட்டது.

14.திருத்தூதர்களின் நற்செய்தி போதனை எவ்வாறு மக்களை கவரச் செய்தது? முதல் கிறிஸ்தவர்களின் அன்பான செயல்களும், வாழ்க்கைச் சான்றும் பிறருக்கு உந்துதல் அளித்தன. ஆண்டவரின் நிலையான பிரசன்னமும் தூய ஆவியின் செயல்பாடுகளும் நற்செய்தி பறைசாற்ற துணைபுரிந்தன.

www.malankaralibrary.com

15.தொடக்க கால திருச்சபையில் யூதர்கள் யாரை கல்லால் எறிந்து கொன்றனர்? ஸ்தேவானை

16.என் **பெயரின்** பொருட்டு எல்லா மக்களினத்தவரும் உங்களை **வெறுப்பார்** (மத்தேயு 24:9)

17.தொடக்க கால கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்ட கொடிய தண்டனைகள் யாவை? கொதித்த எண்ணெயில் இடுதல், பசித்திருக்கும் கொடிய விலங்குகளுக்கு உணவாகப் போடுதல், துணியைச் சுற்றி பந்தங்களாக நெருப்பை பற்ற வைத்து தெருக்களில் நிற்கச் செய்தல் போன்ற கொடிய துன்பங்களுக்கு கிறிஸ்தவர்கள் உட்படுத்தப்பட்டு வந்தனர்.

18.தொடக்க கால கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட உரோமிலுள்ள ஒரு முக்கிய இடம் எது? கோலோசியம்.

19.உரோமை ஆட்சித்தலைவர்கள் எத்தனை ஆண்டுகள் கிறிஸ்தவர்களை துன்புறுத்தினார்கள்? ஏறத்தாழ 300 ஆண்டுகள், நீரோ மன்னரின் காலம் முதல் (கி.பி. 54-68) கான்ஸ்டன்டெயின் மன்னரின் காலம்வரை (கி.பி. 313) மதத்தின் பெயரால் மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள்.

20.மிலான் சாசனம் வெளியிட்டவர் யார்? கிபி. 313-ல் மிலான் சாசனம் என்று அறியப்படுகின்ற அரச ஆணையின்படி கான்ஸ்டான்டெயின் மன்னர் கிறிஸ்தவ திருச்சபைக்கு சுதந்திரம் அளித்தார்.

21.எந்த உரோமைப் பேரரசரால் கிறிஸ்தவ மதம் அதிவேகமாக வளர்ந்தது? கான்ஸ்டன்டெயின் மன்னன்

22.பேர்ஷியாவிலும் இந்தியாவிலும் குறைந்த அளவே கிறிஸ்தவம் காணப்பட காரணம் என்ன? பேர்ஷியன் பேரரசின் அரசர்களில் ஒருவரும் கிறிஸ்தவர்களாக மாறவில்லை. அங்கு கிறிஸ்தவ மதம் இன்று குறைந்த அளவே காணப்படுகிறது. இந்தியாவிலும் அரசர்களின் பாதுகாப்பின்றியே கிறிஸ்தவ மதம் வளர்ந்து வந்தது.

23.அப்போஸ்தலிக்கத் திருச்சபையை வழிநடத்தியவர்கள் யாவர்? ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள் என்னும் மூன்று பிரிவினைச் சார்ந்த அருட்பணியாளர்களே அப்போஸ்தலிக்கத் திருச்சபைக்கு தலைமை தாங்கியிருந்தனர்.

24.ஆயர்கள் என்பவர்கள் யாவர்? திருத்தூதர்களின் வழிவந்தவர்களே ஆயர்கள்.

25.தொடக்க கால திருச்சபையில் பேராயர் என்பவர் யார்? உரோமைப் பேரரசின் முக்கிய நகரத்தின் தலைவர் பேராயர் என்று அறியப்பட்டார்.

26.பிதாபிதா என்றால் என்ன? அனேகம் ஆயர்களுக்கு தலைமை வகிக்கும் தலைவரை திருச்சபையின் பிதாபிதா என்று அழைத்தனர். அவ்வாறு உரோம், அலக்சாண்ட்ரியா, அந்தியோக்கியா, எருசலேம், கான்ஸ்டான்டிநோபிள் போன்ற இடங்களின் ஆயர்கள், பிதாபிதா என்ற பெயரில் அறியப்பட்டார்கள். இந்த ஐவரின் தலைமையில் உரோமைப் பேரரசில் திருச்சபைகள் உருவாக்கப்பட்டன. பேர்ஷியன் திருச்சபையின் முதன்மை வாய்ந்த தலைவர் காதோலிக்கோஸ் - பிதாபிதா அல்லது மறைமுதுவர் என அழைக்கப்படுகிறார். இந்தியத் திருச்சபைத் தலைவர் இந்தியாவின் பேராயர் எனவும் அழைக்கப்பட்டார்.

27.பாப்பரசர் என்பவர் யார்? ஐந்து பிதாபிதாக்களின் தலைவராயிருந்தவர் உரோமை பிதா பிதாவாவார். அவர் பாப்பரசர் என்று அழைக்கப்பட்டார். தொடக்கத்திருச்சபையில் உரோமுக்கும், உரோமை ஆயருக்கும் பிற சபைகள் ஒரு முக்கிய இடத்தை அளித்திருந்தன.

28.தொடக்ககால திருச்சபையில் புதிய ஏற்பாடு நூல்கள் உருவான நிலை பற்றிக் கூறுக? இயேசுவின் அடையாளங்களையும், போதனைகளையும் திருத்தூதர்கள் தொடக்கத் திருச்சபைக்கு கற்பித்தனர். நாளடைவில் அவை நூல் வடிவமாக மாறியது. அவையே நான்கு நற்செய்திகளாகும். அது போன்று திருத்தூதர்கள் பல்வேறு திருச்சபை சமூகங்களுக்கு அளித்திருந்த திருமுகங்களையும் தொடக்கத்திருச்சபை திருநூலில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டது. அவ்வாறாக பழைய ஏற்பாட்டுடன் புதிய ஏற்பாடும் உருவானது. கி.பி. 50-க்கும் கி.பி. 100-க்கும் இடைப்பட்ட காலத்திலேயே புதிய ஏற்பாட்டிலுள்ள மிகுதியான நூல்களும் எழுதப்பட்டன.

29.புனிதர்களின் குக்கிலியோனில் சமயக்கலாபனை பற்றி பாடுவது யாது?

www.malankaralibrary.com

"இறைவாக்கினர் சீடர் குருதி சான்றினர்கள்

இவர்கள் பேறுடையோர் உயிர்ப்பின் நாளினிலே

மெசியாவைக் காண - நிணச்சான்றோர்

விழைய வாளால் சிறகணிந்தே - விண்ணில் புகுந்தனரே” (திருப்பலி முறை)

30."மாறாக கிறிஸ்துவின் **துன்பங்களில்** நீங்கள் இத்துணை பங்குகொள்கிறீர்கள் என எண்ணி **மகிழுங்கள்**. அப்பொழுது கிறிஸ்துவின் **மாட்சி** வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து **பேருவகை** கொள்வீர்கள்” (1பேதுரு. 4:13)

## பாடம் 17

## திருச்சபைத் தந்தையர்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. திருச்சபைத் தந்தையர்கள் என்பவர் யார்? கிறிஸ்தவ திருச்சபையில் முதல் நூற்றாண்டுகளில் திருச்சபையை வழிநடத்திய அறிஞர்களும் புனிதர்களுமான திருச்சபைத் தலைவர்களையே 'திருச்சபைத் தந்தையர்கள்' என்று அழைக்கிறோம். வெளிப்படுத்தப்பட்ட மறையுண்மைகளை மக்களுக்கு எடுத்துக்கூறவும், அவர்களின் அறநெறி வாழ்வை மேம்படுத்தவும் 'திருச்சபைத் தந்தையர்கள்' முயன்றனர். திருச்சபை போதனைகளுக்கு ஒரு தெளிவான வடிவம் கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்தனர். அதுபோன்று ஒவ்வொரு காலகட்டத்திலும் உடலெடுத்த திரிபுக் கொள்கைகளை கண்டிக்கவும், பிரிவுகளைச் சிந்தனைகளை ஒடுக்கவும், சமாதானம் ஏற்படுத்தவும், திருச்சபைத் தந்தையர்கள் முயற்சி செய்தனர். இவ்வாறாக கிறிஸ்தவ திருச்சபையின் பலமுள்ள தூண்களே இத்திருச்சபைத் தந்தையர்கள். எக்காலத்திலும் உள்ள திருச்சபைகளுக்கு அவர்களே நிலையான நீதியை ஏற்படுத்தினர். கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும், சீடர்களை அடித்தளமாகவும் கொண்ட திருச்சபையின் பலமுள்ள தூண்களே இத்திருச்சபைத் தந்தையர்கள். திருச்சபையின் பிறப்பில் சீடர்களுக்கான முக்கிய இடத்தைப் போன்று திருச்சபையின் வளர்ச்சியில் இவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

2. திருச்சபையின் அனுதின வாழ்வில் திருச்சபைத் தந்தையர்களின் பங்கு மிகப்பெரியதாகும் ஏன்?

முதல் ஏழு நூற்றாண்டுகளில் திருச்சபையின் வரலாற்றில் அதிகாரப்பூர்வமான போதனையாளர்கள் அனைவரையும் திருச்சபைத் தந்தையர்கள் என்று அழைக்கிறோம். அவர்கள் மீட்பின் செய்திகளை பிழையின்றி முழுமையாகக் கற்றறிந்தவர்களாவார். அவர்கள் அதனை வாழ்வின் ஒரு பகுதியாகவே எண்ணினார்கள். குறைவின்றி அதனை அடுத்த தலைமுறைக்கு கைமாறினார்கள். கிறிஸ்துவின் வரலாற்றை முழுமையாக எடுத்துரைத்த அவர்கள் உண்மை விசுவாசத்தின் போதனையாளர்கள் ஆவார். உண்மைத் திருச்சபையுடன் ஒன்றித்திருந்த அவர்கள் வாழ்க்கைத் தூய்மையுடையவர்களாயிருந்தனர். பிழையின்றிய போதனை, புனிதம், திருச்சபையின் வெளிப்படையான அங்கீகாரம், பழமைத்தன்மை என்றும் நான்குப் பண்புகளைத் திருச்சபைத் தந்தையர்கள் கொண்டுள்ளனர். கீழைத் திருச்சபையில் கி.பி. 750-ல் இறந்த ஜோன் டமஷன் வரையிலானவர்களை திருச்சபைத் தந்தையர்களாக அழைக்கின்றனர். ஆனால் மேலைத் திருச்சபைகளில் 636-ல் இறந்த இஸ்தோர் ஆப் செவில் வரையிலானவர்கள் திருச்சபைத் தந்தையர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இன்றைய திருச்சபையின் வழிபாட்டு முறை, சட்டம், துறவற சமூகங்கள் போன்றவைகளனைத்தும் திருச்சபைத் தந்தையர்களின் வழியாக நிறுவப்பட்டவைகளே. அவர்களின் ஜெப வாழ்க்கையே பின் தலைமுறையினருக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர்களின் ஜெப அனுபவம் பிற்காலத் திருச்சபைச் சட்டமாக மாறியது. ஞானஒளிமிக்க இறையியல் வல்லுநர்களாக அவர்கள் திகழ்ந்தனர். கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளை உயர்த்திக் காட்டுவதற்கு அவர்கள் தீவிரமாக முயற்சி செய்தனர். அவர்கள் பிழையின்றி நற்செய்தி பறை சாற்றினர். அது அவர்களின் கிறிஸ்தவ வாழ்வுக்கு ஆற்றலளிக்கவும் செய்தது. மறைக்கல்வி, இறையியல், திருவிவிலியம், வழிபாட்டு முறை , மேய்ப்புப்பணி முதலியவற்றை யெல்லாம் அவர்கள் ஒன்றாகச் செயல்படுத்தி வந்தனர். அவர்கள் மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடிப்படையாக

www.malankaralibrary.com

கொண்டு செயல்பட்டார்கள்.

கத்தோலிக்கத் திருச்சபையில் திருச்சபைத் தந்தையர்களின் போதனைகளுக்கு மிக முக்கியத்துவம் இருந்தது. திருச்சபையின் விசுவாசத்திற்கு சான்றாக அமைவது மறைநூலும், திருமரபும் ஆகும். இந்த திருமரபுக்குட்படுவதே திருச்சபைத் தந்தையர்களின் போதனை. திருச்சபை அதிகார பூர்வமாக கற்பிக்கும் போதும் விளக்கமளிக்கும் போதும் திருவிவிலியத்தையும், திருச்சபைத் தந்தையர்களின் போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டே செயலாற்றுகிறது. அதனால் திருச்சபையின் அனுதின வாழ்க்கையில் திருச்சபைத் தந்தையர்களின் பங்கு இன்றியமையாதது ஆகும்.

3. கிறிஸ்து மறையுண்மையோடுள்ள திருச்சபைத் தந்தையர்களின் ஆர்வத்தை தெளிவுபடுத்துக?

மனுவுரு எடுத்த வார்த்தையாகிய மெசியாவை பறைசாற்றவே திருச்சபைத் தந்தையர்கள் முயன்றனர். பல்வேறு திரிபு கொள்கைகளின் மத்தியில் தந்தையர்கள் ஆண்டவர் இயேசுவின் கண்ணோட்டங்களை விளக்கி, உண்மை விசுவாசத்தை உயர்த்தவும் செய்தனர். முழுகடவுளும், முழுமனிதருமான இயேசு கிறிஸ்துவை அவர்கள் தெள்ளத்தெளிவாக கற்பித்தனர். அவர்களது விளக்க உரைகள் அனைத்தும் கிறிஸ்துவையே மையமாக அமைந்தன. கிறிஸ்துவே இறைவெளிப்பாட்டு மற்றும் மீட்புத்திட்டத்தின் மையம் என்று அவர்கள் உறுதிபட கூறினர். அவர்கள் உற்று நோக்கிய கிறிஸ்து ரகசியத்தில் மனித வாழ்வின் அர்த்தம் ஒளிர்வதை அவர்கள் கண்டனர். நம்மை இறைமக்களாக மாற்ற கிறிஸ்து மனிதராக உருவெடுத்தார் என்று திருச்சபைத் தந்தையர்கள் அனைவரும் கற்பித்தனர். மக்களின் நலனில் ஈடுபாடுள்ள கிறிஸ்துவையே அவர்கள் எடுத்துரைத்தார்கள். இதை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம், "மனுவுருவெடுத்த வார்த்தையின் மறையுண்மைகளில் மட்டுமே மனித மறையுண்மைக்கு உண்மையாக ஒளிர முடியும். புதிய ஆதாமான கிறிஸ்து தந்தையுடையவும் அவரின் அன்பின் மறையுண்மையையும் சரியான முறையில் வெளிப்படுத்திக் கொண்டு மனிதனுக்கு, மனிதனை முழுமையாக வெளிப்படுத்துகிறார்" (இன்றைய உலகில் திருச்சபை 22). கிறிஸ்து மட்டுமே மனிதனின் உண்மையான மீட்பர் என்று திருச்சபைத் தந்தையர்கள் பறைசாற்றினர்.

**குறுவினா விடைகள்**

1. திருச்சபைத் தந்தையர்கள் எவ்வாறு இறையாட்சி அமைக்க முயற்சி செய்தனர்? திருச்சபைத் தந்தையர்கள் இறைவார்த்தையை தங்களின் ஆன்மீக வாழ்வு மற்றும் மேய்ப்புப்பணியின் உணவாகவும் நிரந்தர சிந்தனைப் பொருளாகவும் மாற்றினர். அவர்கள் மறைநூலைக் கற்று புலனறிவு பெற்று விளக்க உரைகளை எழுதி மக்களுக்கு பறைசாற்றினர். மறைநூலின் ஆழம், முக்கியத்துவம், மேலாண்மை போன்றவைகளுக்கு அவர்கள் மிக முக்கியத்துவம் அளித்தனர். அவர்கள் மறைநூலுக்கு விளக்கமளித்து இறை இயலை வளர்த்தினார்கள். அவர்கள் அனைவரும் மறைநூலைப் பற்றிய ஆழ்ந்த அறிவுடையவர்களாக விளங்கினார்கள். இறைவார்த்தை பணிக்காக அவர்கள் தங்களையே ஒப்புக்கொடுத்தனர். அவர்கள் எழுதிய நூல்கள் விவிலியத்தைப் பற்றிய அறிவின் நூல்களாகும். அவர்களே மறைநூல் விளக்கத்தின் முதன்மை குருக்கள். இவ்வாறாக இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு இறையாட்சியை அமைக்க அவர்கள் இடைவிடாது முயற்சி செய்தனர்.
2. திருச்சபைத் தந்தையர்கள் எவ்வாறு திருத்தூதுவ படிப்பினைகளில் நிலைத்து நின்றனர்? திருத்தூதுவ போதனைகளிலேயே தாங்கள் வேரூன்றி நிற்பதாக தந்தையர்கள் விசுவசித்தனர். அவர்கள் அதை பலமுறை வெளிப்படுத்தவும் செய்தனர். திருச்சங்கங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் சட்டங்கள், திருத்தூதுவ படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டதாய் அமைய வேண்டும் என்பதில் அவர்கள் நிலையாய் இருந்தனர். அவ்வாறு திருமரபுடன் அவர்கள் பிரிக்க முடியாதவாறு இணைந்திருந்தனர்.
3. புனித அகுஸ்தீனார் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரம் பற்றிக் கூறுவது என்ன? "கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரம் என்னை வரவேற்கவில்லையெனில் நான் நற்செய்தியில் நம்பிக்கைக் கொண்டிருக்கமாட்டேன்" என்று புனித அகுஸ்தீனார் கூறுகிறார்.
4. திருச்சபைத் தந்தையர்கள் எங்கே அதிகமாக காணப்பட்டனர்? உரோமைப் பேரரசின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான திருச்சபைத் தந்தையர்கள் உருவாயிருந்தனர்.
5. திருச்சபைத் தந்தையர்கள் எந்தெந்த மொழிகளில் எழுதினர்? சுறியானி, கிரேக்கம், இலத்தீன் என்னும்

www.malankaralibrary.com

மொழிகளில் திருச்சபைத் தந்தையர்கள் எழுதினார்கள்.

6. ஆப்பிரிக்கா திருச்சபையில் முதன்மையான திருச்சபைத் தந்தையர்கள் யாவர்? ஆப்பிரிக்கா திருச்சபையில் முதன்மையானவர்கள் புனித சிப்ரியானும், புனித அகுஸ்தீனாரும் ஆவர்.
7. எகிப்து திருச்சபையில் முதன்மையான திருச்சபைத் தந்தையர்கள் யாவர்? புனித அத்தனாசியாரும், புனித கூறிலோசும், புனித திவன்னாசியோசும் எகிப்தியத் திருச்சபையின் முதன்மையானவர்களே ஆவர்.
8. பாலஸ்தீனாவைச் சார்ந்த முதன்மையான திருச்சபைத் தந்தையர் யார்? புனித ஜஸ்டின்
9. எருசலேமைச் சார்ந்த திருச்சபைத் தந்தையர் யார்? புனித கூறிலோசு.
10. கேசரியாவைச் சார்ந்த திருச்சபைத் தந்தையர் யார்? எவுசேபியசு.
11. சலாமிசை சார்ந்த திருச்சபைத் தந்தையர் யார்? எப்பிபானியோசு
12. சிரியாவிலுள்ள திருச்சபைத் தந்தையர்கள் யாவர்? புனித இக்னேசியஸ், புனித ஜோண் கிறிஸோஸ்டோம், புனித எவுஸ்தாத்யோசு
13. ஆசியாவிலுள்ள திருச்சபைத் தந்தையர்கள் யாவர்? புனித கிரிகோரி நஸ்யான்சன், புனித கிரிகோரி நிசா, புனித பேசில்
14. இலத்தீன் திருச்சபையைச் சார்ந்த திருச்சபைத் தந்தையர்கள் யாவர்? புனித கிலரி, புனித கிப்போளிற்றஸ், புனித அம்புரோஸ், புனித லெயோ, புனித கிரிகோரி, புனித ஜெரோம்
15. எகிப்தைச் சார்ந்த முக்கிய துறவறத் தந்தையர்கள் யாவர்? புனித அந்தோணியார், புனித பக்கோமியார், புனித மக்காரியோசு.
16. சுறியானித் திருச்சபை சார்ந்த முக்கிய துறவறத் தந்தையர்கள் யாவர்? புனித எப்ஃரேம், அப்ராட்டஸ், சாருகின் யாக்கோபு, எடேசாவின் யாக்கோபு, எகிப்தின் ஒரிஜன், அந்தியோக்கியாவின் தியதோர், தியடோர்டு, தியடோரைட்.
17. ஆப்பிரிக்காவின் முக்கிய துறவறத் தந்தை யார்? தெர்த்துல்லியன்
18. திருப்பலியின் இடையே நடைபெறும் பரிந்துரை மன்றாட்டில் திருச்சபைத் தந்தையர்களை திருச்சபை நினைவு கூர்வது எப்படி? "ஆண்டவரே, நாங்கள் கருணை மிகுந்த உமது மக்களும், உமது ஒரே மகனின் சகோதரர்களுமாய் மாறுவதற்கு வழிகாட்டிய திருமறைத் தந்தையர்களின் நட்புறவிலிருந்து, எங்களை அகற்றவோ, வெளியேற்றவோ செய்யாதேயும். நாங்கள் உம்மையும், உமது ஒரே மகனையும், தூய ஆவியையும் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் போற்றிப் புகழ்கின்றோம்". (திருப்பலி தக்ஸா)
19. "உங்களுக்கு கடவுளின் **வார்த்தையை** எடுத்துச் சொன்ன உங்கள் **தலைவர்களை** நினைவுகூருங்கள்.
**20.** அவர்களின் **வாழ்வின்** நிறைவை எண்ணிப் பார்த்து நீங்களும் அவர்களைப் போல் **நம்பிக்கையுடையவர்களாய்** இருங்கள்" (எபிரேயர் 13:7)

பாடம் 18

## கிழக்கத்திய நாட்டு - மேற்கத்திய நாட்டு திருச்சபைத் தந்தையர்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. அப்போஸ்தலிக்கத் தந்தையர்கள் என்று யாரை அழைக்கிறோம்? முதலாம் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் வாழ்ந்து வந்த தந்தையர்களை அப்போஸ்தலிக்கத் தந்தையர்கள் என்று அழைக்கிறோம். திருத்தூதர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டிருந்ததினாலேயே அவர்களை அவ்வாறு அழைக்கிறோம். உரோமைச் சார்ந்த புனித கிளமன்ட், பர்னபா, அந்தியோக்கியாவை சார்ந்த புனித இக்னேசியஸ், புனித போளிகார்ப், பப்பியா போன்றவர்கள் முதன்மை வாய்ந்த அப்போஸ்தலிக்க தந்தையர்களாவார்.

2. விசுவாசத்தின் பாதுகாவலர் எனப்படுபவர் யார்? இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக பல பழிச்சொற்களும், மிரட்டல்களும் எழுந்தபோது உண்மை விசுவாசத்தை பாதுகாக்க எழுத்து

www.malankaralibrary.com

வடிவாகவும், செயல்பாடுகளின் வழியாகவும் பணிபுரிந்து வந்த நல்ல தந்தையர்களை விசுவாசப் பாதுகாவலர்கள் என்று அழைக்கிறோம். புனித ஜஸ்டின், டாசியன், அத்தனாகோரஸ், அந்தியோக்கியாவிலுள்ள தியோபிலஸ் போன்றவர்களே முதன்மையான விசுவாசப் பாதுகாவலர்களாவார்.

3. கப்படோசியன் தந்தையர்கள் யாவர்? விவரி? புனித பசிலியார் (கி.பி. 331-379) புனித நசியான்ஸ் கிரிகோரியார் (கிபி 330-390) புனித நிசா கிரிகோரியார் (கிபி 335-394) என்னும் மூன்று புனிதர்களும் கப்பதோசியன் தந்தையர்கள் என்னும் பெயரில் அறியப்படுகிறார்கள். கப்பதோசியா என்னும் நகரை சார்ந்த மூன்று மறைமாவட்டங்களின் ஆயர்களே இவர்கள். இவர்கள் மூவரும் ஆரியன் திரிபுக் கொள்கையை தகர்த்து இறையியல் சொற்களுக்கு தெளிவு ஏற்படுத்தினார்கள். நீசேயா விசுவாசப் பிராமாணத்தை தெளிவாக விளக்குவதிலும், கற்பிப்பதிலும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியடைந்தன. இணைபிரியா நண்பர்களாக இருந்த இந்த மூவரும் திருச்சபையின் பொது நன்மைகளுக்காக செயல்பட்டார்கள். மூவரும் கறையற்ற ஆளுமையின் உறைவிடமாக விளங்கினர்.

புனித பசிலியார் தொண்டு புரிவதில் ஆர்வமுடையவர் என்றும் நசியான்ஸ் கிரிகோரியர் போதனையாளர் என்றும் நிசா கிரிகோரியர் சிந்தனையாளர் என்றும் அறியப்பட்டிருந்தனர். புனித பசிலியார் இறையியல் தத்துவத்துடன், துறவறம் வளர்த்தவும், சமூகப் பணிகள் செய்யவும் செய்தார். நசியான்ஸ் கிரிகோரியர் தியான நிலையிலான வாழ்வை நடத்தினார். கான்ஸ்டான்டிநோபிளின் ஆயராக இவர் திருப்பணியாற்றினார். நிசா கிரிகோரியாரும், பசிலியாரும் சகோதரர்களாவர். மேற்படிப்பு படித்த மூவரும் உலகின் அர்த்தமற்ற தன்மையை அறிந்து துறவறத்துக்கும், திருச்சபை பணிக்கும் வந்தவர்களாவர்.

4. புனித எப்ஃரேம் - குறிப்பு வரைக. சுறியானி திருச்சபைத் தந்தையர்களில் மிகவும் புகழ் வாய்ந்தவரே புனித எப்ஃரேம். இவர் கி.பி. 306-ல் நிசிபிசில் பிறந்தார். இவர் முக்கியமாக கவிதைப் படைப்புகளின் வழியாகவே விசுவாசம் பயிற்றுவித்தார். மிகவும் ஆழமேறிய விசுவாச உண்மைகளை கவிதை வடிவில் மார் எஃப்ரேம் எடுத்துரைத்தார். அதனால் அவர் 'தூய ஆவியின் வீணை' என அழைக்கப்படுகிறார். கவிதை வடிவில் மட்டுமன்று கட்டுரை வடிவிலும் அவர் மறைநூல் விளக்கம் தந்தார். மேற்கத்திய, கிழக்கத்திய மற்றும் சுறியானித் திருச்சபைகளின் வழிபாட்டு முறைகளில் அவருடைய பல கவிதைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நமது திருச்சபையின் வழிபாட்டு முறையில் மார் எப்ஃரேமின் மன்றாட்டு என்று எழுதப்பட்டுள்ள பல பாடல்களும் இதற்கு எடுத்துக்காட்டாகும். அவர் எடேசா என்னும் இடத்தில் தன் இறுதிகாலத்தைச் செலவிட்டார்.

**குறுவினா விடைகள்**

1. முக்கிய அப்போஸ்தலிக்கத் தந்தையர்கள் யாவர்? உரோமைச் சார்ந்த புனித கிளமன்ட், பர்னபா, அந்தியோக்கியாவை சார்ந்த புனித இக்னேசியஸ், புனித போளிகார்ப், பப்பியா
2. முக்கிய விசுவாசப் பாதுகாவலர்கள் யாவர்? புனித ஜஸ்டின், டாசியன், அத்தனாகோரஸ், அந்தியோக்கியாவிலுள்ள தியோபிலஸ்
3. அந்தியோக்கியாவின் புனித இக்னேசியஸ் (கி.பி. 98-110) குறிப்பு வரைக? கி.பி. 98 முதல் 110-ம் ஆண்டு வரை அந்தியோக்கியாவின் ஆயராக பணிபுரிந்த புனித இக்னேசியஸ் உரோமை நகரிலுள்ள கொலோசியத்தில் வைத்து காட்டு விலங்குகளுக்கு எறியப்பட்டு இரத்தசாட்சியாக இறந்தார். இரத்தசாட்சியாக மாறுவதன் வழியாக மட்டுமே கிறிஸ்துவின் சீடராக மாறமுடியும் என்று எண்ணிய அவர் ஆண்டவருக்காக தன்னையே அர்ப்பணித்து இரத்தசாட்சியானார். "என் ஆண்டவரின் பாடுகளின் அனுபவத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அவர் எழுதி வைத்துள்ளார். அவருடைய எழுத்துக்களெல்லாம் விலைமதிப்பற்றவைகளாகும். கிறிஸ்துவின் திருச்சபையை கத்தோலிக்கத் திருச்சபை' என்று முதன் முதலாக அழைத்தவர் இவரேயாவார். உரோமையருக்கு எழுதிய தனது திருமுகத்தில் இவர் திருச்சபையை மிகவும் புகழ்கின்றார். உரோமை நகரில் தலைமையிடத்தில் இருப்பவளும், அன்பின் தலைமையிடத்தில் இருப்பதும்' - ஆன திருச்சபை என்று உரோமைத் திருச்சபையை அழைக்கின்றார். உரோமையரல்லாத ஒருவர் உரோமைத் திருச்சபையை புகழ்ந்து கூறும் முதல் நபர் இவரேயாவார்.
4. "என் ஆண்டவரின் பாடுகளின் அனுபவத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன்" என்றவர் யார்? அந்தியோக்கியாவின் புனித இக்னேசியஸ்

www.malankaralibrary.com

5. கிறிஸ்துவின் திருச்சபையை கத்தோலிக்கத் திருச்சபை' என்று அழைத்தவர் யார்? அந்தியோக்கியாவிலுள்ள புனித இக்னேசியஸ்

6. அந்தியோக்கியாவிலுள்ள புனித இக்னேசியஸ் எவ்வாறு உரோமையை புகழ்கிறார்? அந்தியோக்கியாவிலுள்ள புனித இக்னேசியஸ் உரோமையருக்கு எழுதிய தனது திருமுகத்தில் திருச்சபையை மிகவும் புகழ்கின்றார். உரோமை நகரில் தலைமையிடத்தில் இருப்பவளும், அன்பின் தலைமையிடத்தில் இருப்பதும்' - ஆன திருச்சபை என்று உரோமைத் திருச்சபையை அழைக்கின்றார். உரோமையரல்லாத ஒருவர் உரோமைத் திருச்சபையை புகழ்ந்து கூறும் முதல் நபர் இவரேயாவார்.

7. புனித ஜோண் கிறிஸோஸ்டோம் குறிப்பு வரைக? அந்தியோக்கியன் திருச்சபையைச் சார்ந்த ஜோண் கிறிஸோஸ்டோம் கான்ஸ்டான்டிநோபிளில் ஆயராக பணிபுரிந்தார். அவர் அந்தியோக்கியாவில் இருக்கும் போதே சிறந்த பேச்சாளராக அறியப்பட்டார். அவருடைய பேச்சுத்திறமையின் காரணமாக அவரை 'பொன்நாவுடையவர்' என்று பொருள் கொள்கிற கிறிஸோஸ்டோம் என்று பிற்காலத் தலைமுறையினர் அழைத்தனர். அது அவருடைய பெயரின் ஒரு பகுதியாக மாறியது. மக்களின் அறநெறி வாழ்வை வளர்ந்த அவர் பல மறையுரைகளை நிகழ்த்தினார். நெறிமுறை தவறிய வாழ்க்கைக்கு எதிரான அவருடைய செயல்பாடுகளுக்கு எதிர்ப்புகள் உருவாயின. இவ்வாறாக அவர் நாடுகடத்தப்பட்டு கௌகாசுஸ் மலைகளில் வைத்து இறந்தார். நற்கருணையைக் குறித்து அவர் பல நூல்களை எழுதியுள்ளார். கிறிஸோஸ்டோம் 'மார் இவானியோஸ்' என்னும் பெயரிலும் அறியப்பட்டார்.

8. எகிப்தின் இரண்டு ஒளிர் வட்டங்கள் எனப்படுபவர்கள் யாவர்? புனித அத்தனாசியாரும் (கி.பி 295-373) புனித கூறிலோசும் (கி.பி. 370-44)

9. புனித அத்தனாசியார் குறிப்பு வரைக? கிறிஸ்துவின் கடவுள் தன்மையை ஏற்காத ஆரியன் திரிபுக் கொள்கைக்கெதிராக அவருடைய கடவுள் தன்மை உச்சத்தில் போதித்தவரே புனித அத்தனாசியார். அதனால் எதிரிகளிடமிருந்து பல துன்பங்களை அவர் ஏற்க வேண்டியிருந்தது. ஐந்து முறைகளாக பதினேழு ஆண்டுகள் அவர் நாடுகடத்தப்பட்டார்.

10. புனித கூறிலோசு குறிப்பு வரைக? எபேசு திருச்சங்கத்தின் வழியாகவே புனித கூறிலோஸ் அனைவராலும் அறியப்பட்டார் (கி. பி. 431). கிறிஸ்து ஒருவரேயென்றும் மனித இயல்பும் இறையியல்பும் ஒருவரில் ஒன்றித்திருக்கிறது என்றும் அவர் தெளிவாகக் கற்பித்தார். புனித கூறிலோஸ் ஏராளமான நூல்களுக்கு உரிமையாளர் ஆவார்.

11. கப்பதோசியன் தந்தையர்களின் பெயர்கள் என்ன? புனித பசிலியார் (கி.பி. 331-379) புனித நசியான்ஸ் கிரிகோரியார் (கிபி 330-390) புனித நிசா கிரிகோரியார் (கிபி 335-394)

12. புனித எப்ஃரேம் 'தூய ஆவியின் வீணை' எனப்படுவது ஏன்? புனித எப்ஃரேம் மிகவும் ஆழமேறிய விசுவாச உண்மைகளை கவிதை வடிவில் மார் எஃப்ரேம் எடுத்துரைத்தார்.

13. மலங்கரை வழிபாட்டுமுறையில் புனித எப்ஃரேமின் பாடல்கள் எப்பெயரால் அறியப்படுகின்றன? மார் எப்ஃரேமின் மன்றாட்டு

14. புனித சிப்ரியான் குறிப்பு வரைக? புனித சிப்ரியான் கி.பி. 210-ல் கார்த்தேஜில் பிறந்தார். கார்த்தேஜியாவின் ஆயரான இவர் ஆப்பிரிக்கா ஆயர்களிடையேயான முதல் இரத்தசாட்சி ஆவார். பதிமூன்று நூல்களும், பல கடிதங்களும் அவர் எழுதினார். நடைமுறை வாழ்க்கையுடன் அவருடையப் படைப்புக்கள் தொடர்பு கொண்டிருந்தன. கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமை என்னும் அவருடைய சிறு படைப்பு மிகவும் புகழ்வாய்ந்ததாகும். மனதினுடையவும், இதயத்தினுடையவும் ஏராளம் சிறப்பு பண்புகள் நிறைந்த ஓர் மாமனிதரே அவர்.

15. புனித அம்புரோஸ் குறிப்பு வரைக? புனித அம்புரோஸ் இத்தாலியில் உள்ள மிலான் நகரில் ஆயராகப் பணிபுரிந்தார். இவர் திருச்சபைப் போதனைகளை மன்னர்கள் ஏற்றுக்கொள்ளச் செய்தார். நெருக்கடியான இவருடைய மேய்ப்புப்பணியிலும் நூல்களை எழுத நேரம் ஒதுக்கினார். ஒரு சிறந்த பேச்சாளர், அரசியல் தந்திரசாலி, தப்பறைகளின் எதிரி, உண்மை விசுவாச போதனையாளர் எனப் பல நிலைகளில் அவருடைய பெயர் பரவியிருந்தது. திருச்சபையையும், நாட்டையும் அவர் சமாதானத்திலும் ஒற்றுமையிலும்

www.malankaralibrary.com

நிலைநிறுத்தினார். புனித அகுஸ்தினாரின் மனமாற்றத்திற்கு கடவுளின் கருவியாகச் செயல்பட்டவர் இவர்.

16. புனித ஜெரோம் குறிப்பு வரைக? கி.பி. 342-ல் டல்மேசியாவிலுள்ள ஸ்ட்ரீடோனில் புனித ஜெரோம் பிறந்தார். இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், அரமாயம் போன்ற மொழிகளில் அவர் புலமை பெற்றிருந்தார். திருவிவிலியத் தெளிவுரையிலும், விளக்கவுரையிலும் இவர் மிகுந்த கவனம் செலுத்தினார். மேலும் தியானத்திலும், எழுத்திலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தார். மறைநூலைப் பற்றிய படிப்பினையில் இவரது ஆற்றலை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

17. புனித அகுஸ்தீனார் குறிப்பு வரைக? கி.பி. 354-ல் ஆப்பிரிக்காவிலுள்ள அகாஸ்தெ என்னும் இடத்தில் அகுஸ்தினார் பிறந்தார். கார்த்தேஜில் உயர் படிப்பை முடித்த பின்னர் இவ்வுலக இன்பங்களின் அடிப்படையில் வாழ்ந்தார். பின்னர் மனமாற்றமடைந்து புனித அம்புரோசிடமிருந்து திருமுழுக்குப் பெற்றுக்கொண்டு வட ஆப்பிரிக்காவின் கிப்போ மறைமாவட்டத்தின் ஆயராக கி.பி.396-ல் பதவி ஏற்கவும் செய்தார். திருச்சபைத் தந்தையர்களில் திறமையானவர் புனித அகுஸ்தினார் ஆவார்.

18. புனித அகுஸ்தீனாரின் திருப்பணிகள் யாவை? புனித அகுஸ்தீனார் ஒரே நேரத்தில் மெய்யியல், இறையியல் வல்லுநராகவும், கவிஞராகவும், பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், ஆயராகவும் செயல்பட்டார். அறிவியல் சிந்தனைகளைப் பற்றியும், இறை சிந்தனைகளைப் பற்றியும் ஆழ்ந்த அறிவு படைத்த புனித அகுஸ்தினாரின் நூல்கள் எப்போதும் விலைமதிக்கக்கூடிய நூல்களாக அமைந்தன. மூவொரு கடவுள், கிறிஸ்துவின் வரலாறு, அருட்கொடை அருளடையாளம், மீட்பு, உலகமுடிவு போன்ற இறையியல் சிந்தனைகளையும் அவர் கையாண்டுள்ளார். ஏறத்தாழ 1030 நூல்களை அவர் படைத்துள்ளார். அவருடைய படைப்புகளில் முதன்மை வாய்ந்தது அவருடைய வாழ்க்கையின் வழியாக நிலையான உண்மைகளை வெளிப்படுத்து கின்றதான 'பாவ அறிக்கை' (Confession). அதுபோன்று முதன்மை வாய்ந்த மற்றொரு படைப்பே ஆண்டவரின் நகர்' (City of God). அக்காலத்தில் திருச்சபை எதிர்கொண்டு வந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தன்னுடையதான பரிகாரத்தை அவர் முன்வைத்தார். கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளின் அதிகாரத்தன்மையை அவர் விசுவாசித்தார்.

19. திருப்பலியில் திருச்சபைத் தந்தையர்களை திருச்சபை நினைவு கூரும் மன்றாட்டு எது? “ஆண்டவரே திருமறைத்தந்தையர்களின் மெய்யான விசுவாசத்தில் எங்களையும் உறுதியாய் நிற்கச் செய்தருளும். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் கற்றுத் தந்த விசுவாச உண்மைகள் அனைத்தையும், எங்கள் உள்ளத்தில் ஆழமாய்ப் பதியச் செய்தருளும். அவர்களுடன் இணைந்து, நாங்கள் உம்மையும், உமது ஒரே மகனையும், தூய ஆவியையும், இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் போற்றிப் புகழ்கின்றோம்”.

**20.** “உங்கள் ஒளி **மனிதர்** முன் ஒளிர்க. அப்பொழுது அவர்கள் உங்கள் **நற்செயல்களைக்** கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்” (மத்தேயு 5:16).

## பாடம் 19

## வளர் இளம்பருவப் பிரச்சனைகள்

**பயிற்சி வினாக்கள்**

1.வளர் இளம் பருவம் பிரச்சனைகளின் பருவம் என்று கூறுவது ஏன்?

13 முதல் 19 வரையிலான பருவமே வளர் இளம் பருவம். இந்த பருவம் பிரச்சனைகளும், நெருக்கடிகளும் மிகுந்த பருவமாகும். அதுபோன்று உடலளவிலும் மனதளவிலும் பல மாற்றங்களும் இப்பருவத்தில் ஏற்படுகின்றன. பாதுகாப்பு நிறைந்த குழந்தைப் பருவத்திலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு சுயசார்பு நிலையை நோக்கிய வாழ்க்கைக்கு மாறும் பருவமே வளர் இளம் பருவம்.

நான் யார் என்னும் வினா இப்பருவத்தின் தனித்தன்மையாகும். தன்னுடைய ஆளுமையை தேடுவதே இப்பருவத்தின் சிறப்புத்தன்மையாகும். ஆளுமையின் தனித்துவத்தைக் கண்டுணர முடியாத போது தாண்மை (Identity) பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தன்னுடைய ஆளுமையை நிலைநிறுத்தும் முயற்சியில் அவர்கள் அனைத்தையும் விவாதத்துக்கு உட்படுத்துகின்றனர். அவர்களின் ஆளுமையை நிலை நிறுத்துவதற்கு எதிராக நிற்கும் அனைத்து உறவுகளையும் எதிர்க்கிறார்கள். பெற்றோர்க ளையும், ஆசிரியர்களையும், குருக்களையும், பெரியோர்களையும் அவர்கள் எதிர்த்துப் பேசுவார்கள். அவர்கள் சுதந்திரத்திற்காக கிளர்ச்சி செய்கின்றனர்.

www.malankaralibrary.com

தனியாக தீர்மானங்கள் எடுப்பதற்கும் செயல்படுவதற்கும் அவர்கள் முயற்சி செய்வார்கள். ஆண்கள் புகைபிடித்தல், மது அருந்துதல், போதைப்பொருட்கள் பயன்படுத்துதல் போன்றவற்றின் வழியாகவும் பெண்கள் கலாச்சாரம் நிறைந்த ஆடைகள் அணிவதன் வழியாகவும், தங்களை அலங்கரிப்பதன் வழியாகவும் அவர்களின் ஆளுமையின் தனித்துவத்தை நிலைநிறுத்த முயல்கின்றனர்.

தீவிர உணர்ச்சிகள் இக்கால கட்டத்தில் நிறைந்து காணப்படுகிறது. சட்டங்களின் வழியாகவும், தண்டித்தலின் வழியாகவும் இவர்களை அடக்கியாளும் போது அவர்களின் மனம் இறுக்கமடைந்து, அடக்க முடியாத கோபம், தீய சிந்தனை, வெறுப்பு, போராட்ட உணர்வு, நம்பிக்கையின்மை போன்றவை ஏற்படுகிறது. இவர்கள் சில கொள்கைகளை கடைபிடிப்பவர்களாவர். அவர்கள் நினைத்த செயல்கள் நடைபெறாமல் போகும்போது இவ்வுலகை வெறுக்கின்றனர். அதன் விளைவாக சில வேளைகளில் மது அருந்துதல், போதை பொருட்களை பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு அடிமைகளாக மாற்றவும் செய்கின்றனர். வளர் இளம் பருவத்தின் இந்த தனித்தன்மைகளை புரிந்து கொண்டு மிகுந்த கவனமுடனும், பெரியோர்களின் உதவியுடனும் இவர்கள் வாழ வேண்டும்.

2.வளர் இளம் பருவத்தில் நண்பர்களை மிகுந்த கவனமுடன் தேர்ந்தெடுக்க வேண்டும் ஏன்?

வளர் இளம் பருவம் ஆரம்பமாகும் போது சிறுவர்கள் பெற்றோரிடமிருந்தும், குடும்பத்திலிருந்தும் அகன்று நிற்க விரும்புகிறார்கள். அதுவரையிலும் குடும்பத்தில் அடக்கமாக வாழ்ந்து வந்த சிறுவர்களின் வாழ்க்கை வட்டம் விரிவடைகிறது. அவர்கள் அதிக நேரத்தை நண்பர்களுடன் சேர்ந்து வீட்டிற்கு வெளியே செலவிடுகின்றனர். நான்கு அல்லது ஐந்து ஆண்களும் பெண்களுமாக உள்ள நண்பர்கள் வட்டம் (நண்பர் குழு) இப்பருவத்தின் சிறப்புத்தன்மையாகும். இந்த நண்பர் வட்டத்துக்கு ஒரு தலைவர் இருப்பார். தலைவரோடும் இந்த குழுவோடும் இவர்கள் கீழ்படிதலும் பணிவும் கொண்டிருப்பார்கள். பிறிதொரு இடத்திலும் கிடைக்காத பாதுகாப்பு உணர்வு இங்கிருந்து கிடைப்பதாக இவர்கள் கருதுகின்றனர். இவர்களின் வாழ்க்கையில் இந்த நண்பர் குழு முக்கியப் பங்கு வகிக்கின்றது.

இந்த குழுவின் சிந்தனைகளுக்கேற்ப சிறுவர்கள் நன்மையோ, தீமையோ செய்கின்றனர். தன்னில்லத்தில் பெற்றோருக்கு கீழ்படிந்து நன்றாகக் கற்று ஆன்மீக வாழ்வில் ஈடுபாடு உடையவர்களாக வாழ்ந்து வந்த சிறுவர்கள் தீய நண்பர்களுடன் சேர்ந்து பெற்றோருக்கு கீழ்ப்படியாமல், படிப்பில் கவனம் செலுத்தாமல், ஆன்மீக செயல்களில் ஈடுபாடின்றி வாழ முற்படுகின்றனர். அவர்கள் தங்கள் குழுவின் விருப்பப்படி வாழ்வதால் குழுவின் விருப்பத்திற்கு எதிராக செயல்படுபவர்களை வெறுக்கவும் அவர்களை எதிர்த்து செயல்படவும் செய்கின்றனர். இவர்கள் ஏற்படுத்துகின்ற நண்பர்குழு நல்லதா, கெட்டதா என ஆராய்ந்து அது கெட்டதாக இருப்பின் அதிலிருந்து விலகி வாழ முயற்சிக்க வேண்டும். சில வேளைகளில் இந்த குழுவில் சேர்ந்ததன் வழியாக தங்கள் வாழ்க்கையே சீரழிய வாய்ப்புண்டு. புகையிலை, மது, மயக்குமருந்து போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், உணர்ச்சியை தூண்டும் புகைப்படங்கள், புத்தகங்கள், திரைப்படங்கள் போன்றவை, அரசியல் நண்பர்களின் பழக்கம், பொறுப்புணர்வை மறந்து விளையாட்டுகளோடும், கலைகளோடும் அளவுக்கு மீறிய பற்று போன்றவை தீய நண்பர் குழுவின் வழியாக உருவாகின்ற தீமைகளாகும்.

3.போதைப் பொருள்களின் பயன்பாடு வாழ்க்கை முழுவதையும் அழித்துவிடும் என்று கூறுவது ஏன்?

நண்பர்களின் தூண்டுதலின் வழியாக திரைப்படங்களிலும், நாவல்களிலும் காண்கின்ற செயல்களில் ஈடுபடவும், சோதித்துப் பார்க்கவும், திரைப்படங்களில் வரும் கதாப்பாத்திரங்களை பின்பற்றி செயல்படவும் இவர்கள் ஆர்வம் கொள்கின்றனர். பீடி, சிகரெட், கஞ்சா, பான்பராக் போன்ற போதைப்பொருள்களை அவர்கள் பயன்படுத்தத் தொடங்குவார்கள். சிறிய அளவிலான மதுபழக்கத்தில் ஆரம்பித்து பின்னர் மதுப் பழக்கத்துக்கு அடிமைகளாக மாறுவர். இவ்வாறாக நண்பர்களுடன் சேர்ந்து அவர்களின் தூண்டுதலால் போதைப் பொருட்களுக்கு அடிமைகளாக மாறி தங்கள் வாழ்க்கையை இழந்த ஏராளமான வளர் இளம் பருவத்தினர் நம் மத்தியிலும் வாழ்கின்றனர். இப் பருவத்தில் தொடங்கிய போதைப்பொருள் பயன்பாட்டை நிறுத்த முடியாமல் தவிக்கும் ஏராளமானோர் நம்மிடையே வாழ்கின்றனர். ஒருமுறை போதைப் பொருளை பயன் படுத்தினால் மீண்டும் நாம் அதைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள்ளாவோம். மனிதனின் ஆரோக்கியம், ஆளுமை, குடும்ப வாழ்வு முதலானவற்றை இழந்து விடாத படிக்கு நாம் போதைப்பொருட்களுக்கு அடிமையாக மாறாமல் இருக்க இப்பருவத்தில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அதனால் போதைப்பொருள்களை

www.malankaralibrary.com

பயன்படுத்துபவர்களின் தோழமை தீயது என புரிந்து கொண்டு அவர்களிடமிருந்து அகன்று நிற்க நாம் முன்வர வேண்டும். வளர் இளம் பருவத்தில் விளையாட்டாக ஆரம்பிக்கும் போதைப்பொருட்களின் பயன்பாடு நமது வாழ்க்கையையே முழுமையாக அழித்துவிடுகின்ற ஒன்றாகும் என்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்று சமூகத்தை முழுமையாக விழுங்கி விடுகின்ற மிகப்பெரிய தீமையே போதைப் பொருள்களின் பயன்பாடு. இதற்கு அடிமைகளாகாமலிருக்க இவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

4. வளர் இளம் பருவத்தில் ஏற்படும் விருப்பங்களும், ஈர்ப்புத் தன்மையும் நன்கு கவனிக்கப்பட வேண்டும் என்று கூறக் காரணம் என்ன?

இயற்கையில் பறவைகளிலும், விலங்குகளிலும், மனிதர்களிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஈர்ப்பு இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. இது இயற்கையே படைப்புகளின் மேல் அளித்திருக்கின்ற ஒரு சிறப்பு தன்மையாகும். இவ்வாறாக ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அறிந்து, அன்பு செய்து, ஒன்றித்து வாழக் கடவுள் மனிதருக்கு அளித்திருக்கின்ற மிகப்பெரிய கொடையே பாலியல் உணர்வு.

குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் ஆண் பெண் வேறுபாடின்றி ஒன்றாகச் சேர்ந்து விளையாடி மகிழ்வார்கள். ஆனால் அவர்கள் சிறுவர்களாக மாறும் போது ஆணும் பெண்ணுமாக தனித்தனி குழுக்களாகப் பிரிகின்றனர். சிறுவர் பருவம் முடித்து வளர் இளம் பருவத்தினர்களாக மாறும் போது ஆண்களுக்கு பெண்களோடும், பெண்களுக்கு ஆண்களோடும் ஒரு ஈர்ப்பு உருவாகின்றது. கடவுள் மனிதருக்கு அளித்திருக்கின்ற பாலியல் சக்தியிலிருந்து இந்த ஈர்ப்பு உருவாகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான இந்த அன்பும், விருப்பமும் முழுமையடைவது திருமண வாழ்விலும் குடும்ப வாழ்விலுமாகும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உருவாகின்ற விருப்பம் என்பது உணர்ச்சி பூர்வமான ஒன்றாகும். நிலையான அடித்தளமற்ற இந்த அன்பும் விருப்பமும் தற்காலிகமானதாகும். ஒருவரையொருவர் விரும்புவதும் அன்பு செய்வதும் தவறானது அன்று. ஆனால், இப்பருவத்தில் பக்குவமான விருப்பத்திற்கும், அன்பிற்கும் இவர்களால் கடந்துவர முடியாது. எனவே தக்க வயது வந்த ஆணும் பெண்ணும் மட்டுமே அன்பின் முதிர்ச்சியை அடைந்து திருமண வாழ்வையடைய முடியும். இப்பருவத்தில் உருவாகின்ற உணர்ச்சி பூர்வமான ஆசைகள் ஆண்களையும் பெண்களையும் மிகப் பெரிய அளவில் பாதிக்கின்றது. அவர்களின் படிப்பையும், கடமை யுணர்வையும் அவர்கள் மறந்து விடுகின்றனர். ஆதனால் இப்பருவத்தில் ஏற்படும் இத்தகைய உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனதிலிருந்து அகற்றுவதே நன்மை பயக்கும். இப்பருவத்தில் ஏற்படும் இத்தகைய ஈர்ப்பு இயற்கையே எனினும் கவனிக்காவிட்டால் அது மிகப்பெரிய தீமைக்கு நம்மை இட்டுச் செல்லும் காரணியாக மாறும். இடைவிடாது மனதை அலைக்கழிக்கின்ற விருப்போ, அக்கரையோ யாருடனேனும் ஏற்பட்டால் அதனை உடனடியாக பெற்றோருடனோ, குருவுடனோ, கன்னியர்களுடனோ அறிவித்து அவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்க வேண்டும். இவ்வாறாக இப்பருவத்தில் ஏற்படும் இத்தகைய அன்பு படிப்பையும், கடமையுணர்வையும் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## குறு வினா விடைகள்

1. வளர் இளம் பருவத்தில் ஊடகங்களில் அளவுக்கதிகமான நாட்டம் ஏற்படுவது பற்றிக் கூறுக?

கண்ணுக்கும் காதுக்கும் இனிமை பயக்கும் பார்க்க, கேட்க உதவும் ஊடகங்களின் ஆர்வம், இன்று சமூகத்தில் அதிகமாக உள்ளன. திரைப்படம், தொலைக்காட்சிப்பெட்டி, இணையதளம், பத்திரிகைகள், கணிப்பொறி, தொலைபேசி போன்ற பார்க்க கேட்க உதவும் ஊடகங்கள் மக்களுக்கு அறிவையும் பொழுதுபோக்கையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்தளிக்கின்றது. ஆனால் வளர் இளம் பருவத்தினர் இந்த ஊடகங்களை விவேகமின்றி உணர்வுபூர்வமாக மட்டும் கையாளும் போது அவர்கள் அதனோடு மிகுந்த விருப்புடையவர்களாகவும், அதற்கு அடிமைகளாகவும் மாறுகின்றனர். படித்துக் கொண்டிருக்கும் வளர் இளம் பருவத்தின் ஈடுபாடும் கவனமும் திரைப்படக் கதைகள், தொலைக்காட்சித் தொடர்கள், கிரிக்கெட் விளையாட்டு போன்ற செயல்களில் திரிந்து படிப்பிலும், கடமையுணர்விலும் அவர்களுக்குள்ள கவனம் குறைந்து விடுகிறது. இவ்வாறாக பார்க்க கேட்க உதவும் ஊடகங்களுக்கு அடிமைகளாக மாறும் இவர்கள் தங்கள் வாழ்வின் ஒளிமயமான எதிர்காலத்தையும் அழித்துவிடுகின்றனர்.

அதுபோன்று பார்க்க, கேட்க உதவும் ஊடகங்களிலுள்ள ஒழுக்க கேடுகளில் மகிழ்ச்சியடைபவர்கள்

www.malankaralibrary.com

நாளடைவில் அதில் அதிக விருப்பமுடையவர்களாக மாறுகிறார்கள். அவர்கள் படிப்படியாக தீய திரைப்படங்கள், இணையதளங்கள் போன்ற தீமைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அதனால் இவர்கள் மிகுந்த கவனமுடன் ஊடகங்களைக் கையாள வேண்டும். அறிவுக்கும் உணர்வுக்கும் உதவுகின்ற ஊடகங்கள் நமது அழிவுக்குக் காரணமாக அமைகிறது. அதனால் மிகுந்த கவனமுடன் பார்க்க கேட்க உதவும் ஊடகங்களை பயன்படுத்த வேண்டும்.

2. வளர் இளம் பருவத்தில் அரசியல் கட்சிகளோடு ஈடுபாடு ஏற்படுவது பற்றிக் கூறுக?

எல்லா செயல்பாடுகளிலும் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுதல் இவர்களின் சிறப்புத் தன்மையாகும். சில கொள்கைகளுக்காகவும் எதுவும் செய்ய முன்வருபவர்களே இவர்கள். மற்றவர்களுக்கு முன்னால் அங்கீகாரம் பெறவும், தங்கள் திறமையை வெளிப்படுத்தவும் இவர்கள் எதுவும் செய்ய முன்வருவார்கள். அரசியல் கட்சிகளில் சேர்ந்து தலைவராகவும் போராட்ட குழுக்களில் உறுப்பினர் ஆகவும் இவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

வளர் இளம் பருவத்தில் கல்வியில் கவனம் செலுத்தாமல் அரசியலில் ஈடுபட்டு தங்கள் வாழ்வையே சீரழித்த ஏராளமானோர் நமது சமூகத்தில் உள்ளனர். ஏதேனும் அரசியல் கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்து இவர்களுக்குத் தேவையான பணிவிடை புரியும் இவர்கள் தங்கள் கடமைகளை மறந்து அரசியல்வாதிகளின் தூண்டுகோலாக செயல்பட்டு வருகிறார்கள். அரசியல்வாதிகளுக்காகவும், அவர்களின் அரசியல் திட்டம் நிறைவேறுவதற்காகவும், பொது சொத்துக்கு கேடு விளைவித்தல், பேருந்துக்களில் கல்லெறிதல், வாகனங்களை தீ கொளுத்துதல், தெருவில் காண்பவற்றுக்கெல்லாம் கேடு விளைவித்தல், காவலர்களைத் தாக்குதல் போன்ற கொடிய செயல்களையெல்லாம் செய்ய முற்படுகிறார்கள். இதற்காக சிலர் இறக்கின்றனர். விபத்துக்குள்ளாகின்றனர். கல்வி நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். கல்வியை புறக்கணிப்ப வர்களும் உள்ளனர். இவையனைத்தும் இப்பருவத்தில் அரசியலில் ஈடுபடுவதன் விளைவுகளாகும்.

அரசியலுடன் மதிப்பு, அரசியல் செயல்பாடுகளிலுள்ள அறிவு, ஏதேனும் அரசியல் கட்சியுடன் ஈடுபாடு இவையனைத்தும் நல்லதுதான். ஆனால் இப்பருவத்தில் அரசியல் வாதிகளின் விளையாட்டுப் பொருளாக எதுவும் செய்யத் துணியும் போது, அது அவர்கள் வாழ்க்கையையே அழித்துவிடுகிறது. கல்வி நிலையத்தில் கற்பதற்கு பதிலாக அரசியல் விரோதிகளாக தங்கள் எதிர் காலம் அழியாமலிருக்கவும் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

3. வளர் இளம் பருவப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது எப்படி?

வளர் இளம் பருவ பிரச்சனைகளை முன்னரே அறிந்து அவற்றுக்கு அடிமைப் படாமலிருக்க கவனம் செலுத்த வேண்டும். இப்பருவ பிரச்சனைகளில் விழாமலிருக்க இறையருள் இன்றியமையாத ஒன்றாகும். அதற்கு ஆண்டவரோடுள்ள உறவை வலுப்படுத்த வேண்டும். மறைநூல் வாசகம், குடும்ப ஜெபம், திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்பு, நற்செயல்கள் செய்தல், மறைக்கல்வி இவையனைத்தும் கடவுளுடனான உறவில் நம்மை அதிகமாக வலுப்படுத்தும் காரணிகளாகும். பிரச்சனைகளில் விழுந்தால் பாவசங்கீர்த்தனத்தின் போது குருவுடன் அறிக்கையிட வேண்டும். பாவசங்கீர்த்தனத்தின் வழியாக பாவமன்னிப்பும், நல்ல அறிவுரையும், மன அமைதியும், மகிழ்ச்சியும் உருவாகின்றது. பாவ சங்கீர்த்தனத்தின் போது குருவானவர் நமக்கு துணை புரியவிருக்கின்ற கடவுளின் பிரதிநிதி என்னும் உணர்வுடன் நாம் பாவசங்கீர்ததனம் செய்ய வேண்டும்.

வளர் இளம் பருவப் பிரச்சனைகளில் வீழ்கின்றவர்கள் பெற்றோருடனோ, குருவுடனோ, கன்னியர்களுடனோ, பிரச்சனைகளைக் குறித்து மனம்விட்டுப் பேசுதல் நல்லது. நாம் தவறு செய்ய துவங்கியவுடனேயானால் வெளியே வருவது எளிது. நாம் தவறில் அதிக நாள் வாழ்ந்தால் அதிலிருந்து வெளியே வருவது எளிதானது அல்ல. பெற்றோருடன் மனம் திறந்து பேசப் பயப்படும் எந்த செயலிலும் தீமைக்கான வாய்ப்பு நிறைந்துள்ளது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் இளமைப் பருவத்தில் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்று தோன்றியவுடன் அறிவுடையவர்களோடு மனம் திறந்து பேசுதல் நன்மை பயக்கும்.

நாம் இப்பருவ பிரச்சினைகளைக் குறித்து நன்கு உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நன்றாக படித்தல், ஆன்மீக செயல்களில் ஈடுபடுதல், நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்துதல், பெற்றோருக்கு உதவி செய்தல், குடும்பத்தில் அனைவருடனும் அன்புறவு கொண்டிருத்தல் போன்ற கடமைகளை நன்முறையில் செய்யும் போது இப்பருவப் பிரச்சனைகளில் அதிகமாக விழாமலிருக்க நமக்கு முடியும்.

www.malankaralibrary.com

4. வளர் இளம் பருவ காலத்தில் நாம் செபிக்க வேண்டியது என்ன?

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே எங்கள் வாழ்வின் கடமைகளை நன்குணர்ந்து வாழவும் தீமையின் வழிகளிலிருந்தும், தீய நண்பர்களிடமிருந்தும் அகன்று வாழவும் உமது அருளை எங்களுக்குத் தந்தருளும். ஆண்டவராகிய இயேசுவே உம்மைப் போன்று ஞானத்திலும், வயதிலும் வளர்ந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ எங்களுக்குத் துணைபுரியும்.

**5.** “இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வளர்ந்து வந்தார்". (லூக்கா 2:52)

## பாடம் 20

## ஊடகங்கள் - நன்மையும் தீமையும்

பயிற்சி வினாக்கள்

1. ஊடகங்களை எவ்வாறு வகைப்படுத்தாலாம்? ஊடகங்களைப் பொதுவாக பேச்சு, எழுத்து, அச்சு வடிவம் முதலான தொடர்ச்சியான ஊடகங்களென்றும், மின்னணுவியல் ஊடகங்களான நவீன ஊடகங்களென்றும் வகைப்படுத்தலாம். செய்தித்தாள், புத்தகம் மற்றும் பிற வெளியீடுகள் அனைத்தும் அச்சு வடிவ ஊடகங்களாகும். வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் போன்றவை மின்னணுவியல் ஊடகங்களாகும். மின்னணுவியல் ஊடகங்களுக்கு அச்சுவடிவ ஊடகங்களை விட அதிகமான ஈர்ப்புத்தன்மையும் தன்வசப்படுத்தும் தன்மையும் உண்டு. ஏனெனில் பார்க்கவும், கேட்கவும் முடிவது வாசிப்பதை விடவும் அதிகமான ஈர்ப்புத்தன்மையைத் தோற்றுவிக்கும். அதனால் அவற்றின் தாக்கம் மிகுந்து காணப்படுகிறது.

2. ஊடகங்கள் உலகுக்கு அளிக்கும் நன்மைகள் யாவை?

அறிவு பகர்தல், கருத்து பரிமாறுதல், பொழுதுபோக்கு முதலியவை ஊடகங்களின் முக்கிய பணிகளாகும். தொழில்நுட்பம் வளர்ந்து வருவதற்கேற்ப ஊடகங்கள் உலகிற்கு இன்னும் அதிகமான நன்மைகள் செய்து கொண்டேயிருக்கிறது. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் அறிவை பகிர்ந்தளிப்பதில் ஊடகங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பேஸ்புக், வாட்ஸ்அப், இணையதளங்கள், தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் போன்றவை ஒவ்வொன்றும் அறிவை பகிர்ந்தளிக்கின்றன. சந்தேக நிவாரணத்துக்கும், வினாவிடைகளுக்கும் ஊடகங்கள் மனிதனுக்கு துணை புரிகின்றன. ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள துணை புரிவதே ஊடகங்களின் மிகப் பெரிய நன்மை. உலகின் ஒரு பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் பிற பகுதிகளிலுள்ளவர்களும் பார்க்கவும் கேட்கவும் ஊடகங்கள் துணை புரிகின்றன. இத்தகைய தகவல் புரட்சியால் உலகமே சுருங்கி ஒரு கிராமம் ஆகிவிட்டது. மின்னணுவியல் ஊடகங்களுக்கு மிகுந்த செல்வாக்குடைய இக்காலத்திலும் செய்திகளை பரிமாறிக் கொள்வதில் பத்திரிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அறிவினுடையவும், பொழுதுபோக்கினுடையவும் எண்ணற்ற வாய்ப்புகளை இன்றைய உலகில் மக்களுக்கு பகிர்ந்தளிப்பவைகளே ஊடகங்கள். குழந்தைகளுக்கும், பெரிய வர்களுக்கும் ஒன்றுபோல் மகிழ்ச்சியைப் பகிர்ந்தளிக்க ஊடகங்கள் மிகுந்த ஆவல் கொள்கின்றன.

அறிவியல் பூர்வமான இன்றைய மிக அதிகமான மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்தியது தொலைக்காட்சியே என்பதில் ஐயமில்லை. பலவகையான மக்களையும், கலாச்சாரங்களையும் இணைத்து ஒரு உலகளாவிய உணர்வை ஏற்படுத்தியது மக்கள் தொடர்புச் சாதனங்களாகும். இணையதளம் அதிகமாக பயன்படுத்தி வருவதால் விளையும் அறிவுத்துறை வளர்ச்சி மிகப்பெரியதாகும். மதிப்பீடுகளை பகிர்ந்தளிப்பதிலும் சமூக உணர்வை கொடுப்பதிலும் பிறரன்பு பணிகளை தூண்டுவதிலும் ஊடகங்கள் மிகுந்த சேவை செய்கின்றன.

3. ஊடகங்களை மிகுந்த கவனமுடன் கையாள வேண்டும். ஏன் ?

நன்மை, தீமை என்னும் வேறுபாடின்றி ஊடகங்கள் நிகழ்ச்சிகளை தயாரிக்கும் போது அவற்றை வேறுபடுத்தியறிய வேண்டிய திறன் மனித சமூகத்துக்கு இருக்க வேண்டியது அவசியமாகும். வெளியே நின்று குறை கூறாமல் உள்ளே சென்று அதை நடைமுறைப்படுத்த வேண்டிய ஆவலையும் நாம் கொண்டிருக்க வேண்டும். ஊடங்கள் பகிர்ந்தளிக்கின்ற நன்மையையும் தீமையையும் வேறுபடுத்தி நன்மையை தேர்ந்தெடுக்க

www.malankaralibrary.com

நாம் ஆவல் கொள்ள வேண்டும். சிறுவர்களை வழி தவறச் செய்கின்ற, இளைஞர்களை சோர்வடையச் செய்கின்ற சமூகத்தில் முரட்டுத்தன்மையை வளர்க்கின்ற நெறிதவறிய வாழ்வுக்கு வழிகாட்டுகின்ற ஊடகங்களை முழுவதுமாக நம்பிவிடக்கூடாது.)

ஊடகங்களுக்கு தலைமை தாங்குபவரும், அதனை பயன்படுத்துபவரும் ஆன்மீகக் கட்டுப்பாடு கொண்டிருக்க வேண்டும். கருத்துப் பரிமாற்றங்களை நன்னெறிக்கு ஏற்றவகையில் பயன்படுத்த வேண்டும். அதிகார மையங்கள் ஊடகங்களை சரியான முறையில் மேற்பார்வையிட வேண்டும். பொது நன்மையை கருத்தில் கொண்டு ஊடகங்கள் செயல்பட வேண்டும். நல்ல ஒரு ஊடக கலாச்சாரம் உருவாக்குவதற்கு அதிகாரத்தின் மேல் தட்டிலிருந்தே முயற்சி செய்ய வேண்டும்.

குடும்பங்களில் ஊடகங்ளுக்கு அளிக்க வேண்டிய இடத்தை அளிக்க வேண்டும். குடும்ப சொத்துக்கும், குடும்பத்திலுள்ள பொதுவான கருத்துப்பரிமாற்றங்களுக்கும் தடை ஏற்படா வண்ணம் ஊடகங்களை இல்லங்களில் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக கண்டறிய உதவும் ஊடகங்களில் வரும் நிகழ்ச்சிகளில் அறிவுக்கும், பொழுது போக்குக்கும் ஒன்றுபோல் முக்கியத்துவம் அளிப்பவற்றைத் தேர்ந்தெடுத்து கண்டுகளிக்க நாம் முன்வர வேண்டும்.

ஊடகங்களின் வழியாக உருவாகின்ற தீமைகளை விரட்டியடிக்க அவற்றை நன்முறையில் கையாள வேண்டும். இதனை பொதுநன்மைக்கு ஏற்ற வகையில் யாருக்கும் தொந்தரவு ஏற்படா வண்ணம் பயன்படுத்த வேண்டும்.

## குறுவினா விடைகள்

1. ஊடகங்கள் என்றால் என்ன? அதிவேகமாக வளர்ந்து வரும் இன்றைய உலகில் ஒருவருக்கொருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள உதவும் உத்திகளையே ஊடகங்கள் என்கிறோம். தகவல்களைப் பரிமாறிக்கொள்ள உதவும் அனைத்து கருவிகளும் ஊடகங்களாகும்.

2. தகவல் தொடர்பு என்றால் என்ன? தகவல் தொடர்பு அல்லது, கருத்துப் பரிமாற்றம் என்பது மனநிலைகளைப் பரிமாறிக்கொள்ளும் ஒரு செயலாகும்.

3. தொடர்பு கருவிகள் என்றால் என்ன? செய்தித்தாள்கள், திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் இவையனைத்தும் மக்கள் தொடர்பு கருவிகளாகும். ஆயிரக்கணக்கான மக்களுடன் ஒரே நேரத்தில் தொடர்பு கொள்ளவும், கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் பயன்படுவதால் இவற்றை மக்கள் தொடர்பு கருவிகள் என்கிறோம்.

4. ஊடகங்களும் அதன் தீமைகளும் பற்றிக்கூறுக? ஏராளமான நன்மைகள் செய்திருந்தாலும் சமூகத்தில் தீமையின் கலாச்சாரத்தையும் ஊடகங்கள் வளர்த்து வருகின்றன. அறிவும், கருத்தும், மகிழ்ச்சியும் அளிக்கின்ற ஊடகங்கள் இன்று அதிகமாகவும் தவறான அறிவையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன. உண்மையை அறிந்து கொள்ள வேண்டிய மனிதனின் உரிமையை தவறான செய்திகளை அளித்தலின் வழியாக ஊடகங்கள் மறுக்கின்றன.

   இன்று ஊடகங்கள் சூழ்ச்சியாளர்களின் விளையாட்டுப் பொருளாக மாறி வருகிறது. ஒரு கூட்டம் மக்களை முழுவதுமாக சூழ்ச்சி செய்து ஏமாற்றுகின்ற ஒரு உத்தியாக ஊடகங்கள் இன்று செயல்பட்டு வருகின்றன. பொய்யானவற்றை உண்மையாகவும், உண்மையானவற்றை பழமையாகவும் அவை வெளிப்படுத்துகின்றன. விளம்பரங்களும், கண்டறிய முடியும் ஊடகங்களின் பிற நிகழ்ச்சிகளும் கட்டுப்பாடற்ற பாலியல் பலாத்காரம், கடினத்தன்மை, கொலைகள் போன்றவற்றின் உறைவிடமாக விளங்குகின்றன. இதன் வழியாக மதிப்பீடுகளை இழந்த ஒரு சமூகத்தை ஊடகங்கள் வளர்த்து வருகின்றன.

   தொலைக்காட்சித் தொடர்களின் வீரியமும், குறிப்பாக கேபிள் டி.வி.யின் வருகையும் ஆன்மீக வாழ்விற்கு ஒரு சவாலாக வளர்ந்து வருகிறது. இன்று பல குடும்பங்களிலும் குடும்ப செபத்தின் நேரத்தை முடிவு செய்வது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாகும். தேவையான அறிவைப் பகிர்ந்து கொடுக்க இணையதளத்தால் முடியுமெனினும் பல இணையதளங்களில் கிடைக்கின்ற செய்திகள் அறநெறி தவறிய வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வதாகவும் அமைகின்றன.

www.malankaralibrary.com

இல்லற வாழ்வுக்கும், நேர்மையான பாலியல் உணர்வுகளுக்கும் கேடுவிளைவிக்கின்ற கருத்துக்களும், வாழ்வின் தரத்தைக் குறைகின்ற நிகழ்ச்சிகளும், செய்திகளும், இலக்கியங்களும் இன்று அதிகமாக வளர்ந்து வருகின்றன. இவை மட்டுமன்று திரைப்பட நடிகைகள் விளையாட்டு வீராங்கனைகளின் விளம்பர மாடலை பின்பற்று பவர்களின் எண்ணிக்கையும் வளர்ந்து வருகிறது. இது ஒவ்வொருவருடையவும் ஆளுமைக்கு கேடு விளைவிக்கும் ஒன்றாகும். தீமையுடனான மனிதனின் விருப்பத்தை ஊக்குவிக்கின்ற நிகழ்ச்சிகள் இளைஞர்களில் முரட்டுத்தன்மையையும், பாலியல் முறைகேடுகளையும் உருவாக்கும். அதனால் ஊடகங்களை மிகுந்த கவனமுடன் கையாள வேண்டும்.

5. கத்தோலிக்கத் திருச்சபை ஊடகங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் பற்றிக் கூறுக?

கத்தோலிக்கத் திருச்சபை ஊடங்களுடன் மிகப் பெரிய தொடர்பு கொண்டுள்ளது. எல்லா வகையான ஊடகங்களும் கருத்துப் பரிமாற்றத்துக்கு பயன்படுத்தப்பட்ட திருச்சபை கவனம் செலுத்துகிறது. ஊடகங்களுக்காக வத்திக்கானில் ஒரு பாப்பிறையின் திருச்சங்கம் உண்டு என்பது இதற்கான மிகப்பெரிய எடுத்துக்காட்டு ஆகும். இது மட்டுமன்று கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமையில் நடைபெறுகின்ற அகில உலக கத்தோலிக்க ஊடக காங்கிரஸ், ஊடகங்களை ஊக்குவிக்கின்ற ஒரு அமைப்பாகும். கத்தோலிக்க ஊடகங்கள் அன்பின் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும் என்று பாப்பரசர் இரண்டாம் யோவான் பவுல் கூறியது கவனிக்கத்தக்க ஒன்றாகும். திருச்சபை எவ்வாறு ஊடகங்களை பயன்படுத்துகிறது என்பதற்குத் தெளிவு திருச்சபையின் தலைமையிலான பல தொலைக்காட்சி அலைவரிசைகளும் பல நூற்படைப்புகளுமாகும். வத்திக்கானின் முக்கியத் செய்தித்தாளான “ல ஒசர்வத்தோரே றொமானோ” வத்திக்கான் வானொலி, வத்திக்கான் தொலைக்காட்சிப் பெட்டி, வத்திக்கான் இணையதளம், கத்தோலிக்க பத்திரிக்கைகள், தொலைக்காட்சி அலைவரிசைகள், இணையதளங்கள், அச்சுவடிவ ஊடகங்கள், மறைமாவட்ட வெளியீடுகள் முதலானவை திருச்சபைக்கும் உலகுக்கும் இடையேயுள்ள உறவுக்கு வழிவகுக்கின்றது. “சமூகத் தொடர்பு ஊடகங்கள்' என்னும் முக்கிய ஏடு இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தில் உருவாக்கப்பட்டதாகும். இது ஊடகங்களுக்குத் திருச்சபை மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது என்பதன் தெளிவாகும்.

6. ஊடகங்கள் பற்றி திருச்சங்கம் கற்பிப்பது என்ன?

ஊடகங்களின் சரியான பயன்பாடு மனித சமூகத்திற்கு விலைமதிப்பு மிக்க ஒன்றாகும் என்னும் உண்மையை திருச்சபை ஏற்கிறது. ஏனெனில் அவை மனிதனுக்கு மகிழ்ச்சியையும், அறிவையும் வாக்களிக்கிறது. மட்டுமன்று இறையரசின் பறைசாற்றலுக்கு அவை மிகுந்த அளவில் நமக்கு துணை புரிகிறது. (சமூக ஊடகங்கள் 2) ஊடகங்களை பிரச்சனையாக பார்க்காமல் எண்ணற்ற வாய்ப்புகளின் உறைவிடமாகக் கருதி அதை நாம் பயன்படுத்த வேண்டும் என்பது கிறிஸ்தவ கண்ணோட்டம் அனைத்து அறிவினுடையவும், பொழுது போக்கினுடையவும் இருப்பிடமான ஊடகங்கள் மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். ஆனால் இந்த ஊடகங்களை நன்முறையில் பயன்படுத்தவும் பொதுநன்மையை கருத்தில் கொண்டு பயன்படுத்தவும் நாம் முயல்வோம்.

7. “தீமை உங்களை **<u>வெல்லவிடாதீர்கள்</u>**. நன்மையால் தீமையை **<u>வெல்லுங்கள்"</u>** (எபிரேயர் 13:7).

மன்றாட்டு

திருப்பாடல்கள் 140, 141, 118, 116

ஆண்டவரே நான் உம்மை நோக்கிக் கூவுகிறேன். விரைவாய் எனக்குத் துணை செய்யும்.

உம்மை நோக்கி நான் கூப்பிடும் போது என் குரலுக்குச் செவிசாய்த்தருளும், தூபம் போல் என் மன்றாட்டு உம்மிடம் எழுக மாலைப்பலிபோல் என் கைகள் உம்மை நோக்கி உயர்க.

ஆண்டவரே என் நாவுக்குக் காவல் வைத்தருளும்; என் நாவாகிய வாயிலைக் காத்துக்கொள்ளும்.

என்னிதயம் தீமையை நாடவிடாதேயும் பக்தியற்றவனாய் நான் தீவினைகளைச் செய்ய விடாதேயும். தீவினை செய்யும் மனிதர்களோடு சேர்ந்து இனிய விருந்துண்ண விடாதேயும்.

நீதிமான் என்னை வதைக்கட்டும். அது எனக்கு நல்லது. அவன் என்னைத் தண்டிக்கட்டும். அது என் தலைக்கு

www.malankaralibrary.com

எண்ணெய்போல், அந்த எண்ணையை நான் விரும்பாமலிரேன், அவர்கள் செய்யும் தீமைக்கு எதிராய் நான் என்றும் வேண்டுகிறேன்.

அவர்களுடைய தலைவர்கள் கல்மலையிலிருந்து கீழே தள்ளுண்டு போகிறபோது என் வார்த்தைகள் எவ்வளவு இனிமையானவையென்று கேட்டறிவார்கள்.

விழும்போது மண் பிளந்து சிதறி விடுகிறதுபோல, அவர்களுடைய எலும்புகள் பாதாளத்தின் வாயிலில் சிதறும்.

ஏனெனில் ஆண்டவராகிய இறைவா என் கண்கள் உம்மை நோக்கியே இருக்கின்றன. உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன். நான் அழியவிடாதேயும்.

அவர்கள் எனக்கு வைத்த கண்ணிகளிலிருந்து என்னைக் காத்தருளும், தீமை செய்வோரின் சுருக்குகளிலிருந்த எனக்குப் பாதுகாப்பளித்தருளும்.

தீயோர் தாங்கள் வைத்த கண்ணிகளிலேயே ஒருங்கே வந்து விழுவார்களாக. நானோ பாதுகாப்புடன் செல்வேனாக,

ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிடுகிறேன். பெருங்குரல் எழுப்பி ஆண்டவரை மன்றாடுகிறேன்.

எனக்குற்ற நெருக்கடியை அவர் முன்னிலையில் எடுத்துச் செல்லுகிறேன். அவர் திருமுன்னே என் கவலையை உரைக்கிறேன்.

என்னகத்துள் என் மனம் கவலையுற்றிருந்தது. நீரோ நான் செல்லும் வழியை அறிந்தேயிருக்கிறீர், நான் செல்லும் வழியில் அவர்கள் கண்ணி வைத்துள்ளனர்.

வலப்புறம் என் கண்ணைத் திருப்புகிறேன். என்னைக் கவனிப்பவர் ஒருவருமில்லை. எனக்குப் புகலிடம் இல்லாமற் போயிற்று. என்னைப் பற்றிக் கவலைப்படுபவர் யாருமில்லை .

ஆண்டவரே உம்மை நோக்கிக் கூவுகிறேன். நீரே என் அடைக்கலம், வாழ்வோர் பூமியில் நீரே என் கதி.

என் குரலுக்கு நீர் செவிசாய்த்தருளும்; ஏனெனில் துயர்மிக்கவனானேன். என்னைத் துன்புறுத்துவோரினின்று எனக்கு விடுதலையளித்தருளும். ஏனெனில் அவர்கள் என்னைவிட வலிமைமிக்கவர்கள்.

சிறையினின்று என்னை விடுவித்தருளும்; உமது பெயருக்கு நான் நன்றி செலுத்துவேன். நீதிமான்கள் என்னைச் சூழ்ந்து நிற்பர். ஏனெனில் நீரெனக்கு நன்மை செய்கிறீர்.

நான் நடக்க வேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம் வார்த்தை; செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே.

இதுவே என் சபதம்; இதுவே என் உறுதி; நீதியான உம் முறைமைகளை நான் கடைபிடிப்பேன்.

ஆண்டவரே மிகமிகத் துன்புறலானேன். உம் வார்த்தையின் படி என்னை உயிரோடு வைத்தருளும்.

என் வாயினின்று எழும் இப்புகழ்ச்சிக் காணிக்கையை ஆண்டவரே ஏற்றுக் கொள்ளும். உம் முறைமைகளை எனக்குக் கற்பியும்.

என் உயிர் எப்போதும் இடர்மிக்கதாய் உள்ளது. ஆனால் உம் திருச்சட்டத்தை நான் மறவேன்.

பாவிகள் எனக்குக் கண்ணி வைத்தார்கள். ஆனால் உம் கட்டளையினின்று நான் பிறழவில்லை .

உம் ஆணைகளே என்றென்றைக்கும் என் உரிமைச் சொத்து. ஆகவே அவை என் இதயத்துக்கு மகிழ்வளிக்கின்றன.

உம் நியமங்களை நிறைவேற்றுவதே என் உள்ளத்துக் கவலை. என்றும் சுற்றும் குறைவின்றி நிறைவேற்றுவதே என் கருத்து.

மக்களினத்தாரே நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள் மண்ணுலக மக்களே நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.

ஏனெனில் நம்மீது அவரது அருளன்பு நிலையாய் உள்ளது. நம்மீது அவர் கொண்டுள்ள பிரமாணிக்கம் என்றும் நிலைத்திருக்கும்.

இறைவா புகழ்ச்சி உமக்கு ஏற்றதாகும். பாறெக்மோர்.